# தமிழ்நாட்டுச் சிறுகதைகள்

## தொகுதி - III




த. நா. குமாரசுவாமி, பி.ஏ.

## தொகுதி - 18

### சக்திவேல்

### முதலிய கதைகள்

ஆசிரியர் :

'அகிலன்'

### கதைகளின் பெயர்

1. சக்திவேல்
2. சரவயின் ஜாதகம்
3. சாவிலே வாழ்வு
4. நிலவொளியில்
5. நொண்டிக் குப்பன்
6. கோஷா
7. பெற்ற மனம்
8. சினிமா வண்டி
9. புயலுக்குப் பின்
10. ஏழைப் பிள்ளையார்
11. தாலிக் கயிறு
12. சிசுவின் குரல்
13. கடவுளின் பிரதிநிதி
14. கதையின் முடிவு
15. வழிப்போக்கன்
16. தாமரைப்பூ
17. தணியுமா?
18. மேக சஞ்சாரம்
19. நான்
20. காசு மரம்
21. அழகி
22. சுதந்திரப் பறவை
23. வஸந்த நினைவு

## தொகுதி - 19

### மோகினி

### முதலிய கதைகள்

ஆசிரியை :

ஸ்ரீமதி வேங்கடலக்ஷ்மி

### கதைகளின் பெயர்

1. மோகினி
2. பாக்குக்கலர் புடவை
3. ரேணுகா
4. கடைசி இரவு
5. ராணிப் பிங்களா
6. சித்ரா
7. குருடனின் தியாகம்
8. தெய்வச் செயல்
9. யமுனை சொன்ன கதை
10. அடிமையின் வஞ்சம்
11. சோக வாழ்க்கை
12. அணைந்த தீபம்
13. தோட்டக்காரன் பேத்தி
14. பழநியாண்டி
15. வஸந்த பஞ்சமி

### இவ்வாசிரியையின் வேறு நூல்கள்

(1) ஸத்யகலா நாவல்
(2) தங்கம்மாள் -
(3) அந்தகன் குழலோசை
— நாடகம்

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை

106

தமிழ் நாட்டுச் சிறு கதைகள்

மூன்றும் தொகுதி

PRESENTED BY:
V. PR. PL. M. KASIVISVANATHAN CHETTIAR
PAGANERI.

5435

PRESENTED BY
V. PR. PL. M. KASIVISVANATHAN
CHETTIAR TO
THIRUVALLUVAR LIBRARY. PAGANERI.

# கன்யா குமாரி


பாகனேரி

தனித்தனி ஆசிரியர் எழுதிய

## தமிழ்நாட்டுச் சிறுகதைத் தொகுதிகள்

1. மங்கையர்க்கரசியின் காதல்
2. நீலமணி
3. கன்யா குமாரி
4. சந்தனக் காவடி
5. சக்ரவாகம்
6. கனகாம்பரம்
7. தோட்டியை மணந்த அரச குமாரி
8. பவழ மாலை
9. வெண்தாமரை
10. அழகி
11. லக்ஷ்மீ கடாக்ஷம்
12. ஜடாதரன்
13. குழலோசை
14. வாடா விளக்கு
15. குழந்தையின் மனம்
16. பிள்ளை வரம்
17. தேவகி
18. சக்தி வேல்
19. மோகினி
20. போகும் வழியில்
21. வஸந்தா
22. ஆலமரத்துப் பிள்ளையார்
23. பட்டுப் புடவை
24. பட்டாசுக் கட்டு
25. வைர டோலக்

ராஜன் எலக்ட்ரிக் பிரஸ், சென்னை.
Q. H. M. S. 109—April-46



த. நா. குமாரசுவாமி, பி. ஏ.

தமிழ்நாட்டுச் சிறுகதைகள் - தொகுதி - III

# கன்யா குமாரி

## முதலிய கதைகள்

ஆசிரியர்:
த. நா. குமாரசுவாமி, பி. ஏ.

அறிவே விளக்கு
அல்லயன்ஸ்

அல்லயன்ஸ் கம்பெனி
மயிலாப்பூர் :: சென்னை

உரிமை பதிவு

மலிவு பதிப்பு ரூ. 2-8-0
உயர் பதிப்பு ரூ. [illegible]

**கன்யா குமாரி**

இப் பதிப்பில் 4 - கதைகள்
புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளன.

## இவ்வாசிரியர் வேறு நூல்கள்

1. விஷ விருக்ஷம்
2. ஆனந்த மடம்
3. மாதங்கினி
4. கிருஷ்ணகாந்தன் உயில
5. கபாலகுண்டலா

(பங்கிம் நாவல்கள்: 1–5)

6. புயல் - டாகூர்
7. கல்வின் வேட்கை ,,
8. சதுரங்கம் ,,
9. இளமைப் பருவம் ,,
10. கோரா (Gora) ,,
11. டாகூர் சிறு கதைகள்
12. சண்டாளிகா
13. ஸௌதாமினி
14. அமூல்யன்
15. இளைஞன் கனவு
16. புது வழி

(நேடாஜி எழுதியவை: 15–16)

17. மயூகன்
18. மால்கோஷ்

(சிறு கதைகள்)

# உள்ளுறை


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | கன்யா குமாரி | ... | 3 |
| 2. | ராமராயன் கோயில் | ... | 20 |
| 3. | மணிச்சுடர் | ... | 40 |
| 4. | வேதாச்ரமம் | ... | 55 |
| 5. | ஸ்ரீசைலம் | ... | 69 |
| 6. | வைணிகர் | ... | 90 |
| 7. | க்ரூர உலகம் | ... | 105 |
| 8. | சட்டப் பரிக்ஷை | ... | 120 |
| 9. | தீபாவளி தந்தி | ... | 141 |
| 10. | தெய்வ ஸங்கல்பம் | ... | 158 |
| 11. | கண் இழந்த காதல் | ... | 173 |
| 12. | ஆள் மாறாட்டம் | ... | 190 |
| 13. | ஆத்ம சமர்ப்பணம் | ... | 198 |
| 14. | ஸ்வஸ்திக் வளையல் | ... | 210 |
| 15. | தேவி உலாஸகர் | ... | 222 |


## முகப்புப் படம்

த. நா. குமாரசுவாமி, பி. ஏ.

# கதைக் கோவை

*அல்லயன்ஸ் பிரசுரங்களின் சிகரம்.*

**— ஹிந்துஸ்தான்.**

## முதல் தொகுதி

### 40-எழுத்தாளர் சிறுகதைகள்-40

*இத் தொகுதிக்கு முன்னுரை எழுதியவர்: ஹிந்து உதவி ஆசிரியர்* **ஸ்ரீ ந. ரகுநாதன்,** *எம் ஏ., பி. எல்.*

## இரண்டாம் தொகுதி

### 50-எழுத்தாளர் சிறுகதைகள்-50

*இத் தொகுதிக்கு முன்னுரை எழுதியவர்: பிரபல நூலாசிரியர்.* **எஸ். வி. வி.**

## மூன்றும் தொகுதி

### 60-எழுத்தாளர் சிறுகதைகள் - 60

*இத் தொகுதிக்கு முன்னுரை எழுதியவர்: ஸர்விஸ் கமிஷன் அங்கத்தினர் திவான் பகதூர்* **டி. எம். நாராயணசாமி பிள்ளை,** *எம். ஏ., பி. எல்.*

## நான்காம் தொகுதி

### 75-எழுத்தாளர் சிறுகதைகள் - 75

*இத் தொகுதிக்கு முன்னுரை எழுதியவர்: சென்னை, மாஜி* **மேயர், எம். ராதாகிருஷ்ண பிள்ளை,** *பி.ஏ., பி.எல்.*

## ஐந்தாம் தொகுதி

*(தயாராகிறது.)*


கன்யாகுமாரி

# கன்யா குமாரி

மூன்று கடல்கள் ஒன்றுகூடிப் பாரத தேவியின் பாதபத்மங்களை வணங்கித் தொடும் தென்குமரிமுனை. ஒரு பாறையின்மீது படுத்தவண்ணம் என்னைச் சுற்றி இலங்கும் மாயக் காட்சியில் ஈடுபட்டிருந்தேன். கடலில் அமிழ்ந்து தலையை மட்டும் காட்டும் குண்டுக் கற்களின் மீது திரைகள் மோதிப் பாலாக வழிந்து கொண்டிருந்தன. நீர்மேல் படிந்து செல்லும் வெண் குருகின் கூட்டம்; கடலின் கருநீலத்தில் அவற்றின் வெண்மை எடுத்துக் காட்டியது. அலைகள் வீசும் திவலைகள், சூரிய ரச்மிபட்டு ஸப்த வர்ணங்களையும் சிதறச் செய்தன. நீள் விசும்பிடம் மயல்கொண்டு ஸமுத்திரம் பொங்கி எழும் விந்தைக் காட்சி. கடலின் கம்பீர கோஷத்திற்கும், கிரணங்களின் வர்ண சங்கீதத்திற்கும் என்னுடைய ஒவ்வொரு நாடியும் ஸம சுருதியில் அடித்துக் கொண்டிருந்தது. ஸதா சஞ்சலமுடைய இந்த மஹாஸாகரத்தின் கீழ் அல்லவா நம்முடைய பழைய தமிழ் உலகம் துயில்கொண்டிருக்

கிறது? பரபரவென்று பல நினைவுகள் என் மனத்தின்கண் பறந்து வந்தன. கற்பனை ஊசல், என்னைச் சரித்திர ஆராய்ச்சிக்கு எட்டாத அந்தப் புராதனமான தமிழகத்திற்கு எடுத்துச் சென்றது. மறந்துபோன ஒரு விசித்திர யுகம் சித்திரச் சுருள்போல முன்னே திறந்தது. என்னைக் கவிந்து இருக்கும் உண்மை உலகம் மலரிதழ் குவிதல்போல மெல்ல மூடிக்கொண்டது.

உன்னதமான ஒரு மலையுச்சியிலிருந்து பார்த்தால் மாடங்கள் நிறைந்த இந்த அழகிய தமிழ்ப்பதியை வளைத்துக்கொண்டு பஃறுளியாறு பிறைபோல் ஊர்ந்து கடலோடு கலக்கும் பேரெழில் கண்ணைக் கவரும். மிசிரம், உரோமாபுரி, சாவகம் முதலிய தூர நாடுகளிலிருந்து பொன்னோடு வந்து பொருளோடு பெயரும் பெரிய மரக்கலங்கள் அந்நதியில் மும்மத வேழங்கள் போல் அசைந்து சென்றன. கோட்டங்களிலும் மன்றங்களிலும், விசித்திர உடை அணிந்த பல்வேறு ஜாதியினர். பெயர் தெரியாத அந்தத் தமிழ்ப் பட்டணத்தை, வெவ்வேறு சமயத்தவர் தம் தம் கடவுளை வழிபடும் ஆலயங்கள் சோபிக்கச் செய்தன. அவற்றைச் சமைத்த சிற்பிகள் சௌந்தரிய ஞானிகளாக இருந்திருக்க வேண்டும். நகரத்திலுள்ள வீடுகள் எல்லாம் மரத்தினால் ஆனவை. அரசனுடைய அரண்மனை அகில் மரத்தினால் நிர்மாணிக்கப்பட்டது. அதனுடைய வாசனை வெகு தூரம் பரவிச் சென்றது. உயர்தர ஓவியங்கள் அரசனுடைய அந்தப்புரத்தை அழகுறச் செய்தன. மாலைப் பொழுதுகளில் சோலைகளிலும், சித்திர மண்டபங்களிலும், நதிக் கரையிலும் தமிழ் அரம்பையர் ஆடவர்களுடன்

சேர்ந்து காதல் புரியும் சுவர்க்கக் காட்சி. வண்ணாத்திப் பூச்சிகள் போலப் பிறநாட்டு அரம்பைகள் ராஜ வீதிகளில் செல்லும்போது வீசும் சுகந்தம், தெய்வ லோகத்திலிருந்து வருகிறதோ என்ற பிரமையை உண்டு பண்ணியது. ஆரியநாட்டு ரமணிகள் தம் முக மலரைத் திரையிட்டு வருந்துவதுபோல் அல்லாமல், தமிழ் யுவதிகள் பயமின்றிச் சுதந்திரத்துடன், எத்துறையிலும் ஆடவர்க்குச் சமமாக இருப்பதைக்கண்டு என் ஆச்சரியம் கரைகடந்து சென்றது. அன்று வாழ்ந்த தமிழரின் அறிவு வளர்ச்சியை ஆராய்ந்து சொல்வது இயலாத காரியம். ஸங்கீதத்திற்குப் பாவத்தையும், சிற்பக்கலைக்கு ஜீவனையும் சிருஷ்டித்தவர் இந்தத் தமிழ் முன்னோர்களே.

அந்த யுகத்தில் வாழ்ந்த தமிழ் வேந்தர் யாவரும் முடிவணக்கம் அறியாது லெமூரியா (பாழுங் கடல் இதைக் கொண்டுவிட்டது) முதலிய பூகண்டங்களுக்குச் சக்கரவர்த்திகளாக விளங்கினர். அந்நாளில் தமிழர் மிகவும் ஸாஹஸிகள். நெடுங் கடலைத் தாண்டித் தோள் வலிமையாலும், மனோவன்மையாலும் அயல் நாடுகளில் தமிழ் நாகரிகத்தையும், வாணிகத்தையும் வளரச்செய்தனர். அரசனும் குடிகளும் ஒருங்கே உழைத்து நாட்டைச் செல்வக்களஞ்சியமாக ஆக்கினர். அச்சமயம் புகழேந்திய ஒரு மன்னன் தமிழ் நாட்டை ஆண்டு வந்தான். அவனுடைய பெயர் தெரியாது. அவனுக்கு ஒரே பெண். அவளைப் பெற்றவுடன் அரசி கண்ணை மூடிவிட்டாள். குழந்தைக்குக் 'குமாரி' என்று பெயரிட்டனர். இறந்த தாயைப்போலவே இளவரசியும் அழகி. குமாரியைப் பார்க்கும்போதெல்லாம் அரசனுக்குத் தன் மனைவியின் நினைவு வந்து கண்

களில் நீர் ஊறும். ஆனால் இந்தச் செல்வக் குழந்தை அவனுடைய சோகத்தை ஆற்றி வந்தாள். குமாரியின் மனம் நோவாதவாறு அவன் எந்த விதத்திலும் நடந்து கொள்வான். மனைவியிடம் இருந்த அழியாத பிரேமையே தன் மகளை சுயேச்சையுடன் விடும்படி அவனைத் தூண்டியது. அவளை வளர்ப்பவர்களுக்கும் அவளுக்குக் கல்வி புகட்டும் ஆசிரியர்களுக்கும் இந்த யதேச்சாதிகாரம் அருவருப்பை அளித்தது.

அமைச்சர்கள் அரசனிடம் சென்று, இளவரசிக்கு ஒரு வரனைத் தேடும்படி அவனை வற்புறுத்தினர். இது எப்படியோ இளவரசியின் செவிக்கு எட்டிற்று. "அப்பா! நான் சிவனைத் தவிர்த்து வேறு எவரையும் மணம் செய்து கொள்ளமாட்டேன்" என்று கட்டாயமாகக் கூறிவிட்டாள். ஆதரவு காட்டும் தந்தையும் இதற்குக் குறுக்குச் சொல்லவில்லை.

ஆரியாவர்த்தத்தில் இருந்து அரசகுமாரர்களும், மிசிரத்திலிருந்து மன்னர்களும் அவளைக் கேட்க வந்தனர். ஸாலமன்கூடத் தன் அளவற்ற நிதியை அவளுக்குக் காணிக்கையாக வைத்து மணந்துகொள்ள வந்ததாகக் கேள்வி! ஆனால் எல்லோரும் ஆசை வீணாகித் திரும்பிச் சென்றனர். "இந்தப் பெண்ணின் பிடிவாதத்திற்குக் காரணம் இவள் தந்தையே" என்று சினந்து அரசர்கள் எல்லோரும் ஒன்றுகூடி, தமிழ் வேந்தனின் கொற்றத்தை அடக்கக் கங்கணம் கட்டிக்கொண்டனர்.

இதைக் கேள்விப்பட்டதும் நாட்டு மக்களுக்குள் வெருட்சி ஏற்பட்டது. "சுகமாக நாம் வாழும் தமிழகம் போய்விடுமோ? அடிமையாக உழல வேண்டி வருமோ? ஏனோ இந்த அரசன் புத்தி பிசகி பெண்

வழியே ஆடுகிருன்?" என்றெல்லாம் திகில் கொண்டனர். அவர்கள் ஒரு நாள் அரசனுடைய நீதி மன்றத்தை அடைந்து தங்கள் அபிப்பிராயத்தைத் தெரிவித்தனர். அந்தக் காலத்தில் பிரஜைகளுக்குச் செல்வாக்கு இருந்தது; அரசனும் மக்களுக்கு விரோதமாக நடந்ததில்லை.

உடனே அவன் தன் மகளை அழைத்துவர ஆட்களை ஏவினுன். அப்போது அரசகுமாரி உத்தியான வனத்தில் சேடியருடன் பந்து ஆடிக்கொண்டிருந்தாள். "இப்போது வர முடியாது, போ" என்று வந்தவரிடம் சொல்லி அனுப்பிவிட்டாள். அரசனுக்குக் கோபம் வந்தது. சோலைக்குச் சென்று தோழியருடன் விளையாடும் தன் ஆசை மகளைப் பார்த்து, "குமாரி! உன்னைக் கோரிவரும் ஒவ்வொரு ராஜபுத்திரனையும் நீ உதறித் தள்ளுவது உசிதமன்று. உன் மனத்திற்குப் பிரதிகூலமாக நான் எதையும் செய்யேன் என்ற தைரியத்தை வைத்துக்கொண்டா நீ இம்மாதிரியெல்லாம் செய்கிருய்? வந்த அரசகுமாரர்களில் ஒருவர் கூடவா உனக்குப் பிடிக்கவில்லை? பிற நாட்டு வேந்தர் யாவரும் என்மேல் க்ஷாத்திரம் கொண்டிருக்கிருர்கள். இதனுல் குடிகள் பீதியடைந்து என்னைத் தூஷிக்கிருர்கள். உன்னை 'வாழா வெட்டி' என்று ஏளனத்துடன் பேசிக் கொள்கிருர்கள். நீ செய்வது நம் குல தெய்வங்களுக்கே அடுக்காது. வருணனுக்குக் கோபம் மூண்டால் நம் நாட்டின்மீது கடலை ஏவுவானே; நீ அசட்டுத்தனமாகப் பிடிவாதம் பிடிப்பது நன்ருக இல்லை. என் செல்வமே, கூடிய சீக்கிரத்தில் உனக்குகந்த ஓர் ஆரியபுத்திரன் வடநாட்டிலிருந்து வரப்போகிருன். நீ எதை விரும்பினுலும்

அவன் செய்வான். அவன் பெரிய அறிவாளி. மந்திரத்தில் கரை கண்டவன். குழந்தாய்! உனக்கு வயது பதினெட்டு ஆகிறது. அவனைக் கலியாணமாவது பண்ணிக்கொள்ள வேண்டும்; அல்லது அதோ அந்த மலை முடியிலுள்ள குகையில் வாழ்வு முழுவதும் கன்னியாகத் துன்பமாவது அனுபவிக்கவேண்டும். எது உனக்குச் சம்மதம்?" என்றான் அரசன், சற்றுக் கடினமாகவே.

இளவரசி தலை குனிந்தபடியே ஒன்றும் தோன்றாமல் கற்சிலைபோல் நின்றாள். கையிலுள்ள கமல மொட்டின் இதழ்களை அவள் உதிர்ப்பது உள்ளத்தில் செல்லும் ஓர் உணர்ச்சியின் வேகத்தைக் காட்டியது. குமாரிக்கு விவாகத்தின்மீது மனம் செல்லவே இல்லை. இதைக் காட்டிலும் தனிமையாக மலையில் வாழ்வதே மேல் என்று பட்டது. சிவனை மனத்தில் கொண்டவளுக்கு வேறு புருஷன்மீது எப்படி ஆசை விழும்? அவள் மறைவாகப் பனி மலர்கள் கொண்டு சிவனை வழிபட்டதை யாரும் அறிந்திலர்-அவளுடைய தோழியர்கூட! இதுபோலவே ஈசுவரனைக்கணவனாகப்பெறப் பர்வதகுமாரி இலைகூடப் புசியாமல் பனிவரையில் ஒரு சமயம் தவங்கிடந்தாள் அல்லவா? இந்தத் தென்னவன் மகளின் ஏகாக்கிர பூஜையும் சிவன் மனத்தை அசைக்கலாமோ என்னவோ? இளவரசியின் மனத்தைப் பல சங்கடங்கள் அலைத்தன. தந்தையின் மனம் நோவாதிருப்பதற்காக, "அப்படியே அப்பா! கலியாணம் பண்ணிக்கொள்கிறேன்" என்றாள்.

கன்யா குமாரி படுக்கைஅறைக்குள் சென்று தங்க மஞ்சத்தின் தலைப்புறமாகவுள்ள ஒரு சந்தனப் பேழையைத் திறந்து சிவனின் உருவான ஸ்படிக லிங்கத்தை

எடுத்துக் கண்களில் ஒற்றிக்கொண்டு, "என் தெய்வமே! உன்னைத் தவிர நான் எவரையும் கொள்ளேன்; என்னை இந்த இடுக்கணிலிருந்து விடுவிக்க ஒரு வழி காட்டுவாய், என் சிவனே!" என்று நெஞ்சோடு வேண்டிக்கொண்டாள்.

அவள் அன்று முதல் ஐந்து நாட்கள் வரை, தன் அறையை விட்டு எழுந்து வரவே இல்லை. பசி தாகத்தையும் மறந்தாள். சிவனையே தியானித்த வண்ணம், அந்தப் பூம்பாவை தெய்வத்தின் சங்கேதத்திற்காக எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். அவளை வந்து கூப்பிடத் தோழியர் யாவரும் அஞ்சினர். கதவின் இடுக்கு வழியாக வரும் தூபகந்தம் அவள் உயிருடன் மட்டும் இருக்கிருள் என்பதைத் தெரிவித்தது.

ஆருவது தினத்தன்று என்றுமில்லாத ஒரு மகிழ்ச்சி குமாரியின் முகத்தில் பூத்தது. அறையை விட்டு வெளியே வரும்போது அவளுடைய வாடிய வதனத்தில் திவ்விய ஒளி உலாவுவதைக்கண்டு தோழிகள், "ஆகா! சிவனுடைய அருள் இவளுக்குக் கிடைத்து விட்டது போலும்!" என்று பேசிக்கொண்டனர். பூங்காவில் ஆறு தினங்களாக வதங்கியிருந்த மலர்ச் செடிகள் அவள் மீண்டும் வெளியே சஞ்சரிப்பதைக்கண்டதும், களிபொங்கிப் புதியஅரும்பவிழ்ந்து மணம் வீசின. மயில்கள், தோகை தரையில் புரள, அவள் கையிலுள்ள தானியங்களுக்காகக் கூவிக் கொண்டே ஓடிவந்தன. அரண்மனை மறுபடியும் சோபையுடன் விளங்கிற்று. ஈசுவரனைப் புஷ்பங்களால் அர்ச்சித்து, அவள், தன் கோரிக்கை ஈடேறுமாவென்று குறி கேட்டபோது தெய்வ சங்கேதம் ஒரு நீலமலராக லிங்கத்தின் சிரசிலிருந்து நழுவிவிழுந்தது.

"ஆனால் அந்நீலம் எதன் அறிகுறியோ? ஆலமும் நீல வண்ணமுள்ளது தானே? ஆனால் நீலகண்டன் கொடுத்த இந்த நிர்மால்யத்தைச் சோதிப்பது பாபம். நன்மைக் குத்தான் இருக்கும்''—இவ்வாறு கன்யா குமாரியின் மனம் சற்று ஆறுதலடைந்தது. ஆனால் அந்த நீல மலரின் கவனம் மட்டும் அவள் இரு தயத்தின் ஒருமூலையில் உறுத்திக்கொண்டே இருந்தது. கனவிலும் அதே நீல புஷ்பம்!

ஆரியாவர்த்தத்திலிருந்து அரசகுமாரன் தென்ன வன் மகளை மணக்க வரும் செய்தி நாடு நகர் முழுவ தும் பரவிவிட்டது. குடிகளிடை ஒரே பரபரப்பு. இழை கோலங்களும், இலைத் தோரணங்களும் இதை அறிவித்தன. எங்கும் விழாநாளைப்போலவே இருந்தது. பால் நிறப் புரவிகள் பூட்டிய சிங்காரத் தேரில் ஆரிய புத்திரன் நகர வாயிலைக் கடந்து அரசன் மாளிகைக் குச் செல்லும் ராஜ வீதியில் வந்து கொண்டிருந்தான். கோடிக்கணக்கான மக்கள் அவன் வரும் சிறப்பைக் காண வீதிகளில் குழுமுவது ஒரு விசித்திரமாய் இருந்தது.

தமிழ்ப் பெண்மணிகளும் வீட்டுக் காரியங்களை விட்டுவிட்டுத் தம்மைச் சிங்காரித்துக்கொள்ள ஆரம் பித்தனர். ஆரிய ராஜபுத்திரன் தமிழ் ஐசுவரியத்தைக் கண்டு மயங்கிவிழ அவர்கள் தம் பங்கைச் செய் தனர். இன்னும் ராஜ வீதியை ரதம் நண்ணவில்லை. ஒரு மடந்தை ஒரு காலில் செம்பஞ்சு பாதி பூசினதும் பூசாததுமாகச் சாளரத்தை நோக்கி ஓடி வந்துகொண் டிருந்தாள். அவள் பின்னே செவேலென்று பாதத்தின் அடையாளங்கள் பளிங்குத் தரையில் பதிந்திருந்தன. நங்கை ஒருத்தி மற்றொரு சிங்கார மாளிகையில் கண்

ணில் மை தீட்டிக்கொண்டிருந்தாள். அவள் அப்படியே கையில் தங்க மைக்குச்சியுடன் தெருவை நோக்கினுள். சிற்றிடைக் காரிகை ஒருத்தி, மேகலையை விரைவாக இடையில் பூட்டிக்கொண்டு ஊர்வலத்தைக் காண வரும்போது, மேகலையில் தொங்கும் நவமணிகள் பலபலவென்று தரையில் சிந்துவதை அவள் கவனிக்கவே இல்லை. மற்ருேர் அற்புத சுந்தரி மேள சப்தம் சமீபத்தில் கேட்கவே, மேலாடை நழுவ மார்பிடை அதைச் சேர்த்துப் பிடித்துக்கொண்டு,கார் மேகக் குழல்கள் அவிழ்ந்துவிழ, லஜ்ஜைமீறித் தலையை மட்டும் நீட்டி வீதியைப் பார்த்தாள். வேருேர் இல்லத்தில் ஸ்தம்பித்து நிற்கும் ஒரு பெண்ணை உவகையினுல் புளகிக்கச் செய்தது வீதியில் சென்ற அழகிய காட்சி. கோடி மன்மத ரூபம் வாய்ந்த ஒரு திவ்விய வடிவம் ரதத்தில் தெரிந்தது. ஜண ஜணவென்று வெண்டயமும் கிண்கிணியும் குலுங்கிடத் தேர் அரசன் மாளிகையின் வாயிலை அடைந்தபோது, அரசன் முன்னே வந்து அஷ்ட மங்கலங்களுடன் ஆரியகுமாரனை உபசரித்து உள்ளே அழைத்தான். ஆரியகுமாரனின் பரிவாரங்கள் சுவர்ணபுரியான தமிழ்ப்பட்டணத்தின் வைபவத்தைக் கண்டு மரம்போல் நின்றன.

ஆரியகுமாரன் சிங்கார மண்டபத்தில் வீற்றிருக்கும்போது அணங்குகளைப் பழிக்கும் நாட்டியமாதர் புரியும் ஆடல் பாடல்கள் மனோரம்மியமாக இருந்தன. பாணர்கள் யாழ் இசைத்து வடமொழிக் கலப்பற்ற தமிழிசை பாடுவதைக் கேட்க ஆயிரம் செவிகள் வேண்டும்! தமிழ் மல்லர்கள் இரும்பான தேகக் கட்டுடன் வலிமையைக் காட்டும் சாமர்த்தியம் அதிசயிக்கத்தக்கது. குறுநில மன்னர் பல பரிசுகளை ஏந்-

த்தம் முடிகளைக் கழற்றி நின்றனர். அவற்றை இன்முகத்துடன் ஏற்றுக்கொண்டான் ஆரியபுத்திரன். ஆனால் இவை யாவும் அவனுடைய மனத்தைக் கவர வில்லை. அவனுடைய மனம் எங்கோ லயித்து இருந் தது. அந்தப்புரத்திலிருந்து வரும் அந்த நூபுரத்தின் ஓசை இதற்குக் காரணமாய் இருக்குமோ? கபாடங் கள் மூலமாக ஆயிரம் கமல நேத்திரங்கள் இந்த விநோ தங்களைப் பார்த்துக்கொண்டிருந்தன.

அவர்களுள் நாணிக் கண்புதைக்கும் தருணி எவளோ? கன்யா குமாரியா? சே! இராது. சிவன் பால் சித்தம் வைத்தவளுக்குப் பிற மனிதன்மேல் மோகம் எப்படி விழும்? இது நடவாத காரியம்! கன்யா குமாரியின் புறம் புஷ்பத்தை ஒத்திருந்தாலும், அவளுடைய அகம் வயிரம்போல் கடினமானதா யிற்றே? ஆரியபுத்திரனுக்கு இந்தத் தமிழ் ஆடம் பரங்கள் சலிப்பை அளித்தன. அவனுடைய மனக் கொடி ஒரு பொருளை நாடி அலைந்தது. இது என்ன விந்தையான மனப்போக்கு இந்த ஆரியமகனுக்கு?

கன்யா குமாரி, மறுநாள் வாஸ நீராடி விட்டுச் சிவனுக்குத் தன்னை அர்ப்பணம் செய்த பிறகு சேடி யர் யாவரும் வியப்புறச் சம்பக வர்ண மேலாடை அணி ந்து அந்தத் திவ்விய புருஷனைப் பார்க்க வந்தாள். அவளுடைய அழகைக் கெடுக்க ஆபரணம் ஒன்றும் இல்லை. அவள் தூய்மையின் உருவாக விளங்கினாள். கொண்டையில் மட்டும் ஒரு சிவ நிர்மால்யம் சோபித் துக்கொண்டிருந்தது. இதென்ன, இந்தத் தீரத்தமிழ்ப் பாவை ஆரியபுத்திரனை நேரில்கண்டதும் தலைகுனிந்து கொள்கிறாள்! என்ன அதிசயத்தை அவள் அவனிடம் கண்டாள்! ஒருவேளை அவன் சிகையிலிருந்து எட்டிப்

பார்க்கும் ஒரு நீலமலர், சில தினங்களுக்கு முன் நடந்த சம்பவம் ஒன்றை அவளுக்கு நினைப் பூட்டியதோ? ஆரியபுத்திரன் கண்களில் ஒரு மாயா சக்தி இருந்தது. ஞானிகளிடையே தென்படும் தூய ஒளி. கன்யாகுமாரியின் சரீரம் ஏன் இப்படித் துடிக் கிறது? இந்த ஆரியனின் தேக அமைப்பு, சிவனுடைய சாயலாக இருந்தமையாலோ? மந்திர சக்தி பெற்ற இவன் யாரோ? மாறுவேடங் கொண்ட சிவனோ? ஆனால் சூக்ஷ்மரூபியான தெய்வம் மண்ணுலகில் வருமா? எண்ணற்ற திருவிளையாடல்கள் புரிந்த ஈச னுக்கு இது அசாத்தியமன்று. ஞாயிறுபோல் ஒளிர் கின்ற ஆரியகுமாரனின் வதனமண்டலத்தை நோக்கும் போது கன்யா குமாரியின் கண்கள் கூசின. தன்னைச் சமாளித்துக்கொண்டு அவள், "ஹே ஆரியபுத்திர! நீர் அதிசய மந்திரசக்தி வாய்ந்தவர் என்று என் தந்தை கூறியிருக்கிறார். உம்மால் செய்ய முடியாதது இப்புவி யில் ஒன்றும் இல்லையாம். அத்தகைய புருஷரைச் சிவ னென்றே கருதிப் பெற விரும்புகிறேன். நான் சொல்லும் நிபந்தனையை நீர் செய்து முடிப்பீரா யின் உமக்கு நான் அடிமையாகக் கடவேன்" என்றாள் குரல் தடுமாற.

ஆரியகுமாரன் மகிழ்வுற்று, "குமாரி! நீ எதை விரும்புகிறாய்? சொல். நான் இனிது செய்து முடிக் கிறேன்" என்றான். முகத்தில் முல்லை முறுவல் அரும்பக் குமாரி அவனை நோக்கி, "ஓரே இரவில், என் மாளிகைக்கு எதிரேயுள்ள வெட்டவெளியில் அபூர்வ சிற்பங்கள் வாய்ந்து, முக்கியமான ஒவ் வொரு தெய்வத்துக்கும் இடமாகவுள்ள ஆயிரங் கோயில்களைக் கட்டி முடிப்பீரா?" என்றாள்.

ஆரியகுமாரனின் நெற்றியில் சிந்தா ரேகைகள் புலப்பட்டன. அவனுடைய கண்கள் சிறிதுநேரம் மஹாதியானத்தில் வெண்பிறைபோல் ஆழ்ந்து தென் பட்டன. 'இது செய்ய முடியாத காரியம்' என்று எல்லோரும் எண்ணினர். ஆனால் கடவுளின் செயல் அறியக்கூடியதன்று. அனைவரும் திக்பிரமிக்க அந்தத் திவ்விய ரூபியான ஆரியன் தலையசைக்கும்போது குமாரியின் இருதயம் திக்கென்றது. "குமாரி! நீ சொன்னபடியே அதோ தெரியும் பரந்த வெளி யில் நாளைக்கு ஆயிரம் துங்க கோபுரங்கள் காலைக் கதிரவன் ஒளிபட்டுப் பிரகாசிப்பதை நீ காண்பாய்" என்று திடகம்பீரத்துடன் மொழிந்தான். இந்த வசனம் எல்லோர் மனத்திலும் ஒரு திகிலை உண்டு பண்ணியது. இளவரசி ஆரியபுத்திரனை வணங்கி விட்டுத் தன் அறைக்கு வந்து மனத்தில் பல எண் ணங்கள் சுழல மலர் அளியில் படுத்துப் புரண்டு கொண்டிருந்தாள். ஒரு வேளை இவன் செய்து முடிப் பானோ? சிவன் செயலும் அப்படித்தானோ? அந்த நீல மலர் தன் வாழ்வில் விஷமாகத் தோன்றுமோ...? உடனே அவள் மனம் வேறு வழியாகத் திரும்பி யது: "இந்தக் காரியத்தை மனிதனால் செய்ய முடியாது. செய்து முடிப்பவன் சாக்ஷாத் சர்வேசு வரன்தான்"-இவ்வளவு எண்ணியும் அவள் மனத்தில் மட்டும் சஞ்சலம் ஊசலாடிக்கொண்டு இருந்தது.

அன்று இரவு முழுவதும் ருத்திராக்ஷ மாலையைக் கையில் பிடித்தபடி சிவநாமங்களை உச்சரித்து, "இது நடவாமல் இருக்கவேண்டுமே, என் சிவனே!" என்று உருக்கமாக ஜபித்தாள். அதே க்ஷணம் அவளது இடது கண் படபட வென்று துடித்தது. 'இது நன்னி

மித்தமோ அல்லது நான் நினைப்பதற்கு நேர்மாருக நடக்கப்போவதன் அறிகுறியோ? தெரியவில்லையே...'- அவள் நெஞ்சம் இவ்வாறெல்லாம் கலக்கமுற்றது. கண்கள் இமையோடு இமை மூடவில்லை. இரவுமுழுதும் இதே சிந்தனை; இதே வியாகுலம்! நிலவின் வெள்ளி வெண்கதிர் தோயும் அகன்ற வெளியை ஒரு தரம் சாளரத்தின் மூலமாக நோக்கினுள். ஒரு கோயிலும் இல்லை. அவள் மனம் சற்று ஆறுதல் அடைந்தது. ஆனால் பொழுது விடியுமுன் என்ன என்ன வெல்லாமோ நிகழலாம்! பாரமான மனத்துடன் போராடிக்கொண்டே கண்ணயர்ந்தாள் இளவரசி.

அக்கணம் மின்னியல் காந்தியுடன் ஒரு தெய்வம் இளவரசி கண்வளரும் அழகைப் பார்த்துக்கொண்டு நின்றது. ஆனால் அந்தத் திவ்விய புருஷன் முகத்தில் ஒரு வருத்தக் குறி தோன்றுகிறதே; அது ஏன்?

இந்த அதிசயம் ராஜகுமாரி ஆழ்ந்த நித்திரை செய்யும்போது நிகழ்ந்தது. அதே சமயம் வெளியிலும் ஓர் அற்புதம் நிகழ்ந்தது. அதை யாரும் கவனிக்காதவாறு ஒரு மாயை உலகெங்கும் சில நாழிகை சூழ்ந்தது. சாதாரண மனிதனின் காரியமா அது?

புலரிஅலர்ந்ததோ இல்லையோ, மயக்கந்தெளிந்து எல்லோரும் ஆவலுடன் வெளியே பார்க்க வந்தனர். ஆயிரம் உன்னத கோபுரங்கள் விண்ணை அளாவி நிற்பது தெரிந்தது. அரசகுமாரி தன் அறையின் சாளரத்தைத் திறக்கப் பயப்பட்டாள். திறந்ததும் கோயில்கள் கண்ணில் பட்டுவிட்டால்...? ஆனால் அவள் சற்றுத் தைரியத்துடனேயே சாளரத்தின்

எழினியை நீக்கிப் பார்த்தபோது ஒரு சொப்பனபுரி எதிரே தென்பட்டது; அதன் தோரண வாயில்களில் மேளங்கள் உதயராகத்தில் பள்ளி எழுச்சி பாடின. கன்யா குமாரியின் சயன அறையின் வாயிலில் நிச்சலமான முகபாவத்துடன் ஆரியகுமாரன் மணக்கோலம் பூண்டு குமாரியின் வரவை எதிர்பார்த்துக்கொண்டிருந்தான்.

அரச குமாரியும் தன் வேதனையை யெல்லாம் மனத்தில் அடக்கி வைத்து மலர்ச்சியுடனே ஆரிய குமாரனின் கரத்தைப் பிடித்துக்கொண்டாள். அவனுடைய ஸ்பரிசத்தினால் அவளுடைய விரல்கள் நடுங்கின. இருவரும் ஒவ்வொரு கோயிலாகச் சென்று அங்குள்ள தெய்வத்தை வணங்கிக்கொண்டே வந்தனர். கடைசிக் கோயிலுள் சென்று தரிசித்துவிட்டுப் படிவழியே திரும்பும்போது கன்யா குமாரியின் முகம் சட்டென்று ஆனந்தத்தால் பிரகாசித்தது. என்ன அதிசயத்தை அவள் கண்டாள்? வெற்றிக்குறி அவள் மதிமுகத்தில் தென்பட்டது. கன்யா குமாரி ஆரியகுமாரனை நிமிர்ந்து நோக்கி, ''ஆரியபுத்திர! உம்முடையசக்தியை மெச்சுகிறேன். ஆனால் நீர் எனக்குக் கொடுத்த வாக்கைப் பரிபூரணமாக நிறைவேற்றவில்லை. நான் உம்முடைய கழுத்தில் எப்படி மாலையிடுவேன்?'' என்றாள்.

இளவரசியைப் பிடித்திருந்த ஆரிய குமாரனின் கை தானாகவே நழுவிற்று. அரசகுமாரியின் மொழியைக் கேட்டுப் பக்கத்தில் இருந்தவர்கள் யாவரும் அயர்ந்து போயினர். வெகுளி பொங்க, நெற்றி சுருங்க, "என் பிரதிக்ஞையை நான் செவ்வனே நிறைவேற்றியதற்கு அத்தாட்சி இந்த ஆலயங்களே" என்றான் ஆரியகுமாரன்.


ஒரு புன்முறுவல் முகத்தில் விளையாட இளவரசி தைரியமாகவே, "நான் கேட்டவை ஆயிரங் கோயில் கள் அல்லவா? ஆனால் எண்ணிப் பார்த்ததில் ஒரு கோயில் குறைவாக இருக்கிறதே! என் இஷ்ட தெய்வமான சிவனுக்குக் கோயில் இல்லையா?" என்றாள் ஒரு மடப்பிடியின் எழிலுடன். அப்போது நீலவானம் எதிரொலிக்க, நீலக்கடல் அதிர, யாரோ இடி இடி என்று நகைத்தமாதிரி இருந்தது. அங்கு நின்றிருந்தவர்களின் உள்ளத்தில் ஒரு குளிர் ஏற்பட்டது; காரணம் தெரியாத பயத்திற்கு அவர்கள் ஆளானார்கள். அண்டம் நடுங்கும்படி பூமியின் கீழ் ஒரு முழக்கம் கேட்டது. "ஐயோ! அதோ எதிரே—" என்று இளவரசி கூவி மிகுதியும் கூறி முடிப்பதற்குள் அவளுடைய உதடுகள் அசையாமல் நின்றுவிட்டன. எதிரே வரும் பயங்கரத்தைப் பார்த்து அவளுடைய கண்கள் நிலைத்துவிட்டன. சுற்றியிருப்பவர்களுக்கு அதைக் காட்ட ருத்திராக்ஷ மாலையைப் பற்றியிருக்கும் வலது கரத்தைத் தூக்கும்போது, அது அசைந்தால் தானே? அச்சமயம் பூமியை வெடித்துக்கொண்டு பிரம்மாண்டமான ஓர் ஆலயம் கிளம்பிற்று. எப்பொழுதும் சிரிப்புத் தவழும் இளவரசியின் முகத்தில் கார்முகிலின் சாயை!

கன்யா குமாரி கல்லின் உருவாகிவிட்டாள். ஆனால் அவளுக்கு உணர்ச்சிமட்டும் இருந்தது. எதிரே திசைகள் இருண்டு, கடலின் ஓலம் கேட்டது. வானும் வையமும் ஒன்றாகிக், கடலும் காற்றும் பிரளய நிருத்தியம் புரிய ஆரம்பித்தன. மலை யளவு அலைகள் தன் அழகிய தமிழகத்தை விழுங்குவதைப் பார்க்கப் பொறாதவளாய்க் கண்ணை மூடிக்கொள்ளப்

பார்த்தாள். ஆனால் சிலையாகிய பின் எங்கேயாவது கண் மூடுமோ? தன்னால் நேர்ந்த இந்த விபரீதங்களை அவளே பார்க்காவிட்டால்? "எனக்கினியனே, இதுவும் உன் திருவிளையா? நான் நினைக்கவே இல்லையே! உன் ரௌத்திர ரூபத்தைக் கொண்டா என்னை நீ ஆட்கொள்ள வந்தாய்? பேதை அதை அறிகிலேன். எனக்கு இக்கதி வர நீ சகிப்பாயோ?" என்று அந்தச் சிலை அழுதது. ஆனால் கல்விடும் கண்ணீர் மாந்தூர் புலனுக்குத் தெரியாது. செந்நிற மேகங்கள் ஆகாயத்தில் சடைவிரித்து அலைந்தன. மேகநாதம் சிவன் கரத்திலிருக்கும் துடி அதிர்வதுபோன்று இருந்தது. மான்போலத் துள்ளி, மழுப்போலக் காய்ந்து சரேல் சரேலென்று மின்னல்கள் கடல்நீரில் பாய்ந்தன. ருத்திரனின் பிரளய தாண்டவத்தின் அதிர்ச்சி தாள முடியாமல் சாகரமும் கம்பீரமாக எழுந்து தை தை என்று கொந்தளித்தது. கன்யா குமாரி சிலா ரூபிணியாக இவற்றையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தாள். ஆனால்இருதயத்தில் குமுறும் தன் துயரை வெளிக்காட்டி அவளால் ஆற்றிக்கொள்ள முடியவில்லை. என்ன கடுமையான சிவ சாபம்! பழைய தமிழ் உலகத்தைக்கடல் கொண்டதற்குச் சாக்ஷி பூதமாக நின்றாள் ஈசுவரி!.........

கற்பனைப் பறவை கற்பனை உலகத்திற்குப் பறந்து போய்விட்டது. எதிரே அதே கடல்; என் பின்புறம் ஈசுவரி கன்யா குமாரி இன்னும் சிவனைக் குறித்துத் தவம் புரிகிறாள். ஆனால் என்றைக்குச் சிவகிருபை வருமோ!

---



# ராம நாயன் கோயில்

# ராமராயன் கோயில்

## முன்னுரை

விசாலமான துங்கபத்திரை நதியில் எங்களுடைய படகு அக்கரைக்குச் சென்றுகொண்டிருந்தது. சற்றுத் தொலைவில் நதியின் மத்தியில் பசுமையான ஒரு சிறு குன்று தென்பட்டது. அதில் கணக்கற்ற பனைமரங்கள். எங்களுடைய படகு அத்தீவின் ஓரமாகச் சென்றது. அடிக்கடி துடுப்பு அசையும் சப்தமும், நாணல் சிர் சிர் என்று படகில் உராயும் ஒலியும், நடுநடுவே படகோட்டிகளின் பேச்சும் கேட்டுக் கொண்டிருந்தன:

"தம்பி, ஜாக்கிரதை! படகு கல்மேல் மோதப் போவுது."

உண்மையில் படகை நன்றாக ஓட்டத் தெரிந்தவனுக்குத்தான் அந்த அபாயமான இடத்தில் சமாளிக்க முடியும். கொஞ்சம் அசட்டையா யிருந்தால் படகு கல்லில் அடிபட்டு மூழ்கவேண்டியதுதான். ஆறோ அவ்விடத்தில் மிகவும் ஆழம். என்னுடன் கூடவந்த நண்பரைப் பார்த்து நான், "என்ன இங்கே நிறையக் குத்துக்கற்களா?" என்று கேட்டேன்.

"இல்லை, இது ராமராயனுடைய இடிந்த கோயில்" என்றார் அவர்.

அதற்குள் எங்கள் படகும் அத்தீவை நெருங்கியது. அன்று என் கண்களை நான் என்றும் பாராத ஒரு காட்சி கவர்ந்தது. ஆயிரக்கணக்கான செந்தா

மரைகள் நதியில் ரத்தின கம்பளம் விரித்தாற்போல் மலர்ந்திருந்தன. அவைகளுக்கு இடையிடையே அபூர்வ சிற்ப வேலைப்பாடுடைய தூண்களும், படிகளும் இங்குமங்கும் தலை நீட்டின. கால்போனவையும், மூக்கு உடைந்தவையுமான பாம்பைப் பிடிப்பன போன்ற மயில்களின் உருவங்களும், கல்லில் அமைந்த கமலமலர்களின் விசித்திரமான வேலைத்திறனும் அவைகளில் காணப்பட்டன. எத்தனை மாதிரி! ஒன்றுக்காவது இதழ்கள் மூளியாகாமல் இருக்கக் கூடாதா? கைகள் விண்டனவும், காது போனவையுமான அநேக அப்ஸர ஸ்திரீகளின் சிலைகள் தலை தூக்கி எங்களைப் பார்த்தன. இன்னும் அவைகளின் முகத்தில் ஜீவ களை பிரதிபலித்தது. அவைகளைச் சமைத்த சிற்பி எவனோ! "ஆகா! இப்பேர்ப்பட்ட கோயிலை எந்த முட்டாள் இடித்தானோ?" என்றேன். என் நண்பர், "ஏன், ராமராயனேதான் இந்தக் காரியத்தைச் செய்தவன்!" என்று கூறி இந்த அற்புதக் கதையைச் சொன்னார்.

## 1

நானூறு வருஷங்களுக்கு முன் நடந்த சம்பவம் இது. விசாலமான விஜயநகர ராஜ்ஜியம் சீர்குலைந்து போன சமயம். ராயவம்சத்தினர் சிதறிப்போய்த் தமிழ்நாடெங்கும் பல சிற்றரசர்களாகத் தோன்றினர். ஆனால் விஜய நகரத்தின் சமீபத்தில் உள்ள ராமநகரத்தை ஆண்ட கடைசி வீரன் ராமராயன். அவனிடம் 'கொண்டல்' என்று ஒரு குதிரை இருந்தது. குதிரையாவது குதிரை! மேலே மனிதன் உட்கார்ந்ததும் அது அப்படியே பாய்ந்து காற்றோடு போட்டி போட்டுச் செல்லுமாம். ராமராயனைத் தவிர வேறு

எவரும் அந்தக் குதிரையின் மீது சவாரி செய்யமுடியா தாம், கடினமான பல வீரச்செயல்கள் புரிந்ததன் அடையாளங்கள் அவனுடைய நெற்றியில் தோன் றின. இரும்பான சரீரம் அவனுடையது. பக்கத்துச் சிற்றரசனுன ராயதுர்க்கத்துப் பரதராயன் ராமராய னுக்குப் பகைவனுக விளங்கினுன். ஆனுல் ராமராயன் எங்கே! பரதராயன் எங்கே! ராமராயனுடைய வன்மையினுல் அல்லவோ விஜயநகரத்தின் பழைய சிறப்பு இன்னும் கொஞ்சம் இருந்தது!

நள்ளிரவு. ராமராயனுக்குத் தூக்கமே வரவில்லை. குளிர்ந்த காற்று வாங்க அவன் நதிக்கரையிலே உலா விக்கொண்டிருந்தான். அப்போது ஏதோ மணலில் உராயும் சப்தம் கேட்டது. காதைச் சரியாகக் குவித்துக்கொண்டு நதியை ஊடுருவிக் கவனித் தான். இருளில் ஒரு பெரிய படகு வேகமாக நதியில் சென்று கொண்டிருந்தது. ராமராயனு டைய கண்கள் ஜ்வலித்தன. பார்த்துக்கொண் டிருக்கையிலேயே படகு போன இடம் தெரியவில்லை. ராமராயன் பெருமூச்சுவிட்டுத் துரிதமாகக் கோட் டையை நோக்கிச் சென்றுன். மதிற் சுவரில் உட் கார்ந்து, ராமராயனுடைய தம்பி விரூபாக்ஷன் இனி மையாகக் குழல் ஊதிக்கொண்டிருந்தான். யாரோ வேகமாக வரும் ஓசையைக் கேட்டதும் அவனுக்குத் தூக்கி வாரிப் போட்டது. அண்ணனைப் பார்த்ததும் விரூபாக்ஷன் எழுந்தான்.

"விரூ! உடனே புறப்படு!"

"எங்கே, அண்ணு?"

"நதி சங்கமத்திற்கு."

நதி சங்கமம் அவ்விடத்திலிருந்து பத்துக்குரோச தூரம் இருக்கும். நாலைந்து சிற்ருறுகள் அவ்விடத்தில் துங்கபத்திரையுடன் கலக்கின்றன. படகுகள் அங்கே வேண்டியவை உண்டு. படகோட்டிகள் அனைவரும் ராமராயனுடையகுடிகள். திருட்டுத்தனமாகச்சென்ற படகை அங்கே கட்டாயம் கைப்பற்றலாம். சொன்ன மாத்திரத்தில் ஆயுதபாணிகளான அநேகங் குதிரை வீரர்கள் கோட்டைக்கு வெளியே ஆயத்தமாயினர். 'கொண்டல்' என்ற புரவி, தரையைக் குளம்பினுல் கீறித் துள்ளிக்கொண்டிருந்தது. குதிரையைத் தட்டிக்கொடுத்துவிட்டு ராமராயன் படைவீரர்களைத் தன் பின்னுல் வரும்படி கட்டளையிட்டான். ராயன் ஏறியதும் குதிரை பறந்தது.

நதிக்கரையோடு ராமராயன் சென்று சங்கமத்திற்கு அருகில் காத்துக்கொண் டிருந்தான். அங்கே மங்கலான வெளிச்சத்தில் ஆயிரக்கணக்கான படகுகள் இருப்பது நன்ருகத் தென்பட்டது. ஒவ்வொரு படகிலும் ஆட்கள் தயாராக நின்றனர். திடீரென்று நதிநடுவே ஒரு பெரிய படகின் இருண்ட சாயை தெரிந்தது. டுடு... டூம்...ம்...ம் என்று வெடி ஓசை. தூங்கிக்கொண்டிருந்த படகெல்லாம் பிலுபிலு வென்று அந்தப் பெரிய படகைச் சூழ்ந்துகொண்டன. கண்கொட்டும் நேரந்தான்; எல்லாம் முடிந்துவிட்டது. விரூபாக்ஷன் பெரிய படகினுள் குதித்து உள்ளே இருக்கும் அறையைச் சோதனை செய்தான். சற்று நேரம் கழித்துப் பையும் கையுமாக முகத்தில் உற்சாகத்துடன் வெளியே வந்து தமையனிடம் பையைக் கொடுத்தான். "வா! இன்னும் என்ன இருக்கிறது பார்க்கலாம்" என்று பெரிய ராயன் சொல்லிவிட்டு

உள்ளே நுழையும்போது, விரூபாக்ஷன் அவனைத் தடுத்து மெதுவான குரலில், "உள்ளே பரதராயனுடைய ஸம்ஸாரமும், பெண்ணும், இன்னும் பல ஸ்திரீகளும் இருக்கின்றனர். நாம் அங்கே போவது உசிதமல்ல" என்றான். ராமராயன், "ஆனால் உள்ளே யாராவது புருஷர்கள் இருந்தால் உடனே வெளியே வரச்சொல்லு" என்று கூறவே விரூபாக்ஷன், "அண்ணா! ஒரு புருஷக்காக்கை கூட இல்லை. பரதராயன் மூத்தமகன் கூட நான் வருவதற்குள் ஓடிவிட்டானாம்" என்று பதில் கூறினான்.

ராமராயன் பையை அவிழ்த்துப் பார்த்தபோது அவனுடைய கண்கள் கூசின. பையில் விலையுயர்ந்த ரத்தினங்கள் ஜ்வலித்தன. ராமராயன் விரூபாக்ஷனைத் தட்டிக்கொடுத்து, "பலே விரூ! நீயே இதை மந்திரியிடம் சேர்ப்பி. நம்முடைய கோட்டையை இன்னும் பலப்படுத்தும் காரியத்திற்கு உதவும். பரதராயனுடைய பெண்டுகளையெல்லாம் சௌக்கியமான இடத்தில் அடைத்து வை, போ!" என்றான்.

மனத்தில் என்றுமில்லாத மகிழ்ச்சியுடன் ராமராயன் உடனே ராயதுர்க்கத்தை வளைத்து க்ஷண நேரத்தில் சூறை ஆடினான். ஆனால் பரதராயன், கோட்டையின் பின்வழியாக அகழியில் குதித்து மறைந்துவிட்டான். அரண்மனை 'ஓ' என்று சூனியமாயிருந்தது. வெற்றிக்கோலத்துடன் ராமராயன் தன் ராஜதானிக்குத் திரும்பினான்.

## 2

அரைகுறையாய் இருந்த கோட்டை மதிலின் ஓரத்தில் ராமராயனுடைய மாளிகையைப் பார்த்துக்

கொண்டு ஒரு பெரிய மகிழமரம் இருந்தது. ஒரு நாள் மத்தியானம்; அச்சமயத்தில் பெரிய ராயன் தன் அறையில் சயனித்துக் கொண்டிருந்தான். சாளரத்தின் வழியாக அவனுடைய கண்கள் மாடங்கள் நிறைந்த நகரைப் பார்த்துக்கொண்டிருந்தன. சட்டென்று அவனுடைய பார்வை மகிழமரத்தண்டையில் விழுந்தது. அடர்ந்த மரநிழலில், அரம்பையோ, யக்ஷகின்னரியோ என்று சந்தேகிக்கும் அபூர்வ ரூப லாவண்ணியம் வாய்ந்த ஒரு பெண்மணி உலாவிக் கொண்டிருந்தாள். ஏதோ காரியமாக அப்போது அறையில் நுழைந்த விரூபாக்ஷனை நோக்கி ராமராயன், "இந்தப் பெண் யார்?'; என்று வினவினான்.

"பரதராயனுடைய பெண்" என்றான் விரூபாக்ஷன்.

ராமராயன் தன் தம்பியைக் கூர்ந்து கவனித்தான். அர்த்தமுள்ள ஒரு சிரிப்பு அவன் முகத்தில் விளையாடிற்று. "சிறையில் அல்லவோ நீ அவனை அடைக்கவேண்டும்? பின் இந்த மாதிரி ஏன்-?" என்று கேட்டபோது, "இல்லை அண்ணா, எல்லாம் சரியாகத் தான் செய்திருக்கிறேன். சாதாரணமான மனிதர்களை அடைக்கும் சிறையில் இவர்களையும் தள்ளுவது நன்றாக இராதே என்றுதான்" என்று குழறினான் இளவரசன். ராமராயன் தனக்குள்ளே சிரித்துக்கொண்டான். அதை அறிந்த விரூபாக்ஷனுடைய முகம் வாட்டமுற்றது. "அண்ணா! நீயே வந்து பார், அவர்களெல்லாம் கண்ணுங் கண்ணீருமாக..." என்று ஆரம்பித்தான்.

"பாவம்! கண்ணீரா சிந்துகிறார்கள்!" என்று கேலியாகக் கூறி ராமராயன் எழுந்து உட்கார்ந்தான்.

அவனுடைய கண்கள் பளிச்சென்று ஒளிர்ந்தன. வெப்பமான மத்தியான வேளை; விசாலமான நகரம் துயிலுற்றிருந்தது; நதிக்கரையிலுள்ள மணலில் கானல் பரவியிருந்தது. இன்னும் வெகு தூரத்தில் அடர்ந்த காட்டின் இருண்ட கோடு. ராமராயனுக்குப் பழைய நினைவுகள் எல்லாம் இறகு முளைத்து எதிரே வந்தன. அவன் முகத்தில் மாத்திரம் ஒரு வேதனை தோன்றியது. அது என்னவோ? அவனையும் அறியாமல் கண்களில் நீர் வந்து மறைத்தது. சட்டென்று கனைத்துக்கொண்டு, "விரூ! பார்ப்பதற்குப் பெண் எப்படி இருக்கிருள்?" என்று கேட்டான்.

குபீரென்று இரத்தம் முகத்தில் பரவ, வேறு பக்கமாகத் திரும்பி, "நன்ருகத்தான்" என்று கூறிவிட்டு விரூபாக்ஷன் அறையை விட்டு அகன்ருன். தம்பியின் முகத்தில் தோன்றிய புதிய மாறுதலைக் கண்டு ராமராயன் வியப்படைந்தான். யௌவனத்தில் தோன்றும் இந்த மாதிரி அநுபவம் வாழ்நாள் முழுமையும் காதலே அறியாத ராமராயனுக்கு அதிசயமாகத்தான் இருந்திருக்கும். விரூபாக்ஷன் சென்றதும் பெரிய ராயன் ஒன்றும் தோன்ருமல் காரணமின்றித் தானே சிரித்துக் கொண்டிருந்தான்.

ஒரு நாள் அரண்மனைக்கு வெளியே பரதராயன் பெண்ணை ராமராயன் சந்திக்க நேரிட்டது. அப்போது அம் மங்கை ஏதோ பழைய ஞாபகங்களில் ஆழ்ந்து இருந்தாள். அப்போது பின்ஞலிருந்து ராமராயன், "பெண்ணே! நீ யார்?" என்ருன். திரும்பிப் பார்த்துக் கம்பீரமான குரலில், "என் பெயர் மஞ்ஜரி!" என்ருள். ராமராயன், "நீதாஞ பரதன் அவன் மகள்? அட துரதிர்ஷ்டமே! உன் தகப்பனை நான்

காணக் கொடுத்துவைக்கவில்லையே! அவன் எங்கே இருக்கிறான், தெரியுமா?'' என்று வினவினான்.

இந்தச்செருக்கான சொற்கள், மஞ்ஜரியின் மனத்தில் ரோஷத்தையும், கண்களில் நீரையும் வரவழைத்தன. அந்தப் பரிதாபமான காட்சி ராமராயனுக்கு வேடிக்கையாய் இருந்தது.

“கோபித்துக் கொள்ளாதே! உன் நல்ல காலம் என்கையில் சிக்கினாய்! இல்லாவிட்டால் நீ எங்கேபோயிருப்பாய் தெரியுமா?'' என்று ராமராயன் சொல்லவே "துங்கபத்திரையின் ஜலத்தில்'' என்று சொல்லிப் பெண் மணி நிமிர்ந்து நோக்கினாள். நீர் தோய்ந்த அவளுடைய கண்கள் இரு நக்ஷத்திரங்களென ஒளி வீசின. “ராமராயரே! பத்திரா நதியில் இடத்திற்கு என்ன குறை?'' என்றாள். இளவரசியின் பயனற்ற ரோஷத்தைக் கண்டு ராமராயன் இடியிடி யென்று நகைத்தான் மஞ்ஜரி பேசாமல் ஒரு பதுமைபோல் தலை குனிந்து நின்றாள்.

ராமராயன் மஞ்ஜரியை அணுகி, “இதைக்கேள்'' என்றான். அவளுடைய தொண்டை துக்கத்தால் அடைத்தது. அவ்விடத்தை விட்டுப் போக யத்தனிக்கையில் ராமராயன் அவளைத் தடுத்து, “நான் சொல்வதைக் கேட்கமாட்டாயா? என்மேல் உனக்குக் கோபமா?'' என்றான். மஞ்ஜரி, “ராயரே, என்னை ஏன் ஏளனம் செய்கிறீர்?'' என்றாள்.

ராமராயன், “ஏளனம் ஒன்றுமில்லை. உண்மையாகச் சொல்கிறேன். என்னை நீ மணந்துகொள்'' என்றதும், 'பக்' என்று இளவரசி சிரித்துவிட்டாள். சிரிப்பை அடக்கி அடக்கிப் பார்த்தாள்; ஆனால் முடிய

வில்லை. ராமராயன் கோபம் பொங்க, "பெண்ணே! எந்த விஷயத்தில் நான் குறைந்து போய்விட்டேன்?" என்றான்.

ராயனைத் திரும்பிக்கூடப் பாராமல் அம்மடந்தை அவ்விடத்தை விட்டு அகல யத்தனித்தாள்! ராமராயன் அவளைப் பின்பற்றி, "மஞ்ஜரீ! உன்னை நான் பலாத்காரமாகக் கொள்ளமுடியும். ஆனால் நான் அப்படிச் செய்பவன் அல்ல" என்று சொல்லும் போதே அவனுடைய கண்டம் விம்மிற்று. "மஞ்ஜரி! நான் படும் வேதனை உனக்குத் தெரியுமா? எனக்குப் போர்த்தொழிலில் அலுப்பு ஏற்பட்டு விட்டது. சற்று நிச்சந்தையாய்த் தலைசாய்க்க இடந்தரமாட்டாயா?" என்று ஏக்கத்துடன் கூறினான்.

மஞ்ஜரி சற்று அனுதாபத்துடன் அவன் சொல்வதைக் கேட்டுக்கொண்டிருந்தாள். ராமராயன் பெருமூச்சு விட்டுத் தான் வீணாக வாழ்நாளைச் சுகபோகமின்றிக் கழித்ததைத் தழுதழுத்த குரலில் சொல்லிக் கொண்டான். மஞ்ஜரி இதைக் கேட்டு அவ்விடத்தினின்று விரைந்து சென்றாள்.

அன்று மாலை மஞ்ஜரியிடமிருந்து ஓர் அழகிய கண்ணாடியும், ஒரு கடிதமும் ராமராயனுக்கு வந்தன.

"நீங்கள் உங்களுடைய யௌவனதசையை ரண களத்தில் போக்கிவிட்டீர்கள். யுத்த களத்தின் உற்சாகத்தில் முகத்தைக் கண்ணாடியில் பார்த்துக் கொள்ளத் தங்களுக்கு அவகாசம் ஏது? பாவம், இப்போதாவது முகத்தை நன்றாகப் பார்த்துக் கொள்ளட்டுமே என்று இக் கண்ணாடியை அனுப்பிவைத்திருக்கின்றேன். தவறு இருந்தால் மன்னிக்கவேண்டும்" என்று அக்கடிதத்தில் எழுதியிருந்தது.

ராமராயன் அக் கடிதத்தை நூறு சுக்கலாகக் கிழித்தெறிந்தான். அப்படியும் அவன் ஆத்திரம் அடங்கின பாடில்லை. உண்மையில் அப்போது தான் ராமராயன் தன்னைக் கண்ணாடியில் பார்த்துக் கொண்டான். இருபது வருஷங்கள் நானாவிதமான கஷ்டங்களோடு போராடினதால், அவற்றின் சின்னங் கள் அவன் முகத்தில் தோன்றி இருந்தன. அவ னுடைய தலையில் தேடிப்பார்த்தால்கூட ஒரு கருமயிர் ஏது! தன்னுடைய முகத்தின் தோற்றத்தைப் பார்த் ததும் அவனுக்கே தூக்கிப்போட்டது. "இந்தப் பெண் கேலிசெய்வதில் என்ன தவறு இருக்கிறது? முன் இருந்த முகவசீகரம் இப்போது எங்கே! ஐயோ! வாழ்நாள் முழுவதும் வீண் ஆகிவிட்டதே!" என்று தன் நரைத்த தலைமயிரை இரு கைகளாலும் பிய்த்துக்கொண்டான். கண்ணாடியின் முன் நின்று பார்த்துப் பார்த்து உருகினான்.

அன்று இரவு மதுரமான குழலின் நாதம் கேட் டது. அலுப்பினால் அயர்ந்து நித்திரை செய்த ராம ராயனுடைய மனத்திலும், மற்றொரு மெல்லியலாள் மனத்திலும் அது வெவ்வேறு கிளர்ச்சிகளை மூட்டி விட்டது. ஒன்று வீணான மனோரதம்; மற்றொன்று துணையின்றி வேதனையில் ஆழ்ந்த மனத்தில்தோன்றும் காதலின் அமிர்த ஸ்பர்சம்.

## 3

ராமநகரத்தில் ஒரே பரபரப்பு. பரதராயன் பிஜ புர் ஸுல்தானின் உதவியைக்கொண்டு ராம நகரத் தைத் தாக்கப் போவதாக வதந்தி. ஊர்முழுதும் இதே விசாரம்.

விரூபாக்ஷனுடைய அறையில் குழலோசை அன்று கேட்கவில்லை. அதற்குப் பதிலாக மந்திராலோசனை சபை ரகசியமாக அங்கே கூடிற்று. நிபுண ராஜதந்திரியான புண்டரீக ராவ், ராமராயனைப் பார்த்து, "அரசே! நீர் இந்தத் தடவை சமாதானமாகப் போகவேண்டியது. பரதராயனைச் சேர்ந்த ஸ்திரீகளை நாம் மரியாதையாக அனுப்பி விடுவோம். நம்முடைய கோட்டையை இன்னும் சரியாகச் சீர்திருத்தியாகவில்லை. பதறி ஏதாவது செய்தால் ராமநகரம் பிணக்காடாகி விடும். ஆறுமாதம் பொறுத்தால் இதற்குப் பழி தீர்த்துக்கொள்ளலாம்" என்று யோசனை கூறினர்.

ராமராயன் யோசனையிலிருந்து தெளிந்தவனாய், பரதராயனுடைய குடும்பத்தினரை அழைத்துச்செல்லச் சிவிகைகள் தயாரிக்கும்படி கட்டளையிட்டான்.

அதே பழைய மகிழமரம். மலர்கள் உதிர்ந்து நாலு திசையும் மணம் கமழ்ந்தது. ராமராயன் அடிமரத்தில் சாய்ந்தவண்ணம் பரதராயனுடைய குடும்பத்துப் பெண்கள் செல்லும் காட்சியைக் கண்கொட்டாமல் கவனித்தான். பச்சைநிறப் பட்டில் அலங்கரித்த சரிகைக் குஞ்சங்கள் தொங்கும் சிவிகை வந்தது. சதங்கையின் மெல்லொலி கேட்கவே ராமராயன் திருப்பிப் பார்த்தான்.

மஞ்ஜரி, அழகிய உடைதரித்துத் தெய்வப்பாவையென அங்கே தோன்றினுள். வயதுமுதிர்ந்த ராமராயனுடைய முகத்தில் காரிருள் தோன்றியது. இளவரசியின் மதிவதனத்தில் வெற்றியின் உற்சாகம் பிரகாசித்தது, மெதுவாக மஞ்சரி ராமராயனை அணுகி "போய்வருகிறேன்" என்று புன்னகை அரும்ப மொழிந்தாள். அந்த வார்த்தை ராமராய

யைச் சுறுக்கென்று தைத்தது. மஞ்ஜரியின் இரண்டு அகன்ற விழிகளும் தன்னை நோக்குவதை அவன் கண்டான். விழிக்கடைகளில் நீர் ததும்பிற்று. சற்று நேரத்திற்கெல்லாம் பலபல வென்று கண்ணீர் பெருகியது. ராமராயனுக்கு ஒன்றுமே தோன்றவில்லை. மஞ்ஜரி ராமராயனுடைய பாதங்களைக் கண்களில் ஒற்றிக் கொண்டாள். ராமராயன் அசட்டுச்சிரிப்புடன் நரைத்திருந்த தன் தலைமயிரைத் தடவ ஆரம்பித்தான். இளவரசி கண்களைத் துடைத்துக்கொண்டு மழை நடுவில் பளிச்செனத் திகழும் மின்னலைப்போல ஒரு சிரிப்புச் சிரித்தாள். பிறகு, "நீர் அவசியம் வந்து என்னை அழைத்துக்கொள்ள வேண்டும். வருகிற கார்த்திகை சுக்கிலாஷ்டமி யன்று நான் எங்களுடைய கோட்டைக்கு வெளியே யுள்ள கோவிலுக்குப் பூஜை செய்ய வருவேன். உம்மை நதிக்கரையில் எதிர்பார்த்துக் கொண்டிருப்பேன். என்னை அழைத்துப் போகத் தாங்கள், 'கொண்ட'லுடன் வரவேண்டும்" என்று கூறிவிட்டு நூபுரம் ஒலிக்க ராஜகுமாரி பல்லக்கில் ஏறிக்கொண்டாள்.

## 4

பார்த்துக்கொண் டிருக்கையிலே துங்கபத்திரையின் நடுவிலுள்ள திட்டில், ஒரு பிரம்மாண்டமான ஆலயம் இந்திர ஜாலத்தால் உண்டாவது போல் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே வந்தது. ஆகாயத்தை அளாவும் கோயிலைக் கண்டு ஜனங்கள் திகைத்துப் போயினர். அதில் விசித்திரமாக அமைந்த பிராகாரங்கள் எத்தனை! கோபுரங்கள் எத்தனை! ராமராயன் தன் பொக்கிஷத்திலுள்ள பொற் குவியலையெல்லாம் ஆற்றில் கொட்டி இந்த அதிசயமான வேலையை நடத்திவந்தான்.

குடிகள் யாவரும், "இது ராமராயருடைய ஸாதன பீடமோ? எந்தத் தெய்வத்தைப் பிரதிஷ்டை செய்யப் போகிறாரோ?" என்றெல்லாம் பேசிக் கொண்டனர். ஆனால் எவருக்கும் அதன் மர்மம் தெரியவில்லை.

கார்த்திகை சோமவாரம்; சுக்கிலபக்ஷத்து அஷ்டமி. வானம் முழுவதும் மேகாந்தகாரம். அந்தி வேளை. அன்று ராமராயன் தன் புரவியின்மேல் ஏறிப் பிரயாணமானான். மஞ்ஜரியும் தன் சொல்லை மறக்கவில்லை. ராயதுர்க்கத்துக் கோயிலுக்கு வெளியே ஆகாயமும் பூமியும் இருட்டிவரும் திசையையே நோக்கி நின்றாள். அவளுடைய இருதயம் படபடத்தது. மின்வெட்டென ஒரு குதிரைவீரன் தோன்றி அவளைத் தன் புரவியின்மேல் ஏற்றிக்கொண்டு பறந்து சென்றான். காவலாளிகள் சற்றுநேரம் விழித்துவிட்டுப் பிறகு வந்த ஆளைத் துரத்திச் சென்றார்கள். 'கொண்டல், காற்று வேகமாகப் பறந்தது. அதைப் பின்பற்ற யாரால் முடியும்! மஞ்ஜரியும் ராமராயனும் குதிரையுடன் சற்று நேரத்திற்கெல்லாம் கண்ணுக்குப் புலப்படாமல் கார் இருளில் மறைந்துபோனார்கள்.

ராம நகரம் வந்துதான் 'கொண்டல்' நின்றது. பொழுதும் பலபல வென்று விடிந்துகொண்டிருந்தது. அயர்ந்திருந்த இளங்கொடியாள் ராமராயனுடைய மார்பில் கண்களை மூடிக்கொண்டு சாய்ந்திருந்தாள். இளரவியின் கதிர்கள் அவளுடைய முகத்தில் விழுந்தன. உள்ளத்தினின்று பொங்கிவந்த ஆசையுடன் ராமராயன் அவளுடைய பேரெழிலைச் சற்று நேரம் பருகிவிட்டுச் சுகமான படுக்கையில் மெல்லப்

படுக்கவைத்தான். விரூபாக்ஷனைக் கூப்பிட்டு இளவரசிக்குச் சுசுருஷை செய்யவிட்டதும் ராமராயனுடைய மனத்திலுள்ள இன்ப வெள்ளம் கரைபுரண்டு ஓடிற்று. பரதராயனுடைய மருட்டலுக்கு இணங்கி அவனுடன் சமாதானம் செய்துகொண்ட மானக்கேட்டை அவன் மறந்துபோனான். "மஞ்ஜரி கிடைத்ததே போதும்" என்று பரம திருப்தி அடைந்தான். விரூபாக்ஷனைக் கூப்பிட்டு அவன், "நாளை ஸாயந்திரம் இருட்டினதும், மஞ்ஜரியை யாருக்கும் தெரியாமல் நதி நடுவேயுள்ள ஆலயத்தில் என்னிடம் கொண்டுவிடு; நான் காத்துக்கொண்டிருப்பேன். பத்திரம்!" என்று சொன்னான்.

விரூபாக்ஷன், "அண்ணா! சற்று நேரம் சிரம பரிகாரம் செய்துகொண்டு போயேன்" என்றான்.

ராமராயன், "எங்கேயப்பா எனக்கு ஒழிவு? இன்னும் ஸ்தூபிகளில் தங்கக் கலசங்கள் ஸ்தாபனமாகவேண்டும். நாளைக்குத் தேவி பிரதிஷ்டை செய்ய வேண்டும்" என்றான். ராமராயனுக்கு ஆனந்தம் பொங்கிக்கொண்டிருந்தது.

மறுநாள் கோயிலின் சிகரத்தில் பொற்கலசம் அமைத்தாகி விட்டது. மற்ற எல்லா வேலைகளும் முடிந்துவிட்டன. அன்று இரவில் எரிவதற்காக மணி விளக்குகள் லக்ஷக்கணக்காக நெய் விட்டுத் திரியிட்டுச் சித்தமாக இருந்தன. படகு படகாய், ஆற்றில் பூத்த செந்தாமரை மலர்கள் கோபுரவாயிலில் வந்து குவிந்தன.

இவ்வளவு புஷ்பம் எதற்கோ?

ராமராயனுடைய அந்தரங்க தேவியின் பூஜைக்காகத்தான்.

இரவு இரண்டாம் ஜாமமும் கழிந்தது. ராமராயனுடைய அந்தரங்க பூஜையானதால், எவரும் ஆலயத்தில் இல்லை. இந்த விசித்திர ஆலயத்தின் மேலே எண்ணற்ற தாரகைகள் மின்னின. பிராகாரங்களில் எரியும் மணிவிளக்குகளும் ஒவ்வொன்றாக அணைந்து கொண்டே வந்தன. 'உஸ் உஸ்' என்று ஒரு காற்று நதியின் ஜலத்தை அலைத்துச் சென்றது. ராமராயன் திடுக்கிட்டு மஞ்ஜரியைச் சுமந்து வரும் படகு வருகிறதோவென்று ஆவலுடன் எழுந்தான். ஆனால் ஒன்றையும் காணவில்லை. நிர்மலமான வான வெளியை மேகத்திரள் கவிந்துகொண்டது. நேரமாக ஆக, ராமராயனுக்குத் தான் ஏதோ ஒரு பயங்கரமான பிரேதபுரியில் உலவுவதுபோல் இருந்தது. பரந்த இருளில் தான் கோவென்று கதறி அலைவதுபோல் அவன் பிரமை கொண்டான். அவனுக்கு உள்ளுக்குள்ளே நடுக்கம் ஏற்பட்டது. ஆனால் சட்டென்று இந்த வீண் கலவரத்தை உதறிவிட்டு உரக்கச் சிரித்தான். தூரத்தில் துடுப்பின் ஓசை கேட்டதுபோல் அவனுக்குத் தோன்றிற்று. இருண்ட நதியை நோக்கி அவன், "விரூ! விரூ!" என்று கூவினான். ஒரு பதிலும் வரவில்லை. காற்று ஒன்றுதான் அவனுக்குப் பதில் தந்தது. நதியின் அலைகள் அவனை ஏளனம் செய்வதுபோல் கோயில் படிகளில் மோதின. "சே" என்று வெறுப்பு ஏற்பட்டு அவன் கோபுர வாயிலில் வந்து உட்கார்ந்தான். ஆலயத்தில் ஒரு விளக்காவது எரியவில்லை.

ராமராயன் தன்னையும் மீறிக் கண்ணயர்ந்தான்.

## 5

சில்லென்று ஒரு ஸ்பரிசம் படவே ராமராயன் திடுக்கிட்டு எழுந்து, "மஞ்ஜரி! வந்துவிட்டாயா?" என்றான். புண்டரீகராவ் நமஸ்கரித்துவிட்டு, "இல்லை, அரசே! நான்தான் புண்டரீகன்!" என்றான்.

"ஆனால் மஞ்ஜரி எங்கே? உன்னோடு வரவில்லையா?"

"இல்லை, பிரபு! ராஜகுமாரி தன் கணவரோடு போய்விட்டாள். விரூபாக்ஷராயர், தம்மையும் அவளையும் இந்தக் காரியத்திற்காக மன்னிக்கும்படி கேட்டுக்கொள்ள என்னை இங்கே ஏவினார்."

ராமராயன் பித்துப் பிடித்தவன்போல் ஒரு சிரிப்புச் சிரித்தான். பிறகு, "விரூ என்ன சொல்லிவிட்டுப் போனான்?" என்றான்.

"மஞ்ஜரி தம்முடைய மனைவி யென்றும், எட்டு மாதத்திற்கு முன்னமேயே இந்த ராமநகரத்து மாளிகையில் சூரிய சந்திர சாக்ஷியாக இருவரும் காந்தர்வ விவாகம் பண்ணிக்கொண்டார்களென்றும், பரதராயனுடைய வசத்திலிருந்து மஞ்ஜரியைக் கொண்டுவர, உம்மாலேயும் உம்முடைய 'கொண்ட' லாலேயும் தவிர்த்து யாராலும் முடியாததலால் அதற்காகத் தங்களை உபயோகப்படுத்திக் கொண்டதாகவும், சொல்லித் தங்களுடைய மன்னிப்பைக் கேட்க என்னை இங்கே ஏவினார்" என்றார் புண்டரீகராவ்.

"அப்படியா!" என்று பெருமூச்சு விட்டான் கிழ அரசன். "ராணி மஞ்ஜரி ஏதாவது சமாசாரம் சொன்னாளா?" என்று கேட்டான். அதற்கு மந்திரி, "தன்னுடைய காரியார்த்தமாக இந்தச் சூழ்ச்சியைச்

செய்ததன்பொருட்டு உங்களுடைய மன்னிப்பைக் கேட்கச் சொன்னாள்" என்றான்.

பொழுது விடிந்ததும், மந்திரி ராமராயனிடம் விடைபெற்றுக்கொள்ள வந்தபோது, கிழ அரசன் ஏதோ யோசனையில் ஆழ்ந்திருந்தான். மந்திரியைப் பார்த்து, "ஜலத்தில் அதோ சாயை விழுவதைப் பார். நானும் ஒரு சாயை மாதிரிதான். நான் கிழவனாகிவிட்டது வாஸ்தவந்தான்!" என்றான்.

உன்மத்தம் பிடித்தவர்களுக்கு இருப்பதுபோல் ஒரு மருண்டபார்வை அவன் கண்களில் கூத்தாடியது.

"மந்திரி! நீ ஒரு காரியம் செய்யவேண்டும். இந்தக் கோயிலைக் கட்டினவர்களுக்கு இன்னும் நான் சம்மானம்செய்யவில்லை. அவர்களை இங்கே அனுப்பிவை. நீ சுகமாக ராமநகரத்தை ஆள்" என்று மனமுடைந்து கூறினான்.

சிற்பிகள் யாவரும் கோயிலில் வந்து கூடினர். சூரியவெளிச்சத்தில் பொற்கலசங்கள் பளபளவென்று மின்னின. ராமராயன் அவர்களுக்கு ஜாடை செய்து அவற்றைப் பெயர்த்துவரும்படி கட்டளையிட்டான். முதல் நாள் மிகவும் கஷ்டத்துடன் பதிக்கப்பட்ட கலசங்கள் ஒரு நொடியில் பெயர்த்துக் கொண்டுவரப்பட்டன.

ராமராயனுக்குப் புத்தி சுவாதீனத்தில் இல்லை என்று எல்லோரும் உணர்ந்தனர். யாருக்கும் அவனை அண்டத் தைரியம் இல்லை. சிலர், அரசனுக்குச் சித்தப் பிரமை என்று செய்தி சொல்ல நகரத்தை நோக்கி ஓடினர். ராமராயன் வெறி பிடித்து உள்ளேயிருக்கும் பீடத்தை உடைத்து அதிலிருந்த பொற்

குவியல்களை வெளியே கொண்டுவந்து "இடியுங்கள் கோவிலை! இடித்துத் தள்ளுங்கள்!" என்று ஒரு பயங்கரமான கூச்சலிட்டான். பிடிபிடியாகப் பொன் நாணயங்களை எல்லோருக்கும் அள்ளியிட்டான். பொற்காசுகளை நாலுபுறமும் சிதறும்படி வாரி இறைத்து, "இடி!......இடி!" என்று உக்கிரத்துடன் கூவி, தானே ஒரு கடப்பாரையைக் கரத்தில் ஏந்தி அலங்கோலமாகக் கோபுரத்தின்மீது ஏற ஆரம்பித்தான். தப் திப்பென்று கற்கள் தூளாகி விழுந்தன. மாதக்கணக்காக வேலைசெய்து மிகவும் ஜாக்கிரதையாக அமைத்து உயிர் பெற்றவைபோல் விளங்கிய பதுமைகள் சின்ன பின்னமாகி நதியில் விழுந்தன. ரத்தினதாஸன் சிற்பிகளில் சிறந்தவன்; தள்ளாத கிழவன். ஆலயத்தின் ஒரு மூலையில் தேம்பித் தேம்பி அழுது கொண்டிருந்தான். வெறிபிடித்த ராமராயன் இதைக் கவனித்ததும் உடனே கீழே இறங்கித் தன் முகத்தைச் சிற்பியின் முகத்தோடு வைத்துக்கொண்டு, "ஏன் கண்ணீர் விடுகிறாய்? தலை நரைத்து விட்டதென்றா? சே, அழாதே என்னோடு வா!" என்றான்.

ஜனங்கள் ஒன்றும் தோன்றாமல் விழித்துக் கொண்டிருக்கையில், பிரவாகமாக ஓடும் துங்கபத்திரையில் ராமராயன் குதித்தான். "ஐயோ, ஐயோ!" என்று நாலு திக்கிலும் கூக்குரல்கள் கேட்டன. மடமடவென்று எத்தனையோ பேர் அவனை மீட்க நதியில் குதித்தார்கள். ஆனால் ராமராயனா அவர்கள் கையில் சிக்குபவன்?

* * *

எங்கள் படகும் அந்த அதிசயமான இடத்தைக் கடந்தது. அதோ அவ்விடத்தில் அல்லவா ஓர் அபூர்வ

மான மகா வீரனின் மனக்கோட்டை இடிந்து மண்ணுகி விட்டது! அந்த அதிசய புருஷனுடைய வீணுசையின் சின்னங்களல்லவா துங்கபத்திரையின் மத்தியிலுள்ள இப்பாழடைந்த சிற்பங்கள்!

---



# மனைச் சுடர்

# மணிச்சுடர்

துக்கமாவது துக்கம்! பொங்கிவருகிறது எனக்கு. நான் என் வாழ்வில் அழுதது கணக்கிடத் தொலை யாது. சிறுபையனாக இருக்கையில் பரீக்ஷையில் தவறித் ததற்காக அழுதிருக்கிறேன்; யாருக்குமே அத்தகைய விசனம் உண்டாகாது என்று எண்ணியும் இருந் தேன். பிறகு ஸம்ஸாரத்தில் எவ்வளவோ கஷ்ட நிஷ் டூரங்களினால் கோவென்று அலறியிருக்கிறேன். ஆனால் இப்போது வரும் அழுகை..........இதற்கு ஓய்வே இல்லை! அழுவதனாலேயே என் துக்கம் எவ்வளவோ ஆறிவிடுகிறது. அதிலேயே எனக்கு ஓர் ஆனந்தம். அவளை அடையும் பாக்கியம் இராவிட்டா லும், அவளை நினைத்தாவது அழுவதில் என்ன தவறு? யார் என்ன வேண்டுமானாலும் எண்ணிக் கொள்ளட் டும்; நான் மறைவில் விடும் இந்தக் கண்ணீர் எவருக்கும் தெரியாது - என் மனைவிக்குக்கூட. வந்த லக்ஷ்மியைக் காலால் உதைத்துவிட்டு அப்புறம் 'வா' என்றால் வருவாளோ? கதறி என்ன லாபம்? நான் ஒரு சமயம் அலக்ஷியமாக நினைத்த அவள், இப்போது விலை யில்லாப் பொருளாக மாறிவிட்டாள். அந்த அரிய வஸ்துவை என் ஹிருதயத்தைக் கொடுத்து வாங்க வில்லை. ஏமாந்து போனேன். இப்போது துன்பக் கடலில் ஆழ்கிறேன்!

நானும் அவளும் சிறுவயதில் ஒரே வீட்டில், ஒன் றாகப் பழகிவந்தோம். அவளை நன்றாகப் பார்க்கும் அவகாசத்தை நான் இழந்தேன். அது என்னுடைய

தவரு? அந்தச் சமயங்களில் வேறுவிதமாக அவளை என்னால் பார்க்க முடியவில்லையே........புருஷன் பெண்சாதி விளையாட்டுக்கூட நாங்கள் விளையாடினது இல்லை. அவளை என் கூட்டாளி என்றே நினைத்தேன். திடீரென்று மட்டும், ஒருநாள் காலை, வஸந்த மல்லிகை போன்ற அவள் இப்போது இருக்கும் திவ்விய ரூபத்துடன் என்முன் தோன்றியிருந்தால், நிச்சயமாய் அவளைக் கண்டு நான் மோகித்திருப்பேன்; என் கண்கள் அவளை விட்டு வந்திரா; அதோடு என் உயிரையும் அவளுக்கு அர்ப்பணம் செய்திருப்பேன். ஆனால் என் தலை எழுத்து அந்தமாதிரி நேரவில்லையே! அவளோடு அதிகமாகப் பழகியதனாலேயே எனக்குச் சலிப்பு அவள்மேல் ஏற்பட்டிருந்தது. இப்போது என்னை விட்டுப் போய்விடவே, அவளுடைய ஆகர்ஷணையே பலமாகிவிட்டது. இதைப் பற்றிப் பேசி என்ன பயன்? கையில் வந்த கனியை நழுவவிட்டேன். 'கண்டதும் காதல்' என் விஷயத்தில் பலிக்கவில்லை.

ஹைமவதி - ஹைமா அவள் பெயர். இளமைப் பருவத்தில் அந்தப் பெயர், எத்தனையோ தரம் என் காதில் அடிபட்டு இருக்கும். அந்தச் சொல்லில் ஒரு விந்தையும் அப்போது நான் காணவில்லை; யாதோர் இசையும் அதில் ஒலிக்கவில்லை. ஆனால் இன்றோ அந்த நாமஸ்மரணையே உருக்கமான ராகத்தில் ஒரு பாட்டாக இருக்கிறது எனக்கு. ஹைமா........ ஹைமா........ஹைமா........அந்நாட்கள் திரும்பவும் வருமா........வருமா......வருமா? - என்னுடைய விழியருவியும் இந்த இசையருவியுடன் கலந்து விடுகிறது........இதென்ன வீண் அரற்றல்?

## 2

இரண்டொரு விஷயம் அவளைப்பற்றி என் நினைவிற்கு வருகிறது. ஒரு நாள் என் நோட்டுப் புஸ்தகத்தில் அவள் மசிக்கூட்டைக் கவிழ்த்துப் பாழாக்கி விட்டாள். நான் கஷ்டப்பட்டு வேறொரு பையனிடமிருந்து 'காபி' அடித்து எழுதிய பாடம். அவளை நன்றாகக் கைகொண்டவரை அடித்துவிட்டேன். விக்கி விக்கி அவள் அழும் குரலோசை இதோ இன்னும் என் செவிகளுக்குக் கேட்கிறது. அயலார் பெண்ணை அடித்ததற்காக அம்மா எனக்கு வேண்டிய பூசை கொடுத்தாள். அடி தாளாமல் நான் வீரிடும்போது ஹைமாவும் என்னுடன் அழத்தொடங்கினாள். அடியையும் மறந்து எனக்குக் கோபம் மூண்டது. "புகார் செய்ததுமல்லாமல் கூடவும் அழுகிறாளே...... நீலி! இவளை இன்னும் அடிக்கமாட்டோமா!" என்று ஆத்திரம் வந்தது. ஆனால் அம்மாவின் கைவிரல்கள் பட்ட தழும்பு முதுகில் ஞாபகமூட்டிற்று. நான் சமாளித்துக்கொண்டேன். அவளோடு அன்றுவரை, 'டூ' விட்டுவிட்டு, என் அறையில்போய் நான் தாழிட்டுக்கொண்டேன். வெகு நாழிகை கழித்துப் பசி வயிற்றைக் கிள்ளவே, நான் வெளியே வந்தேன். தாழ்வாரத்தில், ஹைமா தரையில் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தாள். அழுகையின் விக்கல் சற்று நேரத்திற்கொருதரம் அவளிடமிருந்து வந்தது. கன்னத்தில் விழிநீர் உலர்ந்து அதன் உவர்க்கோடு தென்பட்டது. 'பாவம், இவள்மேல் ஏன் கோபித்துக்கொண்டோம்?' என்று இருந்தது எனக்கு.

அப்பா அன்று ஒரு புதிய கடிகாரம் வாங்கி வந்திருந்தார். அது எனக்காகத்தான். ஆனால் அதை

எனக்குக் காட்டவே இல்லை. அது பீரோவில் இருப்பதாக மட்டும் எனக்குத் தெரியும். அவர் கோர்ட்டுக்குப் போயிருந்த சமயம் பார்த்து, பீரோ வைத் திறந்தேன். சாவியை அம்மா கை மறதியாய் எங்கோ வைத்துவிட்டாள். அது என் கண்ணில் படவேண்டுமா? - கடிகாரத்தை எடுத்து உருட்டி உருட்டிப் பார்த்தேன். அப்போது என்னுடன் ஹைமாவைத் தவிர வேறு எவருமில்லை. நானும் அவளும் அப்பொழுதே சமாதானமாகப் போய் விட்டோம். முடிகிறவரை கடிகாரத்திற்குச் சாவி கொடுத்தேன். 'கடுக்' என்று என்னவோ சப்தம் கேட்டது. கடிகாரத்தைக் காதில் வைத்து ஊன்றிக் கவனித்தேன். 'டிக்டிக்' என்ற சப்தம் கேட்கவில்லை. "இது ஏதடா, வம்பாக முடிந்ததே" என்று மெல்ல இருந்த இடத்திலேயே வைத்துவிட்டேன். எனக்கு வேர்த்து விட்டது. திக்குத்திக்கென்று மார்பு அடித் துக்கொண்டது. அம்மா மாடிக்கு வந்துவிட்டாளா னல் - ? ஹைமவதியின் முகத்தில் ஈயாடவில்லை. அவள் 'வத்தி' வைத்துவிடப்போகிருளே என்ற திகில் எனக்கு.

'அவளும் என்கூடத்தான் இருந்தாள். நான் கடிகாரத்தைக் கெடுத்ததைப் பார்க்க, வேறு மூன்ரு வது சாக்ஷி இல்லையே. ஹைமாவின்மீது இந்தப் பழியைச் சுமத்தி விடலாமா?' என்று யோசித்தேன். இந்தமாதிரி எத்தனையோ தரம் செய்தும் இருக்கி றேன். விசாரணைக்கு வரும்போது என் வண்ட வாளம் எல்லாம் வெளிப்பட்டுப்போய்விடும். அதற் காக இரண்டுமடங்கு தண்டனையும் அடைந்திருக்கி றேன். 'சே! இது வேண்டாம்' என்று அந்த

எண்ணத்தை விட்டுவிட்டேன். நான் ஹைமாவைப் பார்த்து, "ஐமு! என் கண்ணே இல்லையோ? உனக்குக் கலர் பென்ஸில் தருகிறேன். இந்தச் சமாசாரத்தை யார்கிட்டேயும் சொல்லக்கூடாது. சமத்தோ அன்றோ" என்று பக்குவமாக அவளைக் கெஞ்சிக் கேட்டுக் கொண்டேன். அவளும் தலையசைத்து ரகசியமாக என் காதோடு, "நீ பாரேன்; நான் சொல்லவே மாட்டேன்" என்று உறுதிமொழி தந்தாள்.

எனக்கு மட்டும் அஸ்தியில் ஜ்வரந்தான். எப்படி யாவது இந்த விஷயம் வெளியாகிவிடும் என்று எண்ணியிருந்தேன்; தெய்வாதீனமாய் ஒன்றும் ஏற்படவில்லை. கடிகார விஷயத்தைப் பற்றி அம்மா எவ்வளவோ ஹைமாவின் வாயைக் கிளறிக் கேட்டாள்; என்னைப் பற்றி ஹைமவதி பேச்சு மூச்சுக் கூட விடவில்லை. எனக்கு இந்த உதவிபுரிந்ததற்காக நான் என்றென்றும் அவளுக்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

3

மற்றொன்று ஞாபகத்திற்கு வருகிறது. அது என்ன? அப்படி மறக்கமுடியாத முக்கிய விஷயமோ என்று கேட்டால், ஆமாம் என்றுதான் சொல்ல வேண்டும். ஹைமா பெரியவளாகிவிட்டாள். கல்யாணமாகிற வயது. அப்போது நான் மெட்ரிக் பரீக்ஷைக்காக இரவு பகலாகப் படித்துக்கொண்டிருந்தேன், புஸ்தகம் புஸ்தகமாக உருப்போட்டபடியே. பரீக்ஷைக்கு இன்னும் இரண்டு நாட்கள்கூட இல்லை. சாயந்திரம் மேல்மாடி மீது ஏகாந்தமாகக் கடினமான கணக்கு ஒன்று போட்டுக் கொண்டிருந்தேன். ஹைமா நித்தியமல்லிகை மாலை யொன்றை எடுத்துக்

கொண்டு மாடிக்கு வந்து எதிரே நின்று, "உனக்காக இதைத் தொடுத்து வந்தேன். வேணுமா? புது மாதிரியாகப் பூவை நான் கோத்திருக்கிறேன். இந்தா வாங்கிக்கொள்" என்று சொல்லி மாலை தொடுப்பதைப்பற்றி நீண்ட பிரசங்கம் செய்ய ஆரம்பித்து விட்டாள். அப்புறம் என் கணக்குப் பரீக்ஷை போகிற கதி? அவளை அடக்க நான், "போதும், கீழே இறங்கிப் போ!......என் பாடம் கெடுகிறது" என்றேன். அந்தச் சமயம் யாரைக் கண்டாலும் எரிந்து விழுவது என் வழக்கம்-'பரீக்ஷையில் தவறிவிட்டால் மறுபடியும் யார் படிக்கிறது? இந்த உலகத்தில் நான்மட்டும் பரீக்ஷைக்குப் படித்து அவதிப்படவேண்டும்; மற்றவர்கள் குஷியாகக் காலம் கழிக்கவேண்டும் போலும்! அதோ கீழே, தெருவில் எவ்வளவு வேடிக்கையாகப் பையன்கள், கால்பந்து ஆட மைதானத்திற்குப் போகிறார்கள்! அவர்கள் பாடுதான் வேட்டை. தலைக்குமேலே அதோ அந்தப் புறாக் கூட்டமும் உல்லாசமாக வட்டமிட்டுப் பறக்கிறது. நானோ கூட்டில் அடைபட்ட கிளிமாதிரி படித்த பாடத்தையே திரும்பத் திரும்பப் படித்துக்கொண்டு இங்கே சாகிறேன்! விளையாட எனக்கு ஒழிவு ஏது? சற்று நேரம் எங்கேயாவது காற்றாடப் போகலாமென்றால், அந்த அப்பா ஒன்று இருக்கிறதே!'-இப்படியெல்லாம் எண்ணி ஏக்கமுறுவேன்.

ஹைமா மாடிக்கு வருவதில் எனக்கு ஒரு விஷயத்தில் இஷ்டமே. அவள் வரும்போது தன்னுடன் கூட்டின் வெளியே திகழும் சுதந்திர வாடையையும் கொண்டு வருவாள். இஷ்டம் ஒரு பக்கம் இருக்க, எனக்கு அவள்மேல் பொறாமையும் வந்துவிடும்.

'அவளைப் பார். யோசனை, விசனம் இல்லாமல் திரிகிருள்' என்றெண்ணுவேன். ஆனால் மறுபடியும் அவளுடைய யதேச்சையின் ஸ்பரிசம்பட்டுப் பாடம் படிக்கும் தொல்லையிலிருந்து சற்று நிம்மதி அடைவேன். இது ஏனோ? அவளுடன் பழகுவதால் ஏற்படும் பாசத்தினலா? நடுநடுவே ஹைமா என்னுடன் பேசும்போது எனக்குப் பாடத்தில் அக்கறை பிறந்துவிடும். "உச்", "சீ போ", "தரித்திரம்" என்றெல்லாம் கத்தி அவளை அடக்கி அழமூட்டிக் கீழே அனுப்பிவிடுவேன். அன்று ஹைமவதி மாலையை என்னிடம் விட்டுச் செல்ல யத்தனிக்கையில், எனக்கு வந்த எரிச்சலைப் பார்க்கவேண்டுமே; "உன் அழகான மாலையை எடுத்துக்கொண்டு போ!" என்றேன்.

ஹைமவதி, "ஏன் இப்படிச் சள்ளென்று விழுகிருய்? உனக்காக நான் கஷ்டப்பட்டுத் தொடுத்த மாலை வேண்டாமா?" என்ருள்.

"வேண்டாம்! பூவின் வாசனை என் படிப்பைக் கெடுத்துவிடுகிறது......ஐயோ! நீ போயேன்......" என்றேன்.

அவள் ஒன்றும் சொல்லாமல் சிரித்தாள். அந்த முறுவலில் முத்து உதிருவது இப்போதுதான் என் கண்ணிற்குப் படுகிறது. அப்போது எனக்கு அவள் சிரிப்பதைக் கண்டு ஆத்திரம் பொங்கி வழிந்தது. மாலையை அவள் கையிலிருந்து பிடுங்கி, பிய்த்துப் பிய்த்துத் தூர எறிந்தேன்.—ஆ! அவள் கஷ்டப்பட்டு எனக்காகத் தொடுத்த அந்த நித்தியமல்லிகை மாலை இப்போது இருந்தால்! - ஹைமவதியின் மனம் துடிப்பதாக எனக்குத் தோன்றிற்று. அதைக் கண்டு

நான் குதூஹலமே அடைந்தேன். என்னோடு மற்ற வரும் துக்கம் (பரீக்ஷையினால் ஏற்பட்டது) அனு பவிக்க வேண்டுமென்பது என்னுடைய மனப்பூர்த்தி யான எண்ணம். கண்களில் நீர்த்திவலையுடன் சிதறுண்ட மலர்களை நோக்கினாள் ஹைமா. அப்புறம் அவைகளை ஒவ்வொன்றாகப் பொறுக்கி மடியில் வைத்துக்கொண்டு கீழே சென்றுவிட்டாள். சே! என்ன புத்திஈனமான காரியம் செய்தேன். இந்தக் கொடுமை செய்ததற்காகவே பகவான் என் கழுத்தில் அந்த மாலை விழவொட்டாமல் தடுத்துவிட்டாரோ?

பரீக்ஷை முடிவு வந்து நான் முதல் வகுப்பில் தேறினதால், வீட்டில் ஏற்பட்ட ஆனந்தக் கூச்சலில் ஹைமாவும் கலந்துகொண்டாள். "இப்பொழுதாவது மாலை தொடுக்கிறேன். வாங்கிக் கொள்வாயா?" என்றாள் அவள். ஆனால் ஏனோ மாலையை மட்டும் தொடுக்கவில்லை.

## 4

ஹைமாவுக்கும் எனக்கும் உள்ள உறவை உங்க ளுக்கு இன்னும் சொல்லவில்லையே! தூரத்து முறை யில் அவள் எனக்குப் பந்து ஆகவேண்டும். எங்கள் வீட்டிலேயே ஹைமா வீட்டாரும் குடியிருந்தார்கள். என் தாயின் மடியில் விளையாடினவள் அவள். தாயின் மடியில் உட்காருவதற்காக நானும் அவளும் சிறு வயதில் சண்டையிடுவோம். கடைசியில் யார் ஜயிப்பார்கள் என்று சொல்ல வேண்டியதில்லை. அம்மா என்னை, "போடா துஷ்டா! நீயே ஓரியாய் வாழவேண்டுமோ? அவளும் குழந்தைதானே" என்பாள். அவள் என் ஈடு - இரண்டொரு வயது

சிறியவளாய் இருக்கலாம். எல்லோருடைய ஆதரவை யும் நான் பெற்றிருந்தது போலவே ஹைமவதியும் அடைந்திருந்தாள். கண்ணினுள் மணியாக விளங்கி யிருந்தாள். அம்மா அதை என்னிடம் மறைத்து வைத்திருந்த போதிலும் அது எனக்குத் தெரியாது போய்விடுமா? அம்மாவும் ஹைமாவின் தாயாரும் கலந்து பேசி, அவளை எனக்கு முடிபோட விரும்பி னது எனக்குத் தெரியாதோ? வருகிறவர்கள் போகிற வர்களோடெல்லாம் அம்மா ஹைமாவைக் காட்டி, "இவள்தானடி என் பாட்டுடடெண்; இந்தமாதிரி தங்கக்கம்பியான குழந்தை வேறு எங்கே அகப்பட போகிறது, மூக்கும் விழியுமாக?" என்பாள்.

அம்மா ஹைமாவைச் சீராட்டும்போது எனக்குப் பகீரென்று இருக்கும்; 'இவளை யார் பெரியதனம் பண் ணச் சொன்னார்கள்? கலியாணம் பண்ணிக்கொள்ளப் போகிறவனே நான்! தங்கக் கம்பியுமாயிற்று, இரும் புக் கட்டியுமாயிற்று!' என்று எல்லோரையும் மனத்தி லேயே திட்டிக்கொள்வேன். ஆனால் இப்பொழுதோ இரும்புக்கட்டிதான் என் நெஞ்சில் உருளுகிறது!

ஹைமாவை எனக்கு மனைவியாக்க வேண்டிய முயற்சிகள் நடந்துகொண்டிருந்தன. 'வயது எனக்கு என்ன ஆகிவிட்டது? இன்னும் உலக ஞானமே வர வில்லை. மேலும் படிக்கவேண்டாமா? உத்தியோகம் அகப்பட வேண்டாமா? ஒரு பெண்ணின் கழுத்தில் தாலியைக் கட்டிவிட்டால் ஆகிவிடுமா மற்றக் காரியங் கள்! ஹைமா அப்படி என்ன அழகில் சொட்டி வழி கிறாள்? எனக்கு அவள்மீது பிடித்தம் இராதபோது இவர்கள் ஏன் சிரமப்படுகிறார்கள்?" - அப்போது எனக்கிருந்த செளந்தரிய திருஷ்டி அவ்வளவுதான்!

என்றும் தோன்றுவதுபோல எனக்கு ஹைமா சாதாரணமாகவே தோற்றினாள்.

## 5

நான் பரீக்ஷையில் தேறியாய்விட்டது. அம்மா கலியாணத்திற்கு அடிபோட்டாள். ஏன் அவள் இப்படி ஆத்திரப்படுகிறாள்? காரணம்: ஹைமவதி பெரியவளாகி விட்டாள். அதனால் எனக்கென்ன?— அப்போது இதை ஏன் சொன்னேன்?

"அதுதான் மாட்டேன்" என்றேன் தாயாரிடம்.

"ஏண்டா அப்படி?"

வயதில் சிறியதானாலும், இந்த ஏட்டுச்சுரைக் காய் பிஞ்சிலேயே முற்றிவிட்டது.

"இதோ பார், அம்மா: ஸம்ஸாரமென்றால் இலேசல்ல. கலியாணம் பண்ணிக்கொண்டால், நாளைக் குப் பிரஜைகள் பெருத்துவிடும். அப்புறம் யார் கஷ்டப்படுகிறது? உலகத்திலேயோ வேலையில்லாத் திண்டாட்டம், ஜனத்தொகை, இவை நாளுக்கு நாள் அதிகமாகிக்கொண்டு வருகின்றன. நானும் ஏன் இதை விருத்தி செய்து, கடைசியில் குழந்தை குட்டிகளைக் காப்பாற்ற முடியாமல் அவதிப்பட வேண்டும்?" என்றேன். அர்த்த சாஸ்திரத்தில் (Political Economy) இருந்த பற்று எனக்கு என்னே அந்தச் சமயம்! கடைசியில், "வேலை கிடைக்கட்டும்; கையில் காசு சேரட்டும். அப்புறம் யோசிக்கலாம்" என்று முடிவான பதில் கொடுத்து விட்டேன் அம்மாவுக்கு.

அவளும் குறுக்குச் சொல்லவில்லை. "பிள்ளை சொல்வது வாஸ்தவந்தானே?" என்று எண்ணினாள்

போலும்! 'சீனு மாமாவுக்குக் கலியாணம் பண்ணி வைத்தாளே. அவன் அடைந்த சுகத்தை அவள் கண்ணுலே பார்க்கிருளே, அது போதாதா?' என்று எண்ணினேன்.

ஹைமவதி மதமதவென்று வளர்ந்துவிட்டாள். அம்மாவால் ஒன்றும் சொல்ல முடியவில்லை. ஆசை ஒரு பக்கம்; என்னிடத்தில் பயம் ஒரு பக்கம். ஹைமாவைப் பார்க்கும் போதெல்லாம் பெருமூச்சு விட்டுக் கண்ணீர் பெருக்குவாள். அதற்கு நான் என்ன செய்வது? எனக்கு 'வேளை' வரவில்லையே. ஒருவேளை என் மனம் திரும்புமோ என்னவோ என்று ஹைமவதியின் பெற்றோரைக் கொஞ்ச நாள் பொறுக்கும்படி கேட்டுக் கொண்டாள். ஆனால் வயதான பெண்ணைக் கட்டிக் கொடுக்காமல் வைத்தால் அப்புறம் ஊர் நிந்தனைக்கு ஆளாக வேண்டுமே என்ற சங்கையினுல், அவளுக்கு விவாகத்தை நடத்திவிட்டனர். அவள் புருஷனுக்கு வெளியூரில் வேலை. கலியாணம் நடந்த அடுத்த வாரமே அவன் தன் பெண்டாட்டியை அழைத்துக் கொண்டு போய்விட்டான். ஹைமவதி எங்களை விட்டுப் போய்விட்டாள்! போகுமுன் என்னிடம் விடைபெற்றுச் செல்ல மாடியறைக்கு வந்தாள். பேச அவளுக்கு நா எழவில்லை; கண்களில் மட்டும் நீர்த்துளிகள் அவள் என்னை விட்டுப் பிரியும் துயரைக் காட்டின.

## 6

எனக்கு விவாகமாகி மூன்று வருஷங்களாயின. ஒருநாள் சாயந்திரம் நான் ஆபீஸிலிருந்து ஓய்ந்து போய் வீடு திரும்பி, அறையில் சாய்வுநாற்காலியில் கிடக்கும்போது பின்புறமாக அருவிச் சிரிப்புடன் ஒரு

குரல் கேட்டது. நான் திரும்பிப் பார்த்தேன். ஹைமா முகத்தில் புன்னகை அரும்ப நின்றுகொண்டிருந்தாள்!

"அண்ணு! என்னைத் தெரியவில்லையா?" என்ருள்.

ஆம்! வாஸ்தவத்தில் அவளை எனக்கு அடையாளமே தெரியவில்லை. ஹைமவதியா! நான் சின்ன வயதில் பார்த்த ஹைமாவா? இப்படி அழகு ஒரே இடத்தில் பொழிந்துவிடுமோ? அவளை நான் புத்தம் புதிதாகப் பார்ப்பது போல் இருந்தது. என் கண் பூரித்துப் போய்விட்டதா, கூசிப் போய்விட்டதா? எதைச் சொல்லுவது? நான் திகைத்து இருப்பதைப் பார்த்து, "என்ன, அண்ணு! மதனி வந்தால்தான் என்ன, என்னை இப்படிக் கூடவா மறந்துவிடுவாய்?" என்ருள் ஹைமா. ஏதோ அலுவலாகத்தான் கணவனுடன் வந்திருக்கிருள் என்று தெரிந்தது. நான் கண்டது கனவா? யாரோ மாயாவிதான் என் கண்களில் பொடி தூவி என்னை இப்படிச் செய்கிருன்! ஹைமவதி இத்தகைய லாவண்ணியத்துடன் மலர்வாள் என்று நான் நினைக்கவே இல்லை—முன்பே என் கண் திறந்திருக்கக் கூடாதா? இப்படி அவள் ரூபவதியாக விளங்குவாள் என்று எனக்கு எப்படித் தெரியும்? போனதைச் சிந்தித்து யாது பயன்? இதற்கு முன் அந்த மெல்லொலிச் சிரிப்பைக் கேட்டிருக்கிறேன். இப்போது அது ஆனந்தத்தை எத்திசையும் பொழிகிறதே!

"அண்ணு, உனக்காக மாலை தொடுத்து வந்திருக்கிறேன். கதிர்ப்பச்சை, சம்பங்கி, ரோஜா இவைகளை விசித்திரமாகத் தொடுத்திருக்கிறேன்" என்று மாலையில் ஒரு சரத்தை எடுத்து, "அண்ணு, இப்பொழுதாவது பூவின் வாசனை உனக்குப் பிடிக்குமென்று

எண்ணுகிறேன். என்மேல் இதற்காகக் கோபித்துக் கொள்ள மாட்டாயே.....?" என விஷமமாகக் கூறி என் கழுத்தில் இட்டாள்.

மாலையிட்டாளே ஒழிய, உண்மையில் நான் விரும்பிய மாலையிடல் அதுவன்றே! அவள் மாலை யிட்டதும் எனக்கு என்னவோ மூளை கலங்கி விட்டது. நான் என்ன செய்கிறேன் என்றுகூடத் தெரியவில்லை. சொப்பனத்தில் செய்வதுபோல் மெல்ல என் கழுத்திலிருந்து அதை எடுத்து ஹைமவதிக்குப் போட எழுந்தேன்.

அவள் ஒதுங்கி நின்று, "சே! என்ன அண்ணு, உன் கழுத்தில் இட்ட மாலையை எனக்கு ஏன் போடு கிருய்?" என்ருள்.

நான் திடுக்குற்று அவளையே உற்று நோக்கி னேன். என் வாய் அடைத்துவிட்டது. அவளும் என்னை நோக்கிவிட்டுக் கண் இதழ்களைத் தாழ்த்திக் கொண்டாள். மறுகணமே அவ்விடத்திலிருந்து போய்விட்டாள். சிறிது நேரம் கழித்தே அவள் திரும்பி வந்து எங்களுடன் கலந்துகொண்டு பேச ஆரம்பித்தாள். எனக்கு என்னவோ ஒருமாதிரி ஆகி விட்டது. புத்தி என் சுவாதீனத்தில் இல்லை!

என் வாழ்வில் இந்த ஒரு முறைதான் இள வேனிலின் சாயை பட்டது. நான் அடைந்த புளகம் கண நேரந்தான். ஆனல் இந்த மாய ருது எல் லோருக்கும் ஒருதரந்தாஞ வருகிறது? அதுதான் எனக்குள்ள சந்தேகம். என் வாழ்க்கைமட்டும் இருண்டுவிட்டது. அதை முற்றும் பாழ் அடை யாமல், 'மணிவிளக்கின் சுடர் அனைய' ஒளிரச் செய் கிருள் அவள். எனக்கு அவள் ஈந்த வசந்த தானம்

அந்தக் கதிர்ப்பச்சை மாலை ஒன்றே. அது என் சந்தனப்பேழையில் வாடி உதிர்ந்து துகளாகிவிட்டது. ஆனால் அதன் மென்மணம் என் பிராணனின் ஒவ்வொரு மூலை முடுக்கிலும் இன்னும் சுற்றி அலைகிறது!

ஹைமா! ஹைமா!.........



# வேதாச்ரமம்

# வேதாசிரமம்

'வையங் காவலராய்'த் தமிழ் வேந்தர் விளங்கிப் பாயோங்கும் நம் நாட்டு மரக்கலங்கள் பெருஞ் செல்வம் பரிந்து நல்கி, வற்ருத நதிகள் பாய்ந்து வேளாண்மையோங்கி நெற்குன்றமெனப் பீடுவாய்ந்து நம் செல்வத் தமிழ் நாடு திகழ்ந்த 'பொன்யுக'த்தில், ஒரு பெரிய குருகுலம் தாமிரபர்ணி நதி தீரத்தில் இருந் தது. அதன் பெயர் வேதாசிரமம். குலபதி சோம தேவரிடம் வேதமும் சாஸ்திரமும் கற்க மாணவர் பல நாடுகளிலிருந்து வருவார்கள். புல் பரப்பி, நெய்யும் சமிதையும் கையில் கொண்டு வெந்தழலின் மூலமாகத் தேவர்களை அழைக்கும் வேத ஒலி ஆசிரமத்தை நிரப்பும். கல்வியே வாழ்க்கையின் லக்ஷிய மாகக் கொண்டு காமம், பிணி, கவலை அற்றவராய் மாணவர்கள் படிப்பதைக் கேட்டுச் சோலை மேவும் கிள்ளைகளும் சொல்பயின்றன.

குருபத்தினியான காந்திமதியை எல்லோரும் தாயென்றே கருதினர். சோமதேவருடைய இரு பெண்களாகிய காஞ்சனையும் மேகலையும் பேதமின்றிப் பரிசுத்தமான அந்தச் சுற்றத்தில் வளர்ந்து வந்தனர். வேதாந்தத்தில் கரை கண்ட ஸ்ரீகண்டனும், பல கலைகளில் பயிற்சியுடைய சிறுவன் இந்துசேகரனும் குருவின் பிரிய சீடர்கள்.

சோமதேவருடைய சிறிய பெண் மேகலை, இந்துசேகரன் டன் னும் அழகிய மண்பதுமை

களைப் பார்த்து மயங்கிப் போய் அவனை விட்டு எப்போதும் பிரியாமல் இருப்பாள். இவர்களுடைய நட்பைக் கண்டு காந்திமதி முதலில் சந்தோஷமடைந்தாள். பிறகு பெண்ணின் மனத்தைத் தேஜஸ்வியான அந்தப் பிராமணச் சிறுவன் கொள்ளை கொள்வதைக் கண்டு 'இவர்கள் நட்பு கடைசியில் எங்கே கொண்டு விடுமோ?' என்று கவலை கொண்டாள். கபடறியா மேகலைக்கும், மாசற்ற மனத்தினனான இந்துசேகரனுக்கும் தாங்கள் நெருங்கிப் பழகுவதில் யாதொரு விகற்பமும் தோன்றவில்லை.

வைகறையில் ஆற்றில் நீராடிவிட்டுப் பட்டாடை அணிந்து, 'ரிக்'குகளை உச்சரித்துக்கொண்டே, கையில் குடலை ஏந்தி மேகலை மலர் கொய்யச் செல்வாள். பரிதி என்னும் பங்கயம் கீழ்த் திசையில் முளைக்கும் போது ஆசிரமத்தைச் சூழ்ந்து ஹோமப்புகை சுருண்டு செல்லும். தாமரை ஓடைகளிலிருந்து இந்துசேகரன் குடங்களில் நீர் மொண்டு தர, மேகலை அன்னம் அசைவதுபோல் நடந்து செடிகளுக்கு ஜலம் கொட்டுவாள்.

வேதாசிரமத்தில் எதிர்பாராத ஒரு மாறுதல் ஏற்பட்டது. மஹா பண்டிதரான சோமதேவர் பரகதி அடைந்தார். குரு இல்லாத குறையால் ஆசிரமம் நிலை குலைந்து, மாணவர் வெவ்வேறு இடங்களை நாடிச் சென்றனர். வித்தையில் பரிபக்குவம் அடைந்த ஸ்ரீகண்டன் வேறு ஓர் ஆசிரமம் ஸ்தாபித்துக்கொண்டான். பல இன்பக் கனவுகளை மூட்டிய வேதாசிரமத்தை விட்டுப் போக இந்துசேகரனுக்கு மனம் வரவில்லை. கரும்பு மொழியாள் மேகலையை விட்டு எவ்வாறு செல்வது?

குருபத்தினியிடம் காவியமும் அலங்காரமும் படிக்க அவன் விருப்பங் கொண்டான். காந்திமதி அவனுடைய பிடிவாதத்தைக் கண்டு, "அப்படியே, சேகரா! நீ என்னிடம் கற்றுக்கொள்" என்றாள். அவள் எவர் மனத்தையும் நோவும்படி செய்ய மாட்டாள். ஆனால் ஓர் ஆன்மாவிற்கு மட்டும் இது திருப்தியை அளிக்கவில்லை. காஞ்சனைக்கு இந்து சேகரன் வேதம்கற்கவேறு எங்காவது செல்லவேண்டு மென்ற எண்ணம். ஏன் இப்படி அவளுக்கு அந்த நிரபராதியின்மேல் துவேஷம்? அவன் ஏழையென்றா?

செம்பொன் செய்யும் இளவேனில் மாலை. சேகரன் தன் பர்ணசாலையில் ஒரே நினைவுடன் மண்ணால் ஓர் உருவச்சிலை செய்துகொண்டிருந்தான். அவனுடைய பிரிய சகியான மேகலைக்குக்கூட இது தெரியாது. ஆனால் அவள் எப்படியோ மோப்பம் பிடித்து, ஆவலை அடக்க முடியாமல் சிலையைப்பார்க்க ஓடிவந்தாள். அப்போது சேகரன், முகத்தில் வெற்றி கூத்தாட, பூர்த்தியாகும் அச்சிலையின் நெற்றியில் மூன்றாம் விழியைக் கீறிக்கொண்டிருந்தான். பிரபஞ்சக் கூத்து என்னும் மனத்திற்கு எட்டாத ஒரு பெரிய தத்துவத்தை இந்தச் சிற்பி, புலனுக்குத் தோற்றும்படி உருவாக அமைக்கும் திறன் என்னே! சேகரன், மண்வழிக்கும் சலாகையைப் போட்டுவிட்டு, "இனிமேல் கூடாது" என்று தனக்குள்ளே சொல்லிக் கொண்டு, சற்றுப் பின்னாக வந்து சிலையில் ஏதாவது குறைகள் இருக்கின்றனவா வென்று நோக்கினான். கொக்கிறகு, கொன்றைப்பூ, கங்கை, பிறைமதி, எல்லாம் சரியாக அமைந்திருந்தன. கையிலுள்ள மானும், துள்ளுவதுபோன்றே இருந்தது. மூன்றாம்

கண் அப்போதுதான் மாரவேளை எரித்துத் தணிந்து இருப்பதுபோலவே தோன்றிற்று. அடாடா! அவன் ஒன்று மறந்துவிட்டான்! 'அதே சமயம் குமுத மலர்க் கைகளைத் தட்டி, ஒரு வீணைக் குரல் உற்சாகமூட்டு வது அவன் காதில் விழுந்தது. சேகரன் திரும்பிப் பார்த்தான். மேகலை நின்றுகொண்டிருந்தாள். அவளைப் பார்த்ததும், சிவன் சிலையில் அமைக்க மறந்த அரவு, சேகரன் மனத்தில் காதலாக மாறி வெய்துயிர்த்தது. மேகலைக்குச் சேகரனின் முகம் சிவனுடைய சாய லாகவே தோற்றியது. மேகலை சிவபிரானின் தாண் டவ மூர்த்தியை வியந்து கூறும்போது, தன் சிற்ப வித்தை பயன் அடைந்தது என்ற ஒரு பரம திருப்தி சேகரனுக்கு ஏற்பட்டது.

"மேகலா! இத்தனை நாள் என் மனத்தில் மர்ம மாகவே இருந்த ஒன்றை இன்று உன்னிடம் வெளிப் படையாகச் சொல்லிவிடுகிறேன். நம் இருவரையும் ஒருவருக்கொருவரென்றே கடவுள் படைத்திருக்கி ருர். நான் உன்னை மணக்க விரும்புகிறேன். உனக்கு அது இஷ்டமா?" என்ருன் சேகரன். காதல் ததும் பும் அவனுடைய குரல் மேகலையின் செவிக்கு அமுத மாக இருந்தது. பதில் என்ன சொல்வதென்று அவ ளுக்குத் தெரியவில்லை. பாலிகை நாணிக் கண் புதைத்தாள். அவள் என்ன மறுமொழி தருவதென்று தவிப்பதைப் பார்த்துச் சேகரன், "மேகலா! நான் உன்னை ஆசிரம ரீதியை மீறி வற்புறுத்தவில்லை. நீ உன் தாயாரைக் கேட்டுச் சொல்.....என்ன?" என்ருன்.

மேகலை தரையை நோக்கியபடி, சம்மதத்திற்கு அறிகுறியாகத் தலையை அசைத்தாள். புது வெள்ளம்

போல் அவளுடைய ஒவ்வோர் அங்கத்திலும் பொங்கிய எழிலைப் பருகிச் சேகரன் மோகித்து மரம்போல் நின்றான்.

இருட்டிவரவே, மேகலை தன் குடிலை அடைந்து படுக்கையில் படுத்துக்கொண்டாள்; எவ்வளவோ எண்ணங்கள் அவள் மனத்தை அலைத்தன. சிலையின் மேலோ அல்லது அதைச் செய்தவன் மேலோ மனம் ஈடுபட்டு, 'இவ்வளவு சௌந்தரியத்துடன் சிலையைச் செய்யும் சிற்பி எங்குமே இருக்கமாட்டான். அழகும் ஆற்றலும் ஒருங்கே வாய்ந்த இவனை அடையக் கொடுத்து வைக்கவேண்டுமே?.........ஆனால் அம்மா என்ன சொல்வாளோ?' என்ற எண்ணத்தில் ஆழ்ந்திருந்தாள். சாளரத்தின் மூலமாகத் தெரியும் நக்ஷத்திரம் இழைத்த பரந்த வானில் அவள் மனம் சேகரன் என்ற அக்ஷரங்களை எழுதியது.

"மேகலா, உனக்கு என்ன உடம்பு?" என்று தாயார் காந்திமதி வந்து கேட்டபோதுதான் அவள் கனவு கலைந்தது. மேகலை எழுந்து தன் தாயை அன்போடு அணைத்துக்கொண்டாள். அவளுடைய மார்பு படபட வென்று அடித்துக்கொண்டது. நடந்ததைச் சொல்ல அவள் நா எழவில்லை. மனத்தில் மூண்ட இந்தப் புதுக் கிளர்ச்சியை, தாயைத் தவிர்த்துப் பின் வேறு எவரிடம் வெளியிடுவது? மேகலை தலைநிமிராமலே எல்லாவற்றையும் சொன்னாள்; "அம்மா! பதில் என்ன சொல்வதென்று எனக்குத் தெரியவில்லையே?" என்று மேகலை கூறும்போது காந்திமதி, "என் செல்வமே! சேகரனை நீ பாணிக்கிரகணம் செய்துகொள்வதில் எனக்கு ஓர் ஆக்ஷேபமும் இல்லை. உன் மனத்திற்கு விரோதமாக நான் எதையும் செய்யேன்" என்றாள்.

வெட்க மிகுதியால் மேகலை தன் முகத்தைத் தாயின் மார்பில் மறைத்துக்கொண்டாள். அவளை யும் மீறி ஆனந்த பாஷ்பம் கண்களிலிருந்து பெருகிற்று.

## 2

வெம்மை தரும் கானல்தினங்கள் போய், விசும் பில் காரோடிற்று. பெருவரையில் மழை பொழிந்து, புது வெள்ளம் போகும் தாமிரபர்ணியில் சக்கரவாகப் புள்ளினங்கள் இன்புற்று இருந்தன. ஸ்ரீகண்டன் பிரும்ம சூத்திரத்திற்குத் தான் எழுதிய உரையைப் படித்துக் காட்ட ஆசிரமத்திற்கு வந்திருந்தான். அன் றிரவு காந்திமதி, காஞ்சனை, மேகலை, இந்துசேகரன் இவர்கள் அவனைச் சூழ்ந்துகொண்டு பாஷ்யத்தைக் கேட்க ஆரம்பித்தனர். சேகரனுக்கு இனிய சாரீரம் இருந்தமையால் ஸ்ரீகண்டன் அவனையே அதைப் படிக்கும்படி சொல்லி,தான் வியாக்கியானம் பண்ணிக் கொண்டிருந்தான். ‘ஓம்’ என்று பிரணவத்தை உச்சரித்துவிட்டுச் சேகரன் ஸம்ஸ்கிருதம் படிக்கும் நாதம், மேகலையின் இதயத்திலுள்ள யாழ் நரம்புகளை மெதுவாக அசைத்தது; மற்றொரு மனத்தில் எரியும் துவேஷத் தீயை இன்னும் தூண்டிவிட்டது.

மறுநாள் காந்திமதி, காஞ்சனையையும் ஸ்ரீகண்ட னையும் கூடவைத்துக்கொண்டு ஒரு முக்கிய விஷயத் தைப்பற்றி ஆலோசித்துக்கொண் டிருந்தாள். அடுத்த அறையில் கிருஷ்ணாஜினம் விரித்து, அதன்மேல் சாய்ந்தவண்ணம் மேகலை காவியலோகத்தில் லயித்து இருந்தாள். அவளுடைய காவியக் கண்களுக்கு, பரந்த வானம் வளைந்து பூமியைத் தழுவி முத்தம் இடுவதுபோல் இருந்தது. அதே சமயம், தன் அறை

யில் காந்திமதி, "இவர்களுடைய நட்பு வரவர நெருங்கிவருகிறது. ஸ்ரீகண்டா! கலியாணம் செய்து விடலாமென்றே நினைக்கிறேன்" என்றாள். காஞ்சனை குறுக்கிட்டு, "அம்மா! சேகரன் நல்ல பிள்ளைதான். ஆனாலும் அவனுக்கு ஒரு திக்கும் இல்லையே. அவனுக்கு மேகலையைக் கொடுப்பது உசிதமன்று" என்று சொல்லும்போது ஸ்ரீகண்டன், "நாதனற்றவனாய் இருந்தால் என்ன? வித்தைதானே முக்கியம்? அவன் மீது லக்ஷ்மீகடாக்ஷம் பிறக்க எத்தனை நேரமாகும்? ஆனாலும் கவி, ஓவியக்காரன் இவர்களை நம்ப முடியாது. இவர்கள் எப்போதுமே சற்றுச் சோம்பல் உடையவர்கள்" என்றான்.

அப்போது, கையில் ஒரு சித்திரத்தை எடுத்துக் கொண்டு சேகரன் அவ்வறையில் நுழைந்தான். மேகலையும் தன் காவியங்களைக் கட்டிவைத்துவிட்டு அங்கே துரிதமாக வந்தாள். மேகலையைப் பார்த்ததும் சேகரன் படத்தை அவளிடம் நீட்டினான். ஆனால் மேகலை, தன் பெரியவர்களுக்கு எதிரே, அன்பின் காணிக்கையான அந்தப் படத்தை வாங்கிக்கொள்ள நாணினாள். சேகரனது நிலையைக் கண்டு காந்திமதி, "சேகரா! படத்தை இங்கே கொண்டுவா" என்றதும் அவன் தன் சித்திரத்தை அவர்கள் எதிரே பிரித்தான். ஸ்ரீகண்டன் படத்தை வியந்து பாராட்டினான். மேகலை தன் தாயின் பின்னால் நின்றவண்ணம் அந்த அபூர்வ ஓவியத்தைக் கண்டு மனம் பூரித்தாள். சித்திர விஷயம், பார்வதிக்கும் பிரம்மசாரி வேஷம் பூண்ட சிவபெருமானுக்கும் நடந்த விவாகக் காட்சி. பார்வதியைத் தன்னைப் போலவே வரைந்திருப்பதைப் பார்த்து மேகலை ஸ்தம்பித்து நின்றாள்.

ஸ்ரீகண்டன், "இது அரசனிடம் உயர்ந்த சம்மானம் பெறக்கூடியது. நீ இதை ஜாக்கிரதையாக வைத்திரு" என்றபோது, சேகரன், "மேகலைக்குத் தரவேண்டியே இதை எழுதிவந்தேன்" என்றான். காந்திமதி, "அப்பா, சேகரா! இந்த அழகான பொருளை மேகலைக்குக் கொடுப்பது உசிதமன்று; அவள் அதைப் பாழாக்கிவிடுவாள்" என்றாள்.

சேகரன் மனம் கவலையுற்றது; "இல்லை, அம்மா! இது என்ன அப்படி உயர்ந்ததா?" என்று கூறிப் படத்தைச் சுருட்டி மேகலையின் கையில் தர வந்தான். அப்போது காஞ்சனை, "சீ மேகலா, படத்தை வாங்கிக் கொள்ளாதே! அதை வாங்கிக்கொள்வதால் நீ சேகரனுக்கு நஷ்டமே உண்டாக்குகிறாய்" என்றாள். படத்தை வாங்கிக்கொள்ள நீட்டிய கரத்தை மிகவும் கஷ்டத்துடன் இழுத்துக்கொண்டாள் மேகலை.

மேகலையும் இம்மாதிரி செய்ததைப் பார்த்துச் சேகரனுக்கு வருத்தம் தாங்க முடியவில்லை. எல்லோரையும் ஊடுருவிப் பார்த்தான். அவனை ஏளனம் செய்வதுபோல் இருந்தது அவர்களுடைய பார்வை. அவன் உடலில் அக்கினி ஜ்வாலை தீண்டின மாதிரி இருந்தது. வெறுப்புற்றவனாய்ச் சிரமப்பட்டு எழுதிய அவ்வுயர்ந்த சித்திரத்தைச் சுக்கல் சுக்கலாகக் கிழித்து எதிரே கொழுந்துவிடும் ஹோமகுண்டத்தில் எறிந்தான்.

"ஐயோ, என்ன காரியம் செய்தாய்?" என்று மேகலை அலறிக்கொண்டு, அக்கினிக்கு இரையாகும் சித்திரத்தை எடுக்க ஓடிவந்தாள். ஆனால் அவள் கண்ணெதிரே, உதறித் தள்ளப்பட்ட அந்த அன்பின் சின்னம் சாம்பராகிவிட்டது.

காந்திமதியும் ஸ்ரீகண்டனும் மிகவும் வருத்தப் பட்டனர். ஆனால் காஞ்சனை, "ஓவியர்கள் எப்போதும் மாருட்ட புத்தியை உடையவர்கள்; இந்தமாதிரி சித்திரம் அவர்களுக்கு வரவு செலவில்லை. நாம் இதைப்பற்றித் துக்கிப்பதில் பயனில்லை" என்ருள்.

காஞ்சனையின் அந்த மொழி சுறுக்கென்று சேகரன் மனத்தில் ஆழமாகப் பாய்ந்தது. வலி குன்றினவன் போல் மௌனமாக அவ்விடத்தை விட்டு அகன்று பர்ணசாலையை அடைந்தான். 'என்ன காரியம் செய்துவிட்டோம்!' என்று அவன் நெஞ்சமே அவனை அறுத்தது. படத்தை நெருப்பில் போட்டதும் மேகலையைச் சுடலையில் வைத்தமாதிரி இருந்தது அவனுக்கு. வேதாசிரமத்தை விட்டுத் தேசாந்தரம் சென்று பொருள் தேட அவன் உறுதிகொண்டான். அச்சமயம் ஓர் உருவம் அழுது விம்மிக்கொண்டே அவன் எதிரே வந்துநின்றது. அது மேகலையென்று அறிந்து தன் அருகில் இழுத்துக்கொண்டு, "என் கற்பகமே, என்மேல் கோபம் வேண்டாம்! நான் இந்த ஆசிரமத்தை விட்டு இன்றே போகிறேன். இங்கே நான் உன் அன்பைப் பெற்றும் எனக்குப் பொருள் இல்லாத குறையால் உன்னை அடைய முடியவில்லை. என் கண்ணே! நான் வரும்வரை நீ காத்திருப்பாயா?" என்று துக்கம் நிறைந்த குரலில் மொழிந்தான்.

மேகலை அழுதுகொண்டே, "நீ போய்விட்டால் இந்த இடத்தில் எனக்கு வேறு என்ன இருக்கிறது? நானும் வருகிறேன்" என்ருள்.

"சே, அது தர்மத்துக்கு ஒவ்வாது" என்று தன் உத்தரீயத்தால் அவளுடைய கண்களைத் துடைத்தான். 'என் அன்பே! கடைசியாக ஓர் இன்மொழி சொல்

வாய். அதுவே நான் ஏக்கம் அடையும்போதெல்லாம் மருந்தாகி எனக்கு ஆறுதலைக் கொடுக்கும்'' என்றான். மேகலையின் உடல் உவகையினால் புளகம் கொண்டது. சேகரன் அவளைப் பின்னும் அணைத்துக்கொண்டான். இருவர் இதழ்களும் ஒன்றாய்ச் சேர்ந்தன. பிரிவின் துக்கம் கண்டத்தை அடைக்க, "என் அன்பே, சுகமே நீ போய் வா......என்னை மறவாதே!'' என்றாள் மேகலை. மேலும் சொல்வதற்குள் கண்ணீர் வெள்ளம் தடுத்து விட்டது.

சேகரன் தன் உடைகளை எடுத்துக்கொண்டு குளிர்ந்த நள்ளிரவில் ஆசிரமத்தைவிட்டு மனம் தூண்டிய வழியே சென்றான். மேற்குத் திசையில் வானில் தொங்கிய ஒரு தாரகை அவனை அழைப்பது போல் இருந்தது.

## 3

இந்துசேகரன் சென்று மூன்று மாதங்கள் ஆகி விட்டன. காஞ்சனைக்கும் ஸ்ரீகண்டனுக்கும் விவாகம் நடந்தேறியது. மழைக்காலமும் வந்து சென்றது. பனிப்போர்வை போர்த்துக் குளிர் காலமும் தோன்றி மறைந்தது. சேகரனைப்பற்றி ஒரு செய்தியும் கிடைக்க வில்லை. மேகலை தேய்பிறைபோல் நாளுக்கு நாள் இளைத்துப்போக ஆரம்பித்தாள். முல்லை முறுவல் அவள் முகத்தை விட்டு என்றோ மறைந்துவிட்டது. அவளுடைய மேற்பார்வையை இழந்த மான்களும் மலர்ச் செடிகளும் வாடி வதங்கின.

ஒரு நாள் அனந்தபுரத்திலிருந்து யாத்திரிகன் ஒருவன் ஆசிரமத்திற்கு விருந்தாளியாக வந்திருந்தான். அவனிடமிருந்து இவ்வரலாறு கிடைத்தது;

"மஹாராஜா அனந்தவர்மாவின் ஆஸ்தானத்தில் இந்துசேகரர் ராஜ கவியாக இருக்கிறார். அவருடைய கீதங்களின் பெருமை கேரள நாடெங்கும் பரவி வருகிறது. அவருடைய ஓவியத்திறமை அரண்மனையில் நன்கு பிரகாசிக்கிறது. இப்போது கேரளபதி தம் ஒரே மகளான 'குமாரி காத்தியாயனி'யை அவருக்குக் கன்னியாதானம் செய்ய உத்தேசித்திருக்கிறார். இளவரசி இந்துசேகரரிடம் சங்கீதமும் சித்திரக் கலையும் பழகி வருகிறாள்!"

காந்திமதி இதைக் கேட்டதும் இடிவிழுந்தது போல் ஆகிவிட்டாள். பிரிவினால் வாடும் தன் மகளின் கதியை நினைந்து உருகிப் போனாள். அவள் இந்தச் செய்தியை மேகலையிடம் நிதானமாக எடுத்தபோது அவள், "அம்மா, அம்மா, நீ அவனை அப்படி நினையாதே. என்னுடைய சேகரன் சத்தியத்தை மீறான்" என்றாள். பழைய ஞாபகங்கள் தோன்றி அவளை வருத்தின. "அம்மா, நான் அவனை நேசித்தது தவறா? நீங்கள்தானே அவனை இவ்விடத்தை விட்டுப் போகும்படி செய்தீர்கள்? என் மணாளன் ஒருகாலும் என்னை ஏமாற்றமாட்டான்" என்றாள். இதைச் சொல்லும் போதே நெஞ்சு விரிந்து, துக்கம் அவளுடைய வாடி வற்றிய உடலைத் தூக்கித் தூக்கிப் போட்டது.

மறுபடியும் வேனில். சோலையெங்கும் பூவின் தாது உதிர்ந்திருப்பது பொன் துகள் உதிர்ந்த மாதிரி இருந்தது. சிறைவண்டுகள் தேன் உறிஞ்சிச் செவ்வழி பாடிச் சென்றன. காதலருக்கு இன்பம் பயக்கும் மலயமாருதம் வீசிற்று. செடிகளில் அரும்பு கொப்புளித்து மணம் கமழ்ந்தது.

நிர்மலமாகப் பொழுது புலரும் சமயம், மேகலை ஒரு கனவு கண்டாள்: ஒரு நதி. தாமிரபர்ணிதான் போல் இருக்கிறது. தங்கத் தோணியொன்று கரையை நோக்கி வருகிறது. அதில் உட்கார்ந்திருக்கும் திவ்விய புருஷன் இனிமையாகக் குழல் இசைக்கிறான். அவ் வின்னிசை மேகலையை அழைப்பதுபோல் இருக்கிறது. அதோ அந்த உருவம் கரையிலுள்ள மேகலையைப் பார்த்துச் சிரிக்கிறது. அது சேகரனே. வேறு எவரு மல்ல! மேகலையின் மெலிந்த உடலில் புது இரத்தம் ஊர் கிறது. வாழ்க்கையில் அவளுக்கு விருப்பம் ஏற்படு கிறது. அந்த விசித்திரப் படகோட்டியைக் கட்டி அணைக்க மேகலை நதியில் குதிக்கிறாள். அப்போது சொப்பனம் கலைகிறது.

அவள் கண்ணைத் திறந்து பார்க்கும்போது வெளி யில் புள்ளினங்கள் மதுர ராகம் பாடிக்கொண்டிருந் தன. இரவியின் கதிர்கள் தங்க இரேகைகள்போல வானில் ஊடுருவிச் சென்றன. இயற்கையே களி பொங்கி இருந்தது. மேகலையின் உள்ளத்தில் யாரோ, 'சேகரன் இதோ வருகிறான்; பரிவெய்திடேல்' என்று அடிக்கடி சொல்வதுபோன்று இருந்தது.

அவளுடைய பலவீன முழுவதும் எங்கோ பறந்துபோய்விட்டது.

ஒருநாள் மேகலை, தன் மணாளன் எப்போதும் உட்காரும் அடர்ந்த புன்னை மரத்தின்கீழ் அமர்ந்து நதியை நோக்கிக் கொண்டிருந்தாள். காற்றில் அலையும் ஜல ராசியின் நுண் துளிகள் அவள் மனத்தி லுள்ள ஜ்வரத்தைப் போக்கிக் கொண்டிருந்தன. நதியில் அன்னப்பறவைகள் தாமரைப் புஷ்பத்தினுள் இருக்கும் வித்துக்காகச் சச்சரவிட்டன. எங்கும்

வண்டு இறைக்கும் மகரந்தத்தின் மணம். அந்தி ஆகாயத்தில், பஞ்சவர்ணக் கிளியின் இறகிலுள்ள வர்ண ஜாலங்கள் விளையாடின.

அதே சமயம் ஆசிரமக் குடிலில் வேலையாய் இருக்கும் காந்திமதியின் செவிக்கு ஓர் இனிய குரல்கேட்டது. அவள் திரும்பிப் பார்த்தாள். சேகரனது திவ்விய வடிவம் அவளுடைய கண்களைக் குளிரச் செய்தது. அவன் குரு பத்தினியின் பாத தூளியைச் சிரமேற் கொண்டு, "அம்மா, மேகலை எங்கே?" என்று கவலையுடன் வினவினான். அவள் நதிக்கரையைச் சுட்டிக் காட்டினாள்.

இந்துசேகரன் தன் ஆசைக் கொழுந்து இருக்கும் இடத்தை நோக்கி ஓடினான். மேகலை புன்னை மரத்தடியில் சாய்ந்தவண்ணம், "சேகரா, நீ எப்போது வருவாய்?" என்று கீழ்வானத்தை நோக்கி வினவுவதைக் கேட்டுச் சேகரன் மெல்லப் பின்புறமாக வந்து அவளுடைய மலர் விழிகளைத் தன் விரல்களால் மூடினான்.

மேகலை, "எனது ஆருயிரே, வந்துவிட்டாயா"? என்று மிழற்றி அவனுடைய கரங்களைத் தன் மார்பில் அணைத்துக்கொண்டு, இன்பம் தாங்க முடியாமல் சேகரன் பேரிலேயே சாய்ந்து மூர்ச்சையானாள்.



# ஸ்ரீசைலம்

# ஸ்ரீ சைலம்

## முன்னுரை

மஹா சிவராத்திரிக்கு, மல்லிகார்ஜுன ஸ்வாமியைத் தரிசிக்க நானும் சில யாத்திரிகர்களும் ஸ்ரீசைலம் என்னும் தென்கயிலைக்குப் புறப்பட்டோம். மலை அடிவாரத்திற்குத் தீபம் வைக்கும் வேளைக்குள் வந்து சேர்ந்தோம். அன்றைய சூரிய அஸ்தமனம்போல் இதுவரை நான் கண்டதே இல்லை. ஆகாயம் தங்க மயமாய் இருந்தது. அந்த வர்ணக் குழப்பத்தில் எங்களைச் சுற்றியுள்ள நெடுங்குன்றுகள் பச்சைப் பசேலென்று இருந்தன. நாங்கள் ஏறவேண்டிய பெரு வரையான ஸ்ரீசைலம், சிவபெருமானைப் போலவே, உன்னதமாகத் தலைதூக்கி மேகத்தை முட்டி நின்றது. ஆகாயத்தில் திட்டுத் திட்டாகச் சிதறின மேகங்கள். நக்ஷத்திரங்கள் ஒவ்வொன்ருக எட்டிப்பார்த்தன.

மலையின் பேரெழிலை அந்தப் பிரதோஷ வேளையில் பார்த்துக் கொண்டிருக்கையில் ஒரு விந்தையான காட்சி எங்களுக்குத் தென்பட்டது. மலைச் சாரலைச் சுற்றி இரண்டு ஒளிக் கொழுந்துகள் 'திக்திக்' என்று வேகமாகச் சென்றுகொண்டிருந்தன. "காட்டுத்தீ என்கிருர்களே ஒருவேளை இதுதானே?" என்று பேசிக்கொண்டோம். பார்த்துக் கொண்டிருக்கும் போதே அச்சுடர்கள் பக்கத்து மலைக்குச் சென்று மறைந்தன. சற்று நேரத்திற்கெல்லாம் மறுபடியும் பிரகாசமாகத் தோன்றி வரவரச் சிறிதாகி மங்கி

மறைந்துவிட்டன. எங்கள் கோஷ்டியைச் சேர்ந்தவர்கள், "கொள்ளிவாய்ப் பிசாசு" என்று சொன்னார்கள். ஆனால் ஓர் ஆந்திர யாத்திரிகர் மட்டும், "இது கொள்ளிவாய்ப் பிசாசன்று; சாதாரணமாகச் சதுப்பு நிலங்களிலும் சமதரையிலுந்தான் அது தென்படும். இந்த அக்கினி ஜ்வாலை வேறு. மலையடர்ந்த இந்நாட்டில் நடந்த ஓர் அதிசய சம்பவத்திற்கும் இதற்கும் சம்பந்தம் இருக்கிறது" என்றார். நாங்கள் எல்லோரும் ஆவலுடன், "அது என்ன? சொல்லும்" என்று அவரைச் சூழ்ந்துகொண்டோம். அவர் கதையை ஆரம்பித்தார்.

1

வெகு நாட்களுக்கு முன் நடந்தது இது. இந்த ஸ்ரீசைலம் முன்னே காடு மூடி, துஷ்ட மிருகங்களுக்கு இருப்பிடமாய் இருந்தது. அந்த நாளில் துணிச்சலுள்ள யாத்திரிகர்கள்தாம் க்ஷேத்திர தரிசனத்திற்கு வருவார்களாம். அந்தச் சமயங்களில் யானைகளையும் அடித்துச் செல்லக்கூடிய வேகத்துடன் மலையாறுகள் ஓடுமாம்.

அதோ தெரிகிறதே, ஸ்ரீசைலத்திற்கு அருகிலுள்ள ஒரு குன்று. அங்கே வெகு நாளைக்கு முன் ஒரு குகையில் நந்திதேவர் என்ற ஒரு துறவி இருந்தார். சாதுக்களுடைய சுபாவம், ஜனசந்தடியற்ற நிர்மலமான இடங்களை விரும்புதல். அவரும் ஏகாந்தத்தை விரும்பி வசித்துவந்தார். அவர் தினம் போல் ஸ்ரீசைலநாதனைத் தரிசித்துவிட்டுத் தமது இடத்திற்குத் திரும்பி வந்துகொண்டிருந்தார். கையில் நிர்மால்யமான ஒரு வெள்ளை மந்தார புஷ்

பம். கோயில் குருக்கள் கொடுத்த பிரசாதத்தில் ஒரு கவளம் அருந்திவிட்டுப் புஷ்பத்தை ஜடையில் வைத்தார். போகும்போது பர்வதம், வனம் இவைகளில் திகழும் வசந்த சோபை அவருடைய உள்ளத்தைக் கவர்ந்தது.

மான்கள் பயமின்றி அவரை அணுகிக் கழுத்தை நீட்டின. ஏதோ ஒரு மாய உணர்ச்சியில் இயற்கை அன்று லயித்திருந்தது. அவருக்குத் தாம் பாலியத்தில் படித்த காவியங்களின் நினைவு வந்தது.

'இது என்ன ! என்றும் இராத கலக்கம் என் உள்ளத்தில் காண்கிறதே! என் வைராக்கியத்திற்குப் பங்கம் ஏற்படுமோ? ஹே வசந்தமே! யாருடைய தியானத்தைக் கலைக்க இந்த யத்தனமெல்லாம்? காமனை எரித்த என் ஈசன் இருக்கிறான். மனமே! கடினமாய் இரு' என்று தமக்குள் சொல்லிக்கொண்டார்.

பக்கத்தில் செடிகள் அசைவதைக் கண்டு நந்தி தேவர் திரும்பிப் பார்த்தார். ஏதாவது துஷ்ட மிருகமோ வென்று முதலில் ஐயங் கொண்டார். ஆனால் ஓர் அற்புதக் காட்சி அவரை ஸ்தம்பிக்கச் செய்தது. இரு மெல்லிய கரங்களால் முட்புதர்களை நீக்கிக்கொண்டு பாலகன் ஒருவன் தம்மை நோக்கி வருவதைக் கண்டார். சிறுவன் அழுக்கடைந்த காவி வஸ்திரம் உடுத்திருந்தான். கழுத்தில் சுருண்ட மயிர் வழிந்திருந்தது. அவனால் முட்களை நீக்கிக்கொண்டு வர முடியவில்லை. பூப்போலுள்ள அவனுடைய கண்களில் ஒருவித மருட்சி; மனத்தை இளகச்செய்கின்ற ஏங்கும் பார்வை!

சந்நியாசி பிரமித்து நின்றார். வானத்தில் திடீரென்று கந்தர்வனை ஒத்த அச்சிறுவனைப் பார்த்ததும் அவருடைய மனம் தானாக அவன்பால் சென்றது. 'ஒருவேளை குமரக்கடவுளே இந்தமாதிரி வந்து தோன்றுகிறாரோ? இது வேறு எந்தத் தேவனோ?- சிறுவனே, நீ வருவதைப்பற்றித்தானோ இயற்கையில் இன்று இவ்வளவு குதூகலமும் சஞ்சலமும்? உன்னை எதைக்கொண்டு நான் வரவேற்பது?' என்றெல்லாம் எண்ணினார். பாலகனுடைய செவ்விதழ்கள் ஏதோ பகர எடுத்தன. ஐயோ, அந்தக் கண்களில் என்னவோ வினவுவதுபோல் தோன்றிய பார்வை, 'என்னை யாராவது காப்பாற்றமாட்டார்களா?' என்று சொல்வதுபோல் இருந்தது.

முட்புதரில் பாலகன் சிக்கித் தவிப்பதைப் பார்த்து அவர் மிகவும் உருக்கத்துடன், "குழந்தாய், அங்கேயே நில்! நான் வந்து உன்னை விடுவிக்கிறேன்" என்றார். அவனும் அதுபோலவே ஒரே இடத்தில் நின்றான். நந்திதேவர் பக்குவமாக அவனை முட்களிலிருந்து மீட்டார். ஆனால் அவனுடைய மெல்லிய உடலில் அநேக இடங்களில் இரத்தம் தோய்ந்த கீறுகள் இருந்தன. அவனுடைய சிகையில் இரண்டொரு காட்டு மலர்கள் இருப்பதைக் கண்டு அவர் சிறுவனுடைய சௌந்தரியப் பிரியத்தை மெச்சி உள்ளம் பூரித்தார். பாலகன் விடுதலை அடைந்ததும் சந்நியாசியின் பாதங்களில் விழுந்து சேவித்தான்.

அவன், "ஸ்வாமி, சமீபத்தில் ஊர் ஏதாவது இருக்கிறதா?" என்றான். அமுதம் கலந்த அம்மொழி அவர் செவிக்கு யாழின் ஒலி மாதிரி இருந்தது. அவர், "அப்பா! இந்த நடுக்காட்டில் எங்காவது

மனிதர் வசிப்பார்களா? நீ யார்! இங்கு ஏன் வந்தாய்?" என்றார். பாலகன் அவரைத் தன் மலர்ந்த விழிகளால் நோக்கி, இனிய குரலில், தந்தையும் தானும் பத்திராசலத்தினின்று க்ஷேத்திர தரிசனத்திற்காக வீட்டை விட்டுப் புறப்பட்டு ஆறுமாதம் ஆயின வென்றும், ஸ்ரீசைலத்திற்கு அருகில் வரும்போது தகப்பனார் நோய் கண்டு நடக்கச் சக்தியற்றுக் கீழே விழுந்துவிட்டாரென்றும், திக்கு வேறு இல்லாமல் தவிக்கும்போது மலையருகில் ஓர் இடத்தில் புகை வருவதைப் பார்த்து சாதுக்கள் எவரேனும் அருகில் இருப்பார்களோ என்று எண்ணித் தேடிவந்ததாகவும் கூறினன். துறவி "உன்னுடைய தந்தை எங்கே இருக்கிறார்?" என்று கேட்டார். சிறுவனுடைய மென் மொழிகள் நந்திதேவரைக் கவர்ந்தன. அவன் அவரை அழைத்துக்கொண்டு சற்றுத்தொலைவிலுள்ள அடர்ந்த ஒரு புதரருகில் சென்றான்.

மூச்சுப் பேச்சற்று ஒரு கிழவர் படுத்திருப்பதைத் துறவி கண்டார். நடுநடுவே கிழவர் நோயினால், "ஐயோ! பார்வதி!" என்று அலறிக்கொண்டிருந்தார். சிறுவன் ஓடிவந்து பிதாவின் தலையை மெதுவாகத் தூக்கித் தன் மடிமேல் வைத்துக்கொண்டு, "அப்பா! இனிமேல் பயமில்லை. ஸ்வாமி நமக்கு இந்தச் சாதுவைக் கொண்டுவிட்டார். நீ மெல்ல எழுந்து உட்கார்" என்று அன்பு ததும்பிய தொனியில் கூறினன். இந்த உருக்கமான காட்சியைக் கண்டதும், துறவியின் மனத்தில் இருமடங்கு பரிதாபமும் கண்களில் நீரும் வந்தன.

கிழவர் கண்களைத் திறந்து அவரைப் பார்த்துக் கைகளைத் தூக்கி வணங்கி, "ஸ்ரீசைலநாதா! நீதான்

இந்த ரூபத்தில் வந்திருக்கிறாய். என் ஜன்மம் சாபல்யமாயிற்று. இனிமேல் இறந்தாலும் பரவா யில்லை. இந்தப் பார்வதியை உன்னுடைய கையில் ஒப்பித்துவிடுகிறேன்" என்று பலவீனமான குரலில் கூறினார். இருட்டாகிக்கொண்டே வந்தது. இன்னும் தாமதித்தால் மலைச் சிகரத்திலுள்ள தம் இருப் பிடத்திற்குப் போவது கஷ்டமாகிவிடும். சிறுவன் தன் தந்தையை எப்படி எடுத்துப் போவதென்று சந்தே கித்துக் கொண்டிருக்கையில் நந்திதேவர், "குழந்தாய், கவலைப்படாதே! நான் சுமந்து செல்கிறேன். உன் னுடைய சாமான்களை எடுத்துக்கொண்டு என் பின்னாலேயே வா" என்றார். நெடிய வலிமையுள்ள சரீரமும், பழுதற்ற யௌவனமும் வாய்ந்த அவர் கிழவரைச் சுலபமாகவே தோளில் தூக்கிக்கொண் டார்.

கிழவர் சங்கோசத்துடன், "ஐயோ! நான் உங்களுக்கு மிக்க சிரமம் கொடுக்கிறேன்" என்று கூறினார்.

துறவி அதைக் கவனிக்கவில்லை. "வா, பார்வதி நாதா" என்றார்.

பாலகன் தன் மூட்டையைத் தோளில் சுமந்து கூடவே நடந்தான். சட்டென்று அவனுடைய பார்வை கீழே சென்றது. "இதோ உங்களுடைய மந்தார புஷ்பம்" என்றான்.

கிழவரைத் தூக்கும்போது சந்நியாசியின் சிரசி லிருந்த புஷ்பம் கீழே விழுந்துவிட்டது. பையனைப் பார்த்து, "அது எதற்கு? நீ வா" என்றார் அவர்.

"இல்லை, ஸ்வாமி! சிவநிர்மால்யமாயிற்றே! எவர் காலிலாவது பட்டால் – ?" என்று அவன் அதைக்

கண்ணில் ஒற்றிக்கொண்டு தன் அழகிய சிகையில் செருகிக்கொண்டான். சந்நியாசி அவனுடைய பக்தியைக் கண்டு வியந்து சுமந்து செல்லும் சிரமத்தையும் ஒருவாறு மறந்துபோனூர்.

சில மாதங்கள் சென்றன. கிழவர் சந்நியாசியின் சிகிச்சையினுல் குணமடைந்துவந்தார். மலையருவியின் ஜலத்தினுலும், சுத்தமான மூலிகைக் காற்றினுலும் பூரண ஆரோக்கியம் அடைந்தார். பார்வதிநாதன் மலை முழுவதும் சுற்றித் திரிந்து ஒரு கந்தர்வப் புதல்வனைப் போல் காலங் கழித்துவந்தான். மலையின் வனப்பு அவன் முகத்தில் பிரதிபலித்தது. அவனுடைய சிரிப்பு அருவியின் மெல்லொலியை ஒத்து இருந்தது. வன புஷ்பங்களும், இள மான்குட்டிகளும் அவனுடைய தோழர்களாய் இருந்தன.

கிழவருக்கு மறுபடியும் க்ஷேத்திரம் சுற்ற அவா ஏற்பட்டது. எத்தனை நாள் ஒரு சாதுவின் அன்னத்தைத் தின்பது? 'இனிமேல் இங்கே தங்குவது உசிதமன்று' என்று எண்ணி அஹோபிலத்திற்குப் புறப்பட உறுதி கொண்டார். சந்நியாசி இதை அறிந்து, "நீங்கள் போவதைப்பற்றி ஆக்ஷேபம் இல்லை. வருவது மழைக்காலம். நீங்கள் இந்தப் பலவீனமான நிலையில் அஹோபிலம் போக முடியாது" என்ருர். கிழவர், "சரி" என்று சம்மதித்து இன்னும் இரண்டு மாதங்கள் தங்கிப் போவதாகச் சொன்னுர்.

சில மாதப் பழக்கந்தான். சந்நியாசிக்குப் பார்வதிநாதன் பேரில் அளவற்ற அன்பு ஏற்பட்டது. சிறுவனுடைய சிநேகபாசம் அவரைச் சுற்றி இழுத்தது.

ஒரு நாள் அவர், தம் குகைக்கு எதிரே ஒரு பெரிய பாறையின்மேல் உட்கார்ந்து சிந்தனையில் ஆழ்ந்திருந்தார். 'அவன் போய்விட்டால் இங்கே என்ன இருக்கிறது?' என்று எண்ணும்போது அவர் உடல் சிலிர்த்தது. 'ஆதி சங்கரர் இந்த மோகத்தைத் தான் பாசம் என்றார். இது இன்னும் என் மனத்தில் குடிகொண்டிருக்கிறது. இதை அறுத்துவிட வேண் டும்' என்று சங்கற்பங்கொண்டார். மலையின் கடின மான இதயத்திலிருந்து பீறிக்கொண்டு வெளிவந்த குளிர்ந்த அருவிநீர் 'சலசல' என்று அவருடைய காலடி யில் போய்க்கொண்டிருந்தது. சந்நியாசி ஆகாயத்தை நோக்கினார். திரள் திரளாக மேகங்களின் கூட்டம். மலையில் நிழல் படிய ஆரம்பித்தது. சற்று முன் ஒளி யைப் பருகின மரஞ் செடிகள் கருநிற வனப்புடன் விளங்கின. இன்னும் சற்று நேரத்திற்குள் மழை கொட்டப்போகிறது. சந்நியாசி அதை அறிந்து, மனத் திலுள்ள ஏதோ ஒரு பாரத்தினால் பெருமூச்சு விட்டுக் குகைக்குள் செல்ல எழுந்திருக்கையில், சற்றுத்தொலை வில் அருவி ஜலத்தில் பாதங்களைத்தோய்த்துக்கொண்டு ஆகாயத்தைப் பார்த்தவண்ணம் பார்வதி உட்கார்ந் திருப்பதைக் கண்டார். சந்நியாசியின் கண் அவள் கண்ணைச் சந்தித்தபோது, அவள் முகத்தில் முறுவல் விளையாடிற்று. பெண்களுக்கு இயற்கையான நாணம் அவளுடைய ஒவ்வோர் அங்கத்திலும் தோன்றி மறைந்தது.

சந்நியாசி அவளை நெருங்கி, "பார்வதி! நீ ஏன் தனியாக உட்கார்ந்திருக்கிறாய்?" என்றார். "நீங்கள் தாம் என்னைச் சட்டை செய்யவில்லையே; என்பேரில் உங்களுக்கு என்னவோ கோபம்" என்றாள் பார்வதி

நாதன். அக்குரலில் அவன் மனத்தை வாட்டும் வருத்தக் குறி தோன்றிற்று. யௌவன சந்நியாசி சிறுவனை அணுகி அவன் சிரசில் கையை வைத்து, "எனக்கு என்ன கோபம்? என் மனம் என்னவோ சரியாக இல்லை. அதுதான் உன்னோடு பேசவில்லை" என்றார். பார்வதி, "நாங்கள்தான் போய்விடப் போகிறோமே! நீங்கள் தனியாகச் சுகமாய்க் காலங் கழிக்கலாம்" என்றான். இந்த வார்த்தைகள் சந்நியாசியின் மனத்தை வருத்தின. அவருடைய முகம் வாடிற்று.

"ஸ்வாமி! நாங்கள் அஹோபிலம் செல்ல எத்தனை நாட்கள் ஆகும்?" என்று பார்வதிநாதன் கேட்டான்.

"ஏன், குறைந்தபக்ஷம் மூன்றுமாதம் ஆகும் வழியில் எவ்வளவோ கஷ்டங்கள்" என்றார் சந்நியாசி.

"நாங்கள் போய்விட்டு இங்கேயே வந்து விடு வோம். நான் அப்புறம் உங்களுக்குச் சிஷ்யனாகி விடுவேன்."

"சீ! இவ்விடத்தில் எவ்வளவோ கஷ்டங்கள்! நீ சுகமாக ஊருக்குத் திரும்பிப் போய் வாழ வேண்டும்."

"அதெல்லாம் எனக்கு வேண்டாம்; நான் உங் களிடந்தான் தங்கி இருப்பேன்."

அப்போது மழை 'சோ' என்று பொழிய ஆரம் பித்தது. பார்வதிநாதன் சந்நியாசியைப் பார்த்து, "அது இருக்கட்டும். நீங்கள் குகைக்குள் வந்துவிடுங் கள்" என்றான்.

ஓவென்று காற்றும் மழையும் கலந்து விருக்ஷங் களை அலைப்பி, அருவி நீரைச் சிதறச்செய்து, மலைச் சிக ரத்தைச் சூழ்ந்து அடித்தன. இந்தப் பிரசண்ட மான இயற்கையின் வெறியைக் கண்டு சிறுவனுக்கு

உல்லாசம் கிளம்பிவிட்டது. மான் குட்டி மாதிரி குதித்துக்கொண்டே, தன் சுருண்ட சிகை காற்றில் அலையக் குகையை நோக்கி ஓடினான். சந்நியாசி திகில் அடைந்து அவனைத் தொடர்ந்து, "பார்வதி, திரும்பி வந்துவிடு" என்று கூவினார். பாறைகளின் வழியாக மழைநீர் வழிந்து ஓடியது. காற்றின் வேகம் அடங்கி மழை பொழிய ஆரம்பித்தது. மரங்கள் ஒரே நினைவாய் ஸ்நானம் செய்வதுபோல், இருந்தன. கருமுகில்கள், சுழன்று சுழன்று மலை உச்சிக்கு அபிஷேகம் செய்தன. மின்னற் கொடிகள் அடிக்கடி சிவனுடைய முடியில் பின்னி விளையாடின.

மழை நாள் ஓய்ந்தது. கிழவரும், சிறுவனும் அஹோபிலத்திற்குப் புறப்பட்டுவிட்டார்கள். சிறுவன் மாத்திரம் "போய் வருகிறேன்" என்றுகூடச் சொல்லாமல் யதேச்சையாக மலைவழியே நடக்க ஆரம்பித்தான். கிழவர் அவனுடைய அறியாமையை எடுத்துக் காட்டி, "சிறுவர்கள் எல்லோரும் இந்த மாதிரிதான்" என்று மழுப்பினார்.

"அதற்கென்ன ? சிறுவர்களுக்கும் காட்டு மானுக்கும் வித்தியாசமில்லை ; இவர்கள் நூறு துஷ்டத்தனம் செய்தாலும் இவர்களை நம் மனம் நாடாமல் இருப்பதில்லை. இவ்விருவரும் என் அன்பிற்குப் பாத்திரமானவர்கள்" என்றார் சந்நியாசி. அந்த வார்த்தையில் அவருடைய மனத்தில் அடங்கியிருந்த ஏக்கம் எல்லாம் வெடித்துக்கொண்டு வருவதுபோல் இருந்தது.

அவர்கள் கண்ணிற்கு மறைந்ததும், சந்நியாசி தம்முடைய குகையை நோக்கிச் சென்றார். அப்போது யாரோ வரும் காலடிச் சப்தம் கேட்டது. அவரு

டைய நெஞ்சம் படபட வென்று அடித்துக்கொண்டது. அதே காலடிச் சப்தம்! பார்வதிநாதன் தலை தெறிக்க ஓடிவந்தான்.

"ஏன் திரும்பி வந்துவிட்டாய்?" என்றார் நந்தி தேவர்.

"சாமான் ஒன்று வைத்துவிட்டேன்" என்று சொல்லிக்கொண்டே குகையிலிருந்து வாடின இலை போன்ற ஏதோ ஒன்றைக் கையில் எடுத்துவந்தான். "என்ன அது?" என்றார் துறவி. பார்வதி பதிலே பேசவில்லை. குகையினுள் ஒரு மூலையில் ஹோம அக்கினி நிதானமாக எரிந்துகொண்டிருந்தது. ஒரு பெரிய ஸமித்தை எடுத்து அதில் வைத்துவிட்டுப் பால்வடியும் புன்னகை முகத்துடன், "இந்தப் புகையை அடையாளமாக வைத்துக்கொண்டுதான் உங்களை நான் அடைந்தேன். நீங்கள் இதை அணைய விடாமல் பார்த்துக்கொள்ளுங்கள். இன்னும் இரண்டு வருஷத்திற்குள் நான் அவசியம் திரும்பி வருவேன். அப்போது இது வழி காட்டும். நீங்கள் இதை மறக்கக் கூடாது" என்று கூறினான். இது நடவாத காரியம், குழந்தைப் பேச்சென்று நந்திதேவருக்குத் தோற்றின போதிலும் அவர் தலையைமட்டும் அசைத்தார். சிறுவன், முகத்தில் நம்பிக்கை கூத்தாட மலைவழியே சென்று மறைந்து போனான்.

அதே திசையைப் பார்த்தவண்ணம் சந்நியாசி நின்றார். மலையை விட்டு அழகே போய்விட்ட மாதிரி இருந்தது. பூவைப் பறிப்பார் எவருமின்றித் தருக்கள் புஷ்பங்களை ஏந்திநின்றன. காற்று அவன் மெல்லொலிச் சிரிப்பைக் கேளாது உலாவிச் சென்றது. எல்லாம் வெறிச்சென்று தோற்றின. காட்

டில் அவன் எங்கோ மறைந்திருந்து சட்டென்று ஓடி வருவதுபோன்று இருந்தது அவருக்கு.

"சீ என்ன பிரமை! அவன்தான் இல்லையே?" என்று எண்ணுவார். ஞாயிறு எப்போது மலை வாயில் விழுந்ததோ, அது அவருக்குத் தெரியாது. நக்ஷத்திர மணிகள் பூண்ட இரவு அவருடைய தலைக்குமேல் நடந்துசென்றது. வைகறையின் ஒளி பட்டு, மலைச் சாரல்கள் செந்நிறமாக விளங்கின. அருவியில் நீராடி நந்திதேவர் முன்போலவே அர்க்கியம் விட்டார்.

இதே வேளையில் ஒரு மதுரமான குரல் உதய கீதம் பாடும் அல்லவா? இப்போது அது எங்கே?

## 3

வருஷ சக்கரம் சுழன்றது. வசந்த காலம், சரத் காலம் ஆகியவை ஒவ்வொன்ருகச் சென்றன. ஹோமாக்கினி அணையாமல் புகை விட்டு எரிந்து கொண்டிருந்தது. ஒரு வருஷம் ஆகிவிட்டது. சந்நியாசி ஒரு திக்கையே நோக்கி உட்கார்ந்திருந்தார். அவர் மனத்தில் பாசம் என்னும் அணையாத் தணல் எரிந்துகொண்டிருந்தது.

மறுபடியும் மழைக்காலம் வந்தது. அதுவும் போய் இளவேனிலும் வந்தது. ஆனல் அவன் வர வில்லை. சந்நியாசியின் பிரார்த்தனை ஈடேறி விட்ட மாதிரிதானே? சிறுவன் அவரை மறந்துவிட்டான் போல் இருக்கிறது; இப்போது புத்தி வந்திருக்கலாம். கடுங்கோடை. மலையைச் சுற்றிக் கானல் பரவி இருந்தது. இயற்கையின் பசும்போர்வை தீய்ந்து, அருவி வற்றி ஒரு சிறு கீறலாக நீர்த்தாரை மட்டும் போய்க்கொண்டிருந்தது. இயற்கைக்குச் சலிப்பேது!

மறுபடியும் மழை. முதல் தூற்றல் பட்டுப் பல வண்ண மலர்கள் தோன்றி மறைந்தன. பழைய தூசுகளைத் துடைக்கப் புதுமழை தாரை தாரையாகப் பொழிய ஆரம்பித்தது. அநேக யானைக் கூட்டங்கள் ஒன்றாய்ச் சேர்ந்து துதிக்கைகளினால் நீரை வாரி இறைப்பன போல் இருந்தது அந்தக் காட்சி.

வெயிலின் தாபம் நீங்கி இயற்கையின் தாகம் தணிந்தது. ஆனால் இந்த இதயத்தில் மூண்ட வெப்பம் அடங்கி ஞானவித்து ஏனோ முளைக்கவில்லை!

அன்று நல்ல மழை. சந்நியாசி தம் குகைக்குள் வந்து பார்க்கையில் ஹோமத்தீ அணைந்து தணிந்து இருந்தது. 'அணைந்து விட்டதா? இன்று அவன் சென்று சரியாக இரண்டு வருஷங்கள் ஆகவில்லையா? அன்று அவன் மூட்டிய வாஞ்சையின் குறியான அறி தீக்கொழுந்து இன்று அணைந்துவிட்டதே? இது விடு தலைக்கு அடையாளமோ?' என்று அவர் எண்ணினார். அவர் வதனத்தில் சஞ்சலம் நீங்கிச் சாந்தி நிரம்பி இருந்தது. தியானத்திலிருந்து அவர் கண் விழித்த போது சூரியன் அஸ்தமித்துவிட்டான். குகையில் இருள் கவிய ஆரம்பித்தது. வெளியே பிரதோஷ வேளையின் மங்கலான வெளிச்சம். அவர் எழுந்து வெளியே வந்து பார்க்கையில் காஷாய உடை தரித்த ஓர் உருவம் எதிரேயுள்ள பாறையின் மேல் உட்கார்ந்திருப்பதைக் கண்டார். சந்நியாசியின் மெய் சிலிர்த்தது.

'இது யார்? அவனோ?' என்று எண்ணினார்.

"ஸ்வாமி" என்றது ஓர் இன்னிசைக் குரல்.

"நீ யார்?"

பதில் ஒன்றும் பேசாமல் அவருடைய பாதங்களைப் பற்றிக்கொண்டது, அந்தத் திவ்விய வடிவம். அதே முகவெட்டு; சாயல்! ஆனால் அவன் மாதிரி இல்லையே? இதென்ன! இரண்டு வருஷத்திற்குள் இவ்வளவு மாறுதலா!

"பார்வதியா?" என்றார் நந்திதேவர்.

"நீங்கள் ஏன் நெருப்பை அணைத்துவிட்டீர்கள்? இன்று இந்த இடத்தைக் கண்டுபிடிக்க நான் எவ்வளவு பாடுபட்டேன்?" என்றாள் அந்த அரம்பை. சந்நியாசி சற்றுத் திகைத்து, "நீயா!" என்றார். மறுபடியும் யோசித்துப் பார்வதிநாதனுடைய எல்லாத் தன்மைகளும் இந்தப் பூம்பாவையிடம் தோற்றுவதைக் கண்டார்.

அவரது காலடியில் அமர்ந்தவண்ணம், "அப்பா இறந்துவிட்டார்; ஆறு மாதமாகிறது. எவ்வளவோ இடையூறுகளைக் கடந்து இவ்விடத்திற்கு வந்தேன். என்னை நீங்கள் தெரிந்துகொள்ள வில்லையா?" என்றாள் அக்குயில் மொழியாள்.

"இன்றுதான் இரண்டு வருஷமாக எரியும் சுடர் அணைந்தது. பழைய பார்வதிநாதன் புதிய பார்வதியாக மாறினதால்தான் இந்த அக்கினி அணைந்துவிட்டதோ என்னவோ?" என்றார் சந்நியாசி.

"பெண்ஜன்மம் ஆனதால் வழியில் யாதொரு கெடுதியும் வராமல் தடுக்கவே அப்பா எனக்கு ஆண்பிள்ளை வேஷம் போட்டிருந்தார். அதை அவர் உங்களிடம் சொல்லவில்லை. நான் முன்னும் இதே பார்வதிதான்; இப்பொழுதும் அவளேதான். அப்பா அஹோபிலத்தில் இறந்துவிட்டார். நான் தனியே புறப்பட்டு வந்தேன்."

"ஏன் வந்தாய்?"

"ஏனா?" — பெண்மணியின் பதும நேத்திரம் வேதனையினால் மின்னிற்று. "ஏனா? உங்களை அடையாமல், பின் வேறு யாரிடம் நான் செல்வது?" என்றாள்.

சந்நியாசி தலை குனிந்துகொண்டார்; "ஆனால் உன் தந்தை உனக்கு ஓர் ஏற்பாடும் செய்யவில்லையா?" என்று கேட்டார்.

"ஏற்பாடு செய்திருந்தார். ஆனால் எனக்கு அது பிடிக்கவில்லை. உங்களுடைய சிஷ்யையாக இருக்கத் தீர்மானித்துவிட்டேன்."

"நீ பெண்பிள்ளை ஆயிற்றே! எப்படி நான் உன்னை ஏற்றுக்கொள்வது?"

"ஏன் கூடாது? பெண்கள் சந்நியாசினிகளாவதற்குத் தகுதி உடையவர்கள் ஆகமாட்டார்களா?"

"நீ உன்னிடத்திற்குப் போவதே நல்லது."

"நான் போகாவிட்டால், நீங்கள் தள்ளி விடுவீர்களா?"

"ஆமாம்" என்று தயக்கத்துடன் அத்துறவி கூறினார். மலை, மரம், அருவி யாவும் நிச்சப்தமாக இந்த அதிசயத்திற்கு மௌன சாக்ஷிகளாக நின்றன.

"பார்வதி, நீ சாப்பிடவில்லையே? போய்க் குளித்துவிட்டு வா. அப்புறம் பேசலாம்" என்றார் நந்திதேவர்.

பெண்மணி நகரவில்லை. சந்நியாசியின் மொழிகள் அவள் உள்ளத்தில் தைத்தன. மனோரதம் ஈடேறும் தருணத்தில் இந்த மாதிரிப் பிரதிகூலமும் அசட்டையும் அவளை உருக்கிவிட்டன. கண்களினின்றும்

நீர் மாலை மாலையாகப் பெருகிற்று. அவளுடைய கனி வாய் துடித்தது.

"பார்வதி! என் பேச்சைக் கேள்" என்றார் சந்நியாசி.

சித்திரம்போல் நின்ற அம்மடந்தை, "ஆனால் இங்கு இருக்க உத்தரவு கொடுப்பீர்களா? அதைச் சொல்லுங்கள். நான் ஏதாவது சாப்பிடுகிறேன்" என்று அவருடைய கைகளைப் பிடித்துக்கொண்டு அவரையே ஊடுருவிப் பார்த்தாள்.

"அப்படியே! நீ சீக்கிரம் குளித்துவிட்டு வா" என்றார் நந்திதேவர்.

பார்வதி அருவியில் குளித்துவிட்டு, அவர் புசித்து மிகுந்த கனிவர்க்கங்களைத் தின்றுவிட்டு, நடந்துவந்த களைப்பினால் குகையில் படுத்துக் கண்ணயர்ந்தாள். அவளுடைய கருங்கூந்தல் நாற்புறமும் புரண்டு கிடந்தது. அக்கருமையின் நடுவே சந்திர பிம்பமென அவள் முகம் ஒளிர்ந்தது. அவர், அவள் பக்கலில் அமர்ந்தவண்ணம் யோசனையில் ஆழ்ந்தார். எவ்வளவோ எண்ணங்கள் அவர் மனத்தில் எழுந்தன. 'சே! நான் எதற்காகத் தனிமையை நாடி வந்தேன்?......இவளை விட்டு எப்படியாவது ஓடிவிட வேண்டும்.........ஐயோ! இந்தத் தூயமலர் அதனால் வாடிவிடுமோ?...........ஆனால் என்னுடைய தவம் வீணாகிவிடுமே...... ......மனமே கடினமாயிரு. உன் வழியே நட' என்று கடைசியில் ஒரு திடமான பிரதிக்ஞைகொண்டு எழுந்து பக்கத்திலுள்ள மலைக்கு வந்துவிட்டார். துறவிக்கும் பார்வதிக்கும் நடுவேயுள்ள பாதாள கங்கை யெனும் பயங்கரமான கான்யாற்றில் மழை நீர் கடுவேகமாகச் சுழன்று சென்று

கொண்டிருந்தது. ஆனால் சாவையும் மதியாத அன்பிற்கு இது எம்மாத்திரம்! மூடத் துறவிமட்டும், 'இந்தஇடத்தில் இருந்தால் அவளுக்கு எப்படித் தெரியும்? பர்வதமோ செங்குத்து. இந்தக் கான் யாற்றைக் கடக்க ஒரு பெண்ணால் ஆகுமா? என்று எண்ணினர்.

இரவு வந்தது. ஆனால் அவளுக்குத்தான் இருக்கும் இடம் தெரிந்துவிடப் போகிறதே என்று நந்திதேவர் அக்கினியை மூட்டவில்லை. 'ஐயோ! இந்தப் பெண் ஏனே என் மனத்தில் ஓர் அணையாத நெருப்பை மூட்டிவிட்டாள். அது என்றுமே அணையாதோ?' என்று எண்ணுவார். ஒவ்வோர் இலை அசையும்போதும் அவள் வந்துவிட்டாளோ என்று சங்கைகொள்வார் அந்தச் சந்நியாசி.

பார்த்துக் கொண்டிருக்கையிலே வானம் இருண்டு மேகம் திரண்டு மழை கொட்ட ஆரம்பித்தது. 'இந்த வேளையில் பார்வதியைத் தனியாக விட்டு விட்டோமே? அவள் பயப்படுகிருளோ என்னவோ!' என்றெல்லாம் எண்ணி அவருடைய இதயம் இடியோசையோடு கூடத் 'திடுக் திடுக்' என்று அடித்துக் கொண்டது. யாரோ சற்றுத் தொலைவில் தனிமையான கான்யாற்றுக்கு அருகில் 'கோ' என்று கதறிக்கொண்டு அலைவதுபோல் அவருக்குப் பிரமை ஏற்பட்டது. 'தெய்வமே! இந்த மனம் சாந்தி அடையாதா?' என்று அவர் அழுதார். பெரிய ஆர்ப்பாட்டத்துடன் மழைத்தாரை அடித்தது. எங்கேபார்த்தாலும் ஒரே ஜலம்......ஜலம்...ஜலம்!

கார் இருளில் பளிச்சென்று ஒரு மின்னல் மின்னிற்று. அந்த ஒளியில் எதிர்க்கரையில் யாரோ தலைவிரி கோலமாய் நின்ற வண்ணம், "வெளிச்சம்,

ஐயோ!" என்று கூவுவதுபோல் இருந்தது. அது அபலை பார்வதியின் குரல்மாதிரி இருந்தது அவருக்கு.

மறுபடியும் ஒரு மின்வெட்டு! அதோ அவளே எதிர்க்கரையில் நிற்கிருள். "வெளிச்சம் காட்டுங்கள்; எனக்கு வழி தெரியவில்லையே! உங்களை நான் அடைந்தே தீருவேன். ஒரு தரம் வெளிச்சம் காட்டுங்கள்!...—"மிகுதியான வார்த்தையை ஒருபேய்க்காற்று அடித்துக்கொண்டு போய்விட்டது. ஒரு கணம் அவர் மனம் சஞ்சலம் அடைந்தது. ஆனால் மறு கணம் உறுதிகொள்ள ஆரம்பித்தது. 'வேண்டாம்; வெளிச்சம் காட்ட முடியாது!' என்று திடம் கொண்டபோது, மறுபடியும் எதிர்க்கரையிலிருந்து, "கொஞ்சம் வெளிச்சம்! ஐயோ! என்னை விட்டுப் போகாதீர்கள்! இதோ உங்களை அடைவேன்" என்று ஒரு தொனி கிளம்பியது. சந்நியாசிக்கு ஒன்றும் விளங்கவில்லை. தீப்பந்தத்தைத் தூண்ட அவருடைய விரல்கள் நடுங்கின. அதே சமயம் யாரோ 'தொபீல்' என்று ஜலத்தில் விழுந்த ஓசை கேட்டது. பார்வதி வேகமாக ஓடும் பாதாள கங்கையில் இறங்கி விட்டாள்! சந்நியாசி மரம்போல் நின்றுர். நதி நடுவி லிருந்து மங்கலாக, "வெளிச்சம், வெளிச்சம்! நீங்கள் எங்கே? எங்கே?..." என்ற அபயக்குரல் கேட்டது. வனப் பிரதேசமும் மலைச்சாரலும், "எங்கே...கே... ஏ...ஏ..." என எதிரொலி கொடுத்தன.

எதிரே நதியில் சுழன்றுகொண்டே ஓடும் செந்நீர்ப் பிரவாகம். சந்நியாசி என்றும் இல்லாத அமைதி முகத்தில் தவழ, கையில் எரியும் தீப்பந்தத்துடன் பார்வதியை மீட்க அந்த ஜலத்தில் குதித்தார். அப்புறம் சட்டென்று ஒரு கார் இருள் எல்லாவற்றையும்

மறைத்துவிட்டது. வெள்ளம் குபுகுபுவென்று வேக மாகச் சென்றுகொண்டிருந்தது.

பாவை ஏற்றிய அக்கினிக் கொழுந்து இன்னும் அணையவில்லை. இருவரும் அந்தச் சுடரின் ஒளியில் ஒருவரை ஒருவர் தேடி அலைகின்றனர்! இன்னும் அலைந்துகொண்டே இருக்கின்றனர்!

* * * *

எதிரே ஸ்ரீசைலம்; அதன் பக்கத்துக் குன்று களின் மங்கலான தோற்றம். அவைகளுக்கு இடையே பரந்த வானத்தில் எண்ணற்ற நக்ஷத்திர மலர்கள். அதோ இன்னும் எரிகிறது அவர்கள் மூட்டிய தீ. நதி வழியே செல்கிறது; மறுபடியும் மறைகிறது.

---



# வைணிகர்

# வைணிகர்

முதலில் நான் பார்த்தபோது, எனக்கு அவரைப் பற்றி அப்படிப் பிரமாதமாகத் தோன்றவில்லை. ஆனால் இந்தப் பிராந்தியத்தில் வீணை வாசிப்பதில் அவருக்கு இணை யாருமில்லை என்று வீணை உபாத்தியாயர் வைத்தி சொன்னதுமட்டும் எனக்குத் தெரியும். மனுஷ்யர் அடிக்கடி புத்தி சுவாதீனம் இல்லாமல் வருஷக்கணக் காகக்கூடக் காணமற் போய்விடுவாராம்.

மாயவரம் வைத்தியநாத சர்மா நன்றாக வீணை வாசிப்பார். அவர் வீட்டில்தான் ஒருநாள் இந்த அதிசயமான வைணிகரைக் கண்டேன். கூடத்தில், நரைத்த மீசையுடன் ஒரு மகாராஷ்டிரக் கிழவர் நெற்றியில் சந்தனம் இட்டு, நாரைபோல் உட்கார்ந்திருந்தார். வைத்தியநாத சர்மா வீணையில் தேர்ச்சி பெற்றவர் என்று பட்டணம் முழுவதும் அவருக்கு நல்ல பெயர் உண்டு. அவர் அன்று மாலை தீக்ஷிதர் கிருதிகள் நாலைந்து வாசித்த பிறகு, நாங்கள் எல்லோரும் கிழவரை வாசிக்கும்படி வேண்டி வீணையை அவர் கையில் கொடுத்தோம். அவரும் வாசிக்க ஆரம்பித்தார். பெரிய பெரிய வித்துவான்கள் சிலர் அங்கே வந்திருந்தனர். கிழவர் வீணையின் தந்திகளை மீட்டியதும் வளவளவென்று பேசும் சப்தம் நின்றது. நாங்கள் வைணிகரைச் சூழ்ந்துகொண்டோம்.

'வைத்தி வாத்தியார்' நன்றாகத்தான் வாசிப்பார். ஆனால் இந்தக் கிழவர் வாசிக்கும் பாணியே தனி.

அவருடைய மெலிந்து நீண்ட விரல்கள் மெதுவாகத் தந்திகளைக் கிளறும்போது எழும் சுரமே வேறு. அந்த மாதிரிப் பிடிப்பை நான் கேட்டதே இல்லை; இனிமேல் கேட்கப் போவதுமில்லை. இப்போது எத்தனை நாட்கள் ஆகின்றன; இன்னும் அந்த இசையின் மாயை என் காதில் ஒலித்துக்கொண்டிருக்கிறது.

அப்போதே நான் வீணை கற்றுக்கொள்ள ஆவல் கொண்டேன். வைத்தி வாத்தியார் மூலமாக அந்தக் கிழவரையே எனக்குச் சிக்ஷை சொல்லிவைக்கும்படி ஏற்பாடு செய்தேன். வைணிகர் வந்தார். தஞ்சாவூர்ப் புது வீணையும் வந்தது. நானும் கற்றுக்கொள்ள ஆரம்பித்தேன். ஆனால் கிழவரே அதிக நேரம் வாசிப்பார்; தானங்களை இசைப்பார். அந்த மூர்ச்சனையில் வீணைத் தந்தி துடிப்பதுபோல் என் மனமும் துடிக்கும். இந்த நிலைமையில் என் வீணைச் சிக்ஷை எவ்வளவு சீக்கிரமாக விருத்தி அடைந்திருக்குமென்று நீங்களே ஊகித்துக்கொள்ளுங்கள்!

நான் அதுவரை அவரை மகாராஷ்டிரப் பிராமணர் என்றே எண்ணி வந்தேன். பேச்சு, உடை, பாவனையில் அசல் மஹாராஷ்டிரரைப் போலவே இருந்தார். எங்கள் வீட்டில் ஒரு விசேஷம் நடந்தது. அப்போது என் தந்தை அவரை, "இங்கே சாப்பிட உங்களுக்கு யாதோர் ஆக்ஷேபமும் இல்லையே?" என்று கேட்டார். வைணிகர் ஆச்சரியமடைந்து, "ஸ்வாமி, சாப்பிடுவதற்கு என்ன தடை? நான் மராட்டிப் பிராமணன் அல்ல" என்றார். "அப்படியானால் நீங்கள் யாரோ?" என்றார் தந்தை. "நானும் ஸ்மார்த்தன் — காஞ்சீபுரம்" என்றார் வைணிகர்.

நான் இந்தத் தென்னாடு முழுவதும் சுற்றியிருக்கிறேன். ஆனால் இந்த மாதிரி நரைத்த மீசையும் மகாராஷ்டிரக் குடுமியும் வைத்துக்கொண்ட ஸ்மார்த்தப் பிராமணரைப் பார்த்ததே இல்லை.

வீணைச் சிக்ஷைமட்டும் நடந்துகொண்டே இருந்தது. 'டும்...டும்...ம்...ம்...த்ரிம்' என்ற கார்வைகளைக் கேட்டுக் கேட்டுக் காது சலித்துவிட்டது. எப்படியோ ஐந்து ஆறு தான வர்ணங்களைச் சுமாராக வாசிக்கக் கற்றுக் கொண்டேன்: ஹம்ஸத்வனி, பந்துவராளி, பைரவி, இத்யாதி. விரல்களும் சரிப்பட்டுவிட்டன. ஆனால் என் மனம் எப்படி இழைக்க விரும்பிற்றோ அந்த மாதிரியே வாத்தியத்தில் காட்ட முடியவில்லை. என் உள்ளத்தில் ஒலிக்கும் இசையின் வெள்ளம் வெளிக்கு வந்தால்தானே? கிழவர் தவறாமல் வந்து கொண்டிருந்தார். அவருடைய நீண்ட விரல்கள் மின் வேகமாக நரம்பை இழைத்து, என் இதயத்தையுங் கூட இழுத்துச் சென்றன.

வைணிகருக்குச் சொந்தமான வீணையே இருந்தது. அதன் பெரிய குடத்தைப் பார்த்ததும் தம்பு ராவோ, செங்கோட்டு யாழோ என்று நினைத்தேன். கிழவர் வாசிக்கும் போதெல்லாம் நானும் என் தமக்கையும் மெய்ம்மறந்து கேட்டு ஆனந்திப்போம். தினமும் இந்த மாதிரி அரைமணி நேரம் சிக்ஷை.

ஒரு வருஷம் கழிந்தது. ஒருநாள் கிழவர் திடீரென்று காணமற் போய்விட்டார். அவருக்கு ஒரு மாதச் சம்பளம் பாக்கி. ஒருநாள் ஆயிற்று; இரண்டு நாட்கள் ஆயின; அவர் வருவார் என்று தினமும் எதிர்பார்த்ததுதான் மிச்சம். ஒரு மாதமும் ஆயிற்று; ஆனால் போன கிழவர் போனவர்தாம்!

கிழவர் சென்ற தினத்திற்கு முந்திய நாள் ஓர் அதிசய சம்பவம் நடந்தது. அன்று எங்கள் வீட்டுக் கூடத்தில் வெள்ளை அடித்துக்கொண்டிருந்தார்கள். மேஜை, நாற்காலி முதலிய சாமான்கள் யாவும் என் அறையில் வைக்கப்பட்டன. அன்று அந்த அறையில் தான் வீணைச் சிக்ஷை தொடங்கிற்று. கிழவர் உட்கார்ந்தார். நானும் சுருதி கூட்டிக்கொண்டிருந் தேன். கிழவர் கீழே கிடந்த 'போட்டோ ஆல்பம்' ஒன் றைப் புரட்டிப் பார்த்துக்கொண்டிருந்தார். அதில் ஒரு படத்தைப் பார்த்தபோது அவர் பிரமித்து விட்டார். அது ஒரு பாழடைந்த சமாதியின் படம். கிழவர் அந்தப் படத்தைத் தமக்குத் தரும்படி கேட்டார். "அதற்கென்ன!" என்று நான் படத்தை எடுத்து அவருக்குத் தந்தேன். அதைத் தொடும்போது அவருடைய கைகள் நடுங்கின. கண்களில் நீர் ததும் பிற்று. நான் இதை ஆச்சரியத்துடன் கவனித்தேன். சற்று நேரம் தயங்கிவிட்டு அவர் சட்டென்று போய்விட்டார்.

அப்போது போனவர் இன்னும் வரவில்லை. போகும்போது வைணிகர் ஒரு கையில் அந்த மங்க லான சமாதியின் படத்தையும், மறு கையில் அந்தத் திவ்வியமான வீணையையும் எடுத்துச் சென்றார். அன்று என்னிடம், 'போய் வருகிறேன்' என்று கூடச் சொல்ல மறந்துவிட்டார்.

'அந்தப் படம் எங்கே பிடித்தது?' என்று நீங்கள் கேட்கலாம். திருவையாற்றுக்குப் போகும் வழியி லுள்ள ஒரு சிறிய சமாதியின் படம் அது. ஆற்றங் கரையில் அழகான சலவைக் கல்லால் அமைந்த ஒரு கல்லறை. கல்லின் ஒரு புறம், "வாழ்வாவது மாயம்

அது மண்ணுவது திண்ணம்" என்று எழுதப்பட்டிருந்தது. சமாதிசெய்யப்பட்டவரின் பெயர், ஊர் ஒன்றும் காணப்படவில்லை.

தன்னந்தனியே இருக்கும் அந்தச் சின்னஞ் சிறிய கல்லறை என் மனத்தைக் கவர்ந்தது. அதைப் படம் பிடித்தேன். சமாதியைச் சுற்றிப் புதர்கள் அடர்ந்து இருந்தன. இது எப்போது?—நான் முதலில் அவ்விடத்திற்குப் போனபோது.

இது நடந்து பத்து வருஷங்கள் ஆகிவிட்டன. ஒருநாள் திடீரென்று எனக்குத் திருவையாற்றுக்குப் போக வேண்டுமென்ற ஆசை கிளம்பிற்று. அப்போது தியாகையரவர்கள் உற்சவம் வெகு விமரிசையாக நடக்கும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. தஞ்சையில் இறங்கி நான் கால்நடையாகத் திருவையாற்றை நோக்கி நடந்தேன். வழியில் அப்படி ஜன நடமாட்டம் அதிகமாக இல்லை. எப்போதாவது மாட்டுவண்டி போய்க்கொண்டிருக்கும். மிகவும் உற்சாகத்துடன் சென்றேன். இருண்ட தோப்புகளின் இடுக்கிலிருந்து கிராமங்கள் எட்டிப் பார்த்தன. வழியில் பெண்டுகள் ஆற்றில் நீராடிவிட்டுப் போவதும், வைதிகப் பிராமணர்கள் ஸ்நானம் செய்துவிட்டு ஜபித்துக்கொண்டு வருவதும் நடு நடுவே பாலங்களிலிருந்து தெரியும். காவிரி பல கிளைகளாகப் பிரிந்து செல்வது போன்ற பல இனிமையான காட்சிகள்.

ஐயாறு அடையும்போது உச்சிப் பொழுதாகிவிட்டது. பாதைவழியில் ஒரு பெரிய அரசமரத்தின் நிழலில் சற்று இளைப்பாறினேன். அதன் சமீபத்திலேயே ஒரு பிள்ளையார் கோயில்; ஒரு சிறு குளம்.

சற்றுத் தொலைவில் மயானம். தூரத்தில் ஐயரவர்கள் சமாதி வெளுப்பாக வெளியில் பிரதிபலித்தது.

கால்வாய்கள் வளைந்து வளைந்து, கீழ்வானம் தொடும் வயல்களின் இடையே போய்க்கொண்டிருந் தன. முன்னே பார்த்ததற்கும் இப்போதிற்கும் அவ்வள வாக மாறுதலைக் காணவில்லை. அதோ தெரிகிறதே, எனக்குப் பரம திருப்தி அளித்த அந்த நிர்மலமான இடம்! நதி ஓரத்தில் சமாதி சற்றுச் சரிந்து இருந்தது. தெளிந்த ஆற்று நீரில் ஒரு யுவதி மலர்ந்திருக்கும் தன் அழகைப் பார்த்துச் சொக்கி நிற்பதுபோல இருந்தது. அந்தச் சமாதியின் அருகில் எத்தனை நாழிகை உட் கார்ந்து இருந்தேனோ எனக்கு ஞாபகமே இல்லை. நான் என் சொப்பனத்திலிருந்து எழுந்திருக்கும்போது ஒரு குடியானவன் என்னை ஏற இறங்கப் பார்த்துக் கொண்டிருந்தான்.

படத்தில் அந்தச் சமாதியைச் சுற்றிப் புதர்கள் இருக்கின்றன. ஆனால் இப்போது அது சுத்தமாக வைக்கப்பட்டிருந்தது. யாரோ மகானுபாவர் அதைச் சுற்றிச் சாமந்தி, மல்லிகை, ரோஜா, நந்தியா வர்த்தம் முதலிய செடிகளை வைத்து வளர்த்திருந் தார். மாசீ பத்திரம் ஒழுங்காகக் கத்தரித்து விடப் பட்டிருந்தது.

இவற்றிற்கு நடுவே சற்றும் மாசு அடையாமல் அந்தச் சமாதி ஒளிர்ந்தது. தேவாரத்தின் ஓரடியும், சங்கரரின் அழகான கவிமலரும், அழியாத ஒரு நிலைபேற்றையும் சௌந்தரியத்தையும் எனக்கு எடுத்துக் காட்டின. ஆகா! என்ன இனிமையான மொழிகள் அவை!

"யாரோ நீ, இந்தக் கல்லறையின்கீழ்ப் படுத்துக் கொண்டிருப்பது? அமைதியை விரும்பியா தண் புனற் காவிரியின் மடியில் நீ துயிலுறுகிறாய்? பிறவிக் கடலைக் கடந்து நீ எங்குற்றாய்? மறலி உன்னைக் கொண்டேகினும், உன் அழகிய மேனியை இங்கு மறைத்துவைத்தது யாரோ? இதை ஆதரிக்கும் கை எதுவோ?" என்று என் மனம் கண்ணுக்குப் புலனாகாத ஒரு ரூபத்தைக் கேட்டது. சமாதியினுள் ராசி ராசியாக வதங்கின மலர்களும் வாடா மல்லிகைகளும் குவிந்துகிடந்தன. அவற்றைத் தவிர்த்து ஒரு தூசுகூட இல்லை. 'வெண்மையான சமாதி சயனத்தில், தூய மலர்களைத் தூவி உன்னைப் பூஜிப்பவன் எவனோ? நீ போய் எத்தனையோ தினங்கள் ஆகிவிட்டனவே! மறுபடியுமா நீ வருவாய் என்று அவன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறான்?'—இவ்வாறு என் மனம் வினவுவதை விடவில்லை.

என் எதிரில் நின்ற குடியானவன் எனக்கு இந்த வரலாற்றைத் தெரிந்தமட்டும் கூறினான்:

அடிக்கடி ஒரு மனிதர் இங்கே வந்துபோவது வழக்கமாம். ஒவ்வொரு நாளும் அந்திப்பொழுதில், அவர் வாசிக்கும் வீணாகானத்தைக் கேட்டுப் பசு, பக்ஷிகள் முதலியன தம் நிலையை மறந்து இந்த இடத்திற்கு வருமாம். பொழுது புலர்ந்ததும் வீணையின் ஒலி அடங்குமாம். புனலும் மலரும் தூவிச் சமாதியை அலங்கரித்துவிட்டு அவர் எங்கேயோ போய்விடுவாராம். மறுபடியும் பொழுது சாய்ந்ததும் அங்கே தோன்றுவாராம். அவர் தேசாந்தரம் போயிருக்கும் சமயங்களில், நள்ளிரவில் நிலவு பொழியும்போது மனமுருக்கும் ஓர் அழுகை அந்தச் சமாதியிலிருந்து

எழுமாம். முக்கால்வாசி அறிவிலிகளின் மூட நம்பிக்கையாய் இருந்தாலும், இதில் சிறிது உண்மையும் கலந்திருந்தது.

காஞ்சீபுரம் சின்னசாமி சாஸ்திரிகளை உங்கள் எவருக்கும் தெரிந்திராது. அவர் அபாரமான சங்கீதப் பிரியர். வித்துவத்தோ குடத்தினுள் விளக்கு மாதிரி தான்; வெளியில் காட்டமாட்டார். அவரிடம் எனக்கு அந்தரங்க அன்பு. காஞ்சீபுரம் செல்லும்போது ஒரு தரமாவது அவரிடம் போகாமல் இருக்கமாட்டேன்.

ஒரு சமயம் பேச்சோடு பேச்சாகத் திருவையாற்றுச் சமாதியைப்பற்றி எடுத்தேன். அவர், "ஓகோ!" என்று என்னைப் போகவிடாமல் பேச ஆரம்பித்து விட்டார். அப்போது நல்ல மழைக்காலம். இரண்டு மூன்று நாளாக ஆகாயத்தில் மேக மூட்டம். அவர் இந்த அதிசயக் கதையைச் சொல்ல ஆரம்பித்தார் :—

"வீணை சாம்பையரைப் பற்றி எல்லோரும் கேள்விப்பட்டிருக்கலாம். அவர் பெரிய வைணிகர். தென்னாடு முழுவதும் அவர் புகழ் பரவியிருந்தது. ஏன் - இந்தூர், குவாலியர், பூனா முதலிய இடங்களிலும் அவருக்குக் கியாதி உண்டு. ஏகநாத் விஷ்ணு பண்டிதர் அவருடைய அபார ஞானத்தை மெச்சினாராம். கிழ வயதில் எந்த இடத்திற்கும் கச்சேரி செய்யப் போவதில்லை. பட்டணத்தில் தம் வீட்டில் கடைசிக் காலத்தில் வாசிப்பது வழக்கம் எப்போதாவது கஞ்சி காமாக்ஷியின் சந்நிதியில் போய்ப் பாடுவார். அவருடைய வீணாகானத்தைத் தேவர்கள் தாம் கேட்டு ஆனந்தித்தனர். நம்மவருள் சிலரே அதைக் கேட்கக் கொடுத்துவைத்திருந்தனர். அவ்வளவு நன்றாக இசைப்பாராம். அந்தக் கிழவயதிலும்

சீடர்கள் எத்தனையோ பேர் அவருக்கு இருந்தார் கள். ஆனால் ஒருவனே அந்த வீணையைத் திறமை யுடன் வாசித்தான். கிழச் சாம்பையருக்கு அவன்மேல் பாசம் விழுந்தது. அந்த ஆசாமி நம் காஞ்சீமண்ட லத்தைச் சேர்ந்தவன். வீராசாமியோ வேங்கட கிருஷ்ணனோ என்னவோ அவன் பெயர். சாம்பையர் அவனைச் 'சீதாராம்' என்று அழைப்பார். பெரிய பெரிய ஆஸ்தானங்களில் அவனுடைய வாசிப்பை மெச்சாதவரே இல்லை. தெற்கிலிருந்து அநேக நாட்டிய ஸ்திரீகள் அவனுடைய யாழிசைக்கு மனத் தைப் பறிகொடுத்தவராய் வருவார்கள். அவன் விளம்ப காலத்தில் இழைக்கும் க்ஷேத்திரைய பதங் களுக்கு ஓர் அரம்பையே தவறாமல் அபிநயித்து எல் லோர் உள்ளத்தையும் உருக்கிவிட்டாள். ரசம் கெடாமல் யாழில் இசைக்கும் திறன் அவன் ஒருவ னுக்கே உண்டு.

"பவானி ஒரு தாசி. ஊர் தஞ்சாவூர். நாட்டிய சாஸ்திரத்தின் கரையைக் கண்டவள். அவளை ஆதரித்த தனவந்தரான ஒரு ரசிகர் அவளுக்கு 'அபி நவ-ஊர்வசி' என்று பெயர் கொடுத்தார்.

"யௌவன தசை மாறினபோதும் அவள் குரலில் கரகரப்பே ஏற்படவில்லை. சரீரமும் ஸ்தூலமாகி விடவில்லை. பவானிக்கு அன்று அலர்ந்த புது மல்லி கையை ஒத்த ஒரு பெண் இருந்தாள். அவள் பெயர் நீரஜாக்ஷி. வதந்தி என்னவென்றால் அந்த ரசிகரின் பெண்தானும் நீரஜாக்ஷி.

காஞ்சீபுரத்தில் ஒரு தனவந்தர் வீட்டில் ஆடம் பரமாகக் கலியாணம் நடந்தது. அப்போது சீதா ராமும் நீரஜாக்ஷியும் ஒருவரையொருவர் சந்திக்க

நேரிட்டது. தஞ்சாவூரிலிருந்து பவானி வந்திருந்தாள். அன்று மாலை நீரஜாக்ஷியின் அபிநயக் கச்சேரி. சீதாராமின் வீணை, பக்க வாத்தியம். கேட்கவேண்டுமா? எள்ளுப் போட்டால் எள்ளு விழாது; அப்படிப் பட்ட கூட்டம். அப்போது சீதாராமுக்கு வயது இருபத்திரண்டு. நீரஜாக்ஷிக்குப் பதினைந்தோ, பதினாறோ. சீதாராமின் யாழ் ஒலிக்க நீரஜாக்ஷி உவகையைக் காட்டும் பல பதங்களை உருக்கமாகப் பாடி அபிநயம் பிடித்தாள். யாழில் ஒவ்வொரு சமயம் பகை நரம்புகள் துடிக்கும்போது நீரஜாக்ஷியின் உடலும் உயிரும் துடித்தன. ஜனங்கள் யாவரும் உலக நினைவையே மறந்திருந்தனர். சிலர், 'இவர்கள் அல்லவா சரியான ஜோடி!' என்றும், சிலர் பரவசமடைந்து, 'சபாஷ்! பலே!' என்றும் பலவிதமாய் ஆர்ப்பரித்தனர். அது கலியாணக் கச்சேரியாயில்லை; கந்தர்வ சங்கீதமாகவே இருந்தது. ஆனால் அன்றே சீதாராமுக்குச் சனி பிடித்தது.

"திருவையாற்றில் பவானிக்கு அவளது சம்ரக்ஷகர் ஓர் அழகிய மாளிகை கட்டிக்கொடுத்திருந்தார். சில சமயங்களில், சங்கீத வித்துவத் கோஷ்டிகள் கூடும். அவள் வீட்டில் ஆடல்பாடல் ஏக ஆர்ப்பாட்டமாக நடக்கும். இதுபோன்ற ஒரு சமயம் சீதாராமும் அங்கே சென்றிருந்தான்.

"பெரிய கொலுவறையில் வித்துவான்கள் தங்கள் சாமர்த்தியங்களைக் காட்டும்போது, வளைந்து வளைந்து செல்லும் ஆற்றங்கரையிலுள்ள படித்துறைக்கு அருகில், வெண்ணிலவின் அமுதம் பாயும் வேளையில் சீதாராமின் யாழ் அவன் மனத்திலுள்ள சஞ்சலத்தை ஒலிக்கும். நீரஜாக்ஷி அபிநய சங்கேதங்களி

ளுல் தன்னுடைய காதலை வெளிக்குக் காட்டுவாள். இது சில நாளாக நடந்துகொண்டிருந்தது. சங்கீதத்திலேயே லயித்திருந்ததனுல், எவரும் இவர்களின் போக்கைக் கவனிக்கவில்லை. ஜனசந்தடியற்ற படித்துறையில் இவர்களது பிரேம லீலை இசையின் மூலமாக நிகழ்ந்துகொண்டிருந்தது. ஆனுல் ஒரு பாழும் கண் இதைக் கவனித்துவிட்டது. அது யார்? சனீசுவரனே. சனி நேரே இதை இளைய ஜமீன்தாரிடம் 'வத்தி' வைத்துவிட்டது. இளைய ஜமீன்தார் நீரஜாக்ஷியைப் பாலிக்க அப்போதே பவானியிடம் அடிபோட்டு விட்டார். ஆனுல் பவானி இஷ்டப்படவில்லை. பெரிய மனிதன் மனம் வைத்துவிட்டால் எந்தக் காரியத்தையும் செய்யத் துணிவான். கடைசியில் அந்த அழகிய வண்ணுத்திப்பூச்சி அவனுடைய வலையில் விழுந்துவிட்டது. வெகு நாட்களுக்குப் பிறகே சீதாராமுக்கு இது தெரியவந்தது. நீரஜாக்ஷி சூரியன் ஒளியைப் பாராமல் இளைய பூபதியின் அந்தப்புரத்தில் மறைந்துபோனுள்.

"நாட்கள் பறந்தன. பெண்ணைப் பறிகொடுத்த பவானி அதிசீக்கிரமாக விருத்தாப்பியம் அடைந்தாள். அவள் அதுமுதற்கொண்டு எந்த நாட்டியக் கச்சேரிக்கும் போவதில்லை. உற்சாகம் இருந்தால் தானே? அதுமுதல் சீதாராமும் எங்கும் போவதில்லை. ஒரு வருஷங் கழித்து ஜமீன்தாரின் மாளிகையில் நீரஜாக்ஷி முகத்தில் முல்லை முறுவல் வதங்கி இருப்பதாகச் சீதாராமுக்குச் செய்தி வந்தது. அதற்குப் பிறகு அவள் சிரித்ததை எவரும் பார்க்கவில்லை. ஒரு தரமே அவள் முகத்தில் முறுவல் விளையாடிற்று—அவளை மண்ணில் மறைக்குமுன்.

இந்தக் கொடுந் துயரை அனுபவிக்கவே பவானி உயிரை வைத்திருந்தாள். நீரஜாக்ஷி, அந்த நதிக் கரையில் புதைக்கப் பட்டாள். அவ்விடத்தில் ஒரு வெள்ளைச் சலவைக்கல் சமாதி கட்டப்பட்டது. அதுதான் நீ சொல்லும் கல்லறை."

"ஆனால் இது கறுப்புக் கல்லாயிற்றே?" என்றேன்.

சாஸ்திரிகளா ஏமாறுகிறவர்? "இப்போது, மழையினாலும் நதியின் ஈர வாடையினாலும் மங்கிக் கறுப்பாகி இருக்கலாம்" என்றார்.

"இப்போதும் கோணல்மாணலாகச் செல்லும் நதி ஓரமாக இந்த மயானத்தில் அந்தச் சமாதியின் மீதே உட்கார்ந்துகொண்டு, சீதாராம் தன் காதலிக்கு யாழ் வாசித்துக் காண்பிக்கிறான். இந்தத் தெவிட்டாத இசையருவியில் மூழ்கிப் பசு பக்ஷிகள் மெய்ம் மறந்து இருப்பது உண்மையே. ஆனால் இந்த யாழின் ஒலி மனிதர்கள் காதிற்கு மட்டும் கேளாது!"

அடாடா! அந்தக் கிழவரைப் படம் பிடிக்காமல் விட்டுவிட்டேனே! சாஸ்திரிகளிடம் காட்டி இவரா அந்தச் 'சீதாராம்' என்று கேட்டிருப்பேனே!

வெகு நாட்களுக்குப் பிறகு, பங்களூரில் சீதாராமை எதிர்பாராத வண்ணம் சந்திக்க நேரிட்டது. வீணை பஸவப்பா வீட்டில் இருப்பதாகக் கேள்விப்பட்டு அவரைப் பார்க்க ஓடினேன். வீட்டு வாயிற்படியில் வரும்போதே மனத்தை உருக்கும் அந்த இனிய நாதம் என்னைத் தானாகவே இழுத்துச் சென்றது. அவரை நான் கண்ணாரக் கண்டேன். ஆனால் அவர் என்னைத் தெரிந்துகொள்ளவில்லை.

நடுராத்திரி இருக்கும். சபை கலைந்தது. நான் அவரைப் பார்த்து, "ஸ்வாமி, சீதாராம் வைணிகரை உங்களுக்குத் தெரியுமா?" என்றேன். கிழவருக்குத் தூக்கிப்போட்டது. அவருடைய மெய் சிலிர்த்தது. வெகுநேரம் கழித்தே அவரால் எனக்குப் பதில் சொல்ல முடிந்தது. "நீங்கள் யாரோ?" என்றார். நான் என்னை அறிமுகப்படுத்திக் கொண்டேன். மாயவரம் வைத்தி, என்னுடைய வீணைச் சிக்ஷை, சமாதியின் படம் - ஒவ்வொன்றாகச் சிதறின நினைவுகள் அவர் மனத்தினிடைத் திரண்டு வந்தன. அவருடைய வாயிலிருந்தே விருத்தாந்தங்களை அறிய நான் பாடுபட்டேன். அவர் எதற்கும் இடந் தராமல், "நாளைக்குச் சொல்லுகிறேன், வா" என்று தட்டிக் கழித்தார்.

காலையில் சாவகாசமாகப் பார்க்கலாம் என்று வந்தபோது கிழவர் அவ்விடத்திலிருந்து போய்விட்டதாகக் கேள்விப்பட்டேன்.

இது நடந்து ஒரு மாதத்திற்கெல்லாம், என்னைத் தேடிக்கொண்டு ஒருவர் வந்தார். அவருடைய கையில் வீணை ஒன்று இருந்தது. என்னிடம் ஒரு கடிதத்தையும் வீணையையும் கொடுத்துவிட்டு, அவர், "உங்களுடைய வீணை வாத்தியார் இவ்விரண்டையும் உங்களிடம் சேர்ப்பிக்கும்படி சொன்னார். அவர் இப்போது இந்த உலகத்தில் இல்லை" என்றார்.

"என்ன! அவர் போய்விட்டாரா?"

நான் பிரமித்து நின்றேன். கடிதத்தைப் பார்த்தேன்; நல்ல தமிழில் எழுதப்பட்டிருந்தது:

"என் பிரியமுள்ள சிடனுக்கு, அநேக ஆசிர்வாதங்கள். பகவத் கிருபையும், தீர்க்காயுளும் உனக்கு உண்

டாகட்டும். அப்பா! நீ என் ஒரே சீடன். எனக்கு விவாகம் ஆகவில்லை. குழந்தை குட்டி இல்லாத நான் உன்னையே புத்திரனாக எண்ணுகிறேன். நீ உன் குருவின் கடைசிக் கட்டளையை நிறைவேற்ற வேண்டும். அதுவே எனக்கு நீ தரும் குருதக்ஷிணை. என்னைப்பற்றி உனக்குச் சின்னசாமி சாஸ்திரிகள் சொல்லியிருப்பார். நான் அந்தச் சமாதிக்குச் செல்வது உனக்குத் தெரிந்திருக்கலாம். அதைச் சீர்திருத்தவே நான் அடிக்கடி காணாமல் போய்விடுவது வழக்கம். அப்போது உனக்கு இவையெல்லாம் அதிசயமா யிருந்திருக்கும். வாழ்க்கையில் அந்த இடமே எனக்கு நிம்மதியைத் தந்தது. நதியின் வேகத்தால் அது கொஞ்சங் கொஞ்சமாகச் சரிந்துகொண்டே வருகிறது. கூடிய சீக்கிரத்தில் அது ஜீரண தசையை அடையும். பிச்சை எடுத்து அதைச் செவ்வைப்படுத்தி வைக்கலாமென்று ஆசைப்பட்டேன். ஆனால் அது முடிந்தால்தானே? இதைக் கொண்டு வரும் நண்பர் என்னிடம் கடைசியாகச் சிக்ஷை கற்றுக் கொள்ள வந்தவர். என் காலம் நெருங்கியதால் அவருக்கு நான் உதவிபுரிய முடியாமற் போய்விட்டது. அவர் கொண்டுவரும் என்னுடைய வீணையை அந்தச் சமாதியின் பேரில் வைத்துவிட்டு வந்துவிடு. இதுவே என் மனம்-ஏன், என் ஆன்மாவே-சாந்தி அடைய நீ செய்யும் கடமை, என் குழந்தாய்!

சீதாராம்"

வீணையைக் கொடுத்துவிட்டு, வந்தவர் போய் விட்டார். இரண்டு தினங்கள் கழித்து என் பரம குருவின் கட்டளையைச் செலுத்தத் திருவையாற்றுக்குப் புறப்பட்டேன். இது மூன்றாந்தரம்.

பழைய மயானத்தை அடைந்தபோது என்னையும் மீறிக் கண்களில் ஜலம் வந்து மறைத்தது. மனத்தை என்னவோ பண்ணிவிட்டது. நிர்மலமான

அந்திப்பொழுது. ஆகாயத்தில் வர்ண விநோதங்கள் மறைந்ததும், சமாதியை நெருங்கி மிகவும் பக்தியுடன் நான் அதைத் துடைத்து மலர்களால் அலங்கரித்தேன். என்னுல் வீணையை வாசிக்க முடியாமற் போனுலும், அதில் அடங்கியிருக்கும் ஆன்மா சாந்தியடைய நான் அதை அங்கே வைத்துவிட்டு வந்தேன்.

அன்று இரவு காற்று மழை அடித்தது. காலையில் போய்ப் பார்த்தபோது, மயானம் எங்கே? சமாதி எங்கே? சாந்தமாக நேற்று நெளிந்து சென்ற காவிரி, செந்நீர் கரைபுரள, பயங்கரமாக ஓடிக்கொண்டிருந்தாள். சமாதி, வீணை, புஷ்பம் யாவும் வெள்ளத்தில் ஐக்கியம் அடைந்தன. அங்கே எஞ்சி நின்றது வெறும் சூன்யமே!

---



# குரூர உலகம்

## 1

பச்சை, பொன்னி, வெள்ளை இவர்கள் மூவரும் எந்தச் சமயத்திலும் இணைபிரியாமல் இருப்பார்கள்.

களத்துமேட்டின் அருகிலேயே முக்கோணமான ஒரு நிலத்துண்டு; வரப்பின் ஓரங்களில் பசும்புல் செழிப்பாக வளர்ந்திருக்கும்; நிலத்தின் ஒரு மூலை இருப்புப் பாதையைத் தொடுகிறது. வரப்பின் ஓரமாகவே ஒரு தந்திக்கம்பம். பச்சைக்கும் பொன்னிக்கும் இந்தத் தந்திக்கம்பம் வெளியுலகின் - அவர்கள் பாராததும் அவர்கள் அறிவுக்கு எட்டாத ரகசியம் குடிகொண்டதுமான ஓர் அதிசயத்தின் - சின்னமாக நின்றது. அதைப்பற்றிப் பயங்கரமான எண்ணங்கள் இந்தக் குழந்தைகள் மனத்திடை உண்டானபோதிலும், பிரதிதினமும் அதைப் பார்ப்பதனால் இவர்களுக்கு அது இருப்பது சகஜமாகிவிட்டது.

நிரபராதியான அந்தத் தந்திக்கம்பத்தை, பச்சை பரீக்ஷியாத நாளே இல்லை. அவன் புத்திக்கு அது ஒரு பட்டுப்போன மரமெனத் தோன்றும். மேலே வரிசையாக இருக்கும் பீங்கான் குமிழியை ஒருவகைப் பழமென்றே அவன் எண்ணுவான். ஒரு நாள் இந்த நம்பிக்கையினால், அந்த விசித்திரக் கனியைப் பறிக்கக் கம்பத்தின்மீது தொற்றி ஏறினான் பச்சை. தந்திகளின் சமீபமாக வரும்போது சட்டென்று அவனுக்கே ஓர் அச்சம் ஏற்பட்டது. பீங்

கான் குமிழிகள் அவனுக்குக் கோயிலின் கோபுரக் கலசங்களை நினைப்பூட்டவே, மடமடவென்று கீழே இறங்கிவிட்டான். புல்தரையில் கால்கள் நிலைத்ததும் அவனுக்கு ஜில்லென்று வேர்த்தது.

பொன்னிக்கு அவ்வளவு தைரியம் வரவில்லை. பெண்ணாயிற்றே! ஆனால் பச்சையைக் காட்டிலும் வெளியுலகைப்பற்றி அறியவேண்டிய ஆவல் அவளுக்குத்தான் அதிகம். மணிக்கணக்காக அந்தத் தந்திக் கம்பத்தின் அடியிலேயே உட்கார்ந்திருப்பாள். மேலே செல்லும் தந்திகளிலிருந்து வரும் ரீங்காரமும், காற்றின் அலைகள் அவற்றின்மீது மோதும்போது ஏற்படும் சப்தமும் ஓர் அபூர்வ சங்கீதத்தைச் சிருஷ்டித்தன. பொன்னி இந்த இசையைக் கேட்டுக்கொண்டு இன்புற்று இருப்பாள். தந்தியின் நாதம் சிற்சில சமயம் அவளுக்குத் தெரிந்த பாட்டைப் போலவே தொனிக்கும். அப்போது அவள் சந்தோஷத்தினால், கைகளைக் கொட்டி, கண்களில் ஆச்சரியம் ஜ்வலிக்க அதையே ஊன்றிக் கவனிப்பாள். தன்னையும் மீறி அவள் முகத்தில் முறுவல் விளையாடும். வெகு தூரத்திலுள்ளவர்கள் ஒருவரோடொருவர் இந்தத் தந்திகளின் மூலமாகப் பேசிக்கொள்வதை அந்த நாட்டுப்புறச் சிறுமி எங்ஙனம் அறிவாள்? வெளியுலகின் ரகசியத்தைத் தெரிந்துகொள்ள அவளுக்குச் சற்றும் பரபரப்பு இல்லைபோலும்! இதன் உண்மை தெரிந்துவிட்டால் தினமும் கேட்டு ஆனந்திக்கும் அந்த அற்புத இசையின் இனிமை குன்றிவிட்டாலும் குன்றிவிடும். பொன்னிக்கு இந்தச் சங்கீதத்தைக் கேட்டுக்கொண்டிருப்பதே போதும்!

வெள்ளை, இந்தச் சிறுவர்களைக் காட்டிலும் வய தில் பெரியவள். அவள் ரகசியமான அந்த வெளியுல கைப்பற்றி மண்டையை உடைத்துக்கொள்ளவில்லை. சிறுவர்களுக்கு இயல்பான கற்பனாசக்தி அவளுக்கு இல்லை. சம்சாரத்திற்கேற்ற அறிவு படைத்திருந் தாள் அவள். அந்தத் தந்திக்கம்பம் அவள் வரைக் கும் ஒரு சாரமற்ற வஸ்துவே. அவளுக்குச் சொறி யெடுக்கும்போது உடம்பை உராய்ந்துகொள்ள அது உபயோகமாக இருந்ததே ஒழிய வேறெதற்கும் பயன்படவில்லை.

வெள்ளை என்பது ஒரு பசுவின் பெயர்! அது இந்த உலகில் எவ்வளவோ மாறுதல்களைப் பார்த்தாகி விட்டது. இரண்டு ஈற்றான புஷ்டியுள்ள பெரிய மாடு. சம்சாரத்தில் பல கஷ்ட நிஷ்டூரங்களை அனுபவித்து இருக்கிறது, தன் யஜமானனுடன். வயிறாரப் புல் மேய வேண்டியது; கவடில்லாமல் பாலைத் தரவேண் டியது. அதற்கு வீண்தொல்லை எதற்கு? கண்கள் பாதி மூடினபடி, மெல்ல அசை போட்டுக்கொண்டே, அடிக்கடி வாலை ஆட்டியவண்ணம் தொலைவில் தெரி யும் பயிர் பச்சைகளையும், நீலக்குன்றுகளையும் நோக் கியபடி அது கனவு காணும். நடுநடுவே பச்சை, பொன்னி இவர்கள் விளையாட்டுகளில் அதுவும் கலந்துகொள்ளும். இவர்களிடத்தில் வெள்ளைக்கு அவ்வளவு பாசம். இந்தக் குழந்தைகள் தாமே அதை வயிறு வெடிக்க மேயவிட்டுப் போஷித்து வருகி றார்கள்! பசுமாடு எங்கேயாவது பேசுவதுண்டானால், இந்த வெள்ளையும் அவர்களிடம் தான்கொண்ட அன் பையும் ஆதரவையும் வெளிப்படுத்தும். பிறர் வயல் களுக்குப் போய்விடாமல், வேலியைத் தாண்டி ஆபத்

திற்கிடமான அந்த இருப்புப் பாதைக்குச் சென்று விடாதபடி, தன்னை அவர்கள்தாமே கருத்தாய்க் காப்பாற்றி வருகிறார்கள்? மாடானாலும் அதற்கும் கொஞ்சம் அறிவு இருந்தது. மற்றப் பசுக்களைப்போல அது சிறுவர்களுக்கு அனாவசியமான தொந்தரவு கொடுப்பது இல்லை. பிறரின் விளைச்சல்களில் மேய்ந்ததாக வெள்ளை ஒரு நாளும் கெட்ட பெயர் வாங்கினதில்லை. இளம் புல் மேய்வதும் கவலையின்றி வாழ்வதுமே அதன் லக்ஷியமாகும். இவ்விரண்டையும் தவிர்த்து வேறு எதையும் அது விரும்பவில்லை. முதன் முதலில் ரெயில் வண்டியைப் பார்த்ததும் துள்ளி விளையாடும். சிறு கன்றாக இருக்கும்போது அதன் அமைதியான வாழ்க்கையில் ஒரு தடை ஏற்பட்டது. அப்போது வெருண்டு போய் மாட்டு மந்தையில் புகுந்துகொண்டது. அப்புறம் அடிக்கடி ரெயில்வண்டி வருவதையும் போவதையும் பார்த்துப் பார்த்து அதற்கு ஒருவாறு பயம் தெளிந்தது. வண்டி வரும் சப்தத்தைக் கேட்கும் போதெல்லாம் தலையை மட்டும் தாழ்த்திக்கொண்டு உடலைச் சுருக்கிக்கொள்ளும். நாளடைவில் அந்த அச்சமும் தொலைந்துவிட்டது. இப்போதெல்லாம் வெள்ளை, தன் பக்கத்தில் ரெயில் வண்டி இரைச்சல் போட்டுக்கொண்டு சென்றாலுங் கூட, அசட்டையாகவே இருக்கும். 'ரெயில் வண்டியும் உலகத்திலிருக்கும் ஒரு வஸ்து; அதன் வழியில் குறுக்கிட்டால் தானே விபத்து? தன் பாட்டிற்குத் தொலைவில் செல்கிறது.' - இத்தகைய எண்ணம் அதற்கு வந்ததோ என்னவோ?

இந்த இருப்புப்பாதை பச்சைக்கும் பொன்னிக்கும் ஒரு குதூஹலத்தையே அளித்தது. முதலில் பயம்

கலந்த ஆவல் அவர்களிடம் தோன்றியது. ரெயில் வண்டி வரும்போதெல்லாம் அவர்கள் கம்பி வேலியின் ஓரமாக நின்றுகொண்டு வண்டித்தொடரை நோக்கிக் கூவியும் கைதட்டியும் குதிப்பார்கள். அதன் சப்தங்களைப் போலவே அபிநயம் செய்வார்கள். கடைசியில் வீட்டில் ரெயில்வண்டி விளையாட்டென்ற ஓர் ஆட்டத்தை ஆரம்பித்துவிட்டார்கள். இருப்புப் பாதையின்மேல் புழுவைப் போன்று அந்த ரெயில் வண்டித் தொடரென்னும் வஸ்து வேகமாகச் செல்வது அவர்களுக்கு விநோதமாக இருந்தது. அது எந்த ரகசியமான வெளியுலகிற்குச் செல்கிறதோ?

ஆனால், அந்தத் தந்திக் கம்ப மாகட்டும், ரெயில் வண்டி யாகட்டும் எத்தனை நாழிகைதான் இந்தக் குழந்தைகளின் மனத்தைக் கவரும்? ரெயில் வண்டி தூரத்தில் மறைந்துபோனதும் மீண்டும் தனிமையும் நிச்சப்தமும் அவர்களைச் சுற்றி நிலவும். மறுபடியும் மாடு மேய்க்கும் பழைய தொழில்தான். மீண்டும் அவர்கள் ஆசைக்குப் பாத்திரமான அந்த வெள்ளைப் பசுதான்.

பொழுது புலர்வதற்கு முன்பே பால் கறந்தாகி விடும். புள்ளினத்தின் குரலோசையைக் கேட்டுக் கொண்டே தம் சின்னஞ் சிறு அடிகளைப் பனி தோய்ந்த புல் தரையில் பதிய வைத்து வெள்ளையை ஏரித்தாங்கலுக்கு மேய்வதற்காக ஓட்டிச் செல்லு வார்கள். நீண்ட பகற்பொழுதைப் பல விசித்திர மனோபாவங்களில் கழித்தவுடன் அவர்கள் களைத்துத் தூசு படிந்த மேனியுடன் அந்திவேளையில் திகழும் மஞ்சள் வெயிலில் அப்பசுவோடு வீடு திரும்புவார் கள். அவர்கள் தாய், கதை சொல்லிக்கொண்டே

பிசைந்து கையில் போட்ட சோற்றைத் திருப்தியுடன் புசித்துவிட்டு, அந்தத் தூயக் குழந்தைகள் மாட்டுக் கொட்டிலுக்கு வந்து வெள்ளையின் அலை தாடியைத் தடவிக்கொடுப்பார்கள். அது முடிந்ததும், முற்றத்தில் பாய்விரித்துப் போட்டுப் படுத்துக்கொண்டு, பொன்னியும் பச்சையும் இருண்ட வானில் ஏற்றப்படும் நக்ஷத்திர விளக்குகளை, "அதோ ஒன்று! இதோ ஒன்று!" என்று கணக்கிட்டு, இயற்கை அன்னை செய்யும் அதிசயத்தை நினைத்தவாறு கற்பனை ஊசலில் ஆடிக்கொண்டே கண்ணயர்வர். வெள்ளையும் பகலெல்லாம் மேய்ந்த புல்லை மென்று விழுங்கிக் கொண்டே படுத்துக் கண்ணிமைகளை மூடி நித்திரையில் ஆழும். அவர்களுடைய வாழ்க்கை இப்படியே அமைதியுடன் சென்றுகொண்டிருந்தது. ஒரே காம்பிலுள்ள இரட்டை மலர்கள்போல் அந்தச் சிசுக்கள் தூக்கத்திலும் இணை பிரியாமல் இருப்பார்கள். சொப்பன தேவதையும் இன்பக் கனவுகளையே மூட்டி அவர்களை நித்திரையில் சிரிக்கவைப்பாள். வெள்ளைப் பசுவானது அவர்களுக்கு நிறையப் பால்கொடுத்துத் தன் நேசப்பான்மையைக் காட்டியது. பகல் வேளைகளில் அதற்குத் தெரிந்த விளையாட்டுக்களைக் காட்டி மகிழ்வித்தது.

## 2

அந்தக் குழந்தைகளின் தந்தை பெரியண்ணன் நிலம் வாங்கிக் கொஞ்ச நாட்கள்கூட ஆகவில்லை. வெள்ளைப்பசுவுக்கு, யதேஷ்டமாக மேய்கிற அளவு புல் வரப்பில் இருந்தது. ஆனால், இந்த நிலம் வாங்குவதற்கு முன்னர் நெடுந்தூரம் பரவிய வயல் வெளி,

ஏரிவாய், கொல்லைப்புறம் முதலிய இடங்களில் மேய்ந்துதான் ஜீவித்தது. அதிலும் கோடைக்காலங்களில் வறட்சியே உருவெடுத்திருக்கும் பூமியில் பசும்புல் எங்கிருந்து கிடைக்கும்? ஜலாசயங்களில் ஒரு பொட்டுத் தண்ணீர் ஏது? அந்தமாதிரி சமயங்களில் வெள்ளையை வயிறு நிரம்ப மேய்த்துக் காப்பாற்றியது யார்? பச்சையும் பொன்னியுந்தான்! மழைக்காலத்தில்தான் கஷ்டம். ஏழையான பெரியண்ணன் வைக்கோலுக்கு எங்கே போவான்? பாவம்! நாந்தல் தினங்களில்கூட - வானம் கண்ணையே திறவாமல் மழை கொட்டும்போதுகூட - அக்குழந்தைகள்தாம் வெறும் உடலுடன் வாடைக்காற்றையும் பொருட்படுத்தாமல், பசுவின் மேல் உள்ள அந்தரங்கமான பற்றுதலினால், புல் செதுக்கிக் கொண்டுவந்து போடுவார்கள். வெள்ளையும் மதமதவென்று வளர்ந்தது. நிறையப் பாலும் தந்து, அந்தக் குழந்தைகளைப் போஷித்தது. பசு கன்று போட்ட ஒவ்வொரு தரமும் அவர்கள் வீட்டில் ஒரு சிறிய விவாதம் ஏற்படும்: கன்றுக்கு அதிகப் பால் விடலாமா, வேண்டாமா வென்றுதான். வீட்டுக்காரி, "கன்றுக்குக் கொஞ்சம் விட்டால் போதும். பாலைச் செம்புநிறையக் கறந்து கொள்ளுங்கள்" என்பாள். அவள் சம்சாரத்தில் இடிபட்டவளானதால் மிகுதியான பாலை விற்றுத்தான் குடித்தனத்தை நடத்தமுடியும் என்பதை அறிவாள். ஆனால் உலகம் இன்னதென்று அறியாத அந்தக் குழந்தைகள் கன்றுக்குப் பால் அதிகமாக விடவேண்டுமென்ற கக்ஷியில் இருப்பார்கள். சந்தர்ப்பம் அகப்பட்டால் கன்றை அவிழ்த்துப் பசுவிடம் விட்டுவிடத் தவறமாட்டார்கள். கன்று தன் தாயின் பெரிய

மடியில் தலையை முட்டிக்கொண்டே பாலைக் காம்பி லிருந்து ஊட்டும். குழந்தைகள் இருவரும் அதன் வாயி லிருந்து வரும் பால் நுரையைப் பார்க்க ஆவலுடன் நிற்பார்கள். பசுவும், தனக்கு எந்த விதத்திலும் உபகாரமாக இருக்கும் அந்தச் சிசுக்களை சிநேகத்துட னும், நன்றியுடனும் நோக்கும். அம்மூவரிடையே ஏற் பட்ட இந்தப் பாசம் அறுக்கமுடியாததாய் இருந்தது.

நிலம் வாங்கினதும், பெரியண்ணனின் அதிர்ஷ் டம் மந்தமாகிவிட்டது. அவன் எதிர்பார்த்தபடி அது பலனை அளிக்கவில்லை. வரிப் பணத்திற்கு வேண்டிய தானியங்கூடக் கைக்கு வரவில்லை. ஏழைபடும் சங்க டத்தைப்பற்றி வரிவசூலிப்பவருக்கு என்ன அக்கறை? அது என்றும்போல் கஜானுவில் குவிந்துகொண்டிருந் தது! மணியக்காரன் ஒருதரம் இரண்டுதரம் தவணை கொடுத்தும் பெரியண்ணனுல் சமாளிக்க முடியவில்லை. கடைசியில், தன் உடைமைகளை வாரிக்கொண்டுபோக வந்துவிடுவார்களேயென்று பயந்து, கண்ணுங் கருத்து மாகத் தான் வளர்த்துவந்த பசுவான வெள்ளையை விற்று வரிகட்டுவதென்ற முடிவிற்கு வந்தான்.

அவனுடைய குடும்பத்தில் ஓர் அங்கமாகப் பழகி வந்தது அந்தப் பசு. ஆனுல்,! அதை விற்ருல்தானே மானம் மிஞ்சும்? வேறு உபாயம் இல்லை. ஐயோ, அதற்குரிய மதிப்பை அறிந்து எவர் வாங்கிக்கொள்ளப் போகிருர்கள்?

பெரியண்ணன் மனைவியின் கண்களில் நீர் ஊறி யது. அவள் வெள்ளையைத் தடவிக்கொடுத்து விக்கி விக்கி அழத்தொடங்கினுள். அதைவிட்டுப் பிரிவது தன் வயிற்றில் பிறந்த குழந்தையைப் பறிகொடுப்பது போல் இருந்தது அவளுக்கு. அந்தக் காமதேனுவினுல்

அல்லவா அவளுடைய செல்வக் குழந்தைகள் நோய்நொடியின்றி வளர்கிறார்கள்? அந்த லக்ஷ்மி வீட்டை விட்டுப் போய்விடுகிறாளே! இனி ஒவ்வொன்றாக வறுமைப்பேய்கள் இந்த வீட்டைச் சுற்றிக்கொள்ளும் - இவ்வாறெல்லாம் அவள் மனம் எண்ணித் துடிதுடிக்கும். ஆனால்என்ன செய்வது? ஏழையின் கஷ்டங்களைக் கவனிக்க அரசாங்கத்தாரல்லவோ முன்வரவேண்டும்?

## 3

பசுமாட்டை விற்றுவிடப் போகிற சங்கதி குழந்தைகளுக்குமட்டும் தெரியாது. ஒரு சனிக்கிழமை, இருள் அகலுவதற்குள், பச்சையும் பொன்னியும் என்றும்போல் கவலையின்றித் துயிலும் சமயம் பார்த்துப் பெரியண்ணன் தன் அருமைப் பசுவை அடுத்த ஊர்ச் சந்தைக்கு ஓட்டிச்சென்றான். அவனுக்கு அந்தக் காரியத்தைச் செய்ய இஷ்டமே இல்லை. வெளியுலகின் நிர்ப்பந்தமே அவனை அப்படிச் செய்ய வற்புறுத்தியது

குழந்தைகள் எழுந்தவுடன் பசுவைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக்கொண்ட பிறகுதான் வேறு எந்த ஜோலியையும் கவனிப்பது வழக்கம். ஆனால், அன்று கொட்டிலில் பசுவையும் கன்றையும் காணமற் போகவே அவர்களுடையசிறிய இருதயங்கள் திடுக்கிட்டன. அழுது சிவந்த கண்களுடன், தாய் வந்து அவர்களுக்கு மெல்லச் சமாசாரத்தை எட்டவிட்டாள். பசுமாடு வேண்டா வெறுப்பாய்த்தான் சந்தைக்குப் போயிருக்கும் என்பது அவர்களுடைய எண்ணம். அந்தச் சிறு நம்பிக்கையே அவர்களுடைய மெல்லிய இதயங்களுக்கு அதிர்ச்சியைத் தராமல் சற்று ஆறுதலை அளித்தது.

பொழுது சாயும்போது, மனச் சோர்வுற்றுச் சரீரக்கிலேசத்துடனும் தூசுபடிந்த கோலத்துடனும் பெரியண்ணன் பசுவுடன் வீடுதிரும்பினான். தந்தையை விசாரிக்கக்கூடக் குழந்தைகளுக்குப் பயம். சும்மா இருந்துவிட்டனர். பசு திரும்பி வந்ததே, அதுவே அவர்களுக்குப் போதும்!

பசு விற்பனை ஆகவில்லை. பெரியண்ணன் சொன்ன விலைக்குச் சந்தையில் வாங்க எவரும் முன் வரவில்லை. துரதிர்ஷ்டம் பாருங்கள்! பசுவை விலைக் குக் கோரினால் வாங்குபவர், 'இன்னும் விலை இறங்கட் டுமே, கஷ்டம் மென்னியைப் பிடித்தால் குறைந்த விலைக்குத் தானாகவே கொடுத்துவிட்டுப் போகிறான்' என்று எண்ணமிடுகிறார்கள். இப்படி இருப்பதுதான் உலகத்தவர் இயல்பு!

பசு ஒருதரம் சந்தைக்குப் போனதைப் பார்த் ததுமே சிறுவர்களுக்குச் சந்தேகம் சந்தேகந்தான், தங்களை விட்டுப் பசு என்றைக்காவது போய்விடுமோ வென்று. அன்று முதற்கொண்டு கவலை அவர்கள் மனத்தில் குருத்துவிடத் தொடங்கியது. போதாக் குறைக்குத் தலையாரி, வீட்டெதிரே வரிக்காக இடும் கூச்சல் அவர்களுடைய பூப்போன்ற இதயங்களைக் கசக்கியது.

வெள்ளையை விற்றால்தான் வழி ஏற்படும்; எவர் முகத்திலும் ஈயாடவில்லை. பின்னால் தனக்கு ஏற்படப் போகும் நிலைமையை மிருக இனத்தைச் சேர்ந்த அந்த வெள்ளை எவ்வாறு அறியும்? என்றும்போல அது, தானுண்டு, தன் வழியுண்டு என்றவாறு நிச்சிந்தை யாக இருந்தது.

பெரியண்ணன் வெள்ளையைக் கொட்டிலிலிருந்து அவிழ்த்துக்கொண்டு சந்தைகூடும் ஊரை நோக்கி நடந்தான். கூடவே சென்றான் பச்சையும். போக இஷ்டப்படாமல் பசு தயங்கிற்று. அந்தச் சிசுக்களின் தாய், வீட்டு வாயிலில் நின்றபடி கண்களினின்று நீர் ததும்பப் பசுமாடு மறையும் வரை பார்த்துக்கொண் டிருந்தாள். "அம்மா, வெள்ளை! நீ போய்விட் டாயா?" என்று அவள் கூறும்போது என்ன உருக்க மாய் இருந்தது! ஆ! கஷ்டம். அதைச் சொல்ல முடியாது.

அவர்களைப் போஷித்த தாய் - வீட்டில் பால் பொங்கவைத்த அந்தக் கிருஹலக்ஷ்மி - என்றைக்குமே அந்த எளிய குடும்பத்தை விட்டுப் பிரிந்து போய் விட்டாள்.

"போய் வா, அம்மா, வெள்ளே!" என்று சொல் லும்போது பொன்னியின் நெஞ்சில் துக்கம் அடைத் தது. ஊரின் கோடியிலுள்ள தோப்பிற்கு மேல் அவள் போகவில்லை. கண்களுக்கு மறையுமட்டும் தன் செல் வப் பசுவைப் பார்த்துக்கொண்டே விழிகளில் நீர்த் திரையிட நின்றிருந்தாள். பசுமாடோ அவளை அடிக் கடி திரும்பிப் பார்த்தது. பசுவின் துயரம் வெளிக்கு எப்படித் தெரியும்?

## 4

பெரியண்ணனின் நல்லகாலமோ, கெட்ட காலமோ பசுவை ஒரு கசாப்புக்காரன் விலைக்கு வாங் கினான். பெரியண்ணன் தன் பசுவின் குணாதிசயங்களைப் பற்றி அவனுடன் சொல்லிக்கொண்டான். "வெள்ளை எவ்வளவு பால் கறக்கிறது, தெரியுமா? அதை நீ

நன்றாக உன் குழந்தைமாதிரிப் போஷிக்கவேண்டும். என் கஷ்டகாலத்தினால்தான் இதை நான் விற்று விடுகிறேன்'' என்று சொல்லும்போது கசாப்புக்காரனின் நினைவெல்லாம் பசுவின் உடல் எவ்வளவு வீசை மாமிசமாகுமென்று மதிப்பிடுவதில்தான் இருந்தது. அவனைச் சுட்டு எரித்து விடுவதுபோல் குழந்தையான பச்சை விழித்து, "நாங்கள் வளர்த்த அந்தப் பசுவை எங்களை விட்டு இப்படியா பிரிப்பது? சாமீ! உனக்குக் கண்ணில்லையா?'' என்று புலம்பினான். மாட்டின் கழுத்தைக் கட்டிக்கொண்டு முத்தமிட்டான். அதுவும் அவனை நக்கிக் கொடுத்தது. இரக்கமிராத அந்தக் கசாப்புக்காரன், திரும்பிவர ஏங்கும் அந்தப் பசு, சோகத்தினால் வாடும் அச்சிறுவன், இவர்கள் எல்லோரும் சேர்ந்திருக்கும் அந்தக் காட்சி கல் மனத்தையும் கரைத்திருக்கும். தந்தையும் மகனும் பசுவைக் கசாப்புக்காரனுக்கு விற்றுவிட்டு வீட்டை நோக்கி நடந்தனர். பசு அவர்களை விட்டுப் பிரிய இஷ்டப்படாமல், கசாப்புக்காரனுடைய கடுமையான பிடியில் உறுமுவது கொஞ்ச தூரம் வரை கேட்டது. கடைசியாக ஒரு தரம் பச்சை அந்தப் பசுவைத் தொலைவிலிருந்தே திரும்பிப்பார்த்து, "போய்வா! என் அம்மா, வெள்ளையம்மா!'' என்றான். வெகு தூரத்திலிருந்து வரும் வெள்ளையின் கழுத்து மணியின் அரவம், "போய் வருகிறேன், குழந்தைகளே!'' என்று சொல்வதுபோல் இருந்தது.

## 5

பச்சையும் பொன்னியும் தங்கள் வேதனைக்கு ஒரு விமோசனமும் ஏற்படாததைக் கண்டு ஒடுங்கிய மனத்துடன், குதூகலமின்றி அந்தப் பழைய இருப்புப்

பாதைக்குப் பக்கத்திலுள்ள களத்தை அடைந்து புல் தரையில் சாய்ந்தனர். தங்கள் செல்வப் பசுவை நினைக்கும் போதெல்லாம் அவர்களுடைய துயரம் எல்லையைக் கடந்தது. வெளிக்காட்சி எதனுலும், வேடிக்கை விளையாட்டு எதனுலும் அவர்களுக்கு ஆறுதல் ஏற்படவில்லை. வெறுப்புடன் அவர்கள் அந்தத் தந்திக் கம்பத்தை நோக்கினர். இதுவன்றோ கொடூரமான அந்த வெளியுலகின் ஓர் அம்சம்; தங்களுடைய உயிரினும் இனிய பசுவைக் களவாடிய குரூர உலகின் சின்னம்! வெள்ளையுடன் அவர்கள் உலாவிய இடமெல்லாம் இப்போது வெறிச்சென்றிருந்தன. அந்தப் பசும் புல் தரையும் அவர்கள் கண்களுக்குப் பாலையாகத் திரிந்தது கணப்பட்டது.

தூரத்தில் கரும்புகைச் சுருள் தென்பட்டது. சிறிது நேரத்திற்கெல்லாம் இருப்புப் பாதையின்மீது கடகடவென்று ஒரு சாமான் வண்டி சென்றது. பெரிய பெட்டிகளின் ஜன்னல் மூலமாகச் சில மாடுகள் தலையை நீட்டுவது தெரிந்தது. உலகம் எவ்வளவு கொடூரம் நிறைந்த இடமென்பது இன்று அவர்களுக்கு யாரும் சொல்லாமலே வெட்ட வெளிச்சமாகி விட்டது. பச்சையும் பொன்னியும் ஓடும் அந்த வண்டித்தொடரை நோக்கிக் கைகளை யோங்கிச் சபித்தனர்.

"போய் வா, அம்மா, வெள்ளையம்மா!" என்று கடைசியாகத் தங்கள் வெள்ளையிடமிருந்து விடை பெற்றுக்கொண்டு, அக்குழந்தைகள் வெளியுலகின் ஒரு வடிவுமான ரெயில் வண்டியை வெறித்துப் பார்த்தார்கள். உலகத்தின்மீது அவர்களுடைய மனம் பகை கொண்டது. ரெயில் வண்டி மறைந்ததும்,

அவர்கள் மீண்டும் அத்திசையே நோக்கி, "போய் வா, என் அம்மா!" என்று கூறிக் கண் கலங்கினர். அவர்களுக்கும், ரெயில்வண்டித் தொடருக்கும் இடையில் நின்ற கம்பத்தின் மேலிருந்த தந்தியொன்று, தனது இரகசிய பாஷையில் வெள்ளையின் கதியை நிர்ணயிக்கும் செய்தியை யாருக்கோ எடுத்துச் சென்று கொண்டிருந்தது. அது அவர்களுக்கு எப்படித் தெரியும்!




# சட்டப்பரீக்ஷை

# சட்டப் பரீக்ஷை

டங் —

பெரிய கடிகாரத்தில் மணி ஒன்பதரை அடித்தது. இன்னும் ஒன்றரை மணி நேரந்தான். அதற்கு அப்புறம் சேஷகிரிக்கு விடுதலை. அவனுடைய தந்தை சிவராமையரும் விளக்கை அணைத்துவிட்டுத் தூங்கிவிடுவார். சேஷுவின் கையிலிருக்கும் 'பீனல் கோட்' என்னும் சட்டப் புத்தகம் அடிக்கடி நழுவி, தொப் தொப்பென்று கீழே விழுந்துகொண்டிருந்தது. காமுவை, அதாவது அவனுடைய மனைவி காமாக்ஷியைச் சந்திக்க அவன் மனம் அலை பாய்ந்தது. திருட்டுத்தனமாக மாடிக்குச் செல்லும்போது அப்பா பார்த்துவிட்டால் என்ன பண்ணுவது? தன் மகனுடைய வேலைத் திறமெல்லாம் சிவராமையருக்கு நன்ருகத் தெரியும்.

வெளியே நிலா பூச்சொரிந்து கொண்டிருந்தது. மார்கழி மாதமாகையால் நல்ல பனிகூட இருந்தது மனிதர் நடமாட்டமோ இல்லை; சந்தடியோ இல்லை. அடுத்த வீதியில் ராமசுப்பையரகத்தில் காலக்ஷேபம் நடந்துகொண்டிருந்தது. குஞ்சு பாகவதருடைய குரல் அந்த இரவு வேளையில் ஊளையிடுவது போலவே சேஷுவுக்குப் பட்டது. அவனுடைய தாய் சுப்புலக்ஷ்மி கொஞ்சம் பக்தி சிரத்தையுள்ளவள். ஹரிகதையென்ருல் ரொம்பப் பிரியம். அன்று வீட்டுக் காரியங்களைச் சீக்கிரமாகவே முடித்துக்கொண்டு அவள் பாகவதர் கதையைக் கேட்கப் போயிருந்தாள்.

சேஷுவுக்குப் படிப்பதில் ஊக்கம் குன்றிக் கொண்டே வந்தது. பனி நாள் வரவே, அவனுடைய தகப்பனாருக்குக் காசரோகம் வந்துவிட்டது. அவர் இருமுவது அடிக்கடி கேட்டது. முற்றத்திலிருந்து மாடியை நோக்கிப் பார்த்தான். அவருடைய அறையில் விளக்கு எரிவதாகத் தெரியவில்லை. அவனுக்குத் தைரியம் பிறந்தது. மறு நிமிஷமே, அவர் தூங்காமல் விழித்துக்கொண்டிருந்தால் என்ன செய்வதென்ற அவநம்பிக்கையும் உண்டாயிற்று. எதற்கும் துணிந்தவனாய் மாடிப்படியேறி, பஞ்சின்மேல் நடப்பது போல் அடிமேல் அடிவைத்துத் தன் சயன அறையை நோக்கிச் சென்றான். பயமில்லை ! அப்பாவின் அறையும் மூடப்பட்டேயிருந்தது. ஐயோ......இதென்ன ! அவன் எண்ணியதற்கு மாறாக அந்த அறைக்கதவு திறந்து கொள்கிறதே ! சிவராமையருடைய நெடிய உருவம் அந்த இருட்டில் மெல்ல வந்து அவன் எதிரே நின்றது.

“சேஷு...!”

“ஒன்றுமில்லை, அப்பா. ‘ஹிண்டு லா’வை எடுத்துக்கொண்டு போகலாமென்றுதான் வந்தேன்” என்றான் சேஷகிரி. அவன் கையும் மெய்யுமாக அகப்பட்டுக்கொண்ட திருடனைப்போல் மருள மருள விழித்தான்.

“தெரியுமடா உன் வேலையெல்லாம். அந்தப் புஸ்தகம் கீழே பீரோவிலேன்னா இருக்கு? மாடியில் வந்து முளைச்சிருக்கோ? போடா. கீழே போய்ப் படி. பரீக்ஷைக்கு இன்னும் கொஞ்ச நாள்கூட இல்லை. போன தடவைதான் ‘கோட்’ அடிச்சே.

பிள்ளையாண்டான் நாலு பேரோடு சேர்ந்து படிக்கட்டுமென்று ஹாஸ்டலில் சேர்த்தேன். அதன் பலனைப் பார்த்தாச்சு. நாள் தவருமல் சினிமாவுக்குப் போக ஆரம்பிச்சே - பரீக்ஷையிலும் கழிச்சே. தலைப் பொறியென்று படிச்சுப் பாஸ் பண்ணிவிட்டதும் உன் பெண்டாட்டியோடு எத்தனை நாள் வேண்டுமானுலும் இரேன். யார் தடுத்தார்கள்?......படிடா போய்!" என்று இதமாகவும் கடுமையாகவும் சொன்னுர். சேஷுவின் முகத்தில் ஏற்பட்ட விகாரம், அப்போது இருட்டானபடியால் புலப்படவில்லை. பதிலே சொல்லாமல் அந்த இடத்தை விட்டு நழுவிக் கீழே போய்விட்டான்.

*       *       *

பன்னீர் மரத்து இலைகளின்மேல் சிதறிக்கொண்டிருந்தது வெண்ணிலா. சேஷுவின் படுக்கையறையிலும் அசையும் இலைகளின் நிழலுடன் நிலா படிந்திருந்தது. இந்தமாதிரி ஒரு ரம்மியமான கார் காலத்துச் சந்திரிகையில் எவனுக்குத்தான் படிப்பின் மேல், அதிலும் சாரமற்ற ஒரு சட்டப் புத்தகத்தை வாசிப்பதில் புத்தி ஓடும்? அவனுக்குக் கீழே இருப்புக்கொள்ளவில்லை. வருவது வரட்டுமென்று, தைரியமாகவே மாடிக்குவந்து மெதுவாகக் கதவைத் திறந்துகொண்டு தன் அறையினுள் நுழைந்தான். அங்கே தோன்றிய ஒரு காட்சி அவனை இன்னும் ஆத்திரத்திற்கு ஆளாக்கிவிட்டது. பால்போல் சந்திர கிரணங்கள் பொழியும் இந்த இராத்திரியில் இப்படிக்கூடவா ஒருத்தி தேகம் தெரியாமல் தூங்குவாள்? சே......

காமு அயர்ந்து நித்திரை செய்துகொண்டிருந்தாள். சேஷுவின் தாய், தன் பிள்ளை படித்துவிட்டு

மாடிக்கு வரும்வரை, நாட்டுப் பெண்ணுேடேயே பேசிக்கொண்டிருப்பது வழக்கம். சிறியவளான தன் நாட்டுப்பெண்ணைத் தனியாக விட்டால் பயப்படு வாளோ வென்பது அவள் எண்ணம். ஆனல் இன்று மாமியாருக்குப் பாகவத காலக்ஷேபமே அறையில் நாட்டுப் பெண்ணைவிட முக்கியமா யிருந்தது. காமு தனி யாகத்தான் இருக்கவேண்டியதாயிற்று. மாமியார் வருவார், வருவார் என்று பார்த்தாள். எத்தனை நாழிகை விழித்துக்கொண்டிருப்பது? ஒரு மெல்லிய நீலவர்ணக் கம்பளியை உடம்பில் போர்த்துக் கொண்டு, இரு அழகிய கண்ணிதழ்கள் மூடக் காமு கண்ணயர்ந்தாள். ஒரு சிறிய விளக்கு மங்கலாக எரிந்துகொண்டிருந்தது. சேஷகிரி அறையில் நுழைந்ததும், காமு படுத்திருக்கும் கட்டிலின் சமீப மாக வந்து, அவள் முகத்தோடு தன் முகத்தை வைத்து மிகவும் மெதுவான குரலில், "காமூ...காமாக்ஷி" என்று எழுப்பினுன்.

குறைத்தூக்கத்தில் யாராவது தன்னை எழுப்பிவிட்டால் காமு அறைப் போட்டுக்கொள்வது வழக்கம். சேஷு எழுப்பும்போது முதலில் அவள் "ஊம்" என்று முனகி, பக்கத்திலிருக்கும் நீண்ட தலையணை யைக் கட்டிக்கொண்டு மீண்டும் நித்திரையில் ஆழ்ந் தாள். சேஷகிரி அவள் மேலிருந்து போர்வையை எடுத்ததுதான் தாமதம்; காமு வாய் உளறிக்கொண்டு, "யார்...யாரு...ஐயோ திருடன்..." என்று கூவ ஆரம்பித்தாள்.

அதே சமயம் பக்கத்து அறையிலிருந்து சேஷுவின் தந்தை, "என்னடி அம்மா,......என்ன?" என்று திகிலடைந்து விசாரித்தார்.

காரியம் கெட்டுவிட்டது. அவர் எழுந்து வந்து விட்டார். சேஷகிரியின் நிலைமை எந்த மாதிரி இருந்திருக்குமென்று நீங்களே ஊகித்துக் கொள்ளுங்கள். 'பையன் அடக்க ஒடுக்கமாகக் கீழே படித்துக் கொண்டிருக்கிறுன்' என்றல்லவோ அவர் நினைத்துக் கொண்டிருந்தார்! "அம்மா, காமு! இதோ நான் வந்துவிட்டேன். பயப்படாதே..........." என்று சொல்லிக்கொண்டே அவர் வரும் சப்தம் கேட்டது.

காமு கண்களைப் பிசைந்துகொண்டு எழுந்து பார்த்தாள். எதிரே நிற்பது திருடனல்ல; தன் புருஷன் சேஷகிரிதானென்று அறிந்து கொண்டாள். அவளுடைய தூக்கம் மாயமாய்ப் போய்விட்டது. சேஷு கிலியினுல் முகம் வெளுத்து, இந்த இக்கட்டிலிருந்து தப்பித்துக்கொள்ள வழிதேடிக்கொண்டிருந்தான். அறையின் சமீபமாக அவர் வந்துவிட்டார். என்ன செய்வதென்று திண்டாடினுன். சேஷு. காமுவின் இரு கைகளையும் பற்றிக்கொண்டு, "காமு! என்னைக் காப்பாற்று. ஏதோ கெட்ட கனுக் கண்டேனென்று அப்பாவுக்குச் சமாதானம் சொல்லிவிடு. அதோ வந்துவிட்டார். ஒரு பூனை மேலே விழுந்து ஜன்னல் வழியாகப் போயிற்றென்ருவது சொல்லிவிடேன்" என்று மன்ருடினுன்.

காமு பதில் சொல்ல வாயெடுத்தாள். அதற்குள் மாமனுரின் உருவம் தெரியவே சட்டென்று நிறுத்திக் கொண்டாள். கட்டிலின் ஒரு புறமாகப் பெரிய தலையணையின் மறைவில் கண் சிமிட்டும் நேரத்திற்குள், சேஷு சுருட்டிப் படுத்து, உடம்பு வெளிக்குத் தெரியாதவண்ணம் காமுவின் நீலப் போர்வையினுல் தன்னை மூடிக்கொண்டுவிட்டான்.

சிவராமையர் உள்ளே வந்துவிட்டார்.

“என்னடி அம்மா! எதைப் பார்த்துப் பயந்து கொடாய்?” என்று கேட்டார் காமுவை. அவளும் இதற்குள் சமாளித்துக்கொண்டு விட்டாள். மாமஞரோடு அவள் சகஜமாய்ப் பழகியிருப்பதனுல், கூச்சப்படாமலே, “ஒன்றுமில்லே, அப்பா! கெட்ட கனுக் கண்டேன், திருடன் வந்துவிட்ட மாதிரியாக. அதோடு ஒரு பூனே என்மேல் விழுந்து ஜன்னல் பக்கமாக ஓடிற்று. அதனுல்தான் பயந்துகொண்டேன்” என்ருள், சேஷகிரி சொல்லிக் கொடுத்தபடியே.

“அந்தச் சனியன் பிடிச்சவளுக்கு இந்தக் காலக்ஷேபம் கேட்கப் போகாமற்போனுல் வைகுண்டம் கிட்டாதோ? ஏதடா, அறியாதது ஒண்ணு இருக்கே வீட்டிலே, பையன் படித்துவிட்டு வரும் வரைக்கும் தனியாக இருக்குமா என்று எண்ணுகிருளோ? இப்படிக் கதவை ‘டாராய்’த் திறந்துவிட்டுப் போனுல் திருடன் கூடத்தான் ஒரு நாள் வந்து குதிப்பான். சுத்த வியவஸ்தை கெட்டவளாய் இருக்கிருளே!” என்று தன் ஸம்ஸாரத்தை ஒரு தரம் வாயார வாழ்த்திஞர்.

“அப்பா, எனக்கு இப்போது ஒன்றும் பயமாயில்லே. நீங்கள் தூக்கத்தைக் கெடுத்துக்கொள்ள வேண்டாம். போய்ப் படுத்துக்கொள்ளுங்கள். வீணுக உங்களே எழுப்பிவிட்டேன். நான் கதவை மூடிக்கொண்டு பத்திரமாகப் படுத்துக்கொள்கிறேன்” என்ருள் காமு.

“போகிறேன். கண்களேத் துடைத்துக்கொண்டு, ஜலத்தை யெடுத்து வாயைக் கொப்புளித்துவிட்டுப்

படுத்துக்கொள். அம்மா! நான் போகிறேன். பத்திரம்'' என்று சொல்லிவிட்டு அவர் அகன்றார்.

அவர் மறைந்தாரோ இல்லையோ சேஷகிரி கம்பளிப் போர்வையை வீசி எறிந்துவிட்டு எழுந்து உட்கார்ந்தான். தலையணையின் மறைவில் இத்தனை நாழிகை பதுங்கிக் கிடந்ததால் அவனுக்கு மூச்சுத் திணறியது. தலைமயிர் கலைந்து முகம் சிவந்து விளங்கியது. "எல்லாம் உன்னாலே வருகிறதுதான்'' என்று காமுவைக் கடிந்துகொண்டான்.

கண்கள் வியப்பினால் அகல, காமு, "என்னால் என்ன?'' என்றாள்.

"உன்னாலேதான். நீ ஏன் அப்படிக் கூச்சலிட்டாய்? என்னையன்றி வேறு யார் வந்து உன்னைத் தொடுவார்கள்?''

"வேடிக்கையா யிருக்கிறதே. நீங்கள் இந்த மாதிரி வருவீர்களென்று எனக்கு எப்படித் தெரியும்? அயர்ந்து தூங்கும்போது தொட்டால் யார்தான் அலறிப் போட்டுக்கொள்ளமாட்டார்கள்?''

சேஷு, ஆத்திரம் பொங்க, "ஏன் தூங்கினாய்! அதுதான் உன் தப்பு'' என்றான்.

"இப்படித் திருட்டுத்தனமாகப் போர்வையை இழுத்துவிடுவது தப்பே இல்லையாக்கும்?''

"தப்புத்தான், காமு. உன் தூக்கத்தை நான் கலைத்தது தப்புத்தான். மன்னித்துக்கொள். அதனால் தான் இந்தப் பாடு படுகிறேனே. சே!'' என்று கூறி, காமுவை ஒரு விதமாக நோக்கிவிட்டு மனம் கசந்தவனாய் அறையைவிட்டுச் சென்றான்.

ஆனால் உடனே அவன் திரும்பவேண்டியதா யிற்று. சிவராமையர் தம் அறையில் விளக்கைப் பெரி தாக ஏற்றிவைத்துக்கொண்டு தலையில் கம்பளிக் குல்லா போட்டுக்கொண்டிருந்தார். அந்த வழியாகப் போனால் கட்டாயம் சேஷகிரி அகப்பட்டுக்கொள் வான்.

பெருமூச்செறிந்து, பரிதாபமான குரலில் சேஷு திரும்பத் தன் அறைக்கே வந்து, "உன்னால்தானே இதெல்லாம்? அப்பாவைக் கூப்பிடாதிருந்தால்?" என்றான் காமுவைப் பார்த்து.

காமாக்ஷி தன் புருஷன்மீது சற்றும் இரக்கம் கொள்ளவில்லை. அவனுடைய சங்கடத்தைப் பார்த்து அவளுக்குச் சிரிப்பே ஓயாமல் வந்தது. தலையை கோணலாக வைத்துக்கொண்டு, "என் தூக்கத்தைக் கெடுத்ததுமல்லாமல் இந்தக் குளிரில் வெடவெட வென்று உடல் நடுங்கும்படி போர்வையையும் எடுத்துக்கொண்டீர்கள்" என்றாள்.

"இந்த வீட்டில் வேறு போர்வையே இல்லாது போய் உன் பிறந்தகத்தவர்கள் கொடுத்த போர் வைக்கு ஆசைப்பட்டு எடுத்துக்கொண்டேனா?" அதற்குமேல் சேஷகிரிக்குப் பேசச் சந்தர்ப்பம் கிட்ட வில்லை. மறுபடியும் அந்தப் பயங்கர மனுஷ்யர் அங்கே வரும் ஓசை கேட்டது.

"ஐயோ! எத்தனை நாழி நான் மூச்சுத் திணறிச் சாகவேண்டுமோ இந்தத் தலையணையின் அடியில்......! காமு! அவரை எப்படியாவது போய் விடும்படி செய்யேன்" என்று மெதுவாகவும் அழ மாட்டாக் குறையுடனும் காமுவை வேண்டிக்கொண் டான் சேஷு.

மாமனார் அறையினுள் வந்ததும், காமாக்ஷி இன்னும் தூங்காமல் உட்கார்ந்திருப்பதைப் பார்த்து. "ஏண்டி அம்மா! இன்னும் தூங்கவில்லை? பயமா யிருக்கிறதா என்ன?" என்று கேட்டார்.

"பயமென்ன? நீங்கள் எனக்காகத் தூக்கத் தைக் கெடுத்துக்கொள்ளவேண்டாம், அப்பா!" என்றாள் காமு.

"இருக்கட்டும், அம்மா! அந்த மூளை அற்றவள் வரும்வரை நான் இங்கேயே இருக்கிறேன்" என்று சொல்லிக்கொண்டே அவர் ஒரு நாற்காலியில் உட்கார்ந்துவிட்டார்.

காமு கட்டிலின் ஓரமாக ஒடுங்கி வீற்றிருந்தாள். குளிரினால் அவளுடைய தேகம் உதறிற்று.

"அம்மா! பக்கத்திலுள்ள அந்தத் தலையணையை ஒதுக்கிவிட்டுப் படுத்துக்கொள்ளேன். உன் போர்வை எங்கே? எடுத்துப் போர்த்துக்கொள்" என்றார் ஆதரவுடன் சிவராமையர்.

"ரொம்பப் புழுக்கமா யிருக்கு, அப்பா...... போர்வை வேண்டாம்" என்றாள் காமு.

"இந்த நாளிலா புழுக்கம்? இதோ தலையே பிடித்து கால்வரை நான் கம்பளியைச் சுற்றிக்கொண் டிருக்கிறேன். எனக்கு வெட வெடவென்று நடுக்கு கிறது. அப்புறம் சீதளம் கண்டு ஜுரம் வந்துவிடும். போர்வையை எடுத்துத் தரட்டுமா?" என்று அதை எடுக்க எழுந்தார்.

குட்டு வெளியாகிவிடப் போகிறதே யென்று பயந்தவளாய், "வேண்டாம், அப்பா" என்று கூறிக் காமு சட்டென்று தன் மாமனாரின் பக்கத்தில் வந்து

உட்கார்ந்துகொண்டாள்.' எனக்குக் குளிரவில்லை—கொஞ்சம் பயத்தினால்தான் நடுங்குகிறது, வேறொன்றுமில்லை. அந்தப் பூனை......அப்பா! நினைத்தால்கூடப் பயமாயிருக்கிறது. எரிகொள்ளியாட்டம் எவ்வளவு பெரிய கண் அதற்கு?" என்று சொல்லிச் சாமர்த்தியமாக நடந்துகொண்டாள். ஆனால் அந்தக் கிழம் கொஞ்சத்தில் நகர்வதாகக் காணோம். நீலக் கம்பளியின் மறைவில் புகுந்துகொண்டிருந்த ஓர் ஆத்மாவுக்கு இந்தக் காமுவை அடிக்கவேண்டுமென்று ஆக்கிரோஷம் வந்தது. அவரை அப்புறப்படுத்தாமல் பேச்சுக்கு இடம் கொடுத்து நிற்க வைக்கிறாளே! இங்கே ஒரு பிராணன் இப்படித் தவிக்கிறதே!

## 2

இதற்குள் காலக்ஷேபத்திற்குப் போயிருந்த சுப்புலக்ஷ்மியும் திரும்பி வந்துவிட்டாள். சிவராமையர் தம் ஸம்ஸாரத்தைப் பார்த்ததுமே ஏளனத்துடன், "ஸத்கதை யெல்லாம் கேட்டாச்சோ, இல்லையோ? இன்னும் எத்தனை நாளுக்குள் வைகுண்ட யாத்திரை கிட்டப் போகிறது?" என்றார்.

"நான் வைகுண்டம் போகிறேன், போகவில்லை. உங்களுக்கு என்ன அவ்வளவு ஏளனம் என்னைப் பார்த்தால்?" என்றாள் சுப்புலக்ஷ்மி.

"இல்லை. வீட்டிலே அறியாதது ஒண்ணு தனியாயிருக்கிறதே என்று உனக்குத் தோன்றவில்லையே. அவளை யார் பார்த்துக் கொள்வது?" என்றார் சிவராமையர்.

சுப்புலக்ஷ்மி சிரித்துக்கொண்டே தன் நாட்டுப் பெண்ணைப் பார்த்தாள். "ஆத்திலே பெரிய ஆளாக

நீங்கள் இருக்கிறீர்கள். பையன் இருக்கிறான். கட்டிக் காக்கச் சின்னக் குழந்தையா என்ன அவள்?" என்றாள்.

சிவராமையர் புருவத்தை நெரித்தவாறு, "உன் பிள்ளையை இந்த வேலைக்குப் போட்டுவிட்டால் அவன் உருப்பட்டாப் போலத்தான். பேஷ்!" என்றார்.

"அந்த நாளில்தான் ஒரு கதைக்கோ காலக்ஷேபத்திற்கோ என்னைப் போக விடவில்லை. இத்தனை வயசான பிறகு, என் இஷ்டப்படி போவது உங்களுக்குப் பிடிக்கவில்லையா, என்ன? போதும் அடங்கினதெல்லாம்! நீங்கள் ஏன் கண் விழிக்கிறீர்கள்? சேஷு வர இன்னும் நாழி ஆகும் போலிருக்கு, நான் காமுவைப் பார்த்துக்கொள்கிறேன். போங்கோ" என்றாள் சுப்புலக்ஷ்மி.

சிவராமையர் படுத்துக்கொள்ளத் தம் அறைக்குப் போய்விட்டார். சுப்புலக்ஷ்மியின் பார்வை கட்டிலின் ஓரமாக விழுந்தது. நீலப் போர்வையின் கீழே தலையணை அசைவது அவளுக்குத் தெரியவில்லை. "இது என்னடீ, படுக்கையைப் பாதி மறைத்துக் கொண்டிருக்கே? அதை ஒதுக்கிவிட்டுப் படுத்துக் கொள்ளேன். எத்தனை நாழி கண் விழிப்பே?" என்றாள்.

காமு சட்டென்று, "படுத்துக்கொண்டால் தூக்கம் வரவில்லை, அம்மா! அந்தத் தலையணை பக்கத்தில் இருப்பதனால் கஷ்டமொன்றுமில்லை" என்றாள்.

சுப்புலக்ஷ்மி அவளுடைய பேச்சைக் கேளாமல் "இருக்கட்டும். அதை ஓரமாகத் தள்ளிவிடுகிறேன்.

தாராளமாகப் படுத்துக்கோ நீ" என்று சொல்லும் போது அந்தத் தலையணை தானாகவே எழுந்து நின்றது. சுப்புலக்ஷ்மி மோவாய்க்கட்டையில் விரலை வைத்த படி ஸ்தம்பித்து, "சேஷு......நீயாடா, தடியா?" என்றாள்.

அவன் கண்களிலிருந்து நீர் வரும் சமயம். ஆனால் அது எப்படியோ ஆவியாகப் போய்விட்டது. மின்சாரம் பட்டவன்போல் துள்ளி எழுந்தான் சேஷகிரி. அட ராமா! அவனுக்கு வந்த ஆபத்து அதோடு போயிருக்கக் கூடாதா? அந்தப் பாழும் பிராமணன் 'மப்ளரை' அந்த அறையில் மறந்து வைத்துவிட வேண்டுமா? அதை எடுத்து வர மீண்டும் அங்கு வந்தார். தம் பிள்ளையைப் பார்த்ததும் அவருடைய முகம் சிவந்தது. "இதற்குள்ளா படித்து முடிச்சுவிட்டே? மணி என்னடா ஆச்சு?" என்று சேஷுவைக் கேட்டார்.

தொண்டைக்குள்ளே உருண்டையாக ஒன்று வந்து அடைக்க, "ஏன்?...... பதினொண்ணு" என்றான் சேஷு.

"இல்லவே இல்லை. இன்னும் முப்பது நிமிஷத்துக்கு மேல் இருக்கிறது பதினொண்ணு அடிக்க. சீ போடா. கீழே போய்ப் படி" என்றார்.

இந்த மாதிரி தலையிறக்கமான சந்தர்ப்பங்களில் சேஷுவின் தாயார், அவனுக்காகப் பரிந்து பேசுவது வழக்கம். அது போலவே இன்றும் அவள், "அவன் கீழே போய்ப் படிக்கவேண்டாம். ஒரே கொசு உபத்திரவம் வாசல் பக்கத்து அறையில். குழந்தைக்கு மலேரியா, கிலேரியா வந்தால் அப்புறம் யார் தவிக்

கிறது? எங்கே படித்தால் என்ன? பாடம் ஒண்ணு தானே?" என்றாள்.

தன் தாயை நன்றியுடன் நோக்கினான் சேஷகிரி.

"ஆனால் என் அறையில் போய்ப் படிடா........ இன்னிக்கு எப்படியாவது 'சீடிங் சாப்டரை' (Cheating Chapter) முடித்துவிட வேண்டும்......தெரிகிறதா?" என்றார் சிவராமையர் தம் மகனைப் பார்த்து.

'சரி'! என்றான் சேஷு, குனிந்த தலை நிமிராமலே தாய்க்குத் தன் பிள்ளை படும் சங்கடம் புரிந்துவிட்டது. என்ன இருந்தாலும் பெண் ஜன்மங்களுக்கு ஊக்கம் அதிகம். சுப்புலக்ஷ்மி தன் புருஷரைப் பார்த்து, "அவன் அங்கு வந்துவிட்டால் நான் தூங்க வேண்டாம் போலிருக்கு! விளக்கு இருந்தாலே நான் கண்ணை மூடமாட்டேன். அவன் இங்கேயே படிக்கட்டும்" என்றாள்.

"இதென்னடா இன்னிக்குப் புதுத் தினுசா இருக்கே!" என்றார் ஐயரவர்கள்.

கொட்டாவி விட்டுக்கொண்டே, "போதும்! உடம்பெல்லாம் குடைச்சல் எடுத்துத் தூக்கமாக வருகிறது எனக்கு" என்றாள் சுப்புலக்ஷ்மி.

"சரி, நீ காமுவை அந்த அறைக்கு அழைத்துக் கொண்டு போ. சேஷு இங்கேயே படிக்கட்டும்" என்று வேறொரு வழியைக் கண்டுபிடித்தார் சிவராமையர். அதற்கும் சுப்புலக்ஷ்மி இசையவில்லை. "உங்களோடு நான் ரொம்ப சமாசாரம் பேசவேண்டியிருக்கு. காமு கூட இருந்தால் பேசமுடியாது" என்று சொல்லி உடனே தன் பிள்ளையைப் பார்த்து, "அப்பா, சேஷு! நீ இன்னிக்கு இங்கேயே படி-

காமுவுக்கும் துணையாக இருக்கும். இதனால் யாருக்கும் கஷ்டமே இல்லை. அவள் பாட்டிற்குப் படுத்துக் கொண்டு தூங்குவாள்" என்றாள்.

சேஷுவைவிட வேறு யாருக்குத் தாயிடம் அன்பு இருக்கப் போகிறது? அவள் சொற்படியே நடக்கச் சம்மதித்தான். சிவராமையர் தம் சம்சாரத்தை மீறி ஒன்றும் சொல்ல முடியாதவராய், "உம், நன்றாய்ப் படிடா. அதுதான் என்னால் சொல்ல முடியும். உன் நன்மைக்குத்தான் சொல்லுகிறேன்" என்றார்.

"அப்பா! நீங்கள் வேண்டுமானால் பாருங்களேன், இந்தத் தடவை பரீக்ஷையில் -" என்றான் சேஷு.

"எதற்கும் உரக்க வாசி, என் காதுக்கு எட்டும்படி. அப்படிப் படித்தால்தான் மூளையில் ஏறும். இன்றைக்குள் எப்படியாவது, 'சீடிங்' கை முடித்து விடுவதைப் பார். நாளைக்கு அதிலிருந்து சில கேள்விகளைக் கேட்பேன்" என்றார்.

## 3

தாயும் தந்தையும் சென்றதும், சேஷகிரி கதவைத் தாழிட்டுக் கொண்டான். காமு இதற்குள் கட்டிலில் படுத்துக் கண்களை மூடிக்கொண்டிருந்தாள்.

"காமு!" என்று அவள் சமீபமாக வந்து கூப்பிட்டான் சேஷு.

அதற்குப் பதிலே வரவில்லை.

சேஷு ஆரம்பித்து விட்டான்: "கண்ணே! இதோ என்னைப் பார். வெளியிலே நிலா என்ன அழகாய்க் காய்கிறது! கண்ணைத் திறக்கமாட்டாயா?

என்மேல் ஏதாவது கோபமா? ஏன் பேச மாட்டே னென்கிறாய்?"

நாணத்தினால் கண் புதைத்து, "பட்டாட்டமாகத் தான் காய்கிறது, நிலா. உங்கள் பேரில் எனக்கு என்ன கோபம்?" என்றாள் காமாக்ஷி.

"அப்படியா?"

"இன்னிக்கு ராத்திரி அப்படித்தான்."

"கண்ணைத் திறந்துதான் பாரேன். ஜன்னல் கதவுகளை நன்றாகத் திறந்து விடட்டுமா? உனக்குக் குளிரெடுத்தால் வேண்டாம்."

காமு பதிலே பேசவில்லை. கவிழ்ந்தபடி தன்னையே நோக்கும் சேஷுவை நேராகப் பார்க்க லஜ்ஜை கொண்டாள். அவனை ஓரக்கண்ணால் நோக்கும்போது அவளுக்குச் சிரிப்புவந்துவிட்டது. "அந்தப் பக்கத்தை மட்டும் மூடிவிட்டால்தான் நல்லது" என்றாள் உதடு அசையாமலே.

"இப்போ எங்கே போச்சு உன் தூக்கம்? மாயக் காரி! என்னைத் தவிக்கவிட்டு வேடிக்கையல்லவா பார்த்தாய்?" என்றான் சேஷு.

"நீங்கள் ரொம்ப நல்லவராக்கும்? நான் தூங் கிக் கொண்டிருந்தால், உங்களுக்கு ஏன் அவ்வளவு கோபம் வரவேண்டும்? நீங்கள்தான் புத்தகமும் கையுமாக இருக்கவேண்டும். உங்களுக்குத் தூக்கம் வராமற்போனால் எனக்கும் வரக்கூடாதா, என்ன?" என்றாள் காமு.

"அசடே! இந்த மாதிரி ராத்திரியில் யாருக்குத் தான் தூக்கம் பிடிக்கும்?" என்றான் சேஷு.

"இதெல்லாம் உங்கள் 'பீனல் கோடி'ல் எழுதி யிருக்கா என்ன?" என்ருள் காமு.

"ஆமாம்; இந்த மாதிரி இரவுகளில் தூங்கிஞல் என்ன தண்டனேயோ, அதுகூடக் கண்டிருக்கிறது அந்தப் புத்தகத்தில். என்னவென்று சொல்லட் டுமா?" என்ருன்.

காமு சேஷுவின் வாயைத் தன் மெல்லிய கரத் திஞல் மூடிவிட்டு, "போதும், நீங்கள் பாடத்தைப் படியுங்கள். இப்போது வேண்டாம், நாளேக்கு அப்பா கேள்வி கேட்கும்போது சொல்லுங்கள். அப்பா வந்து விடப் போகிருர். உரக்கப் படியுங்கள்!" என்ருள் குறும்புச் சிரிப்புடன்.

அச்சமயமே கதவைத் தட்டும் சப்தம் கேட்டது. வெளியிலிருந்து சிவராமையர், "சேஷு! சேஷு!" என்று கூப்பிட்டார். ஒன்றுமே அறியாமல் புத்த கத்தை எடுத்துப் படிப்பவன்போல் சேஷு மேஜைக் கருகில் சென்று விளக்கைத் தூண்டிஞன். அட எழவே, 'பீனல் கோட்' என்ற புத்தகத்தை எடுத்து வர மறந்துவிட்டான். சட்ட சம்பந்தமான புத்தகம் அறையில் எங்கே தேடியும் அகப்படவில்லே. கடைசி யில் அலமாரியைக் குடைந்து பார்க்கையில், அம்மாவி னுடைய 'மஹாபாரத வசனம்' என்னும் பெரிய புத்தகம் கிடைத்தது. அதுவேனும் அகப்பட்டதே யென்று, பெரிய குரல் எடுத்துத் தான் உருப் போட் டிருந்த சில சட்டங்களேச் சொல்லிப் படிப்பதுபோல் பாசாங்கு செய்தான்.

தகப்பஞர் பத்துப் பன்னிரண்டு தரம் கூப்பிட்ட பிறகே அவன் எழுந்து வந்து கதவைத் திறந்தான்.

தான் ஊக்கமாகப் படிப்பதுபோல் காட்டிக்கொண் டான் சேஷு.

சிவராமையருக்கு உள்ளுக்குள் சந்தோஷந்தான், பையன் இவ்வளவாவது படிக்கிறானேயென்று. எதற்கும் உள்ளே வந்து தன் நாட்டுப் பெண் தூங்குகிறாளா இல்லையா என்று பார்த்துவிட்டுச் சென்றார். சேஷுவினிடத்தில் நம்பிக்கைக் குறைவு அவருக்கு! காமுவை இரண்டுதரம் கூப்பிட்டுப் பார்த்தார். தூங்குகிறவர்கள் எங்கேயாவது பதில் சொல்வதுண்டோ? "டே சேஷு? நிதானமாகவே படி. உன் இரைச்சலினால் காமுவின் தூக்கம் கலையப்போகிறது. 'சீடிங்' கை இன்றைக்கு முடித்துவிட வேண்டும்'' என்றார்.

"சரிதான் அப்பா! மெதுவாகவே படிக்கிறேன்'' என்றான் சேஷு, தந்தையின் சொற்படி நடப்பவனைப் போல்.

"மறுபடியும் வருவேன். மணி இன்னும் பதினொன்று அடிக்கவில்லை. இந்தப் பக்கத்து ஜன்னலைத் திறந்துவிட்டுப் படி. என் காதுக்குக் கேட்கவேண்டும்'' என்று கூறிவிட்டுச் சென்றார் சிவராமையர்.

காமு துளிக்கூட அசையவே இல்லை. தூங்குவதுபோல் நன்றாக அபிநயித்தாள். அவளுடைய கண் இமைகள் மட்டும் அதிகமாக அழுத்திக்கொள்வதனாலோ என்னவோ துடித்துக்கொண்டே இருந்தன. சேஷுவைப் பார்க்கும்போதெல்லாம் குறுநகை அவள் இதழ்க் கடையில் தோன்றியது.

அந்தப் பக்கத்து ஜன்னற் கதவைச் சேஷு திறந்துவிட்டபடியால், ஓர் ஊசி கீழே விழுந்தால் கூடச் சிவராமையரின் அறையில் சப்தம் எப்படியா

வது எட்டிவிடும்; எந்தச் சமயம் வேண்டுமானாலும் ஜன்னலுக்கு வெளியே காட்சி அளிப்பார். அதனால் சேஷு சற்று உஷாராக இருக்கவேண்டிதாயிற்று; சந்தடி செய்யாமல் கீழே போய்ப் 'பீனல் கோடை' எடுத்துவந்தான். காமுவின் தலைமாட்டண்டை மேஜையை இழுத்துப் போட்டுக்கொண்டு, அவளுடைய காதுகள் செவிடாகும்படி உரக்கப் படிக்க ஆரம்பித்தான். தூக்கம் நிஜமாகவே காமுவின் கண்களை அழுத்தியது. சேஷு இன்னும் பெரிய தொனி போட்டுக்கொண்டு படிக்கலானான். நித்திரை சிறிது நேரமே வராமல் தயங்கும். அப்புறம் எந்த இரைச்சலுக்கும் கலையாத தூக்கம் காமுவைப் பிடித்துக் கொண்டது. அவளுடைய வனப்புள்ள கை, மேஜையின்மீது மெல்ல மெல்லத் தொங்கியது. இன்னும் பெரிய கோஷத்துடன் சேஷு படித்துக் கொண்டிருந்தான்.

ஜன்னல் பக்கமாக வெளியே அவன் தாய் வந்து நின்று, "அடே சேஷு நீ படிச்சது போதும். விளக்கை அணைத்துவிட்டுப் படுத்துக்கொள். நீ இப்படித் தொண்டையைக் கிழித்துக்கொண்டு படித்தால் தெருக்கோடி யகத்துக்காரர்கள்கூட எழுந்து வந்துவிடுவார்கள்" என்றாள்.

"இல்லை, அம்மா! அப்பாதான் அப்படிப் படிக்கச் சொன்னார்" என்றான் சேஷு.

"உங்க அப்பா கிடக்கிறார். பக்கத்தில் ஒருத்தி தூங்குகிறாளே என்று உனக்கு நினைவு இல்லையா என்ன? புத்தகத்தை மூடி வைத்துவிட்டுப் படுத்துக் கொள்ளடா, அப்பனே!" என்றாள் சுப்புலக்ஷ்மி.

அவள் பின்னாலேயே சிவராமையரும் வந்து நின்று, "அடி! அவன் பரீக்ஷைக்குப் படிக்கவேண்டாமா என்ன? சேஷு! நீ உருப்போட்டதை ஒரு தரம் சொல்லிப் பார்த்துக்கொள். 'சீடிங்' முடித்து விட்டாயா?" என்று கேட்டார்.

"முடிந்துபோனாற் போல்தான். இன்னும் கொஞ்சந்தான் பாக்கி" என்றான் சேஷு, சாதுவைப் போல். அதற்குள் அவனுடைய தாய், "அடே சேஷு! இந்த ஜன்னலை மூடிக்கொள். வெளிச்சம் வந்தால் கண் கூசுகிறது. தூக்கம் வரமாட்டேனென்கிறது. எழுந்திரு; விளக்கை ஊதிவிட்டுப் படுத்துக்கொள். நீ எவ்வளவு படித்தாலும் அவருக்குத் திருப்தியே ஏற்படாது. நாளைக்கு ஆகட்டும், மீதிப் படிப்பெல்லாம்" என்றாள் அவள்.

"அடே! ஜன்னலை மூடிக்கொண்டு படி. அவளுக்கு வெளிச்சம் கண்ணுக்கு ஆகி வரவில்லையாம். உடம்பும் கொஞ்சம் சுமாராயில்லை, இன்றைக்கு உன் அம்மாவுக்கு" என்று சொல்லிவிட்டு, ஜன்னலைப் படீரென்று மூடிவிட்டுப் படுக்கச் சென்றார் சிவராமையர்.

அப்போது அவர் அடைந்த சந்தோஷத்தைச் சொல்லவே முடியாது. தம் சம்ஸாரத்தை நோக்கி, "பார்த்தாயோடி என் சாமர்த்தியத்தை! பையன் ஒரு தரம் பரீக்ஷயில் தவறிவிட்டதனாலேயே இப்போது கண்ணுங் கருத்துமாகப் படிக்க ஆரம்பித்திருக்கிறான். மணி பதினொன்று எப்பவோ அடித்தாயிற்று. படிக்கிற ஜோரில் அவன் கவனிக்கவேயில்லை. நானும் கடிகாரத்தைத் திருப்பி அரைமணி நேரம்

குறைவாக ஓடும்படி செய்துவிட்டேன். சேஷு இந்தத் தடவை கட்டாயம் 'முதல் க்ளாஸில்' பாஸ் பண்ணி விடுவான் பாரேன், நீ வேண்டுமானுல்" என்ருர் சிவராமையர்.

இந்தப் பக்கம் சேஷுவும் 'சீடிங்' (மோசடி) அத்தியாயத்தை முடித்துக்கொண்டு விளக்கை ஊதிஞன். காமுவின் தூக்கமும் அதே சமயம் கலைந்து விட்டது. வெண்ணிலா அன்று வீண் போகவில்லை.

---



# தீபாவளி தந்தி

# தீபாவளி தந்தி

சுவாமிநாதன் மிகவும் ஏழை. நல்ல புத்திசாலி. மாக்பெர்ஸன் கம்பெனி மானேஜரான குப்புசாமி ஐயருக்கு அவன் பேரில் கண். அவருடைய உதவி இராமற் போனால் சுவாமிநாதன் எம். ஏ., வரையில் படிப்பதேது? பிள்ளையாண்டானுக்குக் 'கல்யாண மார்க்கெட்'டில் ஒரு மதிப்பு ஏற்பட்டதும், காரியக்காரரான குப்புசாமி ஐயர் தம்முடைய மூத்த பெண்ணை அவனுக்குக் கன்னியாதானம் செய்துகொடுத்தார்.

ஒரு வருஷகாலம் சுவாமிநாதன் உத்தியோகம் அகப்படாமல் திரிந்துகொண்டிருந்தான். கடைசியில் மாமனார் அவனோடு அந்தரங்கமாகக் கலந்து, "அப்பா! நான் சொல்வதைக் கேள்: பேசாமல் என் ஆபீசில் நுழைந்துவிடு; துரை நமக்கு வேண்டியவன். இந்தக் காலத்தில் வேலை அகப்படுவதே குதிரைக் கொம்பா யிருக்கிறது. நாளைக்கே உத்தியோகமும் உயரும்" என்றார்.

மாக்பெர்ஸன் கம்பெனியில் சுவாமிநாதனுக்கு வேலை கிடைத்து இரண்டு வருஷமாகிறது. நல்ல பெயரும் எடுத்துவிட்டான். துரை சிரித்த முகமாய் இருக்கும்போதெல்லாம், குப்புசாமி ஐயர் அவனைப் பற்றி நினைவூட்டிக்கொண்டே இருந்தார். "அடுத்த வருஷம் சுவாமிநாதன் ஹெட்கிளார்க் ஆகாமற்போனால் பாரேன்" என்று ஆபீசில் எல்லோரும் பேசிக்கொண்டனர்.

மாமனார் மிகவும் சிக்கனக்காரர். மாப்பிள்ளையை அதே வழியில் திருப்ப அவருக்கு எண்ணம். விசாலி, பின்னால் கண் பிசையாமல் இருக்க வேண்டுமென்பதுதான் அவர் கோரினது. மாமனார் அவர்கள் குடும்பத்தைச் சொந்த ஊரிலேயே வைத்துவிட்டு நல்ல அறை அமர்த்திக்கொண்டு பட்டணத்திலேயே இருந்தார். சுவாமிநாதனுக்குத் தன் மனுஷ்யர் என்பதற்கு யாருமே இல்லை. வேறு விதி? அதனால் அவனும் அவருடன் இருக்க நேரிட்டது. மனைவி பிறந்த வீட்டிலேயே இருந்தாள். எப்போதாவது இரண்டொரு 'ப்ளையிங் விஸிட்' (அவசர விஜயம்) செய்வான். போன வருஷந்தான் அவனுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. புண்யஹாவசனத்திற்குப் போனானே அதுதான்; இன்னும் போகவில்லை. விசாலியையும், குழந்தையையும் பார்க்க அவன் மனம் மட்டும் துடித்துக்கொண்டுதான் இருந்தது. மாமனாரை எப்படிக் கேட்பது? சுவாமிநாதன் சாதுப்பிரகிருதி. இதைச் சகித்துக்கொண்டிருந்தான் பாவம்! இந்தக் காலத்து மாப்பிள்ளைகளானால், 'அவன் கிடக்கிறான்' என்று வாரத்திற்குஒருமுறையாவது கம்பி நீட்டாமல் இருக்க மாட்டார்கள்—பெரிய துரை 'லீவில்' போயிருக்கிறான். சகல அதிகாரமும் மானேஜர் கையில்தான். ஆனால் அவர் வீணாகத் தம்முடைய ஹோதாவைப் பிரயோகிக்கவில்லை. அதிலும் சிக்கனமாகவே இருந்தார்.

இந்தத் தடவை தீபாவளிக்கு எப்படியாவது போவதென்று சுவாமிநாதன் தீர்மானம் செய்துகொண்டான். மாமனாரை 'லீவ்' கேட்கத் தைரியம் பிறந்தது. தீபாவளிக்குமுன் மூன்றுநாள் முதல் ஒரு

வாரம் 'லீவ்' கொடுத்தார். "ஜயித்தோம்" என்று சந் தோஷத்தினால் சுவாமிநாதன் கைகளைத் தேய்த்துக் கொண்டான். அவன் முகத்தைப் பார்க்கவேண்டுமே! தூரத்தில் ஒரு கிராமம்; பெரிய வீடு. பெண்ணொருத்தி குழந்தையைத் தொட்டிலில் இட்டு, "யாரடிச்ச கண்ணீரு" என்று பாடித் தாலாட்டும் காட்சிகள் அவன் கண்முன் தோன்றி மறைந்தன.

வண்டி சரியாக ஒரு மணிக்கு. அன்று சுவாமி நாதனுக்கு வேலையில் மனம் செல்லவேயில்லை. சனி யன் பிடித்த கடிகாரம் சீக்கிரம் ஓடினால்தானே! மனத்தில் தோன்றும் ஏதோ ஒரு பரபரப்பினால், கை ஓடவில்லை. 'லெட்ஜர்' திறந்தபடியே இருந்தது. மேஜையிலிருந்து நீலநிறக் கடிதமொன்றைத் தன் மடியில் வைத்து, தலை குனிந்துகொண்டு பிரித்துப் படிக்க ஆரம்பித்தான். அது விசாலி எழுதின கடிதம். அச்சமயம் ஹெட்க்ளார்க் சேதுராமையர், பின்புற மாக வந்து, "குழந்தே, என்ன அப்பா உருப் போடறே?" என்று குறும்பாகக் கேட்டார். ஸ்வாமி நாதன் திடுக்கிட்டு முகத்தில் அசடு வழியக் கடிதத்தை மறைத்துக்கொண்டான். அப்போது மானேஜருடைய ஆள் சுவாமிநாதனிடம் ஒரு சீட்டைக் கொடுத்தான். Mr. Swaminathan, M. A., to see me at once மிஸ்டர் சுவாமிநாதன் என்னைக் காண வரவேண் டும்) என்று அதில் எழுதியிருந்தது. எதை மறந்தா லும், மாமனார் தம் மாப்பிள்ளையின் பெயருக்கு ஒரு வால் ஓட்டமட்டும் மறக்கவே மாட்டார்.

ஸ்வாமிநாதன் மானேஜர்-மாமனாருடைய அறை யில் நுழைந்தான். அவனை அவர் ஒரு நாற்காலியில் உட்காரும்படி ஜாடை செய்தார். ஆள் கதவை

மூடிவிட்டு வெளியே சென்றான். எழுதுவதை நிறுத்திவிட்டு, மூக்குக் கண்ணாடி மூலமாக சுவாமி நாதனைப் பார்த்து, "தென் (அப்புறம்)" என்று ஆரம் பித்தார். "முதலில் காரியந்தான் பிரதானம், அப்பா! லைபில் (வாழ்க்கையில்) ஸக்ஸெஸுக்கு (வெற்றிக்)குக் காரணம் இதுதான்...ஆனால் நீ ஊருக்குப் போகப் போகிறாயா?" என்றார்.

லஜ்ஜையினால் சுவாமிநாதன் முகத்தைத் திருப் பிக்கொண்டான். மாமனார், "போ; அதைப்பற்றி ஆக்ஷேபணை இல்லை. நீயும் போய் ஒரு வருஷமாகிறது. அவளும் உன்னைப் பார்த்து நாளாச்சு. உன் மாமியா ருக்கு இதைப்பற்றி என்மேல் கோபம். கடுதாசி எழுதியிருக்கிறாள். எனக்கு இல்லாத அக்கறையா? ஏண்டாப்பா, இந்த வயசில் சம்பாதிச்சாத்தானே பிற் காலத்தில் சுகமாயிருக்கலாம்? 'இது ஏதடா பிச்சுவா யிருக்கிறதே' என்று என்னைப்பற்றி நீ நினைத்துக் கொள்ளலாம். ஆனால் சரி" (கடிகாரத்தைப் பார்த்த வண்ணம்) "மணி 11-30 ஆச்சு. என்பேரில் கோபிச் சுக்காதே, நான் வெள்ளையாகச் சொல்றேன் என்று சம்சாரத்தில் இடிபட்டால்தான் தெரியும்...அங்கே அதிக நாள் தங்கவேண்டாம். நானும் வரவில்லையே என்று நீ மனசில் வச்சுக்காதே. நான் எத்தனையோ தீபாவளி பார்த்தாச்சு. நீ சிறுபிள்ளை, குஷியாகப் போக ஆசையாயிருக்கும்..." என்று பாதியில் பிரசங் கத்தை நிறுத்திவிட்டு ஆளைக் கூப்பிட மணியடித்தார். அவன் ஸலாம் செய்து நின்றான். "டேய், என் ஹாண்ட் பாக்கை (கைப்பெட்டியை) எடு. அதோ அந்தப் பண்டிலே (மூட்டை)யும் எடுத்துவா!" என்றார்.

இரண்டும் வந்தன. மானேஜர் மறுபடி பேச ஆரம்பித்தார்: "பை திபை இப்போது நான் மறந்துவிட்டேன்" என்று மணிபர்ஸிலிருந்து 'நோட்டு'க்களை எடுத்து, "இந்தா பிப்டி, (50 ரூபா). செலவுக்குப் போதாதா இது? 'மாமனூர் கை கருணைக் கிழங்கு. இது எந்த மூலைக்கு என்று எண்ணுகிறாயா?" என்றார்.

சாது சுவாமிநாதன், 'இல்லை' என்ற பாவனையில் தலை அசைத்தான்.

"ஆதியில் நான்கூட என் மாமனாரைக் காமதேனுவாக நினைத்து முடிகிறவரையிலும் கறந்தேன். இதோ இந்தப் பண்டிலி கட்டில் பசங்களுக்குத் துணிமணி; உங்கள் இரண்டு பேருக்கும் வேஷ்டி புடவை. பட்டாசு கொஞ்சந்தான் வாங்கினேன். காசைக் கரியாக்குவானேன்? என்ன நான் சொல்றது...?" - மணிபர்ஸிலிருந்து ஒரு தங்கச் சங்கலி எடுத்து, "மறந்துவிட்டேன்; உன் குழந்தைக்கு இதைத் தீபாவளியன்று கழுத்தில் போடு" என்றார்.

சுவாமிநாதன் கூச்சத்துடன் அதை வாங்கிப் பத்திரமாக ஜேபியில் வைத்துக்கொண்டான்.

"டேய் ப்யூன்! பழக்கூடை, பண்டில் எல்லாம் எடுத்துக்கொண்டு ஐயாவை ரெயிலில் ஏற்றிவிட்டு வா!" (சுவாமிநாதனைப் பார்த்து) "ஆனால் போய்வா' சீக்கிரம் வந்துவிடு. சந்தோஷமாகத் தீபாவளி நடத்துங்கள்" என்று கூறி விடை கொடுத்துவிட்டு ஆபீஸ் காரியத்தைக் கவனிக்கத் தொடங்கினார் குப்புசாமி ஐயர்.

இராணிப்பேட்டை ஸ்டேஷனில் இறங்கினதும், முல்லைவனத்திற்குப் போக மாட்டுவண்டி கிடைத்தது. அப்புறம் நீண்ட மூன்றுமணி காலம், கட கடவென்று குலுங்குதல், ரோட்டுப் புழுதி, பசிதாகம் (கூடையில் இருக்கும் பழத்தை ஏனோ அவன் தின்ன வில்லை!) இந்த வழிக்கஷ்டங்களை யெல்லாம் அனுபவித்துக்கொண்டு போனான்! ஏன்? காந்தம் இழுத்தது.

சாயங்காலம், தீபம் வைக்கும் சமயம் ஆகிவிட்டது. நாட்டுப்புறத்தின் மணம், புன்னைப்பூவின் வாசனையோடு கலந்து வந்தது. மாடி ஜன்னல் வழியே ஒரு மதிவதனம் தன் வரவைக் கிராமப் பாதை வழியாகக் கண்கொட்டாமல் பார்ப்பது அவனுக்குத் தெரியுமா? ரிங் ரிங் என்று விட்டில் பூச்சியின் அரவம் அந்திவேளையை இனிமையாக்கிற்று. 'கொய்ங் கொய்ங்' என்று வண்டியும் வீட்டெதிரே வந்து நின்றது. மாப்பிள்ளை வருவதை எதிரகம், அக்கம் பக்க வீடு இவற்றிலிருக்கும் பெண்டுகள் எல்லோரும் மோவாய்க் கட்டையில் கை வைத்துப் பார்த்துக் கொண்டிருந்தனர். வாயிலில் விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்கள், "இதோ அத்திம்பேர் வந்துட்டார்" என்று கூவிக்கொண்டே உள்ளே சமாசாரத்தை எட்டவிட்டனர். அதே சமயம் மாடியிலிருந்து திபுதிபு வென்று யாரோ கீழே இறங்கி ஓடும் சப்தம் கேட்டது. சுவாமிநாதன் மாடி அறைக்குச் சென்று சாய்வு நாற்காலியில் சாய்ந்து அலுப்பினால் கண்களை மூடிக்கொண்டான். சின்ன மைத்துனன், "அப்பா ஏன் வரவில்லை? அத்திம்பேரே, கூடையில் என்ன? பட்டாசு எவ்வளவு ரூபாய்க்கு வாங்கி

யிருக்கார்கள்" என்றெல்லாம் சுருக்கமாய் விசாரித்து விட்டு, "காபி கொண்டுவரச் சொல்கிறேன்" என்று கீழே போய்விட்டான்.

உள்ளே ஒரே புழுக்கம்; சுவாமிநாதன் விசிறிக் கொண்டான். பின்புறமாக மெத்தென்று இரு கைகள் அவன் கண்களை மூடின. எழுந்து திரும்பிப் பார்த்தான். கர்ப்பூர பொம்மை மாதிரி, மத்து மதுக் கென்றிருக்கும் குழந்தையை வைத்துக்கொண்டு பச்சைக்கிளிபோல் விசாலி நின்றிருந்தாள். இருவரும் ஒருவரையொருவர் பார்த்தவுடன் சிரித்துவிட்டனர். வெட்கத்தால் விசாலி தலையைக் கோணிக்கொண்டாள்.

இத்தனை நாளைக்குப் பிறகு கிட்டியது சந்திக்கும் பாக்கியம்! அதற்குமேல் இருவருடைய காதலைச் சிறப்பிக்க அந்தக் குழந்தைக்கனி! புளகத்தினால் இருவரும் சிறிதுநேரம் மயங்கி நின்றனர். சுவாமிநாதன் குழந்தையின் மோவாய்க்கட்டையைத் தொட்டு அதனுடன் கொஞ்சி, தந்தையினது ஆசையின் சின்னமாக ஒரு முத்தம் கொடுத்தான்.

புருஷனை அணுகினதும் விசாலியின் வெட்கம் எங்கோ ஒளிந்துகொண்டது. குழந்தையின் முகத்தைப் பார்த்தவண்ணம் அவள், "உங்களாட்டம் இருக்கிறது!" என்றாள்.

"அப்படி என்ன நான் அழகில் சொட்டி வழிகிறேனா? பார், அதன் கண் உன்னுடையதைப்போல் இருக்கிறது!" என்றான் சுவாமிநாதன்.

"இல்லை, ஸார், உங்களாட்டந்தான். ஆத்தில் எல்லோரும் அப்படித்தான் சொல்றா - 'அப்

பாவைக் கொண்டுவந்திருக்குது; அதிஷ்டமாயிருக்கும்' என்று."

"இட்ட வா; உன் மூஞ்சியையும் அதன் மூஞ்சியையும் ஒத்திட்டுப் பார்க்கிறேன். எல்லாம் உன்னுட்டமே இருக்கிறது" என்று கூறி அவளுடைய கண் இதழ்களில் முத்தமிட்டு, "வாஸ்தவமாகவே அப்படியே உன்னை உரித்துக்கொண்டு வந்துவிட்டது பாப்பா" என்றான். சொல்லமுடியாத இன்பத்தினால் விசாலியின் இரு மலர் விழிகளும் மெதுவாக மூடிக்கொண்டன.

சமயம் பார்த்துக் குழந்தையும் தன்னுடைய அப்பாவின் ஜேபியைத் தன் தளிர் விரல்களை விட்டு இழுத்தது. அப்போது விசாலி 'ஓ' என்று சிரித்துவிட்டு, "இதற்குள்ளே அப்பாவைக் கொள்ளையடிக்கிறதே!" என்றாள்.

சுவாமிநாதன் குழந்தையை அணைத்துக்கொண்டு செல்வமாகக் கொஞ்சியவண்ணம், "இந்தத் துஷ்டியின் கிட்ட இருந்துதானே நீ என்னைக் கொள்ளையடிக்கக் கற்றுக்கொண்டாய்? கண்ணு -" என்று சொல்லி விசாலியைக் கீழ்க்கண்ணால் கவனித்தான். அவள் என்னவோ கூற வாயெடுக்கையில் கதவைத் திறந்துகொண்டு, "எனக்கு ஒண்ணுமில்லையா, அத்திம்பேரே?" என்று கூறிக்கொண்டே சம்பூர்ணம் உள்ளே வந்தாள். சட்டென்று விசாலியும் சுவாமிநாதனும் பிரிந்து நின்றனர். அவன், "சம்பூர்ணம், இத்தனை நாழி நீ எங்கே போயிருந்தே? ஒவ்வொன்றாகத்தானே கவனிக்கவேணும். உன் அக்காவைக் கவனித்தாயிற்று" என்று கூறிக் குறும்பாக விசாலியை நோக்கினான்.

"போதும், வாயை மூடுங்கள்! வேளை சமயம் இல்லையா கேலிக்கு? சம்பூர்ணம், உனக்கு வேறே வேலையில்லை?" என்றாள் விசாலம். "எனக்கு எங்கே...? நீங்கள் பொய் சொல்கிறீர்கள், அத்திம் பேரே" என்று சம்பூர்ணம் சொன்னதும், சுவாமி நாதன்தன் 'ஸூட் கேஸை'த் திறந்து சங்கிலியை எடுத்து மைத்துனியிடம் கொடுத்தான். சம்பூர்ணம் மிக சூக்ஷ்மம். மாமனாரின் கடைசி வார்ப்படமா யிற்றே! அசடுபோலச் சட்டென்று தானே போட்டுக் கொள்ளாமல் குழந்தையின் கழுத்தில் மாட்டினாள். கையைத் தட்டி, "அக்கா, பாப்பாவைப் பார்; அழகா யில்லை?" (முகத்தில் குதூகலம் கூத்தாட) "அத்திம் பேரே, நீங்கள் எப்படிக் குழந்தைக்குத் தகுந்தமாதிரி சங்கிலி வாங்கிண்டு வந்தீர்கள்? ஹ ஹ ஹ" என்று கபடமற்ற ஒரு சிரிப்புச் சிரித்தாள். குழந்தையின் தாயும் தகப்பனும் சந்தோஷத்தினால் பூரித்துத் தங் களுடைய அருமைச்செல்வத்தைப் பார்த்தனர். இதற் குள் இந்தச் சமாசாரம் பின்கட்டிற்கு எட்டிவிட்டது.

"போதும், உங்களைக் கட்டிண்டு...! அப்போதே இதை என் கிட்டே கொடுத்திருந்தா?...சம்பூர்ணத் திற்கு நாக்கு நீளம். அது என்ன வத்திவைக்கப் போகிறதோ!" என்றாள் விசாலி. "வத்தி வைக்கட் டுமே...தீபாவளிக்கு வைக்காதுபோனால் பின்னால் எப்போது வைக்கிறது?" என்றான் சுவாமிநாதன். அப்போது விசாலியின் முகத்தில் கோபமும் சந் தோஷமும் நிறைந்த ஓர் அபூர்வமான சாயை உலா விற்று. அப்பப்பா! அந்தப் பார்வையில் என்ன வெல்லாமோ அர்த்தம் இருந்தது!

"கோவித்துக்கொள்ளாதே, விசாலி" என்று சுவாமிநாதன் அவளைத் தொடும்போது, "யாரேனும் வரப்போகிறார்கள்" என்று கூறி அவள் திமிறிக் கொண்டு, ஒதுங்கி நின்றாள். அதேசமயம் கதவை யாரோ தட்டி, "உள்ளே வரலாமா? அத்திம்பேரே" என்று கூப்பிடுவது கேட்டது.

தீபாவளிக்கு முன் இரண்டு தினங்களும் வேடிக்கையிலும் சிரிப்பிலும் ஆனந்தமாகக் கழிந்தன. தீபாவளித் தினமும் வந்துவிட்டது. வீட்டில் பலத்த விருந்துக்கு வேண்டிய ஏற்பாடுகள் யாவும் நடந்தன. உதயமாவதற்கு முன்னேயே பையன்கள் பட்டாசு வெடித்தாகி விட்டது. கங்காஸ்நாநம் செய்துவிட்டு மாப்பிள்ளையாண்டான் மாடி வராந்தாவில் மேகராகம் பாடும் வைகறைத் தேவியின் அழகை மெய்ம்மறந்து பார்த்துக் கொண்டிருந்தான். விசாலி அப்படியும் இப்படியும் புதுச் சேலை கட்டி விசுக் விசுக்கென்று போய்க்கொண்டிருந்தாள். அன்று அவள் மனத்திலுள்ள இன்பவெள்ளம் கரைபுரண்டு சென்றது. நடு நடுவே சமயலறையில் தலையை நீட்டும்போது மதனி ஜிலேபியை ஜீராவில் தோய்த்துக்கொண்டே, "விசாலம், நீயும் இங்கே வந்துவிட்டால் அவரை யார் கவனிக்கிறது?" என்றாள். விசாலி 'சுரு சுரு' என்று ஆத்திரத்தோடு, "அடி அம்மா! பார்த்தாயாடீ மன்னியை...?" என்றாள்.

தாய் ராஜலக்ஷ்மி வாணலியில் ஏதோ கரண்டியால் கிளறிக்கொண்டே, "ஏண்டி அம்மா அவளை எல்லாரும் அழமூட்டுகிறீர்கள்?" என்றாள். சிறுவர்களின் ஆர்ப்பாட்டமும் சொல்லி முடியாது. வீட்டில் ஒரே ஆனந்தக் கூச்சல்.

இந்தப் பக்கம், பட்டணத்தில் மாமனுர் இவ்வாறு அலறிப் போட்டுக்கொண்டிருந்தார்: "இந்தக் காலத்துப் பசங்களே பின்னுல் வரப்போவதை யோசிக்கிருர்களா? ஏதடா, பெரியவாள் நல்லதற்குத்தானே சொல்லுவா என்று அவர்களுக்குத் தோன்றினுல்தானே! அகத்துப் பசங்களோ கேட்க வேண்டியதில்லை. இரண்டும் கெட்டான்கள். சீக்கிரம் ஏதோ இரண்டு நாள் விருந்து பண்ணினேமா, மாப்பிள்ளையை அனுப்பித்தோமா என்று இருக்கப் போகிருர்களா? உத்தியோகமாயிற்றே, சீக்கிரம் வரவேண்டும் என்று பிள்ளையாண்டானுக்கும் தோன்றப் போவதில்லை. இதுதான் சமயமென்று 'லீவ் எக்ஸ்டென்ஷன்' (நீடிப்பு) எடுத்துக்கொள்ளப் போகிருன்."

* * *

பெரியதுரை இன்னும் பதினேந்து நாளேக்குள் வரப்போவதாக ஆபீசுக்குச் செய்தி வந்தது. மானேஜர் ஒரு தந்தி பாரத்தை எடுத்து, 'சுவாமிநாதன், எம். ஏ., முல்லேவனம், இராணிப் பேட்டை' என்று எழுதி, சற்று யோசித்துவிட்டு மீண்டும், 'Boss' (எஜமான்) என்று எழுதி நிறுத்தினுர். மறுபடியும் யோசனையில் ஆழ்ந்தார். தமக்குள்ளேயே, "வேண்டாம், பிள்ளையாண்டான் ஏதாவது விரசமாக நினைச்சுக் கொள்வான். ஏதடா, வந்த சிரமங்கூடத் தீரவில்லை, இதற்குள் இந்தக் கிழம்..." என்றெல்லாம் சொல்லிக்கொண்டு, "ப்யூன்" என்று கூப்பிட்டார். ஆள் வந்து நின்ருன்.

"டைபிஸ்ட் சுப்பிரமண்யத்தை இங்கே அழைத்துவா! இருக்காஞ, டிபனுக்குப் போய்விட்டாஞ?" என்ருர் மானேஜர்.

ஆள் டைபிஸ்டை அழைத்துக்கொண்டு வந்தான். சுப்பிரமணியம் சுவாமிநாதனுக்கு ஈடு. அவனுடைய ஆருயிர் நண்பன் ஓயாமல் 'டைப்' அடிக்கும் பழக்கத்தினால் வெறும் சமயங்களில்கூட அவனுடைய விரல்கள் 'டைப்' அடிக்கும் பாணியில் நாட்டியம் ஆமாடிக்கொண்டே இருக்கும். மானேஜர், "அப்பா, மேஜை ஜாக்கிரதை! உன் விரல்கள் சொப்பனம் காண்கின்றன. அன்றைக்குத்தான் அந்த 'ஷெல்பை' (Shelf) அப்படியே கவிழ்த்து விட்டாய். 'பாஸ்' (எஜமான்) வருவது உனக்குத் தெரியுமா?" என்றார்.

"இன்னும் டூ விக்ஸுக்கு (இரண்டு வாரங்களு)க்குள்ளே வருவதாகக் கேள்விப்பட்டேன், ஸார்."

"ஆமாம், எல்லோரும் இனிமேல் 'பங்க்சுயலா'ய் (மணிக் கணக்குத் தவறாமல்) வரவேண்டும். என் ஆட்சி முடிந்துவிடுகிறது. உன் சிநேகிதர் 'ஹாய்' யாகப் போய் உட்கார்ந்துகொண்டார். இன்னும் ஒரு மாசம் இராமல் அவர் வரப்போகிறதேது! ஏதாவது உனக்கு அதைப்பற்றி லெட்டர் (கடிதம்) கிட்டர் எழுதினது உண்டா?"

"ஒன்றுமில்லை, சார்......"

"சொல்லி இருப்பான்; நீ மறைக்கிறாய். உன் 'பிரெண்ட்' (சிநேகிதன்) ஆயிற்றே. அது கிடக்கட்டும். டெலிக்ராப் பாரம் எடுத்துக்கொள். எழுது: Bossreturned from England. Angry......start at once (பெரிய துரை திரும்பி வந்துவிட்டார். கோபமாக இருக்கிறார். நீ உடனே புறப்படு.) எழுதியாச்சா? கீழே உன் பெயரைப் போடு. இதற்குத்தான் கூப்

பிட்டேன். நீ போகலாம்... அடே ப்யூன், இதை 'ஒபர்' (தந்தி) பண்ணிவிட்டு வா" என்ருர் மானேஜர் குப்புசாமி ஐயர்.

மாப்பிள்ளை தீபாவளிக்கு வந்த கொண்டாட்டத்தில் ஒரு குழப்பம் ஏற்பட்டது. எதிரகத்து ஏகாம்பர மாமா, நேராகச் சமையல் அறைக்குச் சென்று யஜமானி அம்மாளைப் பார்த்து, " அம்மா, ராஜலக்ஷ்மி! ஒரு சமாசாரம். இப்படி வருகிருயா, சொல்கிறேன்" என்ருர்.

ஏகாம்பர மாமாவின் முகத்தைப் பார்த்ததும் ராஜலக்ஷ்மி இடிவிழுந்ததுபோல் ஆனுள். அவள் மனச் சஞ்சலத்துடன், "என்ன மாமா, என்ன சமாசாரம்?" என்ருள். அவளால் பேசவே முடியவில்லை. கைகால் ஆடவில்லை. ஏகாம்பர மாமா ஒரு தந்தியை மடியிலிருந்து எடுத்தார்.

"யாருக்கு என்ன உடம்பு, நல்ல நாளும் அதுவுமாக? பகவானே! இதென்ன சங்கடம்?" என்று ராஜலக்ஷ்மி கைகளைப் பிசைந்துகொண்டாள். "யார் பேருக்கு வந்திருக்கிறது? என் வயிற்றை என்னவோ பண்ணறதே! பம்பாயில் சுந்துவுக்கு என்ன ஆபத்தோ?" என்ருள். சுந்து அவளுடைய மூத்த மகன்.

"மாப்பிள்ளையின் பேருக்கு வந்திருக்கிறது. இதென்ன கஷ்ட காலம், தீபாவளியும் திங்களுமாக... எனக்கு ஒன்றும் புரியவில்லை. இங்கிலீஷ் படிக்கத் தெரியாது. ஸ்கூல் வாத்தியாருக்கு ஆள் அனுப்பி இருக்கேன். இதை மாப்பிள்ளைக்குக் காட்டுவது உசிதமில்லை. பிள்ளையாண்டான் எந்தத் துர்யோகத்தில் புறப்பட்டானே?" என்ருர் ஏகாம்பர மாமா.

தந்தியை அவர் ராஜலக்ஷ்மியிடம் கொடுத்து விட்டு, "அம்மணி! பயப்படாதே, பகவான் இருக்கிறான். தைரியமாயிரு" என்று சொல்லிவிட்டுப் போனார்.

அப்போது சம்பூர்ணம் அங்கே தோன்றி, "அடி அம்மா, நல்ல சமாசாரமா ஏண்டீ இருக்கக்கூடாது?" என்றாள். அவளுடைய தாய், "குயுக்திதான் வேண்டாம் என்கிறேன். ஆபத்து சமாசாரம் சொல்லவே 'கும்பனி'யான் இந்தத் தந்தியை ஏற்படுத்தியிருக்கிறான்!" என்றாள்.

"அம்மா, போனதடவை, அடுத்த அகத்து ராமு 'பாஸ்' பண்ண சேதி தந்திமூலமாகத்தானே வந்தது?". என்றாள் சம்பூர்ணம்.

"பையன் கடைசிவரையிலும் உயிர் வைத்துக் கொண்டிருந்தானா? போதும் சமத்தே! விசாலிக்காவது, அத்திம்பேர் காதுக்காவது எட்டப் போகிறது" என்றாள் ராஜலக்ஷ்மி.

சவாமிநாதனுடைய மாமியார் சுத்த நாட்டுப்புறம்; கள்ளம் கபடு அறியாத அந்தக் காலத்துப் பிராணி.

வீட்டில் கலவரம் என்னும் கார் இருள்மூண்டது' ஆனால் மாடியில் இருவர் முகங்களில் மட்டும் மின்னல் விளையாடிக்கொண்டிருந்தது. இந்தச் சமாசாரம் அவர்களுக்கு எட்டவில்லை.

பள்ளிக்கூட உபாத்தியாயர் வந்தார். தந்தியை உடைத்தார். ராஜலக்ஷ்மியின் இருதயம் திக்திக்கென்று அடித்துக்கொண்டது. "ஒன்றுமில்லை, அம்மணீ! பெரிய துரை வந்துவிட்டானாம். கோபமா

யிருக்கிறானும்; சீக்கிரம் வரவேண்டுமாம்......யாரோ சுப்பிரமணியன் அடித்து இருக்கிறான். குறும்புக்கா வது யாராவது செய்திருக்கலாம் இதை" என்றார். "அவரைப்பற்றி ஒன்றுமில்லையே?" என்றாள் எஜ மானி. "இல்லை" என்றார் அவர். எஜமானியின் கண்களில் நீர் ஆறாய்ப் பெருகிற்று. தலைப்பினால் துடைத்துக்கொண்டாள். அவள் அழுவதைப் பார்த்து மதனியும் மாலை மாலையாக நீர் உகுத்தாள்; வேறு யாரையாவது (பம்பாயிலிருக்கும் புருஷனை) நினைத்துக்கொண்டு இவள் அழுதிருக்கலாம்!

"மாப்பிள்ளை இப்போது பட்டணம் போகவேண் டாம்; துரைக்குக் கோபம் தணியட்டும். ஆனால் இதை எப்படி அவனுக்குச் சொல்வது? பாழும் பிராம்மணன் கூடவே வந்திருந்தால் ஒரு தொல்லை யும் இல்லையே" என்றாள் ராஜலக்ஷ்மி.

"நீங்கள் எதற்கும் கலவரப் படவேண்டாம். எவனாவது சில்விஷமமாய் இதைச் செய்திருப்பான். அப்படி ஆபத்தானால் பெரியவரே நேரில் அடித் திருக்க மாட்டாரா? கொஞ்சம் செலவு செய்தால், இதைச் சரிப்படுத்திவிடலாம்..." என்றார் உபாத்தி யாயர்.

"இந்தச் சமயத்திலா நாங்கள் பணத்துக்குப் பார்ப்போம். ஒரு நூறுரூபாய் பிடிக்குமா?" என்றாள் ராஜலக்ஷ்மி. "அவ்வளவு ஏதுக்கு? எல்லாம் சொல்ப மாய் 10 ரூபாய்க்குள் முடித்துவிடலாம். விஷயம் ஒன்றுமில்லை. போஸ்ட் ஆபீஸ் முத்திரை போட்டு, 'நீ உடனே வந்துவிட வேண்டாம், நானே நேராக வருகிறேன்' என்று பெரியவரே அடித்தமாதிரி மாப்

பிள்ளைக்கு ஒரு தந்தியைக் காட்டவேண்டும்; எல்லாம் சரியாகிவிடும்'' என்றார் அந்த யுக்திசாலியான உபாத்தியாயர்.

எஜமானி அம்மாளுக்கு அப்போதுதான் நாக்கில் ஈரம் வந்தது. சாண் பிள்ளை யானாலும் ஆண்பிள்ளை ஆண்பிள்ளைதான். எங்களுக்கு இதெல்லாம் எப்படித் தெரியுங் காணும்?'' என்றாள் ராஜலக்ஷ்மி. அப்போது சம்பூர்ணம் அங்கே ஓடிவந்து, ''அம்மா...அத்திம் பேருக்கு 'லீவ்' ஆகிவிட்டதாம். நாளைக்குப் போகப் போகிறாராமே. தந்தியை அவரிடம் காட்டினால் என்ன? இதெல்லாம் எதுக்கடீ?'' என்றாள்.

''போதுமடீ என் அவலச் சமத்தே! எந்த விஷயத்திற்கும் 'நான் இருக்கிறேன் நண்டு வளையிலே' என்று வருகிறாய்! குழந்தையாக குழந்தைலக்ஷணமாயிரு. நாங்கள் இருக்கிறவர்கள் மனுஷ்யர்கள் இல்லையா? உன் திருவாயை மூடிக்கொள், அடி அம்மா தேவி! அங்கேபோய் அவரிடம் ஓலை வைக்காதே. பேசாமல் உன் காரியத்தைக் கவனி; போ'' என்று சம்பூர்ணத்தை அவள் தாய் அதட்டினாள்.



# தெய்வ சங்கல்பம்

# தெய்வ சங்கல்பம்

காவிரிப்பூம்பட்டினம் இப்போது ஒரு பட்டிக் காடு. ஆதியில் இப்பூம்புகார் தமிழரின் நாகரிக நிலய மாகவும், செல்வக் களஞ்சியமாகவும், கலா நிகேதன மாகவும் விளங்கிற்று. துன்பகரமாக முடிந்த ஒரு கற்புக்கரசியின் வாழ்க்கை இங்கேதான் தொடங் கியது. செல்வச் செருக்கினால் நன்னெறி நீங்கி இந்திர விழவுபோன்ற கேளிக்கைகளில் தமிழ் மக்கள் வரம்பு கடந்து ஈடுபட்டிருக்கும் சமயம், தெய்வம் அவற்றைக் காணச் சகியாமல் கடலை ஏவி அவ்வழகிய பூம்பதியைப் பாழாக்கிவிட்டது. இந்தப் போக பூமியின் எஞ்சி நின்ற ஐசுவரியம் மீண்டும் மத்திய காலத்தில் கிளைத்துப் பட்டினத்துப் பிள்ளை துறந்த அதிசயத்தைக் காட்டியது. இரண்டு உயர்ந்த திருஷ்டாந்தங்களை உலகத்தவருக்கு எடுத் துக் காட்டித் தமிழரின் மேன்மையை நிலைநாட்டிய இப்புகலியில் யாரும் கேட்டறியாத மற்றொரு நாட கம் நிகழ்ந்தது. பின்வரும் கதை அதை வருணிக்கிறது. இது நிகழ்ந்த காலம் பௌத்த யுகத்திற்கும் மத்திய காலத்திற்கும் இடைப்பட்டது.

*          *          *

பூம்புகாரின் அழகிய கடற்கரை. தாழும் கதிரவ னின் ஒளி, சுருண்டு பிரியும் அலை வரிசைகளின்மீது பாய்ந்து பிரதிபலித்தது. பொழுது மங்க மங்க, பச்சை நிறமாக இருந்த கடல் கருநீலமாக மாறு வதை ஓர் இளம்பாவை கரையிலிருந்து மெய்ம்மறந்து

கவனித்துக்கொண்டிருந்தாள். செம்பருதிக் கோளம் மறையவே, கீழ்வானில் தோன்றியது மதியின் பெரிய வட்டம். அதே கடற்கரையில் மணலில் சாய்ந்திருக்கும் ஓர் இளைஞனின் மனத்தை, கடலில் சிதறுண்டு துடிக்கும் நிலவொளியை நோக்கும் அந்தப் பாவை அலைத்துக் கொண்டிருந்தாள்.

பாலிகையின் பெயர் சித்திரவதி. காவிரிப்பூம் பட்டினத்தில் ஒரு சமயம் ஏராளமான செல்வத்துடன் வாழ்ந்த வைசியகுலத்தில் உதித்தவள். அவளுடைய தந்தை செல்வபதி சிரேஷ்டி மிதமிஞ்சிய போகவிலா, சத்தில் ஈடுபட்டுத் தன்னிடத்து உண்மையாக இருந்த பத்தினிப் பெண்ணையும் பலவிதமாக இம்சித்து முடிவில் கடும் பிணிக்கு ஆளாகி மாண்டு போனான். வம்ச பரம்பரையாக வந்த இவர்களுடைய செல்வம் காற்றுப் போய்விட்டது. சித்திரவதியே இப்போது அவளுடைய தாயான தத்தைக்கு உள்ள ஒப்பற்ற ஐசுவரியம். வணிகர் கோட்டத்துச் சிறுமிகள் வேடிக்கையாகப் பொழில்களில் கூடிக் கழல் விளையாடுவதும், ஆலயங்களில் இசை பாடுவதும் வழக்கம். ஆனால் அதே மரபினளான சித்திரவதி அவர்களோடு சேருவதில்லை. தனிமையை நாடும் இயல்பு அவளுக்கு இருந்தது. தோழியருடன் சரசமாடுவதைக் காட்டிலும் வெண்மையான நுரை சூடிய கடல் அலைகளோடு சம்பாஷிக்க அவளுக்கு அதிக விருப்பம்.

இளைஞன், காவிரிப்பூம்பட்டினத்துச் சிரேஷ்டிகளில் சிறந்தவனும் குபேரனுக்கு நிகரான நிதியை உடையவனுமான கோபதி சிரேஷ்டியின் ஒரே செல்வ மகன். சமுத்திரத்திற்கு அப்பாலுள்ள புஷ்பகம், சாவகம் முதலிய தூர தேசங்களுக்குச் சென்று

சிரமப்பட்டுத் திரவியமும் நாகரிகமும் சேகரித்துக் கொண்டு வந்திருப்பதால், மகனையும் தன் வழியே கொண்டுவர அவனுக்குக் கல்வியும் வாணிக தந்திரங் களும் சொல்லிவைத்தான். முருகு வாய்ந்த சீராளன் நேர்மையையே கடைப்பிடித்து வந்தவன். சித்திர வதியும் அவனும் சிறு வயது முதற்கொண்டு இணை பிரியாத அன்பர்கள். ஜோடியாகச் சங்கீதம் பயில் வதும், கடலில் நீந்துவதுமே அவர்களுடைய பிரிய மான பொழுது போக்கு.

இன்றும் அவர்கள், இயற்கையின் ஓர் அபூர்வ சௌந்தரியக் காட்சியைக் காணக் கடற்கரைக்கு வந்திருந்தார்கள். எதிரே நீரில் அசையும் சந்திரிகை யும், சற்றுத் தொலைவில் உட்கார்ந்திருக்கும் பாலிகை யின் உடலினின்று பொழியும் அழகு வெள்ளமும் இளைஞனை சொப்பன லோகத்திற்கு இழுத்துச்சென் றன. வெகு நாட்களாகத் தன் மனத்திடையே புதைந் திருந்த அந்த ரகசியத்தை வெளியிட இதுவே தக்க சமயமென்று சீராளன் சித்திரவதியை மெல்ல அணு கினான். பாலிகை அவன் வருவதைக் கவனிக்க வில்லை. நிலவைப் பருகும் அவளுடைய கரிய விழி கள் அவன் உள்ளத்தை இன்னும் சஞ்சலப்படுத்தின.

தன்னை நெருங்கிச் சீராளன் ஒரு புதிய மாறுத லுடன் வருவதைப் பார்த்த பாலிகை சட்டென்று அவ்விடத்தை விட்டு ஓடலானாள். சீராளனும் அவளைப் பின்தொடர்ந்து வரவே, சித்திரவதி கடலில் குதித்தாள். செட்டிமகனும் அவளைப் பின்பற்றி னான். வெகுநேரம் வரை சித்திரவதி அலைகளைப் பிளந்துகொண்டு சீராளனிடம் சிக்காமல் நீந்தினாள். என்ன இருந்தாலும் பெண்களின் தேகம் மிருதுவான

தல்லவா? அலைகளின் அறைகளை எத்தனை நேரம் அவள் சகிப்பாள்? துவண்டு விழப்போகும் சமயம் சீராளன் அவளை ஏந்திக்கொண்டான். களைப்பு மிகுதியால் பாவை அவனுடைய தோள்மீது சாய்ந்துவிட்டாள். சீராளனுக்கும் உடற் சோர்வு ஏற்பட்டது. தன் அழகிய பாரத்தைத் தோளில் சுமந்தபடியே நீந்திக் கரையை அடைந்தான். சித்திரவதியின் உடல் ஒரு சிறகின் கனங்கூட இல்லை அவனுக்கு. இது பிரேமை இழைக்கும் மாயை அல்லவா?

மணல்மீது மூர்ச்சையாகிக் கிடக்கும் அந்தத் திவ்வியரூபிணியைச் சீராளன் கவிழ்ந்தபடி இமை மூடாமல் பார்த்துக்கொண்டிருந்தான். மெதுவாகப் பாலிகையின் பதும நேத்திரங்கள் மலர்ந்தன. சீராளனைப் பார்த்ததும் அவள் சன்னங்கள் சட்டென்று நாணிச் சிவந்தன. உடலில் புளகம் ஏற்பட்டது. உடனே வெறுப்பைக் காட்டும் ஒரு மாறுதல் அவள் வதனத்தில் உலாவிற்று.

"சித்ரா! எதற்காக நீ கடலில் குதித்தாய்? நான் பிடிக்க வந்தேனென்று?" என்றான் சீராளன்.

அதற்குப் பாலிகை மறுமொழி தராமல் முகத்தைத் திருப்பிக்கொண்டாள். அவளுடைய நளின மலர்க் கரங்களை யுவகன் தன் மார்போடு அணைத்து, "என்னை நீ வெறுக்கிறாயா? இன்று தனிமையில் சந்திக்கவே, வெகு நாளாக என் மனத்தில் குருத்துவிட்டிருக்கும் ஓர் ஆசையை வெளியிடலாமென்று உன்னை அண்டினேன். என்னை நீ மணந்துகொள்ள மாட்டாயா?" என்றான்.

சித்திரவதி தன் கரங்களை அவனுடைய பிடியிலிருந்து விடுவித்துக்கொண்டு, "நான் விவாகம் செய்து கொள்ளப் போவதில்லை" என்றாள்.

மனவாட்டம் அடைந்தவனாய்ச் சீராளன் இதற்குக் காரணம் வினவ, அந்தச் சித்திரப் பாவை தான் புருஷர்களை வெறுப்பதாயும், அவர்கள் முதலில் பெண்களின் மனத்தைக் கவர்ந்து பிறகு பூவைக் கசக்கி எறிவதுபோல் அவர்களைக் கேவலமாக நடத்துவதாகவும், விவாகமே பெண்களுக்குக் கடைசியில் நரகவேதனையைத் தருகிறதென்றும் தன் கருத்தினைக் கூறினாள்.

கண்களில் நீர் துளிக்கச் சீராளன், "என்னை நிராதரவாய் விடாதே, சித்ரா! மற்றப் புருஷர்களைப் போலவா நான்? உன்னையே உயிராகப் பாவிக்கும் என்னை மணப்பதில் உனக்கு யாதொரு கஷ்டமும் நேரிடாது. உன்னை மன்றாடிக் கேட்கிறேன். எனக்கு அன்புப் பிட்சை கொடு" என்று உருக்கமாக மொழிந்தான்.

ஆனால் அந்தப் பிடிவாதக்காரி அவனுடைய கனிவான மொழிகளைச் செவியில் போட்டுக்கொண்டால் தானே? ஒரே மூர்க்கமாய், 'முடியாது' என்று தன் அழகிய சிரத்தை அசைத்துவிட்டாள்; சீராளனை விட்டு ஒதுங்கியும் உட்கார்ந்துகொண்டாள்.

"இதுவரை பிற மடந்தையை நான் நினைத்தது கூட இல்லையே; என்மீது உனக்கு அவநம்பிக்கையா? சித்ரா! யோசித்துச் சொல்: நான் உனக்கு வேண்டாமா?" என்று செட்டி குமாரன் மனமுடைந்து கூறும்போது யௌவன கருவம்

படைத்த சித்திரவதி, "நான் மாட்டேன். என்னை விடு!" என்று சொல்லி அவ்விடத்தினின்று வேகமாக வீட்டை நோக்கிச் சென்றுள்.

பால வயதின் சிநேகிதியான சித்திரவதி, இப்படித் தன் வேண்டுகோளை நிராகரித்துச் சென்றுலும், சீராளனுக்கு எள்ளளவும் அவள்மீது வெறுப்போ, கோபமோ உண்டாகவில்லை. 'விவாகம் செய்து கொள்ள மாட்டேன்' என்று சொல்லும்போது அவளுடைய முககாந்தியும் கண்களில் தோன்றிய கோப ஒளியும் சீராளனைப் பின்னும் கவர்ந்தன. அவளை அடைய அவை அவனுக்கு உற்சாகத்தையும் தந்தன. எப்படி அந்தப் பிடிவாதக்காரியை வழிக்குக் கொண்டுவருவதென்று சீராளனுடைய மூளை வேலை செய்ய ஆரம்பித்துவிட்டது. கடைசியில் தன் அன்னை தான் இதைச் சரிப்படுத்தக் கூடியவளென்று கண்டு கொண்டான்.

மனத்தில் மூளைத்து வரும் ஓர் எண்ணத்தை இன்றுதான் தன் தாயிடம் வெளியிடச் சந்தர்ப்பம் ஏற்பட்டது. இந்த முயற்சியிலும் தோல்வியடைந்தால் பின்பு ஆயுள் பரியந்தம் எவரையும் மணந்து கொள்ளாமல் இருப்பதாகப் பெரியதோர் பிரதிக்ஞை செய்துகொண்டான்.

பிள்ளை இவ்வளவாவது கலியாணம் செய்து கொள்ளப் பிரியப்படுகிறுனே என்று சீராளனுடைய தாய் அளவிலா மகிழ்ச்சியோடு சித்திரவதியின் அன்னையிடம் இதைப் பிரஸ்தாபிக்கச் சென்றுள். நல்ல வரன் வருவதை யார்தாம் தடுப்பார்கள்! அதிலும் தரித்திர தசையில் இருக்கும் தன் பெண்ணைத் தேடி ஒரு தனவந்தனின் புதல்வன் வரும்போது உடனே

சம்மதித்தாள். சித்திரவதிக்கு ஏற்பட்ட நல்ல காலத்தை நினைந்து நினைந்து மகிழ்வெய்தினாள்.

2

காவிரிப்பூம்பட்டினத்தின் பெருந் தனிகனான கோபதியினுடைய ஒரே குமாரனுக்கு மணக்கோல மென்றால் கேட்கவும் வேண்டுமா? வணிகர் வீதி இந்திர லோகம்போல் அலங்கரிக்கப்பட்டது. யாழ்ப் பாணர்களும் இசைவன்மை வாய்ந்த அரம்பையரும் தேர்ந்து தருவிக்கப்பட்டிருந்தனர். பல நாடகங்கள் நிகழ ஏற்பாடாகி யிருந்தது. இதற்காக ஆரிய நாடு களிலிருந்து பொருநர்களும் குழுமிவிட்டனர். விவா கத்தின் ஆரம்பச் சடங்கிற்காகச் சீராளன் கடன் மல்லையிலுள்ள தன் மாமன் வீட்டிற்குச் செல்லக் கப்பலும் ஏறிவிட்டான்.

எல்லோரும் துறைமுகத்திற்கு வந்து அவனை வழி யனுப்பினர். அடுத்த வாரத்திற்குள் அவன் வந்து விடுவான், அப்புறம் மணவிழா நடைபெற வேண்டி யதுதான்.

ஊரில் இவ்வளவு ஆர்ப்பாட்டமாயிருக்கும்போது சித்திரவதிக்கு மட்டும், தனக்கும் சீராளனுக்கும் மணம் நிச்சயிக்கப்பட்டிருக்கிறதென்று சொல்லப் படவில்லை. ஆனால் யூகபுத்தியையுடைய சித்திரவதி இதைச் சீக்கிரம் அறிந்துகொண்டாள். உடனே தன் தாயிடம் சென்று, "இதென்ன அம்மா, எனக் குத் தெரியாமல் கலியாணம் நிச்சயித்துவிட்டாய்? நான் எவரையும் மணந்துகொள்ள மாட்டேன். எனக்கு இல்வாழ்க்கை பிடிக்கவில்லை. நீ பட்டது போதாதா? என்னையும் படுகுழியில்..." என்று கூறி

முடிப்பதற்குள், அவளுடைய தாய், "நீயும் சீராளனும் சிறுவயது முதற்கொண்டு விளையாடினவர்களாயிற்றே! இப்போது ஏன் அவனை வேண்டாமென்கிறாய்? நல்ல காலம் வந்திருக்கும்போது அதை ஏன் உதைத்துத் தள்ளுகிறாய்? சொன்ன பேச்சைக் கேள்" என்று பயமுறுத்தியும் சமாதானமாகவும் அந்தச் சண்டிக்கு உபதேசம் செய்தாள்.

இனித் தாயின் மூலமாகத் தன் மனோபீஷ்டம் ஈடேறாது; அவள் சீராளனுக்குத் தன்னைக்கொடுத்தே தீருவாள்; ஆனால் பிராணன் இருக்கும்வரை யாருக்கும் வாழ்க்கைப்படக் கூடாது - இப்படியெல்லாம் அவள் மனம் இந்தச் சங்கடத்திலிருந்து மீள ஒரு வழிக்காக அலைந்தது. கடைசியில் தெய்வத்தின் துணையை நாடுவதென்று திடங்கொண்டாள். அதுவும் கைவிட்டால், அப்புறம் இருக்கவே இருக்கிறது குளிர்ந்த மரணம்!

பூம்புகலியிலுள்ள வைசியர்களுக்குக் குலதெய்வம் மணிமேகலை. இந்தத் தேவதையின் ஆலயம் கடற்கரையோரமாக இருந்தது. வைசிய மரபினர் இந்த மகாசக்தியின் சிலைமுன் நின்று தம் மனக் குறைகளைச் சொல்லித் துக்கம் என்னும் இருளைப் போக்க விளக்கு ஏற்றி வைப்பார்கள். விளக்கு அணைந்துவிட்டால் தேவி தங்களுடைய வேண்டுகோளை எடுத்துக்கொள்ளவில்லையென்றும், தீபத்தின் கொழுந்து நின்று சுடர்விட்டு எரிந்தால் மனோரதம் கைகூடிற்றென்றும் அவர்கள் அறிந்துகொள்வார்கள். இவையே அந்த மணிமேகலா தெய்வம் தன் விருப்பத்தைக் காட்டும் சங்கேதங்கள்.

விவாகத்திற்கு இரண்டு நாள் முன்பே கீழ் வானத்தில் கருமேகங்கள் சேர ஆரம்பித்துவிட்டன. காற்றும் சிலுசிலுவென்று வீசத் தொடங்கியது. கடல் நீரும் கலங்கித் தென்பட்டது. அன்று மாலை புயல் திடீரென்று மும்முரமாக எழும்பிற்று. காலையில் மௌனமாயிருந்த இயற்கைத்தேவி மாலையில் பிரளய கோலத்துடன் விளங்கினாள். இத்தகைய வேளையில் யார்தாம் வெளிக் கிளம்புவார்கள்? ஆனால் திக்கே தெரியாத அந்த மையிருட்டில் வேதனையின் வடிவான துணிச்சல்காரி ஒருத்தி சற்றேனும் நடுக்கமில்லாமல் காற்றுக்காக மண் விளக்கைத் தன் கருநீல மேலாடையால் மறைத்துக்கொண்டு கடற்கரை நோக்கிச் சென்றுகொண்டிருந்தாள். மணிமேகலா தேவியின் ஆலயமே சித்திரவதியின் லக்ஷியம்.

கோயிலினுள் ஒரே இருட்டு. கவாக்ஷங்களில் புகுந்து காற்று ஊதிக்கொண்டிருந்தது. மக்கட்பேறு இல்லாதவர் மாட்டும் தொட்டில்களும் இன்னும் பல பிரார்த்தனைச் சின்னங்களும் பெரிய தூண்களில் ஊசலாடின. சித்திரவதி தன் மேலாடையை நீக்கிவிட்டாள். விளக்கின் கொழுந்து காற்றில் அணைந்து விடும் போல் இருந்தது. அது ஏது நிற்கப் போகிறது? அவள் மனோரதம் ஈடேறுவதற்கு இந்தக் காற்றுமழையெல்லாம் அடையாளமா? எதற்கும் தைரியத்தை மட்டும் யுவதி விடவில்லை. விளக்கொளி அவள் முகத்தினுள்ள ஒரு திடப் பிரதிக்ஞையைக் காட்டியது. உதடுகளில் ஒரு பிடிவாதம்; கண்களில் தீவிர சங்கல்பம். அவள் மணிமேகலா தெய்வத்தின் சிலைமுன்பு செல்லும்போது யார் பார்த்திருந்தாலும் அச்சப்பட்டிருப்பார்கள். வெளியே இயற்கையின் ஆர்ப்பாட்டம்

அவள் பிரயாசைகளைப் பார்த்துப் பரிகசிப்பது போல் இருந்தது. அண்டம் செறிந்து விழுவதுபோல் இடி முழக்கம். நூறு ஆயிரம் தூம்புகளிலிருந்து பொழிவதுபோல் மழைத்தாரை. உள்ளம் திடுக்கிடும் அச்சமயம், அம்மன் சிலைமுன்பு கைகூப்பி நின்றவண்ணம் சித்திரவதி, "ஹே தேவி! எனக்கு விவாகம் வேண்டாம். என் மனம் ஆடவரை வெறுக்கிறது. எனக்கு நேரும் இப்பெரு விபத்தினின்றும் என்னைக் காப்பாய். மணிமேகலா தெய்வமே!" என்று பிரார்த்தித்தாள். சித்திரவதி ஏற்றிய அகல் விளக்கு அணையாமல் நின்று பிரகாசித்தது. தெய்வம் அவள் விரும்பிய வரத்தைத் தந்துவிட்டது. புயல் வெறியையும் சமாளித்ததே அந்த அதிசய தீபம்! சித்திரவதியின் மனோபாரம் நீங்கிற்று. ஒரு தரம் சக்தி வாய்ந்த அந்தத் தெய்வத்தை நமஸ்கரித்துவிட்டு வீடு திரும்பினாள்.

## 3

இன்னும் சீராளன் கடன் மல்லையிலிருந்து திரும்பி வரவில்லை. 'முந்திய தினமே அவனுடைய மரக்கலம் வந்திருக்கவேண்டுமே? புயலில் எங்கேயாவது கப்பல் அகப்பட்டுக்கொண்டதோ?' இப்படியெல்லாம் கடற்கரையில் கூடிய வைசியர்களின் கூட்டத்தில் ஒரு கலவரம் ஏற்பட்டது. அடுத்த தினம் பொழுது புலர்ந்தால் சீராளனுக்குக் கலியாணம். அன்று மாலைவரை பார்த்தும் ஒரு கப்பல்கூட வருவதாகத் தெரியவில்லை. இயற்கை என்னவோ சாந்த ரூபம் கொண்டு விளங்கிற்று.

இதென்ன அதிசயமான மாறுதல்? சித்திரவதியின் இதயம் இப்படித் திக்திக்கென்று அடித்துக்

கொள்வானேன்? சீராளன் அன்று வராத செய்தி, அவன் வரும் கப்பல் சேதம் அடைந்திருக்குமோ வென்ற விபரீதச் சங்கையை அவள் மனத்தில் மூட்டி விட்டது. "ஐயோ தெய்வமே! இப்படியும் என் பிரார்த்தனையைப் புரிந்துகொள்வாயா? என் இஷ்டத் தைப் பூர்த்தி செய்யச் சீராளனை இக்கட்டிற்கு உட் படுத்த வேண்டுமா? இது என்ன சோதனை?" என் றெல்லாம் அவள் பிராணன் அலறிற்று. அடுத்த தின மும் சீராளன் வருவானென்று எதிர்பார்த்தார்கள். ஆனால் அவன் வரவில்லை.

ஒரு மாதமும் கழிந்தது; ஒருவருஷமும் போயிற்று. சித்திரவதியின் பிடிவாதமெல்லாம் இப்போது எங்கே? சீராளனைப் பற்றிய நினைவே அதை எரித்துச் சாம்ப ராக்கிவிட்டது. அவன் பிரேமாஞ்ஜலியைக் கொண்டு வந்து சமர்ப்பித்தபோது பேதை அதை மறுத்தாள். இப்போது அவளுடைய இதயம் அவனுக்காக வெடிக் கிறது. அணு அணுவாக இந்த வேதனையே உருக் குலைத்துவிட்டது. அவள் அழகிய வதனம் வெளுத்து உன்மத்தத்தின் லக்ஷணங்களைக் கொண் டது. வீட்டில் அவளுக்கு இருப்புக் கொள்ளவில்லை. நீலக்கடல் அவளை அழைத்தது. எந்த நேரமும் கடற் கரையிலேயே இந்தத் துர்ப்பாக்கியவதி, சீராளன் வரவிற்காக எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். தன் னையே நொந்துகொண்டு துடித்தாள்.

ஒரு நாள் இம்மாதிரி கடலை வெறித்துச் சீராளனு டைய கப்பலைத் தேட ஊடுருவிப் பார்க்கும்போது அவளுக்குக் களைப்பு மேலிட்டது; உடனே மூர்ச்சை யானாள். பிரக்ஞை வந்ததும், சீராளனின் தாய், தன்னை அணைத்துக்கொண்டிருப்பதைப் பார்த்தாள். அவளு

டைய கண்டம் சேயை இழந்த தாயைப் பார்த்து விம்மிற்று. கோவென்று அலறி, "அம்மா...... இந்தப் பாவியே எல்லாவற்றிற்கும் காரணம். நீர் துயரப்பட வேண்டாம். உம்முடைய சீராளருக்குக் கடலே அடைக்கலம் கொடுத்திருக்கிறது. மீண்டும் அது கொடுத்துவிடும்" என்றெல்லாம் பிதற்ற ஆரம்பித்தாள் சித்திரவதி.

தினம் தவருது இவர்கள் இருவரையும் பார்த்து ஊரார் மிகவும் பரிதாபப்பட்டனர்.

சீராளன் மறைந்துபோய் ஐந்து வருஷங்களும் ஆயின. இனியா வரப்போகிருன்? சித்திரவதியின் சரீரம் எலும்புக்கூடாக விளங்கியது. அவள் முகத்தில் சிரிப்பை யாருமே பார்க்கவில்லை. "சீராளர் வருவார் வருவார்" என்று அவள் கூறுவதை எல்லோரும் ஒரு பைத்தியக்காரியின் பேச்சென்றே கருதினர். ஆனல் இருவர் இதயத்தில் மட்டும் ஒரு வாக்கு, "இது நடக்கும்" என்று சொல்லிக்கொண்டே யிருந்தது.

அது ஒரு நாள் அக்ஷரம் விடாமல் உண்மையாக மாறிற்று. தினந்தோறும் கடற்கரைக்குச் செல்வது போல் ஒரு நாள் சென்று சித்திரவதி கடலைக் கவனிக்கையில் பெரிய மரக்கலம் ஒன்று பட்டினத்தைநோக்கி வருவது தெரிந்தது. சீராளன் வருகிருனென்று சித்திரவதியின் மனத்திற்கு நன்ருகப் பட்டுவிட்டது. அவள் வணிக வீதியில் ஓடிவந்து இந்தச் செய்தியை எட்ட விட்டுத் தன் வீட்டை அடைந்து அதிகப் பூரிப்பைத் தாங்கமாட்டாமல் மஞ்சத்தில் சாய்ந்தாள். உண்மையாகவே ஓர் அழகிய மரக்கலம் பாய்விரித்துப் பட்டினத்துத் துறையை அணுகிற்று. முகத்தில் சிரிப்

புடன் சீராளனும் கப்பலை விட்டு இறங்கினான். அவனுடைய தந்தையும் மற்ற உறவினரும் ஊராரும் அவனைக் கண்டதும் ஆனந்தக் கண்ணீர் பெருக்கினர். தொலைந்துபோன தன் செல்வத்தைக் கண்டதும் அவனுடைய தாய் மூர்ச்சித்துப் போனாள். ஆனால் சித்திரவதிதான் அவனை உடனே பார்க்கக் கொடுத்து வைக்கவில்லை. அவன் தெருவில் போவானோ, ஒருகால் திரும்பிப் பார்ப்பானோ என்ற ஆசையால் சாளரத்தண்டையே சதா சர்வ காலமும் உட்கார்ந்திருப்பாள். அவன் போனால்தானே!

## 4

சீராளன் சொன்ன வரலாறு ஊர் முழுவதும் பரவி விட்டது. அவனுடைய மரக்கலம் புயலில் அகப்பட்டு ஒரு வாரம் திக்கு திகந்தம் தெரியாமல் சுற்றிக் கடைசியில் ஒரு மலையின் சாரலில் வந்து மோதுண்டதாம். ஒரு பலகையின் சகாயத்தினால் அவன் கரையை அடைந்தானும். வந்தடைந்த நாடு பாலித் தீவென்று அங்குள்ளவர்களிடமிருந்து அறிந்து அவர்களுடைய உதவியாலும் தன்னுடைய சாமர்த்தியத்தினாலும் செல்வத்துடன் புதுக் கப்பலில் திரும்பி வந்ததாகக் கூறினான். ஊரார் இதைக் கேட்டு அதிசயித்தனர். எல்லோருடைய க்ஷேமத்தைப்பற்றியும் விசாரித்தான். ஆனால் சித்திரவதியைப் பற்றி மட்டும் அவன் விசாரிக்கவேயில்லை. சீராளன் முன்போல் இல்லை. அவன் முகம் சற்றுக் கடினமடைந்திருந்தது. அவன் முற்றும் மாறினவனாகத் தென்பட்டான்.

அவன் தன்னைக் காணவருவான் வருவானென்று சித்திரவதி வெகுநாட்கள்வரை காத்திருந்தாள்.

ஆனால் அவன் வரவேயில்லை. சித்திரவதியின் மனம் துடிக்க ஆரம்பித்தது. தற்செயலாக இந்திரன் கோயிலுக்குச் சென்றபோது அவனைத் தொலைவிலிருந்து அவள் பார்க்க நேரிட்டது. சித்திரவதியைக் கண்டதும் அவன் திடுக்குற்றான். அவளுடைய பேய் வடிவம் அவனுக்கு அருவருப்பை அளித்தது. சீராளனுடைய நடையுடை பாவனைகளும் சித்திரவதிக்கு முற்றும் அதிசயமாகத் தோற்றின. களங்கமற்று, ஒரு சமயம் பால் வடிந்த அவன் முகம், இப்போது கபடமே குடிகொண்டதுபோல் விளங்கிற்று "உலக அனுபவம் ஏற்பட்டதனால் இப்படி மாறிவிட்டாரோ?" என்றெல்லாம் சித்திரவதியின் மனம் ஆராய அலைந்தது. "அவர்மீது என்ன தவறு? நான்தான் கொடியவள்" என்று கண்ணீர் சுரக்க அந்தத் துர்ப்பாக்கியவதி தன்னைச் சபித்துக்கொண்டே கோயிலை விட்டு வெளியே வந்தாள்.

சீராளனை நேரில் கண்டு பேசாமற் போனால் அவள் இதயம் வெடித்துவிடுபோல் இருந்தது. "ஒரு வேளை என்மீது அவருக்குக் கோபமோ? அதனால்தான் வரவில்லையோ?...சீராளா! நான் மாறிவிட்டேனே...உனக்காகவே இந்த நீண்ட வருஷங்கள் - உன்னை மணக்கவே என் வாடிய உயிரை இன்னும் வைத்துக்கொண்டிருக்கிறேன்....நீ திரும்பிப் பார்க்க மாட்டாயோ? நீ காதலை வேண்டி என்னை அணுகும் போது நான் உன்னை வெறுத்தது பிசகுதான். அதற்குப் பிராயச்சித்தம் செய்தாகிவிட்டது. இதோ பார், என் சரீரத்தை..." இப்படியெல்லாம் விரக ஜ்வாலை அவளை எரிக்கத் தொடங்கியது.

பூம்பட்டினத்தில் ரமணீயமான பொழில் ஒன்று உண்டு. அங்கே சீராளன் அடிக்கடி வருகிறனென்று சித்திரவதி கேள்விப்பட்டிருந்தாள். அங்கு அவனைச் சந்திப்பதென்று தீர்மானித்துச் சென்றுள். அவனை அங்கே காணவில்லை. அவன் உட்காரும் சலவைக் கல் மேடையிலும் காணவில்லை. மனம் உடைந்தவளாய்ப் பொழிலைச் சுற்றி வரும்போது ஒரு காட்சி அவள் இதயத்தைக் கோடிக்கணக்கான அம்புகள் துளைப்பதுபோல் வருத்தியது. பூங்கொத்துக்கள் செறிந்த ஒரு புன்னைமர நிழலில் சீராளன், சம்பக வல்லி யென்ற மற்றெரு வைசியப் பெண்ணுடன் காதல் புரிந்து அவளுடைய ஒவ்வோர் அவயவங்களையும் புஷ்பாபரணங்களினுல் அலங்கரித்து, அழகு பார்த்துக்கொண்டிருந்தான்.

சித்திரவதியின் கண்முன் கடற்கரையிலுள்ள மணிமேகலையின் ஸந்நிதானத்தில் ஏற்றிய தீபம் வந்து நின்றது. அவள் மனத்திற்கு அந்தப் பழைய நினைவு எவ்வளவோ ஆறுதலை அளித்தது. மணிமேகலா தெய்வத்தின் வரம் வீண் போகவில்லை. சித்திரவதி துறவறம் பூண்டாள்!

---




# கண் இழந்த காதல்

# கண் இழந்த காதல்

தஞ்சாவூரிலுள்ள அதிசயங்களான சோழன் எழுப்பிய பெரிய சிவாலயத்தையும், அங்கே கடைசியாக ஆடம்பரத்துடன் ஆட்சிநடத்திய சிவாஜி வம்சத்தைச் சேர்ந்த மகாராஷ்டிர அரசர்களின் அரண்மனை, மாட மாளிகைகள், சரசுவதிமகால் புத்தகசாலை முதலிய இடங்களையும் பார்க்கச் சென்றிருந்தேன். மஹாராஷ்டிர அரசர்கள் வைத்துப்போன இரு சின்னங்களே என் கவனத்தை முழுவதும் இழுத்தன. அவை அரண்மனையிலுள்ள அந்தப்புரமும், ஐரோப்பியர் எடுத்துக்கொண்டு போனபின் மிகுந்திருக்கும் அரிய நூல்களையுடைய புத்தகசாலையுமே. மகாராஷ்டிர மன்னர்கள் வீற்றிருந்து ஆட்சி நடத்திய சிங்காதனம் இப்போது தூசுபடிந்து, அதன் பஞ்சணை பல இடங்களில் கிழிந்து கிடந்தது. பெரிய மகாவில் ஒரு ராஜ தம்பதியின் எலும்புக் கூடுகள் கண்ணாடி பீரோவில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்தன. அவர்கள் ஆண்ட நாடு இப்போது வெறும் எலும்பும் தோலுமாகத்தானே நிற்கிறது!

அரபிப் பரிகள் வரிசையாக நின்ற அரண்மனை லாயங்கள் இப்போது வெறிச்சென்றிருந்தன. யானைகள் ஒரு சமயம் உலாவிய விசாலமான மேடைகள் இப்போது பாசிபடிந்து விளங்கின. என்னை மிகவும் வருத்திய காட்சி, அந்த அழகிய அந்தப்புரமே. இவ்விடத்தில்தானே ஒரு சமயம் பொற்சிலம்புகளை அணிந்த மராட்டிய மங்கையர் சாளரங்களின் கண்

ணறை மூலமாகத் தம் அரசர் கொலு வீற்றிருக்கும் அழகைக்கண்டு புளகித்தனர்? இந்த ரகசியமான விடுதியில் அல்லவோ, சிற்றின்பப்பிரியரான மகா ராஷ்டிர மன்னர் ஒருவர் தம் வாழ்க்கை நாடகத்தை நடத்தினர்! எத்தனை நாரீமணிகள் விடுதலை பெருமல் புஷ்பம் போன்ற அவர்களுடைய இதயங்கள் வதங்கத் துஞ்சினர்களோ? அவர்களுடைய மர்ம வேதனையை இங்குள்ள கற்சுவர் சொல்லுகிறது.

பொழுதும் சாய்ந்துகொண்டே வந்தது. சோழ அரசர்களின் சௌந்தரிய சிருஷ்டியான பிருகதீசுவரர் ஆலயத்தை அடைந்தேன். எனக்கோ களைப்பு. ஆனாலும் அந்தப் பிரம்மாண்டமான கோயிலில் உள்ள சிற்பங்களைக் காணப்போகும் ஆவலில் அதை நான் பொருட் படுத்தவில்லை. பிருகதீசுவரர் இருக்கும் கோயில் 'பிருகத்' (பெரிய) தாகவே இருந்தது. பிராகாரங்களும் பெரியவை; மிகவும் அகலமானவை. தூண்கள், துவார பாலகர்கள் உருவம் யாவும் பெரிய உருவில் அமைந்திருந்தன. கல்நந்தியும் பெரிய உருவே. சுவாமியைத் தரிசிக்கக் கோயிலினுட் புகுந்தேன். நான் சென்ற சமயம் கோயிலில் வெகு சிலரே இருந்தனர். மின்சார விளக்குகள் இருந்தும் கோயிலில் அந்தகாரமே நிறைந்திருந்தது. உள்ளே ஒரு பெரிய கர்ப்பக்கிருகத்தில் பிரம்மாண்டமான வடிவுடைய பிரகதீசுவரரின் லிங்க மூர்த்தியைப் பார்த்தேன். ஸ்தம்பித்து நின்றேன். அரியும் அயனும் தேடியும் காணுத அந்தச் சிவக்கொழுந்தின் கோடியில் ஒரு பங்கை அங்கே கண்டேன். தரிசனம் செய்துவிட்டுத் திரும்பினதுதான் தாமதம்; சந்நிதியிலுள்ள விளக்குகள் யாவும் டப்டப்பென்று அணைக்கப்

பட்டன. ஏன் இவ்வளவு சிக்கனம்? 'ஈசுவரன்தான் சுயம்பிரகாச ஞாயிற்றே; அவன் வாழும் ஆலயத்திற்கு விளக்கு எதற்கு?' என்ற எண்ணமோ அங்குள்ளவருக்கு! ஒவ்வொரு சந்நிதியிலும் கதவு மூடப்படும் ஓசையைக் கேட்டேன். நான், 'இது ஏதடா! அம்பாள் பெரியநாயகியின் தரிசனம் கிடைக்காமற் போய்விடப் போகிறதே' என்று வேகமாகச் சற்றுத் தொலைவில் இருக்கும் அம்பிகையின் சந்நிதிக்கு வந்து பார்த்தால் கதவு தாழிடப்பட்டிருந்தது. மனத்தில் தேவியை ஸ்மரித்துவிட்டு கோயிலைவிட்டு வெளிவரக் கிளம்பினேன். வரும் வழியில் பிராகாரங்களிலுள்ள மண்டபங்களிலும் சிறிய கோயில்களிலும் திகழும் சிற்ப அற்புதங்களைப் பார்த்துக்கொண்டே வந்ததால் சற்று நாழிகை ஆகிவிட்டது.

நான் கோபுரவாயிலை அடையும்போது கோயிலில் இருட்டே ஆட்சி புரிந்தது. எங்கோ ஒரு மூலையில் அரசமரத்தின் இலைகள் சலசலவென்று சப்தித்தன. மண்டபங்களில் சடசடவென்று கூட்டமாகத் துரிஞ்சல்கள் பறந்து வட்டமிடும் பேரிரைச்சல். கோபுரவாயிலிலுள்ள பூதாகாரமான கதவுகள் தாழிடப்பட்டிருந்ததை உணர்ந்தேன். 'தன்னந்தனியாக இருக்கிறோமே' என்ற எண்ணம் வந்ததும், என் முதுகில் குளிர் எடுத்தது. உள்ளங்கைகளும் கால்களும் சில்லிட்டன. நடக்கும் சக்தியை இழந்தேன். சிறு வயதில் கேட்ட பேய்க்கதைகளின் நினைவுகள் என் மனத்தைப் பற்றிக்கொண்டன. எதைப் பார்த்தாலும் எனக்குக் கிலி ஏற்பட்டது. அந்தப் பெரிய நந்தி நகர்ந்து என்னை நோக்கி வருவதுபோல் பிரமை ஏற்பட்டது. துவாரபாலகர்கள் பிதுங்கிய விழிகளுடன்

என்னை ஏற இறங்கப் பார்ப்பதாக என் நினைவில் பட்டது. இவையெல்லாம் இருள் செய்யும் கூத்தே யானாலும் என்னால் பயப்படாமல் இருக்கமுடிய வில்லை. பிராகாரத்தின் ஒரு மூலையிலிருந்து, "ஐயோ ...ஓ...ஓ...!" என்று யாரோ அழும் குரல் தெளி வாகக் கேட்டது. 'இதென்ன! யாராவது, எந்த ஸ்திரீயாவது என்னைப்போல் இங்கே அகப்பட்டுக் கொண்டு தவிக்கிறாளோ?' என்று எண்ணினேன். சப்தம் வரவரச் சமீபமாகக் கேட்டது. ஏன்? யாரோ காலில் சதங்கைகள் அணிந்துகொண்டு, 'கல் கல்' என்று நடந்து வருவதைத் தெளிவாகக் கேட்டேன். என் பிராணன் பாதி போய்விட்டது. நான் கூவினால் யார் வரப்போகிறார்கள்? 'சே! நாம் முன்னரே இக் கோயிலைப்பற்றி நன்றாக விசாரியாமற் போய்விட் டோமே' என்று நான் வருந்தி என்ன பயன்? என் மூளையில் ஓவென்று என்னவோ இரைந்தது.

'சலசல......,கடகட...ஜல்...ஜல்.......உச்...உச்' என்பனபோன்ற விசித்திர ஓசையுடன், "ஐயோ... ஓ...ஓ!...நீங்கள் எங்கே இருக்கிறீர்கள்...............?" என்று யாரோ அழுதுகொண்டு வரும் சப்தம் கலந்து என் செவியில் அப்பொழுதும் கேட்டுக் கொண்டிருந் தது. என் கண்முன்னே மங்கலான ஒளியையுடைய ஒரு சூக்ஷ்மமான உருவம் வந்து நின்றது. "ஐயோ... நீங்கள் எங்கே...?" என்று கூறி அழுவது அதுதான். 'உச்...உச்' என்று கேட்கும் ஓசை அது விடும் பெரு மூச்சே! 'சல சல' என்று அதன் மெல்லிய ஆடை காற்றில் அசைந்தது. அது அணிந்திருக்கும் சதங்கை தான் அந்தக் 'கல்' என்ற சப்தத்தைச் செய்தது.

கோயிலின் மதிலுக்குமேல் மங்கலாகப் பாதிமதி தோன்றியது. இருட்டாக இருக்கும்போது எனக்கு அவ்வளவு பயமாக இல்லை. இந்த நிலவு எனக்கு அதிக மயிர்க்கூச்சை விளைவித்தது. ஆனாலும் எனக்கு ஆவல் ஏற்பட்டது. நான் என் அச்சத்தை உதறி விட்டு எழுந்து நின்றேன். என் உடலில் சற்று உஷ்ணம் பரவிற்று. எனக்கு அது எதற்காக அழுகிற தென்று விசாரிக்கப் பேராவல். "யார் நீ?" என்று நான் கேட்க வாயெடுத்தேன். ஆனால் அந்த வார்த்தைகள் தொண்டையிலேயே நின்றுவிட்டன.

அப்போது அந்தச் சூக்ஷ்ம உருவம் என்னை அணுகியது. என் விழிகள் அந்த உருவைப் பார்த்தபடியே நிலைத்துவிட்டன. சூக்ஷ்மமான ஒளித்திரையினுள் அந்த உருவம் ஓர் எலும்புக் கோவையாகவே தோன்றியது. இதை நான் கண்ணால் பார்த்தேன். பேயின் கூந்தல் கால்வரை புரண்டுகிடந்தது. அமானுஷ்யமான ஓர் ஒளி அதன் உடலைச் சுற்றிப் பரவியிருந்தது. கண்ணிருந்த இடத்தில் இருண்ட குழிகளே காணப்பட்டன. அந்த நிழலுருவம் என்னைப் பார்த்து, "யாரப்பா நீ? பயப்படாதே, நான் உன்னை விழுங்க வரவில்லை. நான்தான் ஒருவருக்குத் தீராத் துன்பத்தை இழைத்துவிட்டேனே! இனியும் மனிதரை நான் ஏன் துன்புறுத்தப் போகிறேன்? நீ நில்; என் துன்பக் கதையைக் கேள். இதுவரை யாரும் அதைக் கேட்டதில்லை. இந்தப் பிரதேசத்தில் நான் இருநூறு வருஷங்களாக மனத்தில் துயரத் தீப்பட்டு அலைகிறேன். இன்றைக்கு என் குறையைச் சொல்லிக் கொள்ளச் சந்தர்ப்பம் ஏற்பட்டது. நீ தற்செயலாக இங்கு வர நேரிட்டதே; அது என் நல்லகாலம்.

அப்பா, என்னை வாட்டும் வேதனையைச் சொல்கிறேன் கேளேன்" என்றது. நான் பதிலே சொல்லவில்லை; மரம்போல் உணர்வற்று அது சொல்லப் போவதைக் கவனித்துக் கொண்டிருந்தேன்.

"நீ யாரோ அப்பா; இப்போது உனக்கு வெறுப்பையும் அச்சத்தையும் தரும் இந்தப் பேயுடல் ஒரு சமயம் அழகின் இருப்பிடமாக இருந்தது. அந்தக் காலத்தில் எனக்குச் சரிசமானமான லாவண்ணியமுடையவர்கள் எவருமே ஜகத்தில் இல்லை. இன்று கடினமான எலும்புகளையுடைய என் சரீரம் ஒரு சமயம் பூவினும் மிருதுவாக விளங்கியது. என்னைக்கண்டு மோகியாத ஆடவனே இல்லை. ஐயோ! ஒரு தபஸ்வியின் உள்ளத்தைக் கவர்ந்து அவருக்குச் சர்வநாசத்தையும் இழைத்துவிட்டது. அந்தப் பாழும் வடிவம். அவரைத்தான் இந்த ஜகமுழுவதும் தேடியலைகிறேன். ஆனால் அவர் மீண்டும் இவ்வுலகில் தோன்றுவாரா...? என்னுடைய துக்கத்தை உன்னிடம் சொல்லி ஆற்றிக் கொள்கிறேன். இப்போது இந்த உருவைக் கண்டு யாரும் மோகிக்கமாட்டார்கள். நான் தூசுக்கும் கேவலமாகிய பேய் ஜன்மமாகத் திரிகிறேன். எனக்குச் சாந்தியே கிடையாது.

"என் பெயர் அகல்யாபாய். இந்த ஊரை ஆண்ட துகோஜி மகாராஜா என்மீது உயிராக இருந்தார். மராட்டி அரசர் என்னுடன் இன்புற்று இருப்பதற்காக ஒரு நாளைக்கு நூறுதடவை தம் முக்கியமான ராஜகாரியங்களையும் விட்டுவிட்டு ஓடி வருவார். என்னைப் பலவிதமாக அலங்கரித்து அழகு பார்ப்பார். அகப்படாத பொருள்களை நான் விரும்பியவுடனே அவர் தேடிக் கொண்டுவந்து கொடுப்

பார். என் தாசானு தாசராயிருந்தார். அவருடைய பட்டமகிஷியைக் காட்டிலும் அதிக சிறப்போடு நான் அவருடைய ஆதரவில் அரண்மனையில் இருந்தேன்.

"அவர் சோழன் கட்டிய இந்தக் கோயிலைச் சீர்திருத்தினார். திருப்பணி யாவும் நடந்தேறி, கும்பாபிஷேகமும் முற்றுப்பெற்றது. அந்த வைபவத்தைக் காணுவதற்கு ராணிகள் போயிருந்தனர். நான் மட்டும் போகவில்லை. அதனால் அரசருக்கு என்மேல் சிறிது வருத்தம். நான் இராமற்போகவே அவருக்கு விழாவில் இருப்புக் கொள்ளவில்லை. நானோ சந்தடியை வெறுப்பவள்; தனிமையையே விரும்புபவள். இந்தக் காரணத்தை அறிந்த அரசர் என்னை வற்புறுத்தாமல் விட்டுவிட்டார். வேறொரு காரணம்; எனக்குப் பட்டமகிஷி, ராணிகள் இவர்களுடன் கோவிலுக்குச் செல்லப் பிரியமில்லை. அகந்தை என்று எண்ணிக்கொள்வாய்; ஆம்; அதுதான். அரசர் என் காலடியில் இருக்கும்போது எனக்குக் கிறுக்கேறியது.

"உற்சவ ஆடம்பரம் யாவும் அடங்கிவிட்டன. மஹாராஜா ஒரு நாள் என்னுடன் இருக்கும்போது, 'நான் பிருகதீசுவரரைப் பார்க்கவேண்டும்; என்னை அழைத்துக்கொண்டு போகிறீர்களா?' என்று அவரைக் கேட்டேன். அரசர் சந்தோஷத்தினால் குதித்தெழுந்து, 'வா. இன்றே உன்னை அழைத்துச் செல்கிறேன். நீ ஒருத்தி மட்டும் வராமல் இருந்தது எனக்குப் பெரிய மனக்குறையே. இப்பொழுதாவது உன் மனம் குளிர்ந்ததா?' என்று கூறி என்னைத் தழுவிக்கொண்டார்.

"அழகிய சிவிகை என் மாளிகை வாயிலில் வந்து நின்றது. பல நீண்ட கயல்விழிகள் நானும் அரசரும் ஏறிச் செல்வதைப் பார்த்து வெடித்தன. அரசரும் நானும் கோயிலுக்குச் செல்கிறோமென்பது யாருக்கும் தெரியாது; திடீரென்று நினைத்துக்கொண்டது தானே? கோயிலில் மனித நடமாட்டம் அதிகமாக இல்லை. சிவிகைத் திரையின் வழியே பிராகாரத்தில் நிகழும் அலங்காரங்களைப் பார்த்துக்கொண்டே வந்தேன். எங்கள் பல்லக்கு சுவாமி சந்நிதிக்கு எதிரேயுள்ள மண்டபத்தில் நிறுத்தப்பட்டது. நான் வேகமாகக் கோயிலினுட் பிரவேசித்தேன். என் முகம் திரையிடப்பட்டிருந்தது. என்னை எந்தக் கண்களும் கவனிக்கவில்லை. என் போர்வையைக் களைந்து விட்டேன். நான் கர்ப்பக்கிருகத்தை வலம் வரும் போது யாரோ ஒருவர் தம்புராவை மீட்டிக்கொண்டு அழகாகச் சிவபெருமானைக் குறித்துக் கீர்த்தனங்கள் பாடுவது கேட்டது. ஆஹா! என்ன தெய்விகமான சாரீரம்! எந்த ஆடவனும் அவ்வளவு கண்ட சுத்தியுடன், சுகசாரீரத்துடன் பாடி நான் கேட்டது இல்லை. அந்த இன்னிசையின் மோக மந்திரத்தில் என் மனம் வசப்பட்டது. பிருகதீசுவரர், அம்பிகை, அரசர் யாவரையும் மறந்தேன். கானம் வரும் திக்கையே நோக்கி நடந்தேன். பின்னால் சற்றுத் தொலைவில் அரசர் நிதானமாக வந்துகொண்டிருந்தார். பரபரவென்று சந்நிதானத்திற்கு எதிரே வந்து பார்த்தேன். ஓர் அழகிய யுவபுருஷர் அந்தத் தேவ கானத்தை இசைத்துக் கொண்டிருந்தார். சுதா தரங்கிணி என்ற ராகத்தை வெகு சிலரே பாட நான் கேட்டிருக்கிறேன். ஆனால் இம்மாதிரி அதை ஜீவகளையுடன் இசைப்பவரை நான் கண்டதில்லை.

* 'மோஹேன கிம் ப்ராம்யஸி முக்தமதே'

"பாட்டின் அர்த்தத்தை நான் எதற்காகக் கவனிக்கப் போகிறேன்? பாடகரையும் அவருடைய குரலோசையையுமே மெய்ம்மறந்து கவனித்துக் கொண்டு நின்றேன். நான் இந்தமாதிரி இளைஞரைப் பார்த்துத் மெய் மறந்து நிற்பதை என் நல்லகாலம் அரசர் பார்க்கவில்லை; சட்டென்று என்னை நான் திடப்படுத்திக்கொண்டேன். ஆனால் என் கள்ள நெஞ்சம் மட்டும் இதைச் செய்யாமல் இருக்கவில்லை: போகும்போது அந்தக் காயகரின்மீது உராய்ந்தபடி என் மேலாடையை வீசிச் சென்றேன். அந்தச் சுந்தர புருஷர் என்னை நோக்கினார். இருவருடைய கண்களும் - ஏன்? இருவர் மனமும் - அக்கணமே இழைந்தன. அந்த அகலமான நேத்திரங்கள் கூறும் வார்த்தையை என் உள்ளம் அறிந்து கொண்டது. அதே தருணம் அரசர் என் பின்னால் வந்து விட்டார். நான் சற்றுத் தயங்கினதை அவர் கவனித்தாரோ என்னவோ? அவர் என்னை நோக்கி, 'அகல்யா' நீ எனக்காகவா நின்று கொண்டிருக்கிறாய்?' என்றார். எனக்கு இருந்த மயக்கத்தினால் நான் மறுமொழி தரவில்லை. 'உனக்கு என்ன உடம்பு? என்று மிகப் பரிவுடன் கேட்டார். 'ஒன்றுமில்லை இங்கு என் மூச்சுத் திணறுகிறது. காற்றோட்டமான இடத்திற்கு என்னை அழைத்துச் செல்லுங்கள் என்னவோ மாதிரி இருக்கிறது' என்று பொய்ச்சாக்குச் சொன்னேன். பெண்களுக்கு உள்ள சமயோசித புத்தியைத்தான் சொல்ல வேண்டியதில்லையே! கபடமற்ற அரசர் என்னை நம்பிவிட்டார். நான் உள் பிரா

* 'பித்துப் பிடித்து ஏன் அலைகிறாய்? பேதை நெஞ்சமே'

காரத்தை விட்டு வரும்போது அந்தத் திவ்வியகானம் என் உடலில் அமுத அலைகளை எழுப்பியது. நான் அடிக்கடி உவகையின் அதிர்ச்சியால் துடித்துக் கொண்டிருந்தேன்.

"'மோஹன கிம் பிராம்யஸி முக்தமதே' என்ற பாட்டு என் காதில் ஒலித்துக்கொண்டே இருந்தது. அம் யோக வசமாகி என் மனம் வெறிபிடித்து அலைந் தது; அந்த ரூபவானின்மீது அடங்காத காதல்கொண் டது. அதற்கப்புறம் சில நாட்கள் சென்றன. என்றும் போல என் வாழ்க்கை ஊர்ந்து சென்றது. என்னு டைய மனக்கொடி மட்டும் நான் கோயிலில் கண்ட அந்தத் திவ்வியகாந்தனைப் பற்றத் தாவியது.

"ஒரு நாள் என் அழகைக் கண்டு மகாராஜா என்மீது அதிக ஆசை கொள்ளவேண்டிச் சேடி என் கூந்தலைப் புதுமாதிரியாக முடித்துப் பட்டாடைகளி னுல் என்னை அலங்கரித்தாள். என் உடல் அரசனுக்கு அர்ப்பணமாகத் தயாராயிருந்தாலும் என் மனம அதை வெறுத்தது. அரசனுடைய உறவு எனக்குப் பிடிக்கவில்லை. என் அறையின் சாளரத்தினின்றும் பார்த்தால் இயற்கையின் காட்சி அழகார்ந்து விளங் கும். என் மனக்கிலேசத்திலிருந்து மீள நான் சற்று வெளி யுலகைப் பார்த்து நின்றேன். என்ன ஆச்சரி யம்! என் மனத்திற் குடிகொண்டவர் அங்கே வீதியில் வந்துகொண்டிருந்தார். அவர் அல்லவோ புருஷர்!

"மாரவேளே ஒருவேளை மாறுவேடம் புனைந்து என்னை மயக்க வந்திருக்கிறுரோ? எதற்காக இவர் இம்மாளிகையின் அருகிலேயே அலைகிறுர்? இவரும் என் மனத்தில் செல்வதைக் கண்டுகொண்டிருப்

பாரா ?' என்றெல்லாம் எனக்குச் சம்சயம் ஏற்பட்டது. அவர் அண்ணாந்து பார்த்தார். என் முகத்தில் என்னை மீறி முறுவல் விளையாடிற்று. அவரும் சிரித்தார். என் அறியாமையைக் கண்டா, அல்லது என் காதலை அங்கீகரித்தா ?— இப்படியெல்லாம் என் மனம் ஊசலாடி ஒரு நிதானத்திற்கு வந்தது. என்னுடைய மனத்திலுள்ளதை அவரிடம் எப்படியாவது சொல்லி விடுவதென்று பரபரவென்று தோழியைக் கூப்பிட்டு, 'அடி, இவரை நன்றாகக் கவனித்துக்கொள். இதோ நான் ஒரு லிகிதம் எழுதிக் கொடுக்கிறேன். அதை இவரிடம் சேர்ப்பிக்கவேண்டும். இது யாருக்காவது தெரிந்தால் நீயும் நானும் அரசருடைய வாளுக்கு இரையாவோம்' என்று சொல்லி லிகிதம் வரைந்தேன்:

'என் மனத்தைக் கவர்ந்தவரே ! நீங்களும் என்னைப் போலவே மாரனின் மந்திரத்தால் கட்டுண்டு தவிக்கிறீர்கள். இதை நான் அறிவேன். உங்களை நான் அடையாது அரைக்கணமும் உயிர்தரியேன். நாளை இரவு என் மாளிகையின் பின்புறம் இருந்தால் என் தோழி உங்களை என்னிடம் அழைத்து வருவாள். இது ஏதாவது சூழ்ச்சியோவென்று எண்ணவேண்டாம்; உங்களைக் காண இந்த அரண்மனைப் பஞ்சரத்தில் ஒரு பறவை சிறகை அடித்துக் கொள்கிறது. உங்களுக்கு யாதொரு கெடுதியும் ஏற்படாது. அரசர் நாளை தஞ்சையில் இருக்கமாட்டார். நீங்கள் வரவேண்டும்.'

"தோழிக்கு ஒன்றுமே தோன்றவில்லை. அவளுக்கு இவையெல்லாம் அதிசயமாகத்தானே இருக்கும்? என் நடத்தையில் இன்று அல்லவோ அவள் புதிய மாறுதலைக் கண்டாள்? அவள் எனக்கு அந்தரங்க

மானவள். நான் கட்டளையிட்டபடியே என் பிரேம லிகிதத்தை அந்த ரூபவானிடம் கொடுத்தாள். இதையும் என் கண்ணாலேயே பார்த்தேன். அவர் அப்போது என்னைப் பார்த்த நோக்கில் எவ்வளவோ அர்த்தம் இருந்தது. என் பிரேமாஞ்ஜலியை அங்கீகரித்துக் கொண்டார். அந்தச் சந்தோஷத்தினுல் நான் சற்று இன்பக்கனவுகள் கண்டேன்.

"என் மாளிகைக்கு வர ஒரு கள்ள வழி உண்டு. அடுத்த நாள் இரவு என் சயன அறையில் அந்தச் சுந்தர புருஷர் தோன்றினுர். நான் அடைந்த பூரிப்பு இவ்வளவு அவ்வளவல்ல. சுலபத்தில் இக்கனி எனக்கு அகப்பட்டுவிட்டதே யென்று அவரை வலிய அணைத்துக்கொள்ள ஓடினேன். ஆனுல் என்னவோ ஒன்று என்னைத் தடுத்தது. அவருடைய சரீரத்தை என் போன்ற ஒரு துரோகி தொடக்கூட தகுதியற்றவளாயிற்றே! நான் என்னை அடக்கிக்கொண்டேன். அந்தத் திவ்விய ரூபவான் என்னெதிரே களங்கமற்று நின்ருரே யொழிய வேறு எத்தகைய மகா பாதகத்திற்கும் ஆளாகவில்லை. தவறு செய்தவள் நான்தான். நாங்கள் இருவரும் ஒருவரை யொருவர் பார்த்தபடியே இருந்த சமயம் எனக்கு மிகவும் பழக்கமான அரசர் வரும் காலடிச் சப்தம் கேட்டது. 'ஐயோ! இதென்ன என் மனேபீஷ்டம் இன்னும் நிறைவேறவில்லையே! என் சுகத்தைப் பாதியில் கெடுக்க இப்படியும் விதி ஏற்படுமோ?' என்றெல்லாம் நொந்து புலம்பினேன். ஆனுல் அரசர் வந்துவிட்டால் தலை போய்விடுமே என்று என் மனக் கள்வரைச் சாளரத்துத் திரையின் கொய்சகத்தில் மறைந்துகொள்ளச் சொல்லிவிட்டேன். அரசர் என் அறைக்குள்வருவ

தற்குள் நான் தலைவலியால் தவிப்பதுபோல் நடித்துப் படுக்கையில் புரண்டுகொண்டிருந்தேன். அவர் என் நடிப்பை உண்மை என்றே நம்பிவிட்டார். சிறிது என் தலையைப் பிடித்தார்

“ ‘ஏன் இப்படிச் சாளரத்தை அடைத்து வைத்திருக்கிறாய்? காற்று நுழையட்டுமே! அது உன் தலைவலியை எவ்வளவோ குணப்படுத்தும்’ என்று சொல்லிச் சாளரத்தைத் திறக்கச் சென்றார். அவர் திரையைத் தொடும்போது என் அந்தரங்கப் பிரியர் மீது அவர் கரம் பட்டது. ‘இது, யார், ஆள் இங்கே?’ என்று சினமும் ஆச்சரியமும் ஒன்று சேர்ந்து அரசர் கேட்டார். ‘உம்...உம்...’ என்று தலைவலியில் ஈடுபட்டிருந்தேனே யொழிய அவருக்குப் பதில் கூற எனக்கு முகம் இல்லை. அவர் என்னுடைய தோள்களைக் குலுக்கி, ‘அகல்யா! இங்கு ஆள் எப்படி வந்தான்? இவன் யார்?’ என்று உக்கிரமாகக் கேட்டார். ‘யார்? எனக்கு ஒன்றும் தெரியாதே! இவன் யாரோ? இங்கு எப்படி வந்து புகுந்துகொண்டானோ தெரியாதே! ஐயோ, அம்மா, என் தலையை உடைக்கிறதே’ என்று பாசாங்கு செய்தேன். அரசர் தம் உடைவாளை எடுத்து என் மனத்திற்கு இனியவரை வெட்டி வீழ்த்த முனையும்போது நான் அதை மௌனமாகக் கவனித்துக் கொண்டிருப்பேனா? ‘ஐயோ வேண்டாம். அரசே! உம்முடைய வீரவாளைக் கேவலம் என் அகத்தில் புகுந்த கள்ளனைக் கொல்லவா உபயோகிக்கவேண்டும்?’ என்று சொல்லி அவருடைய கரத்தைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டேன். அரசர் பெண்பித்தரானதால் என் கபட மொழிகளை நம்பிவிட்டார். காவலாளியைக் கூப்

பிட்டு, ‘இந்தக் கள்ளனின் கண்களைக் குத்திவிடுங்கள்’ என்று ஆக்ஞாபித்தார். ‘ஐயோ! என்ன கொடூரமான கட்டளை! கடைசியில் இப்படியா செய்துவிட்டேன்! என்னுடைய ஆருயிர்க்காதலரின் அழகிய கண்கள் என்றுமே பார்வை இழந்துவிடுமே! என் மோகமே நிரபராதியான இவருக்கு இந்த இன்னலை விளைவித்திருக்கிறது; சண்டாளியானேன். என்னைக் காப்பாற்றிக் கொள்ள முயன்றேனே யொழிய இவரை என்னால் காப்பாற்ற முடியாமல் போய்விட்டதே’ என்றெல்லாம் என் மனம் புண் பட்டுத் துடித்தது.

“அந்த யுவ புருஷர் போகும்போது சொன்ன வார்த்தைகள் இன்னும் என்னைச் சுட்டுக் கொல்கின்றனவே! ‘ஹே அபூர்வசுந்தரி! உன் சுகத்தை நான் கொள்ளை கொள்ள வந்தேன். அதற்கு வேண்டிய தண்டனையும் இதோ அடையப் போகிறேன். ஈசுவரனை நினைத்த இந்த மனம் மோகாந்தகாரத்தில் மூழ்கினதால் அல்லவோ இக்கதி நேரிட்டது? இந்தக் கண்கள்தாமே அத்தகைய பாபத்திற்குக் காரணபூதமாக நின்றன; அவை அவிந்து போவதேமேல். என் இறைவனை இனி நான் என்றுக் காண்பேன்’ என்றார். இந்த வசனங்கள் ஆயிரம் ஈட்டிகள்போல் வந்து என்னைப் பாதிக்கின்றனவே! நரகத்தின் தீயும் இப்படி எரிக்காது.

“ஒரு வருஷம் கழிந்தது. வரவர என் அழகு குன்ற ஆரம்பித்தது. அரசர் எனக்கு ஏற்பட்ட இந்த க்ஷய ரோகத்தை நிவர்த்திக்க எத்தனை வைத்தியர்களிடம் என்னைக் காட்டினார்! ஆனால் மன நோய்க்கு எங்கேயாவது மருந்துண்டோ? எனக்குச் சரீரத்

தின் உபாதி அதிகமாயிற்று. ஒரு நாள், அமுத கிரணங்களை வீசும் பூர்ணிமை இரவு. அன்று, நான் வெகுநாட்களுக்கு முன்பு கேட்ட ஒரு கண்டத்துவனி நடு நிசியில் எங்கிருந்தோ என் காதில் வந்து விழுந்தது. ஐயோ! அந்தக் குரலில்தான் என்ன துயரம்! அந்தத் திவ்விய கானம் என் பாழும் மனத்திற்கும் ஓர் அமைதியைத் தந்தது. அந்த அபூர்வ கீர்த்தனையின் மாதுரியம் என் பிணியைத் தீர்த்துவிட்டது:

* 'ஆநந்த ரூபோஸ்மி அஹம்
நித்யானந்த ரூபோஸ்மி'

"அந்த ஸம்ஸ்கிருத இசை என்னை இழுத்தது. என் சாளரத்தினின்று நான் கீழே குதித்துவிட்டேன்; அவ்வளவுதான். இதோ இந்தப் பேய்வடிவாக இத்தனை வருஷங்களாகத் திரிகிறேன் இன்று உன்னைச் சந்திக்கவே நான் என அந்தரங்கத்தை உனக்கு வெளியிட்டேன். என் வருத்தம் எவ்வளவோ தீர்ந்துவிட்டது. மீண்டும் அம்மகாநுபாவர் இவ்வுலகில் தோன்றுவாரோ என்று எதிர்பார்த்தேன். ஆனால் நித்தியானந்த நிலையை அடைந்தவருக்கு ஜன்மம் ஏது? அந்த மகானைத் தேடித்தான் அலைகிறேன். என்று என் பூத ஜன்மம் நீங்குமோ அறியேன். எத்தனை நரகத் தீயில் நான் குளித்துப் புனிதமாக வேண்டுமோ!"

இவ்வாறு தன் கதையைச் சொல்லி நீண்ட பெருமூச்சு விட்டது என்முன் நின்ற சாயாரூபம். கொஞ்சங் கொஞ்சமாக அது மறைய ஆரம்பித்தது.

---

* 'இன்பத்தின் வடிவம் நான்;
நித்தியானந்தத்தின் உருவம் யான்.'

கடைசியில் அது இருந்த அடையாளமே தெரியவில்லை.

என் கண்களைப் பிசைந்துகொண்டு பார்த்தேன். ஆகாயத்தில் மேகங்களின்மீது வைகறையின் சிவப்பு நிறம் படிந்திருந்தது. காக்கையும் கரைய ஆரம்பித்து விட்டது. இரவு உண்டான பயங்கர அனுபவங்கள் என் சரீரத்தை எவ்வளவோ கசக்கிவிட்டன. முகம் சுண்டியவனாய்த் தள்ளாடிக் கொண்டே நான் வெளியே வந்தேன். கோயிற் கதவை அப்போது தான் யாரோ ஒருவன் திறந்துகொண்டு வந்தான். என்னைப் பார்த்ததும் அவன் திடுக்கிட்டு நின்றான். "என்ன ஐயா, இராவெல்லாம் கோயிலிலா கிடந்தேங்கோ?...உயிரோடு வந்தீங்களா?" என்று சற்றுத் திகிலோடு கேட்டான். அவனுக்குப் பதில் சொல்வதற்குக்கூட எனக்குச் சக்தி இல்லை. மெல்ல மெல்லக் கோயிலின் எல்லையை விட்டு வந்துவிட்டேன்.

தஞ்சாவூர்க் கோயில் மிகவும் பயங்கரமானது. ஆனால் நான் கண்டது என்னவோ ஆச்சரியமான சொப்பனந்தான்; அதில் சந்தேகமே இல்லை!

# ஆள் மாராட்டம்

**பி**ரும்மாவின் சிருஷ்டிக் கூடத்தில் மிக ஊக்கமாக மகாராஜாவாகப் பிறக்கப் போகும் ஒருவனுடைய பிம்பம் தயாராகிக் கொண்டிருந்தது. அன்று செய்து முடித்த பொம்மை வரிசையில், அது 22-வது உருப் படி. அரசனுக்குரிய குண விசேஷங்களை அந்த உரு வின் உள்ளத்துள் திரட்டி வைத்திருந்தார் சிருஷ்டி கர்த்தா. அந்த வடிவமோ வலுவில் பெண்கள் மோகம் கொள்ளும்படியான சௌந்தரியத்துடன் விளங்கியது. அதன் ஒவ்வோர் அங்கத்திலும் உயர் குலத்தின் லக்ஷணங்கள்.

இப்பேர்ப்பட்ட 22-ஆம் நம்பர், விஜயபுரத்தில் பட்ட ராணியின் வயிற்றில் திருக்குமரனாக அவதரிக்க வேண்டியவன்; ஆனால் எதனாலோ (விஷமமாய் இருக் குமோ?) சிருஷ்டி இலாகாவின் 'டெஸ்பாட்ச்' குமாஸ்தா யமகண்டப்பிள்ளை இந்த ஆளுக்கு 22-ஆம் நம்பர் லேபிளை ஒட்டுவதற்குப் பதிலாக 222-ஆம் நம்பர் லேபிளை ஒட்டிப் பூலோகத்திற்கு 'டெஸ்பாட்ச்' செய்துவிட்டார். அரண்மனையில் ஜன்மம் எடுக்க வேண்டிய 22-ஆம் நம்பர், கடைசியில் சென்னை, கிருஷ்ணாங்குளத்தருகே வெங்கய்யர்சந்தில் 33/3-ஆம் மொட்டை மாடியுள்ள வீட்டில் கண்ணைத் திறந்தான்.

மதிப்பிறை போல நாளொரு மேனியும் பொழு தொரு வண்ணமுமாய், இந்தக் குழந்தை வளர்ந்து வந்தது. பெரிய குற்றங்களையும் மன்னித்து விடும்

முக விலாஸத்தைக் கண்டு மகிழ அந்த வீட்டில் சேசிப் பாட்டி ஒருத்தியே இருந்தாள். அவள்தான் 'என் ராஜாவே' என்று செல்லமாக 22-ஆம் நம்பரை மடியில் வைத்துக்கொண்டு தாலாட்டுவாள். செல்வப் புதல்வனின் அழுகைக் குரல் செவிக்கு எட்டிய மாத்திரம் முக்கிய ராஜ்ய காரியங்களையும் கவனிக்காமல் போட்டுவிட்டு, சரிந்த கிரீடத்துடன், அந்தப்புரத்துள் நுழைந்து 'என் கண்மணியே, கனி ரஸமே' என்று ஆறுதல் சொல்ல ஓடிவரும் அரசத் தந்தை இல்லையே! எரிமூஞ்சி வேம்பு ஐயர் வாழ்க்கை கசந்துவிட்டதனுலோ என்னவோ 'அது ஏண்டி கதறுகிறது? அதன் வாயை மூடேன்' என்று தம் சம்சாரத்தை நோக்கிக் கூச்சலிடுவது மட்டும் கேட்கும். அப்புறம் ஒவ்வொன்ருக 22-ஆம் நம்பருக்குச் சிசுவின் பத்துப் பருவங்கள் வந்தன. அந்தப்புரத்தில் நூறு தாசிப்பெண்கள் சூழ, தத்தித் தத்திக் கால்வைத்து நடை பழக வேண்டிய பிள்ளையை இங்கே கவனிப்பார் யார்? பாவம், முற்றத்துக் குறட்டில் எத்தனை தரம் உருண்டு விழுந்துவிடும்? உடனே ஓடிவந்து எடுத்து மார்புறத் தழுவிக்கொள்ளத் தாயார் வராமல், முணு முணுத்துக்கொண்டே அடுக்களையில் ஈர விறகுடன் மாரடித்துக் கொண்டிருப்பாள்.

பையனுக்குக் கால் முளைத்துவிட்டது. விஜயபுரத்தில் பிறந்திருந்தால் குதிரை சவாரி, யானை ஏற்றம் எல்லாம் லபித்து இருக்கும். ஆனல் இந்த வெங்கய்யர் சந்தில் ஏறிச் சவாரி செய்வதற்குப் பொம்மைக் குதிரைதான்.

வாலிபம் தோன்றியது 22-ஆம் நம்பருக்கு. அந்த மூட்டிச் சந்திலிருக்கும் 33/3-ஆம் எண் உள்ள வீடு,

'வால்' ஒன்று செய்யும் உபத்திரவத்தினால் பூகம்பத்தின் நடுக்கம் கொண்டது. மொட்டை மாடியிலிருந்து பூனைக்குட்டியைத் தலைகீழாக உருட்டிவிடுவது, மாடிக் கைப்பிடி சுவர்மீது பயமின்றி நடப்பது, இந்த மாதிரி துணிவும் கொடூரமும் நிரம்பிய ராஜரீகமான பொழுது போக்குகளில் ஈடுபடுவான். எந்த விஷயத்தையும் தாராள நோக்குடன்தான் பார்ப்பது வழக்கம். வாயில் பக்கத்துக் குச்சு உள்ளே அவனுடைய ஏகாந்தமான மோதிமகல். மொட்டை மாடியின் ஒரு மூலையே குலிஸ்தான் பூஞ்சோலை. திண்ணையின் கீழ்ப்புறம் அவனுடைய குதிரை லாயம். பீரோ இடுக்கு, ஆயுத சாலை.

நாட்கள் பறந்தன. 22-ஆம் நம்பரைப் படிக்க வைத்தார்கள். ஆனால் எந்த வித்தையும் அவனுக்குச் சுவாரஸ்யப்படவில்லை. யுத்தப் பயிற்சியையே அவன் விரும்பினான். ஆனால் இந்தச் சென்னை மாகாணம் முழுவதிலும் யுத்த ரீதிகளைப் புகட்டும் ஸ்தாபனம் இல்லாத குறைதான். இராது போனால் என்ன! இயற்கையே இந்தப் பிரச்னையைத் தீர்த்துவிட்டது. 22-ஆம் நம்பர் வில் அம்பு ஏந்தும் விறல் வேந்தனாவதற்குப் பதிலாக வசை அம்பு தொடுப்பதில் அந்தப் பேட்டையில் இணையற்று விளங்கினான். அவனுக்கு எதிரிடையாகச் சவால் கொடுப்பவர்களுக்கு இரும்பு மண்டையாக இருந்தால் போயிற்று; இராதுபோனால் ஒரே குத்தில் மோக்ஷந்தான்.

இதற்குள் 22-ஆம் நம்பர் யௌவன தசையை எட்டிப்பார்த்தான். பெரும் மாறுதல் அவன் மனத்துள் மூண்டெழுந்தது. பக்ஷிகளின் இன்குரல் தன் செவிக்கு விருந்து அளிப்பதற்கே என்றும், மலர்கள்

கள் நறுமணம் வீசுவது தன் மனத்தைக் குளிரவைக்கத்தான் என்றும் கனவு காணும் காலம். உலகில் தனக்கு நிகர் எவருமில்லை, தான் அலாதி என்ற அகம் பாவம் வளரத் தொடங்கியது. வெங்கய்யர் சந்து அவனுக்குக் குறுகிய இடமாகத் தோற்றவில்லை. அது விசாலமான ராஜவீதிபோலவும், தான் ராஜ கம்பீரத்துடன் அங்கே பவனி போகும்போது வீட்டுச் சாளர வாயில்கள்தோறும் மனத்தைப் பறிகொடுத்த மாதரின் கயல் விழிகள் பிறழ்வது போலவும் அகக் கண்முன் கண்டான். இந்த உலாப் போவதைக் காணக் கூந்தல் அவிழ ஓடி வருபவளும் முத்துச் சிதறும் மேகலையைப் பூட்டாது அன்ன நடை நடந்து செல்பவளும் இந்த தார்வேந்தன் தன்னைப் பாராஞே வென்று பெருமூச்செறியச் சிந்திப்பவளும் அவன் மனம் தீட்டும் சித்திரங்களே.

ராஜ வம்சத்து வித்தானதால் 22-ஆம் நம்பருக்கு அதற்கேற்ற ரசிகத்தன்மையும் வாய்த்திருந்தது. பன்னிரண்டு வயதுச் சிறுமி பிச்சுமணிக்குத் தனிமையில் அவன் சொன்ன ராஜா மந்திரிக் கதை எத்தனையோ! பதினாறு பிராயம் நிரம்பிய லீலுவுக்கு அன்பளிப்பாகச் சினிமா நக்ஷத்திரங்களின் படங்களைக் கொண்டு தருவான். புதிதாகக் குடித்தனம் பண்ணும் சுமித்ரா மாமிக்கு, அவள் கேட்காமல் இருக்கும் போதே வாசனைக் கதம்பம் காணிக்கையாக வரும். மோட்டாரில் செல்லும் சுகந்தாவை-22-ஆம் நம்பரை விட ஏழு வருஷம் பெரியவள் இவள்-முன் ஜன்மத்தில் தன்னை ஏமாற்றிய காதலியாகப் பாவித்துக்கொள்ளுவான்.

இவையெல்லாம் வயதின் சேஷ்டைகள் என்று எண்ணுவது பிசகு. இதற்குப் பிரதியாக அவனுக்குக்

கிடைத்ததென்ன? வெண்சாமரமும் பாதரக்ஷைப் பிரயோகமுந்தான்!

22-ஆம் நம்பர், "நாம் என்ன தவறு செய்தோம்" என்று உள்ளூற வருத்தப்பட்டான். வாஸ்தவம், அவனுடைய தவறன்று! அவன் சாமானியமான 222-ஆம் மனித இனத்தைச் சேர்ந்தவனா? அல்ல, அசல் 22-ஆம் நம்பர்.

"பையனுக்கு யாரையாவது பிடித்துக் கட்டி விடுகிறதுதானே?" என்று அவன் தாயார் பிள்ளைக்கு வயது ஏறுவதைப் பார்த்து வேம்பு ஐயரிடம் சொல்லிப் பார்த்தாள்.

"அதற்கென்ன இப்போது அவசரம்? முதலில் தன் வயிற்றைக் கழுவ ஏதாவது உத்தியோகம் பார்க் கட்டும். அப்புறம் யோசிக்கலாம்" என்று தலை அசைத்துவிட்டார்.

உடல் உழைத்து வேலை பார்க்கும் உணர்ச்சி நம் 22-ஆம் நம்பரிடம் எதிர்பார்க்க முடியாது. விஜய புரத்துப் பிரஜைகள் வற்றாது நிரப்ப, பொக்கிஷத் தைத் திறந்து சோராவாரியாகச் செலவு செய்ய வேண்டிய ஆசாமி அல்லவா? தெய்வாதீனம், விஜய புரத்துப் பொக்கிஷம் விஜயபுரத்திலேயே பத்திரமாக இருந்தது. அதைக் கையாளும் 'யோக்கியன்' வெங் கய்யர் சந்தில் குடியிருந்தான்.

சம்பாதிக்க வேண்டுமென்ற கீழ்த்தரமான எண் ணம் மகாராஜவுக்கு எங்கேயாவது பிறக்குமா? உத்தி யோகம் பார்க்காததனால் 22-ஆம் நம்பருக்கு விவாகம் நடக்காமல் இல்லை. ஓர் ஆனிமாதம் சுக்கில பக்ஷத் திருதியையில் மிதுன லக்கினத்தில், ராஜகுமாரனாக

இருக்கவேண்டியவனுக்குத் திருமணம் நடந்தேறியது. ரதியைப் பழிக்கும் அரசிளங் குமாரிக்குப் பதிலாக ராமசுப்புவின் பெண்-கருமுகிலைப் பழிக்கும் அலமேலு மாலை இட்டாள். மகிஷியின் - அதாவது, மனைவியின் இதயத்தைக்கண்டறிந்ததும் 22-ஆம் நம்பருக்கு உலகமே ஒரு மோசமெனப்பட்டது' வெஞ்சமரில் ஒருவனாக நின்று உலகம் வியக்க அரசன் மகளை மணக்க எண்ணங் கொண்டிருந்தான். 22-ஆம் நம்பருக்கு வாழ்க்கைப்பட்ட அலுமேலுவின் இதயமோ சூனியமானது. புருஷனைப்பற்றி எள்ளளவும் சந்தேகங் கொள்ளாத சுபாவம். கசங்கிய மலரோ, கிழித்தெறிந்த ரகசியக் கடிதத்துண்டோ, இரவில் திருட்டுத்தனமாக வரும் காலடிக் குறியோ, அங்கே எந்த விதமான புயலையும் எழுப்பாது. அவளுடைய வெள்ளையான மனோராஜ்யத்தில் நுழைந்தவன் 22-ஆம் நம்பர் ஒருவனே. அந்தப் பெண்ணின் அகத்துள் விரகத் தீயோ, காதல் சுவையோ ஒன்றுமில்லை. இந்தக் காலத்துப் பெண்கள் சந்தையில் இத்தகைய உள்ளம் படைத்தவர்கள் மதிக்கப்படார். பெண்டாட்டி 22-ஆம் நம்பர் விருப்பப்படி அமையவில்லை.

இப்படிச் சில வருஷங்கள் கழிந்தன. திடீரென 22-ஆம் நம்பரின் பிதா காலமானார். சிங்காதனத்தில் ஜம்மென்று ஏறிப் பிரஜைகளின் ஜயகோஷத்துக்கிடையே மகுடாபிஷேகம் செய்துகொள்ள வேண்டியவனுக்கு 'லேபில்' மாருட்டத்தால், அந்த மாதிரி வைபவம் ஒன்றும் நிகழவில்லை. அதற்கு மாருகக் காலியாக இருக்கும்-வேம்புஐயர் உபயோகித்த - கையொடிந்த ஒரு நாற்காலியில் கிடக்கலானான்.

அப்படிப்பட்ட நாற்காலியானாலும் 22ஆம் நம்பர் அதில் உட்காரும் பாணியே அபூர்வமானது. அரசர்களிடத்தில்தான் அது தென்படும். விஜயபுரத்துப் பொக்கிஷத்தைச் சூறைவிடும் பாக்கியம் அவனுக்கு இராமல் போய்விட்டது. அப்பா இதுவரை கண்களுக்குப் படாமல் வைத்துப்போன ஆஸ்தியான நிறம் மங்கிய டிரங்குப் பெட்டி இருந்தது. அதைத் திறந்து சோதனை செய்தான். அதனுள் இருந்தவை ஐந்து ராணி ரூபாய்கள், கறுத்துப்போன எட்டணா இரண்டு, ஈயச் சப்தமுடைய இரண்டணா வில்லை ஒன்று, உருத்தெரியாத தம்படிகள் பத்து இவைதாம் வைரமோ, வைடூரியமோ எதுவுமே இல்லை.

இப்படிப் பல தினங்கள் ஓடி மறைந்தன. வறுமை மேலிட்டு, பொன்போல் ஒளிர்ந்த 22-ஆம் நம்பரின் ராஜமேனி வாட ஆரம்பித்துவிட்டது. நெற்றியில் பல சுருக்கங்கள். சீக்கிரமாக நரை கண்டது. 'சின்ன வயதில் அவ்வளவு மிடுக்காய் இருந்தவனா இவன், என்று சந்தேகிக்கும்படி ஆயிற்று. பேச்சு வார்த்தையில் மட்டும் பழைய ராஜகம்பீரம் தொனித்தது.

சந்து முனையில் ஒருசோடாக்கடை. பகல் இல்லை இரா இல்லை; 22-ஆம் நம்பரை அங்கே எப்போதும் பார்க்கலாம். சவடால் அடித்துக் கொண்டிருப்பான் அதற்காக தங்க ரேக்கு புகையிலையும், பட்டணம் பொடியும் வந்துவிடும். வாய் நிறையப் புகையிலையைக் குதப்பிக் கொண்டே தன் பரம்பரையின் கௌரவ சரிதையைப் பற்றிக் கடைக்கு வருபவர்களிடம் அளக்க ஆரம்பித்து விடுவான். தன் மூதாதையான மகா ராஜா ஒருவர் பொன்னாலேயே கோயில்

கட்டியதாகவும், அவருடைய பேரரான இளவரச னுடைய குதிரை லாயத்தில் பல தேசத்துக் குதிரை கள் இருந்தாகவும் சொல்லுவான். மற்றவர்களோ ஆசாமியை வெறும் மூட்டை என்று லக்ஷியம் செய்ய மாட்டார்கள். பிரம்மலோகத்தில் நடந்த தவறு அவர்களுக்கு எப்படித் தெரியும்?

# ஆத்ம சமர்ப்பணம்

**வீட்டு** முன்கட்டிலிருந்து சம்புநாதன் உரத்த குரலில் "அடே பசுபதி!" என்று கூப்பிட்டான்.

பசுபதி, அச்சமயம் வீட்டுக்கு அடுத்தாற்போலுள்ள நந்தவனத்தில் பூஜைக்காக மலர் கொய்து கொண்டிருந்தான். அண்ணனுடைய குரலைக் கேட்டு, "ஏன் அண்ணா - இதோ வந்துவிட்டேன்" என்று பதில் சொல்லிக்கொண்டே தமையன் முன்பு வினயத்துடன் வந்து நின்றான் பசுபதி.

சம்புநாதன் முகம் சுளித்தவாறு, "இப்படி வந்துவிட்டுப் போ. இவர்களெல்லாம் உனக்காகக் காத்துக் கொண்டிருக்கிறார்களே" என்றான்.

பசுபதி குடலையைப் பூஜை அறையின் முன்னால் வைத்துவிட்டு வெளியே வாயில் திண்ணைக்கு வந்தான். கிராமத்தைச் சேர்ந்த பெரியோர்கள் சிலர் அங்கே கூடி இருந்தனர். பசுபதி தன் தமையனைப் பார்த்து, "எதற்காக இவர்களுக்கெல்லாம் நாம் வீண் கஷ்டம் கொடுக்கவேண்டும்? நீ எப்படிப் பாகம் செய்து கொண்டாலும் சரி; நான் உடன்படச் சித்தமாய் இருக்கிறேனே, அண்ணா" என்றான்.

தம்பி இவ்வாறு சற்றும் மனக் கசப்பின்றிக் கூறுவது சம்புநாதனுக்குப் பிடிக்கவே இல்லை. கூடியிருக்கும் மத்தியஸ்தர்களின் முன்னிலையில் திடீரென ஆவேசங் கொண்டவன்போல் தன் அபிப்பிராயத்தை வெளியிட்டான்; "பசுபதி பிதுரார்ஜிதமான பூஜையிலிருக்கும் சோமாஸ்கந்த விக்கிரகத்தைத் தனக்கே

கொடுத்துவிட வேண்டுமென்று கேட்கிறான். நான் அதற்கு உடன்படவில்லை. அதற்குப் பதில் அவன் தன் பாகத்துக்கு வரும் சொத்தில் பாதிகூடக் கொடுப்பதாகச் சொல்லுகிறான். ஆனால் எனக்கும் அந்தப் பூஜையில் உரிமை உண்டல்லவா? எப்படி விக்கிரகத்தைக் கொடுப்பது? மேலும் நான் மூத்தவன்; கிருக பூஜை நியாயப்படி என்னைத்தான் அடைய வேண்டும்" என்று வாதாடினான்.

"அண்ணா, நான் எதுவும் ஒளிக்கவில்லையே. அந்த விக்கிரகத்தை அடைய நம் இருவருக்குந்தான் உரிமை உண்டு. சொத்துக்களை எப்படி வேண்டுமானாலும் பாகம் பண்ணு...நான் குறுக்கிடவில்லை. எனக்கு விக்கிரகத்தின்மேல் பிராணன். நான் புத்தி அறிந்தது முதல் சாக்ஷாத் அவருடைய சேவையில், சகலத்தையும் மறந்திருக்கிறேன். எனக்கு நீ விட்டுக்கொடுப்பது அநீதமாகாது. வீட்டில் அடுப்பு வேறாக வேண்டிய அவசியமே இல்லை. உன் பிள்ளை ஆலாலசுந்தரம் நம்முடைய குலசிந்து; ஒரே செல்வன். நான் இறந்தபின்பு என் சொத்தெல்லாமும் அவனையே சேரப்போகிறது" என்றான் பசுபதி.

மத்தியஸ்தம் செய்யவந்த ஒருவர், "பசுபதி சொல்வது நியாயம். அவனுக்குப் பிள்ளைகுட்டி ஒன்றும் இல்லை. அவனுடைய மனைவி நாகவல்லியும் மகா பதிவிரதை. அவனுக்கு ஏற்ற மனைவி. அவளும் பொறுமைப் படக்கூடியவள் அல்ல" என்று சிலாகித்துப் பேசினார். சம்புநாதனுடைய நெற்றியில் சுருக்கம் தென்பட்டது. இவ்வளவு சாதுவான தன் ஒரே தம்பியுடன் ஏன் போர் துவக்கினோமென்று அவனுக்கே புரியவில்லை. அவன் மனத்துள் ஒரு புரட்சி

மூண்டது. ஒரு பக்கம் அவனுடைய சகோதரனின் தெய்விகமான வதனம் வந்து நின்றது. உடனே மாயை அவனைச் சூழ்ந்துகொண்டது. மறுபுறம் வீட்டுக்காரி அவனை மருட்டும் முகம் வந்து நிலைத்துவிட்டது. சற்று முன் தம்பியின்மேல் படர்ந்த பாசம் மறைந்தே போய்விட்டது. மனத்தினின்று ஒரு பெரும் பலவீனத்தை உதறித் தள்ளினவனாய், "நீங்களெல்லாம் என்ன முடிவு கட்டுகிறீர்களோ அப்படியே நான் நடப்பேன். எதையும் கவனமாக யோசனை செய்து தீர்ப்புக் கூறுங்கள்" என்றான்.

பாகப் பிரிவினை செய்ய வந்தவர்கள் ஒருவரையொருவர் ஜாடையாகப் பார்த்துக்கொண்டனர். தன் முழுச் சொத்தும் இதனால் போனாலும் சரி; பசுபதி பூஜையை விடுபவனல்ல என்று சம்புநாதனுக்குத் தெரியும். இப்படி இடக்குச் செய்தால்தான் ஏதாவது கிட்டுமென்றே இந்தச் சூழ்ச்சியில் இறங்கினான்.

பசுபதி, தன் அண்ணன் பிடிவாதம் பிடிப்பதைக் கவனித்து, "அண்ணா! உனக்கேன் மனஸ்தாபம்? எனக்கு வரும் சொத்தில் பாதியைக் கொடுத்துவிடுகிறேன் - அந்த விக்கிரகத்திற்கு ஈடாக - இதோ மனப்பூர்வமாகச் சொல்லுகிறேன்" என்றான்.

பிரமுகர்களில் ஒருவர் குறுக்கிட்டு, "சொத்தில் பாதி என்று சொன்னால் அது மிகவும் அநியாயம். மீதி உன் சம்ரக்ஷணைக்குப் போதுமா?...யோசி...பசுபதி விக்கிரகத்தின்மேல் உயிராக இருப்பதில் அதிசயம் ஒன்றுமில்லை. சிறுவயதிலிருந்து இந்தப் பைத்தியம் அவனுக்கு. அண்ணன் இதை விட்டுக் கொடுக்கலாம். நான் எனக்குப் பட்டதைச் சொல்லிவிட்டேன். கால்பாகம் வேண்டுமானால் எடுத்துக் கொள்

ளட்டும். தம்பியை மொட்டை அடிப்பது நன்ருக இல்லை. அதற்குமேல் உங்களிஷ்டம்" என்ருர்.

"அதிருக்கட்டும்; பிதுரார்ஜிதமான அந்தத் தேவ மூர்த்தி மூத்தவனைத்தானே அடையவேண்டும்?" என்ருன் சம்பு.

"அதற்காக உனக்குச் சொத்தில் பாதியளவு கொடுத்துவிடுகிருனே, உன் தம்பி! அதை வைத்துக் கொண்டு நீ வேறு விக்கிரகத்தைப் பிரதிஷ்டை செய்துகொள். வேண்டுமாஞல் உன் சம்சாரத் துடன் யோசித்துவிட்டுச் சொல்லேன்" என்றதும் மத்தியஸ்தர் குரலில் மறை முகமான ஏளனம் ஒலித்தது.

சம்புநாதனுக்கும் இந்தக் கடைசி வார்த்தை உறைத்தது. ஆனுல், அதைத் துடைத்துப் போட்டு விட்டான். காரியத்தின் மேல்தான் அவன் கண் ணெல்லாம். வெற்றியுடன் திரும்பாவிட்டால் உள்ளே வீட்டுக்காரி வர விடமாட்டாளே!

மடத்தனமாகப் பசுபதி தன் தலையிலேயே மண் ணைப் போட்டுக் கொள்வதைப் பார்த்து அங்கே கூடி யிருந்தவர்கள் யாவரும், "இதற்கு எங்களைக் கூப் பிட்டே இருக்கவேண்டாம். கிடக்கட்டும். பாத்தி ரம், பண்டம் எதெது உண்டோ எடுத்து முற்றத்தில் வையுங்கள் - பங்கிட்டுவிட்டுப் போகிருேம்" என்ற னர்.

அச்சமயம் பசுபதி எல்லாரையும் நோக்கி, "தயை பண்ண வேண்டும். பூஜைக்கு நாழிகை ஆகிறது. முடித்துக்கொண்டு வருகிறேன்" என்று வணங்கிக் கேட்டுக்கொண்டான்.

"அதுவரை நாங்கள் காத்திருக்க வேண்டுமா, அப்பா?" என்றனர் வந்திருந்தோர்.

"வேண்டாம் ... நீங்களே முடித்து விடுங்கள். நான் இருக்கவேண்டிய அவசியமில்லை. எனக்கு அவநம்பிக்கை இல்லை" என்றதும் முகத்தில் அபூர்வமான நிச்சலம் ஒளிரத் தெய்வத் தொண்டாற்றச் சென்றான் பசுபதி. எல்லோருக்கும் அவன்மேல் அனுதாபம்தோன்றியது. "லோக விஷயமே தெரியாத அப்பாவி; என்ன பண்ணுவது? இம்மாதிரி ஒரு தம்பியைப் பிரிந்திருக்க விரும்புகிறானே. என்ன கிராதகனாய் இருக்கவேண்டும் இந்தச் சம்பு?" என்று முணுமுணுத்தனர்.

இந்த வார்த்தை எப்படியோ உள்ளே இருக்கும் சம்புநாதனின் செவியில் பட்டுவிட்டது. "ஏங்காணும்! உமக்கென்ன தெரியும் உள்ளே நடக்கிற விஷயம்?" என்றான் சற்று உக்கிரமான தொனியில்.

"அது கிடக்கிட்டும். இப்போது காரியத்தைக் கவனிப்போம். சீக்கிரம் முடித்துவிட்டு நாங்கள் ஸ்நானத்திற்குப் போகவேண்டும்" என்றனர் வந்திருந்தவர்கள்.

வீட்டு முற்றத்தில் பாத்திரங்கள், சாமான்கள் யாவும் நிரம்பிவிட்டன. ஒரு பெட்டியை எடுத்து வந்து சம்பு, அதிலுள்ள பத்திரங்கள் நகைநட்டு முதலியவற்றை வெளியே எடுத்தான். இவற்றையெல்லாம் பாகம்பண்ணி முடிவதற்கும் பசுபதி பூஜையை முடித்துக்கொண்டு அங்கே வருவதற்கும் சரியாக இருந்தது. நிர்மலமான அவன் முகத்தில் ஒரு தெய்விக சாந்தி ஒளிர்ந்தது. பேரமைதி அவன் உள்ளத்தில் குடிகொண்டிருந்தது. உலகத்தைக் குழந்தையின் வெள்ளை மனத்துடன் நோக்கினான். அங்கே சூது வாது ஒன்றுக்குமே இடமில்லை. எல்லாம் வெட்டவெளிச்சம்.

அவனையே எல்லோரும் உற்று நோக்கினார்கள். பிரம்ம தேஜஸ் என்பதை அவனிடத்தில்தான் கண்டார்கள். பக்தியினால் அவர்களுடைய சிரங்கள் தாமாகவே வணங்கின. வயதில் பெரியவர், "அப்பா, பசுபதி!" என்றார்.

மெதுவான குரலில் பசுபதியும், "என்ன ஆக்ஞை?" என்றான்.

"எல்லாம் பிரித்தாகிவிட்டது. விக்கிரக விஷயம் மட்டும் ஒரு முடிவுக்கு வரவில்லை. உன் அண்ணா சம்மதிக்கவில்லை. உன் சொத்தில் பாதி அதற்கு ஈடாகவைப்பது எங்களுக்கு உசிதமாகப் படவில்லை. அவ்வாறு செய்தால் உன்னை நாசமாக்குவதாகும். இனி உன் பாடு, உன் அண்ணன் பாடு!" என்று முடிவாகக் கூறிவிட்டு எழுந்தார் பெரியவர். அவரைப் பின்பற்றி மற்றவர்களும் எழுந்தனர்.

"பகவானை அடையும் பொருட்டு, இப்படிப் பேரமாடுவதைப்பற்றி என் மனம் புண்ணாகிறது அண்ணா எதைக் கேட்கிறாரோ அதைத் தந்துவிடுகிறேன்" என்றான் பசுபதி.

"உன் தமையனே வாய் திறந்து சொல்லட்டுமே. நாங்கள் வருகிறோமப்பா...தீர்க்காயுசாக இரு" என்று ஆசி கூறிவிட்டுப் பெரியவர்கள் அகன்றனர். போகும் போது அவர்கள், பசுபதியின் அறியாமையையும் சம்புநாதனுடைய வஞ்சகத்தையும் நினைத்துக் கொண்டு, "இந்த மாதிரி பரம சாதுவை நாங்கள் பார்க்கவே இல்லை. இவனா இந்த உலகத்தில் பிழைக்கப் போகிறான்? ஹரிஹர தீக்ஷிதன் வீட்டிலா இவ்வளவு உடமைகள்! ஆச்சரியம்! நிலத்தில் பாதிக்கு மேல் மறைத்துவிட்டான் அண்ணன்காரன்! பெண்

டாட்டியின் பேரில் சில சொத்துக்கள் இருக்கின்றன. வேணுமென்றே இந்த மோசத்தில் இறங்கினுல் யார் என்ன செய்வது? தெய்வந்தான் பார்த்துக் கூலி கொடுக்கவேண்டும், அந்தப் பாவிக்கு. பசுபதியோ காட்டில் காய்ந்த நிலா" என்றனர்.

அவர்களுள் இதுவரை பேசாமலிருந்த ஒருவர். "பகவான் அவனை ஒருபோதும் ஏமாற்றமாட்டார். இந்தச் சொத்தெல்லாமா நித்தியமான செல்வம்? அந்தக் கைலாசநாதனுடைய கிருபைமட்டும் இருந்தால் அவனுக்கு ஒரு குறையும் நேராது" என்றதும் எல்லாருடைய வம்பளப்பும் ஓய்ந்தது.

## 2

சம்புநாதனை ஒரே அடியாய் மோசக்காரன், துஷ்டன் என்று சொல்லிவிட முடியாது. தந்தை ஹரிஹர தீக்ஷிதர் வைதிகம் பழுத்த பிராம்மண சிரேஷ்டர், - பரம சிவபக்தர். கிராமத்திலாகட்டும், வெளியிலாகட்டும், பெயரும் புகழும் எடுத்தவர். நல்ல மார்க்கத்திலேயே பொருள் ஈட்டினுர். தாம் இறப்பதற்கு முன்பு தம் இரு புதல்வர்களையும் அருகில் அழைத்து, "குடும்பத்தில் சச்சரவுகள் இருக்கும். ஒன்றுபட்டு வாழ்ந்தால்தான் லக்ஷ்மி நிலைத்திருப்பாள். என் காலம் ஆகிவிட்டது" என்றுர் கிழவர். இருவருக்கும் விவாகம் செய்துவைத்தார். அவர் மனத்துள்மட்டும் ஒரு முள் உறுத்திக்கொண்டிருந்தது. பெரியவன் ஸ்திரீவசப்பட்டவன். இளையவன் துறவு மனப்பான்மை உடையவன். விடுதலையை விரும்பும் பறவையைக் காட்டினுள் அடைக்கும் வீண் பிரயாசையாக முடிந்தது அது. அழகிய மனைவி இருந்

தும் இல்லத்தில் அவன் மனம் நிற்கவில்லை. அவனுக்கு வாய்த்த பெண்மணி அவனுடைய சாதனைக்கு அநுகூலமாகவே அமைந்தவள். அவளைப் பார்க்கும் போதெல்லாம் கிழவர் கண்களில் நீர் துளிக்கும். மூச்சுப் போகுமுன் அவர் தம் இளைய மகனைப் பக்கத்தில் அழைத்து, "அப்பா, கிருகஸ்தாசிரமமே உயர்வானது. அதிலிருந்தே முக்தி பெறலாம். கர்ம யோகியாக இரு" என்றார். பிதாவின் கட்டளையை நிறைவேற்றவே பசுபதி சம்சார பந்தத்தில் சிக்கிக்கொண்டான். ஆனால் தாமரை இலைமேல் நீர் ஒட்டிக்கொள்கிறதா?

மாமனார் மறைந்ததுமே பெரிய நாட்டுப் பெண் குடும்பத்தின் யஜமானியாகிவிட்டாள். பசுபதியின் மனைவி நாகவல்லி அற்பமல்ல. அவள் இதற்காக ஓரகத்தியுடன் போட்டி போடவில்லை. எதன்பேரிலும் படாது இருந்தும் வம்புக்காரியான சம்புவின் மனைவி அவள்மீது ஏதாவது அபாண்டத்தைச் சுமத்தப் பார்ப்பாள்.

## 3

கிடைத்த சொத்தில் பாதி எழுதி வைத்துவிட்டான் பசுபதி. இதை முடித்ததும் அவன் உள்ளத்தில் ஒரு பெரும் சாந்தி நிலவியது. அன்று உலகமே புதிய ஒளியில் தோய்ந்திருப்பதுபோல் காட்சி அளித்தது. புஷ்பத் தோட்டத்தில் மலர்கள் கீழே உதிர்ந்து கிடந்தன. நாள் தவறாமல் பசுபதி நீராடிவிட்டு வண்டு மொய்க்காத மலரை அர்ச்சனைக்காகப் பறிப்பது வழக்கம். நாகவல்லி அவன் வருவதற்குள் பூஜை அறையை மெழுகிச் சுத்தமாக்கிக் கோலம் வரைந்து

வைப்பாள். குத்து விளக்குகளைப் பொன்போல் துலக்கிடுவாள். கணவனைவிட அவளுக்கு வேறு தெய்வம் ஏது? தம்பதிகள் அன்னியோன்னியமாக நாட்களைத் திருத்தொண்டிலேயே கழித்தனர். எப்போதும் கடவுள் சிந்தனையே. விபூதி சண்ணித்த மேனியுடன் பசுபதி தன் பிரியக் கடவுளிடமே மனம் ஒன்றிருப்பான். மாசற்ற மனத்தினளான நாகவல்லி தூபப் புகை காட்டுவாள். பக்தி பரவசத்தால் இருவர் கண்களிலும் ஆனந்தக்கண்ணீர் தேங்கும். பகற்பொழுதெல்லாம் தொண்டர் புராணத்தைப் பாராயணம் செய்து, சிவன் திருவிளையாடல்களைப் படித்துப் படித்துக் கடவுளின் திருவருளை நினைந்து நினைந்து மெய்யுருகுவார்கள் இருவரும்.

## 4

எல்லாவிதமான சோதனைகளுக்கும் மனங்கலங்காது வாழ்க்கையின் கரடுமுரடான பாதையில் இருவரும் முன்னேறினர். பசுபதியின் மனத்தில் ஒலித்த அபூர்வமான இசை அவனைத் துன்பத்தைக் கடந்த நித்தியானந்த லோகத்திற்கு இழுத்துச் சென்றது. சிவன் வழிப்பாட்டைத் தவிர அவனுக்கு வேறு ஜோலியே இல்லை. இந்தத் தேவ சேவையில் அவனுக்கு உறுதுணையும் கிடைத்துவிட்டாள். பசுபதி பிழைக்க வழியே தெரியாதவன். இருந்த கொஞ்ச நஞ்சம் சொத்தும் வரவரக் குறைந்துவிட்டது. அதைப் பெருக்கும் மார்க்கத்தை அவன் தேடவே இல்லை. பசுபதி அன்று வழக்கம்போல் பூஜையைப் பூர்த்தி செய்துவிட்டுத் தன் தமையன் பிள்ளையான ஆலாலசுந்தரத்தை அழைத்து அறையின் ஒரு மூலை

யில் கிடந்த பெட்டியைத் திறந்து அதனுள் இருந்த சில பத்திரங்களை எடுத்து அவனிடம் கொடுத்தான். சுந்தரம் தன் சிறிய தந்தையின் முகத்தையே கூர்ந்து நோக்கி, "சிற்றப்பா. இது என்ன?" என்றான்.

"உன் அப்பாவினிடம் இதைக் கொடு...கேட்டால் சிற்றப்பா கொடுத்தார் என்று சொல்லு" என்றான் பசுபதி. சிறுவன் அதை எடுத்துக்கொண்டு தன் தந்தையிடம் சென்றான். அப்போது சம்புநாதன் வீட்டில் இல்லை. வெளியூருக்குச் சென்றிருந்தான். பசுபதிக்கும் அந்த விஷயம் தெரியாது. சுந்தரம் தன் தாயிடம் அதைக் கொடுக்கவே உடனே அவள் அதைப் பத்திரப்படுத்திவிட்டாள்.

மறுநாள் வைகறைப்பொழுது. குடலையுடன் பசுபதி பூப்பறிக்க மலர்க்காவுள் நுழைந்தான். நாலு பக்கமும் ராசி ராசியாக மலர்கள் உதிர்ந்து கிடந்தன. பிள்ளைக்காற்று ஒன்று கொம்பிலிருக்கும் இணர்களை உலுக்கியும், தளிர்களை அசைத்தும் பசுபதியின் சிகையுடன் விளையாடியும் சென்றது; 'ஆனந்த மயம் ஜகத்' என்ற உண்மையைத் தூது சொல்ல வந்ததுபோலிருந்தது, அந்தக் காற்றின் விளையாட்டு. அது பகவான் அன்று தன்னைச் சம்சாரத் தளையிலிருந்து விடுக்கப் போவதன் அறிகுறியாகவே பட்டது பசுபதிக்கும்.

பசுபதியின் மனத்துள் திடீரென என்னவோ தோன்றியது. பூஜை அறைப்பக்கமாக விரைவாக வந்தான். நாகவல்லி அங்கே நின்றுகொண்டிருந்தாள். அவள் முகத்தில் என்றுமில்லாத ஒரு பொலிவு தென்பட்டது. தலை சுழன்று தன் கணவன் காலடியில் சாய்ந்தாள், அந்தப் பொற்பாவை. ஜீவன் அவள் உடலைவிட்டு நீங்கியது. பசுபதிக்கு இருந்த ஒரு

பந்தமும் விலகிவிட்டது. மனைவியின் பிரிவு அவன் உள்ளத்தில் இருளைப் பரப்பாதுபோனாலும், ஒரு வேதனைமட்டும் சுழன்றுகொண்டே இருந்தது. பூஜை அறைக்கு வரும்போது அவனுக்குத் திக்கென்றது. அந்தத் தீவிர வேதனை சற்று நாழிகைதான். தீபம் ஏற்றிவைக்க எவருமே இல்லை. பூஜை அறையின் அழகே போய்விட்டமாதிரி இருந்தது. ஓரே சூனியம்! இறகு உடைந்த பறவைபோல ஆனான் பசுபதி. 'மந்திர புஷ்பம்' சொன்ன அந்த யுவதியின் மணியான கண்டம் அன்று கேட்கவில்லை. பசுபதியின் உள்ளம் இறைவனை நோக்கி முறையிட்டது.

"இந்தத் தீபச் சுடரை அணைத்துவிட்டு என்னைத் தனிமையில் உழலவைப்பது உன் திருவினையோ, ஐயனே! இந்த இருளில் உன் ஒளியைக் காண்பேன். என் வாழ்க்கைத் துணைவிக்காக நான் கண்ணீர் விடவில்லை - நான் என்று உன் திருவடி நிழலை அடைவேன் என்பதை நினைந்துதான். என்னை ஆட்கொள்ளும் நாள் எந்நாளோ?" என்று அத்தச் சிவ விக்கிரகத்தின் காலடியிலேயே விழுந்துவிட்டான் பசுபதி.

அன்றிரவு சம்புநாதன் ஊருக்குத் திரும்பினான். அவனுடைய மனைவி பசுபதி, தந்த பத்திரங்களை அவனிடம் குதூகலத்துடன் கொண்டுவந்து கொடுத்தாள். பிரித்துப் பார்த்தான். நிலப் பத்திரங்களுக்கிடையே தன் தமையன் குமாரனுக்குச் சொத்தையெல்லாம் எழுதி வைத்திருக்கும் தான பத்திரமும் இருந்தது.

அவனுடைய இருதய பிண்டத்தை ஏதோ ஒன்று பிழிவதுபோல் இருந்தது. ஓவென்று அலறிக்

கொண்டே தலை தெறிக்க ஓடினான். பசுபதியின் பூஜை அறைக்கு வெளியே நின்றவண்ணம், "என் அருமைத் தம்பீ!" என்று கூவினான். கதவு உட்புற மாகத் தாழிடப் பட்டிருந்தது. தூபத்தின் மிருது கந்தம் வெளியே வந்துகொண்டிருந்தது, மெல்லிய சுருளாக. உள்ளே நடப்பது ஒன்றுமே புலனாகவில்லை. மறுபடியும் கூவி அழைத்தான். அந்த வேதனைக் குரல் ஊரை ஒன்றாகக் கூட்டிவிட்டது. எல்லோரும் "என்ன? என்ன?" என்று ஓடிவந்தார்கள் "ஐயோ! என் தம்பி! கதவைத் திறந்து பாருங்களேன்" என் றான். தலைமேல் கை வைத்துக்கொண்டு அழலானான். நாலைந்துபேர் கதவைப் பிளந்து உள்ளே நுழைந்த னர். பரிதாபமான காட்சி. பசுபதியின் தேகம் மந்தஹாசத்தின்கீழ்ச் சாய்ந்து கிடந்தது. குத்துவிளக் கில் நீலமாகச் சுடர் மங்கிக்கொண்டே வந்தது. பசுபதியின் சரீரம் அசையவில்லை. அவன் தன் கடைசி உடைமையான பிராணனையும் சர்வேசுவரனுடைய சரண கமலங்களிலேயே அர்ப்பணம் செய்துவிட் டான்.

சோகத்தின் உருவாக விளங்கினான் சம்புநாதன். அவன் மனமே அவனை அறுத்தது.

அடுத்த நாள் சம்புநாதனுடைய வீட்டில் அவ னுடைய சம்சாரத்தின் அழுகைக் குரல் கேட் டது. ஊரார் வந்து விசாரித்தபோது விஷயம் தெரிந் தது, முன்னாள் இரவே அவன் காணமற்போய்விட்ட தாக. "கடைசியாகப் பகவான் இந்த மூர்க்கனைக் கூடச் சம்சார பந்தத்திலிருந்து விலக்கிவிட்டாரே!' என்று எல்லோரும் ஆச்சரியப்பட்டனர்.

# ஸ்வஸ்திக் வளையல்

முப்பது ரூபாய் சம்பளம் வாங்கும் பள்ளிக்கூட உபாத்தியாயர் விவாகமே பண்ணிக் கொள்ளாமல் இருக்கலாம். ஆனால், இவ்வளவு முன்யோசனை செய்யும் பட்சத்தில் சம்சாரமே நடக்காது.

பெற்றவள் விடாமல் வற்புறுத்தவே நடராஜன், அவள் மனம் நோவக் கூடாதென்றே கலியாணம் பண்ணிக்கொண்டு தொலைத்தான். ஆனால், அவனுக்கு விவாகமாகி ஒரு மாதத்திற்குள், சம்சார பாரத்தை அவன் தலையில் சுமத்திவிட்டுத் தாயார் கண்ணை மூடிக்கொண்டாள்.

இப்பெருந்துயரினால் நடராஜனுடைய மனம் குடை கவிழ்ந்த வண்டி போலாயிற்று. இந்த இருபத்தைந்து வருஷ காலத்தில் அவன் இவ்வளவு அநாதரவாக நின்றதே இல்லை.

புதிதாக வந்த நாட்டுப் பெண்ணுக்கு இந்தமாதிரியான மனோவிகாரங்கள் ஏற்படவில்லை. சட்டெனச் சமாளித்துக்கொண்டாள். இடிவிழுந்தது போலான வன் நடராஜனே. புருஷனைக் கவனித்துக் கொள்வதிலிருந்து, பால் தயிர்க்காரிகளுடன் சண்டை தொடுப்பதுவரை, அவள் ஒருத்தியே குடும்ப சம்ரக்ஷணையை ஏற்றுக்கொள்ள வேண்டியதாயிற்று. பெண் எதற்கும் சளைக்காதவள்!

சற்றுப் பொழுதுபோய் இருட்டுகிற சமயம். வெளியறையில் இருள்; அந்தி விளக்கு இன்னும் வைக்கவில்லை. காவேரி, முற்றத்தில் துளசி மாடத்

தில் அகல் விளக்கை ஏற்றிவைத்துப் பிரதட்சிணம் செய்த பிறகே, நடராஜனுடைய அறைக்கு வந்தாள். புடவைத் தலைப்பைப் பிடித்துக்கொண்டு கையும் விளக்குமாய்க் காவேரி வரும் அழகைக்கண்டு அவன் பூரித்துப் போனான். அவள் முகபாவனையில் அமைதியும் நாணமும் சொட்டிக் கொண்டிருந்தன. ஆனால் அம்மா, வாயைத் திறக்கவேண்டியதுதான், சொரூபம் வெளியாகிவிடும். அமரிக்கையான பேச்சே அவள் நாக்கில் வராது!

அறையினுள் நுழைந்ததுமே காவேரி, "ஏன்னா? இங்கேயே புகுந்துகொண்டிருந்தால்......? நாலு புருஷாளாட்டம் வெளியிலே சற்று உலாவிவிட்டு வருகிறதுதானே? நன்னாயிருக்கு, காதில் விழவில்லையா?" என்றாள்.

இதற்கு முன்பெல்லாம், காவேரி இவ்வாறு பெரியதனமான வார்த்தைகளைச் சொல்லியிருக்கிறாள். நடராஜனும் சகித்துக் கொண்டிருக்கிறான். ஆனால், இன்று பரம சாதுவான அவனுக்கும் எதனாலோ எரிச்சல் மூண்டது. பற்களை நறநறவென்று கடித்து, அவன், "ஒவ்வொரு விஷயத்திலும் நீ சொல்லுகிறபடிதான் நான் நடக்கவேண்டுமா?.....ஏண்டி....நான் கேகரமாட்டேன்" என்று கட்டிலில், நன்றாக நீட்டிக் கொண்டு படுத்தான். "நான் பையன்களுடன் மாரடித்துக்கொண்டு சாகிறேன்; என் கஷ்டம் எனக்குத்தானே தெரியும். பெரிய மனுஷனாம். வருகிறான்...மூஞ்சியைக் காட்டினால் பயந்து விடுவேனோ? சே! இந்த உத்தியோகத்தைப் பார்ப்பதைவிட -" என்று ஒருதரம், ஸ்கூலைச் சேர்ந்த யாரையோ ஸ்மரித்துவிட்டு, கம்பளிப் போர்வையைக் கால்

மாட்டு வரை இழுத்து மூடிக்கொண்டு "அது போதாதென்று வீட்டுக்கு வந்தால் உன் உபத்திரவம் வேறு" என்று குமுறினன்.

காவேரிக்கு ஒன்றுமே தோன்றவில்லை. வாயடைத்து நின்ருள். அதன் பின்பு விளக்கை அறையின் ஒரு மூலையில் குறைத்து வைத்துவிட்டுச் சந்தடி செய்யாமலே போய்விட்டாள்.

விவாகமாகித் தம்பதிகள் ஒன்ருகக் கூடும் அழகை எந்தக் கொடிய கிரகமோ கோணற் பார்வையினுல் பார்த்துவிட்டது.

மூன்று நாட்கள் வரை ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்கவில்லை. பேச்சு வார்த்தையும் இல்லை. காவேரி, யந்திரம் சுழல்வதுபோல் வீட்டுக் காரியங்களைச் செய்துவந்தாளே தவிர, அவள்மனத்துள்தென்பில்லை. அதைக் காட்டிக்கொள்ளாமல் பிகுவாகவே இருந்தாள். நடராஜனும் வழக்கம்போல், குளித்ததும் சாப்பிட்டுவிட்டுப் பள்ளிக்கூடம் சென்று வந்தான். சாயங்காலங்களில் எங்கேயாவது போய் அரட்டை அடித்துவிட்டுச் சரியாக எட்டு மணிக்குச் சாப்பாட்டு வேளைக்கு வீடு திரும்புவான். மனைவியின் எதிரே முகத்தைக் கடுமையாகவே வைத்துக்கொள்வான். கடமையென்று அவளும் அவனுக்குப் பரிமாறுவாள். இப்படி ஊமை நாடகம் கொஞ்சநாள் நடந்தது.

எத்தனை நாள் இதேமாதிரி சம்சார சக்கரம் சுழலும்! கடைசியில் நடராஜனுக்கு இரக்கம் ஏற்பட்டது. ஊடலைத் தணிக்க ஒருநாள், தற்காலம் நாகரிகத்திற்கேற்ற 'நயா ஸன்ஸார்' என்று பொன் எழுத்துக்கள் தீட்டிய பட்டையான கண்ணுடி வளையல் ஒரு ஜோடி வாங்கிக் கொண்டுவந்தான்,

காவேரியின் கையளவுக்குத் தகுந்தாற்போல். காவேரி அதை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. மூக்கை நெளித்து, தனி வெறுப்பைக் காட்டி, "போயும் போயும் இந்த கிளாஸ் வளையலா?" என்றாள். நடராஜனுடைய முகம் ஒரு நிமிஷம் வெடித்துப்போன பலூனைப் போல் சுருங்கியது. "ஏன், உன் கைக்கு எடுத்துக் காட்டுமே, காவு" என்றான்.

"மண்ணாங்கட்டி" என்று அவள் சொல்லி இருக்கக்கூடாது. ஆனாலும் அவள் வாயில் வந்துவிட்டது.

"பின், எந்த விதந்தான் வேண்டும் உனக்கு? சொல்லித் தொலையேன்?" நடராஜனுடைய குரல் வெம்மையைக் காட்டியது.

"நான் ஆசைப்படுவதை நீங்கள் வாங்கிக்கொடுத்து விடப் போகிறீர்களாக்கும்!" கூரிய கத்தியை ஒத்த ஏளனச் சிரிப்பு, அவள் உதட்டில் விளையாடிற்று.

"வாங்கித்தருகிறேன்... ...என்னதான் சொல்லு? — நடராஜனுடைய குரலில் இடியின் திண்மை ஒலித்தது.

"சொல்லட்டுமா, இரண்டு கைகளுக்கும் இரண்டு தினுசுப் பொன்வளையல் தான்...புரிந்ததா? பொன் வளையல்... திராபை கிளாஸ் வளையல் அல்ல. ஆனால்-" வார்த்தையை முடிக்கும்போது காவேரியின் நாக்கு, தீவிரமான விஷத்தைக் கொட்டியது.

நடராஜனுக்கு ஆத்திரமாக வந்தது. புளீரென்று ஓர் அறை அவளது கன்னத்தில் விட்டுவிட்டு ஜன்மம் முழுவதும் அவள் முகத்தில் விழிக்காமல் போய்விட வேண்டுமென்று எண்ணினான். ஆனால் யாருடைய நல்ல காலமோ அவன் தன்னை நிதானித்துக்கொண்டான். நொடிப்பொழுது சும்மா இருந்ததும், அவன்,

"சரி, பண்ணிப்போடுகிறேன்" என்றான். உடனே வீட்டினின்று பரபரவென்று வெளியே சென்றான்.

நடராஜன் தன் சொல்லைக் காப்பாற்றப் பலவிதக் கஷ்டங்களுக்கு ஆளானான். தான் சிரமப்பட்டு சேவிங்ஸ் பாங்கில் சேர்த்துவைத்தபணத்தை வாங்கிக் காவேரிக்கு இரண்டு ஜதை பொன் வளையல் தட்டானிடம் செய்யக் கொடுத்தான். போகட்டுமே, எல்லாந் தான் போகட்டும்! காவேரியின் மனம் திருப்தி அடைந்தால் போதும். வளையலிலும் புடைவையிலும் மோகங் கொண்டவளிடம் என்ன ஜோலி? அப்பேர்ப் பட்டவளே வேண்டாம்....பொன் வளையலைப் போட்டுக்கொண்டு காவேரி மினுக்கிக் குலுக்கட்டும்...... பாழாய்ப் போகட்டும்........

இரண்டு தினங்களுக்குப் பிந்திய நிகழ்ச்சி. காவேரி சமையலுக்குக் கத்தரிக்காய் நறுக்கிக் கொண்டிருந்தாள். நடராஜன் ரோஜா நிறமான மெல்லிய காகிதப் பொட்டணமொன்றை அவள் மடிமீது எறிந்தான். காவேரி அவனை அண்ணாந்து நோக்கி, "என்ன இது?" என்றாள். "திறந்து பார் தெரியும்". என்று முகத்தில் விகாரமே இராமல் பதில் சொன்னான் நடராஜன்.

காவேரி பொட்டணத்தைப் பிரித்ததுமே அதினின்று கனமான இரண்டு ஜோடி பொன் வளையல்கள் பளபளவென்று மெருகிட்ட சிரிப்புடன் விழுந்தன.

அரிவாள்மணையை மடக்கிவிட்டுக் காவேரி எழுந்தாள்......குதூகலத்தினால் அவளுடைய கண்கள் அகலமாக விரிந்தன. நடராஜனையே உற்று நோக்கினாள் சிறிது நேரம் வியப்பு மேலிட்டு.

"என்ன செலவாயிற்று?" என்றாள்.

"அதைப்பற்றி உனக்கென்ன தலைவலி? கொஞ்சமல்ல........ பொன்னுயிற்றே.........சந்தேகமிருந்தால், வேறு எந்தத் தட்டானைக் கொண்டாவது சோதனை செய்து பார்."—பேயினும் கொடுமையான உள்ளத்திலிருந்து எழும் சொற்கள் இவை.

வேதனை தோய்ந்த பார்வையுடன் காவேரி, "நான் என்ன தவருகச் சொல்லிவிட்டேன்.........இப்படி வளை பண்ணிப் போடுவானேன்? இப்படிக் குத்திக் காட்டுவானேன்.........? இரண்டும் வேண்டாம்" என்ருள்.

"வளை கேட்டாய்; பண்ணித் தந்தேன்......என் கஷ்டம் சொல்லிக் காட்டுகிறேன்.........போயேன்" என்ருன் நடராஜன்.

"சோதனை பண்ணித்தான் பார்க்கிறேனே...... இன்னும் என்ன?" என்று ரோஷத்திஞல் தொடர்பற்ற வார்த்தைகளை முணுமுணுத்துக்கொண்டே சமையலறையிலுள்ள பாத்திரங்கள் இரண்டை இடறிக்கொண்டே சென்ருள் காவேரி.

நடராஜன் எவ்வாருனுன்! தன்னையும் அறியாமலே உதட்டை ரத்தம் வரக் கடித்துக்கொண்டான்.

கண்ணுக்குப் புலப்படாத ஒரு நியதி எல்லாவற்றையும் ஆட்டி வைத்து வேடிக்கை பார்க்கிறது......ஓய்வே இல்லை அதற்கும்......நாட்களும் ஒரே லயத்தில் சுழன்றுகொண்டிருந்தன. இதற்குள் பிரபஞ்சத்தில் அனேக வித மாறுதல்கள் தோன்றி இருக்கலாம். ஆனுல் நடராஜன் காவேரி இவர்களுடைய நிலைமை பழைய முட்டுக்கட்டையுடனேயே நின்றது. அவர்களுக்கிடையே அன்னியோன்னியமே போய்விட்டது.

பள்ளிக்கூடத்திலிருந்து சாயங்காலம் திரும்பும் போது ஒருநாள் நடராஜனுக்குத் திடீரெனக் குளிர் கண்டது. மலேரியாவின் பூர்வ பீடிகை. இருக்கிற கம்பளியெல்லாம் எடுத்து உடம்பில் சுற்றிக்கொண்டு வெடவெடவென்று நடுங்கப் படுத்துக்கொண்டான். அன்றே பின் இரவில் ஜில்லென்று வேர்த்து ஜ்வரம்விட்டது. மறுநாள் ஒன்றுமில்லை. பள்ளிக்கூடம் சென்றான்.........அடுத்த நாள் பழையபடி குளிர் காய்ச்சல் வந்தது. இதைப் பொருட்படுத்துபவனோ நடராஜன்......? வேண்டுமென்றே ஸ்நானம் செய் வான். மோர் வார்த்துக்கொள்வான்......பள்ளிக்கூட மும் செல்வான். பூத்தானம் செய்வது புருஷலக்ஷண மன்று! இரவெல்லாம் கோடை இறுக்கமாயிருந் தாலும் கம்பளியின் மறைவில் ஹீஹீ என்று அவனுக்கு உதறல் எடுக்கும்.

இந்த மாதிரி எத்தனை நாட்கள் மூடி வைக்க முடியும்? வியாதி பிரமாதமாகத் தொடங்கியது. நடராஜன் படுகிடையானான்.

வீட்டு வேலைக்காரக் கிழவி பாக்கியந்தான் அவ னுக்குச் சுசுருஷை செய்பவள். கஷாயம் கிஷாயம் போட்டுக் கொடுப்பாள். காவேரி இவற்றையெல்லாம் பார்த்துக்கொண்டே, துயரே உருவெடுத்தாற்போல் பக்கத்தில் நின்றுகொண்டிருப்பாள்.

ஒரு நாள், அன்று தடாலென காவேரிக்கு என்ன தோன்றியதோ, தன் கையாலேயே நடராஜனுக்குப் பார்லி கஞ்சிபோட்டாள். அதை அவளே எடுத்துக் கொண்டு அவன் தலைமாட்டண்டை வந்து நின்றாள். ஆனால் நடராஜன் மூடின கண் மூடினபடி ஒரே ஜ்வரவேகத்தில் நினைவுதப்பிக் கிடந்தான். வளையல்

குலுங்கும் சப்தம் கேட்டும் அவன் விழித்துக் கொள்ளவில்லை. காவேரி, அவன் முகத்தின்மேல் கவிந்து, "உங்களைத்தான் கஞ்சி..." என்றாள். "அந்த மேஜைமேல் வைத்துவிட்டுப் போ" என்றான் திராணி யற்ற குரலில். டொக்கென்று பாத்திரத்தை வைத்து விட்டு அறையில் ஓர் அலையை எழுப்பிக்கொண்டே வெளியே சென்றாள் அவள். வைத்த வேகத்தில் பாத்திரத்திலிருந்து கஞ்சி தளும்பி வெளியேகொஞ்சம் சிந்தியது.

ஜ்வரம் அடித்து அடித்து நடராஜன் தேய்ந்து உருமாறிப் போனான். குச்சி குச்சியாகத் தலைமயிர் உதிர்ந்துபோய் விறைத்துக்கொண்டு நின்றது. உடம்பிலிருக்கும் எலும்புகள் எண்ணிக்கைக்கு அகப் படுவனவாயிருந்தன. சருமத்தில் வறட்சி. தீப்பொறி பட்டாற் போன்ற வேதனை.

இந்தக் கோலத்தைக் கண்டதும், வேலைக்காரி பாக்கியம் துக்கம் தாளாமல் விக்கி விக்கி அழுதுவிட் டாள். "இந்த மாதிரி வைத்துக் கொண்டிருந்தால் எத்தனை நாள் பிழைத்திருப்பாய்! அப்பனே.....டாக் டரிடம் காட்டக்கூடாதா? ஏனோ இந்தப் பிடி வாதம்" என்றாள். தம்பதிகளுக்கிடையே நடக்கும் ஊடலை கிழவி அறிவாள்.

நடராஜன் கிழித்துப்போட்ட நார்போல் படுக் கையில் கிடந்தான். ஒரு வார்த்தை சொல்லக்கூட அவனுக்குச் சக்தி இல்லை. அவன் மௌனமாக இருப்பதைக் கொண்டு, சம்மதமென்று அறிந்து கிழ வியின் மூலமாக டாக்டரை வரவழைத்தாள் காவேரி.

டாக்டர் வந்து வெகு நேரம், நோயாளியைப் பரீட்சித்துவிட்டு மருந்து ஒன்றை எழுதிக்கொடுத்

தார். போகும்போது, "இடம் மாறினால்தான் இந்தக் காய்ச்சல் அறத் தேவலையாகும்" என்றார்.

நடராஜன் ஈனக்குரலிலே, "இடம் மாறுவதென்றால் சோற்றுக்குத் தாளம் போடவேண்டுமே" என்றான். டாக்டருக்கு அதைப்பற்றி என்ன? விஸிடிங் பீஸைப் பையில் போட்டுக்கொண்டு நழுவினார்.

அன்று நோயாளி படுத்திருந்த அறையின் சாளரக்கோப்பில் இருந்த வண்ணம் காவேரி வெளிப்புறம் நோக்கிக் கொண்டிருந்தாள்...... அந்திப்பொழுது; வான் முகட்டில் பூர்ண சந்திரன் உதயமாகிக் கொண்டிருந்தது; சந்தன வில்லைபோல் வெண்ணிலா ஊரெல்லாம் மாக் கோலம் இட்டதுபோல் வெளேரென்று பிரகாசித்தது; தென்னை மர ஓலையில் படிந்து நிலவு பளபளத்தது; வாயிலில் உள்ள பாரிஜாத மரத்தின்கீழ் சிறுத்தையின் புள்ளி போன்ற நிழல்; மதியின் கதிர் ஒன்று கள்ளத்தனமாய் உள்ளே புகுந்து நடராஜன் முகத்தில் விழுந்தது. ஏற்கனவே கூம்பி வெளுத்துக் கண்கள் குழிவிழுந்திருக்கும் அவன் முகத்தை அது பின்னும் கோரமாக விளக்கியது.

உண்மையில் துயரமே தருவதாயிருந்தது அக்காட்சி. எந்த மாதிரி இருந்த உடம்பு எப்படி ஆகிவிட்டது? பைத்தியக்காரா, இன்னுமா பிடிவாதம்? எங்கேயோ நீர்க்கோழி ஒன்று விடாமல் கூவிக்கொண்டிருந்தது. ஆகாயத்தில் சோவென்று கூட்டமாக நாரைகள் செல்லும் சிறகின் ஒலி. தொலைவில் வயல்களிடையே நரியின் ஊளை. ஊர்க்கோடியில் நாயின் அழுகை. இதன் நடுவே கும்மென்று வீசும் பாரிஜாத மலரின் நறுமணம்.

காவேரியின் கண்களில் நீர்த்திரை இட்டது. தன் வாழ்வில் ஒரு பெரும் ஏமாற்றம் எதிர்நோக்கி வருவதை அவள் உணர்ந்தாள். யாரையோ இழந்து விடும் மகத்தான வேதனை அவள் இதயத்தைப் பிழிந்தெடுத்தது. அவள் புடைவை கேட்கவில்லை, வளையல் கேட்கவில்லை. இதுவரை அவளுக்குக் கிட்டாத தொரு நிலைமையைத்தான் அவள் நாடினாள் இன்று. அதன் சுவையை ஒரு சமயம் அவள் முற்றும் நுகராமல் இருந்தாள். அனுதாபம் மட்டுமே கொண்டிருந்தாள். இப்போது உள்ளத்தில் ஊறும் காதலுக்குச் சோதனைக் காலம் நெருங்கிவிட்டது.

பாலொத்த நிலவும், நடராஜனின் தீனமான முகச்சாயையும் சுவர்க்கூவியின் ரீங்காரமும் சேர்ந்து காவேரியை ஆழ்ந்த சிந்தனைக் குள்ளாக்கின. சித்தக் கடலில் மூழ்கித் தன் ஆழத்தைக் கண்டு கொண்டாள். ஒரு பெரும் பாக்கியத்திலிருந்து தன்னை வஞ்சித்துக்கொள்ள அவள் விரும்பவில்லை. இனிமேல் அவள் ஏமாறமாட்டாள்.

காவேரி, மெல்ல எழுந்து சென்றாள். வீட்டு வேலையெல்லாம் கிழவி பாக்கியமே கவனித்துக்கொண்டிருந்தாள். காவேரி அவளிடம் சென்று, "பாக்கியம், தட்டார ராஜுவை என்ன காரியமிருந்தாலும் உடனே கூட்டிக்கொண்டுவா. அவன் கேட்டால் அவசரமான காரியமென்று சொல்" என்றாள்.

கிழவி, "இராத்திரி ஆயிற்றே, இப்போதென்ன அவசரம்" என்று தயங்கவே, காவேரி, அதிகார அம்மாதோரணையில், "அழைத்துவா என்றால் மறுபேச்சுப் பேசுகிறாயே" என்றாள். காவேரியிடத்தில் கிழவிக்குப் பயம். மேலே பேச்சுக் கொடுக்காமல் வெளியே

சென்றாள். நோயாளிக்குப் பத்தியமான ஆகாரத்தை எடுத்துக்கொண்டு, நடராஜனின் தலையண்டை வந்து அமர்ந்தாள் காவேரி.

மெல்ல நடராஜனின் நெற்றிக் கட்டில் கையை வைத்தாள். புறாவின் மார்பைப்போல் துடிக்கும் மிருதுவான தளிர்க்கை. நடராஜன் இவற்றையெல்லாம் கவனித்துக்கொண்டுதான் இருந்தான். ஆனால்வாயைத் திறந்து 'உம்' என்ற சத்தங்கூடச் செய்யவில்லை அவன். இந்த நல்ல நேரத்திற்காகத்தான் அவன் இத்தனை நாள் காத்திருந்தான். பாவம்...காவேரியைக் கட்டி அணைத்துக்கொள்ள வேண்டுமென்று பேராவல் பொங்கிக்கொண்டிருந்தது அவன் உள்ளத்தில். அவளை மனம் புண்ணாகும்படித் தான் சொன்ன கடூர மொழிகளுக்காக மன்னிப்புக் கேட்டுக்கொள்ள அவன் துடிதுடித்தான்.

கிழவி வந்து, "அம்மா, தட்டான் வந்திருக்கிறான்" என்று அறிவித்தாள்.

நடராஜனின் கண்முன் லக்ஷக்கணக்கான தீவர்த்தி ஏககாலத்தில் 'டப்' என்று அணைந்துவிட்ட மாதிரி இருந்தது. தலை சுழன்றது. முழந்தாளில் தலையை ஊன்றிச் சமாளித்துக்கொண்டான். "இன்னும் என்னவேண்டும்....லோலாக்கா, கழுத்துச் சங்கிலியா? சொல்லேன்......ஏன் கூச்சப்படுகிறாய்? நான் சாவதைப் பற்றி நீ யோசனை செய்யாதே.........இந்தச் சமயத்தில்தானே நகைகளை நிரப்பிக்கொள்ள வேண்டும்.........இரண்டு நாள் ஜோராகப் போட்டுக் கொள்ளலாம். அப்புறம் என்றைக்குமே கழற்றி வைத்துவிடலாம்"—ஒரே மூச்சில் இத்தனை வார்த்தைகளையும் அடுக்கவே அவனுக்கு மூச்சு வாங்கிற்று.

காவேரி, இதனால் சற்றும் இடிந்துவிடவில்லை. கிழவியைப் பார்த்து, "அவனை அங்கே இருக்கச் சொல்லு.........இதோ வருகிறேன்" என்றாள். அதிக சிரத்தையுடன் நடராஜனுடைய தலையைத் தலையணை யில் மெல்லப் படுக்கவைத்துவிட்டு, நெற்றியை மெல்லப் பிடித்தாள்.

இவ்வாறு சில கணம் சென்றது. காவேரி நிதான மாகவே, "உங்களைத்தான்.........அப்பாவுக்கு நாளைக் குக் கடிதம் எழுதப் போகிறேன்.........அவர் வந்து நம்மை அழைத்துச் செல்வார். இங்கேயே இந்த நிலையில் இருந்தால் உங்களை நான் பறிகொடுக்க வேண்டியதுதான்" என்றதுமே அவளுடைய நெஞ்சு விரிந்தது. துயரின்வேகம் சற்றுத் தணிந்ததும், குரலில் தெளிவும், நம்பிக்கையும் உதிக்க, "கொஞ்ச நாள் அங்கே இருந்துவிட்டு, மதனபல்லிக்குப் போக லாம் நாம். எங்கள் மாமா அங்கே வசிக்கிறார். பணத்தைப்பற்றி உங்களுக்குக் கவலை வேண்டாம்..." வாய்ப்பதற்றமான காவேரியின் பேச்சில் நயம் ஒலித் தது. "மாமா எல்லாவற்றையும் கவனித்துக் கொள் வார்......இந்த நோய் பறந்துபோய்விடும்......முன் போல் உங்களுடைய சரீரம் இரும்பாகிவிடும்" என் றாள். நடராஜனின் எலும்பெடுத்த மார்பில் தன் முகத்தை மறைத்துக்கொண்டு, "நீங்கள் போட்ட தங்க வளையலை விற்கத்தான் தட்டானை தருவித்தேன் இங்கே" என்றாள் மெதுவாக.

நடராஜன் ஒவ்வொரு வார்த்தையையும் தன் செவியில் போட்டுக் கொண்டிருந்தான். அவனால் பதில் எதுவும் தர முடியவில்லை. பலவீனமான கையி னால் காவேரியை இன்னும் தன்னருகில் இழுத்துக் கொண்டான். ஊடல் முறிந்தது.

# தேவி உபாஸகர்

**உலகத்தில் எவ்வளவோ அதிசயங்கள் நிகழ்கின்றன.** அவற்றை நாம் கவனித்துப் பாராமல் விட்டுவிடுகின்றோம். எங்கள் ஊருக்கு ஒரு தேவி உபாஸகர் வந்திருந்தார். முதலில் அவரை அண்டிப்பேச எனக்குத் துணிவு ஏற்படவில்லை. சிவன் கோயில் மண்டபத்தில் தான் அவர் தங்கியிருந்தார். தினமும் நான் சுவாமி தரிசனம் செய்ய அங்கு வருவதைப் பார்த்து அவரே என்னைக் கூப்பிட்டுப் பேசினார். நாங்கள் இருவரும் சிநேகிதர்களாகிவிட்டோம். அவர் படித்தவர், நல்ல உத்தியோகத்தில் இருந்தவர் என்று கண்டுகொண்டேன். தம் விசித்திர அநுபவங்களை எடுத்து எனக்குச் சொல்லுவார். அதைக் கேட்கும் சுவாரஸ்யத்தில் வீட்டைக்கூட மறந்துபோவேன். எனக்கு என்னவோ அவர் சொன்ன விஷயங்கள் உண்மையாக நடந்திருக்கும் என்றே பட்டது. கட்டுக்கதை யென்று வேண்டுமானால் நீங்கள் எண்ணிக்கொள்ளலாம்.

நான் சொல்லும் தாந்திரிகர் ஒருசமயம் சம்சாரத்தில் இருந்தவரே. திடீரென்று என்னவோ அவருக்குத் தந்திர ஸாதனையில் மனம் சென்றது. பன்னிரண்டு வருஷங்களாக அவர் இந்த மார்க்கத்தைப் பின்பற்றி, வனங்களிலும், மலைக்குகைகளிலும் தம் இஷ்ட தேவதையைத் தேடி அலைகிறாராம்.

அவர் சொன்ன வரலாற்றின் ஒரு பகுதி இது:

* * * *

அன்று ஆலங்காட்டு மயானத்தில் ஒரு கிழவியின் பயங்கரச் செயல்களைச் சொன்னேன் அல்லவா?

அந்த இடத்தில் நாலு தினங்களுக்குமேல் நான் தங்க வில்லை. அப்புறம் நான் சுற்றாத இடமே இல்லை. அரைகுறையாக இருக்கும் என் தாந்திரிக வித்தை யைச் சரியான வழிக்குத் திருப்பக் குரு எங்கே அகப் படுவாரென்று தேடலானேன். எத்தனையோ சாதுக் களைப் பார்த்தாயிற்று. ஒருவராவது எனக்குப் பிடிக் கவில்லை. பழகியபோது அனைவரும் வெறும் போலிக ளாகவே மாறினர். ஓர் உண்மையான தாந்திரிகனைக் கண்டுபிடிக்காமல் அலைந்து கொண்டிருந்தேன்.

இந்த நிலையில் காளஹஸ்திக்குப் போயிருந்தேன். அந்தப் பக்கம் சில சாதுக்கள் மலைகளில் இருப்பதாகக் கேள்விப்பட்டேன். அவர்களையும் பார்த்து விடலா மென்று ஓர் ஆசை. ஊருக்கு அணித்தாக ஓடுகிறது சுவர்ணமுகி என்ற ஆறு; பொன்னிறமான மணல். பளிங்குபோன்றது அதன் ஜலம். அப்போது நல்ல பனிக்காலம். என்வரைக்கும் பனியும் வெயிலும் ஒன்றே. பலவித ஹடயோக சாதனைகளைச் செய்த என் உடல் வயிரமாகிவிட்டது.

ஜனங்கள் நடமாடும் வழிகளில் நான் தங்குவ தில்லை. ஊருக்கு வெளியே ஆற்றங்கரையில் ஒரு தனிமையான இடத்தையே தேடிக்கொண்டேன். என் வழிபாட்டிற்கு ஏற்ற இடம். ஒரு பக்கம் மலை யின் சரிவு. பாம்பு வளைந்து ஊர்வதுபோல் நீரோட் டம் சாந்தமாய்ச் சென்றுகொண்டிருந்தது. மனத் தைப் பரிசுத்தமாக்கும் இயற்கையின் வனப்பு. நான் நீராடிவிட்டுக் கரைக்கு வந்தபோது சங்குபோல் தூய மேனியும் நெடிய வடிவமும் உடைய ஒரு நிர்வாணி, அங்கே இருக்கும் துர்க்கையின் கோயிலுள் நுழை வதைக் கண்டேன். என்னுடைய சாமான்களை அச்

சிறு ஆலயத்துள்தான் வைத்திருந்தேன். 'எந்தப் புற்றில் எந்தப்பாம்பு இருக்குமோ?' என்று சொல்லு வார்கள். அந்த அதிசய மனிதர் ஒரு சித்த புருஷ ராகவே இருப்பாரென்று எனக்குத் தோன்றவே, உடனே சென்று அவருடைய பாதங்களைக் கெட்டி யாகப் பிடித்துக் கொண்டேன். அந்த ஜடாதாரி உண்மையில் மகானே. சாந்தமான குரலில், 'என்ன வேண்டும் அப்பா? இங்கே ஏன் வந்தாய்?' மனைவி மக்களைக் கோபத்தினால் துறந்துவிட்டு வந்திருக்கி றாயா?'' என்று கேட்டார்.

நான் மிகவும் வணக்கத்துடன், "கோபம் தாபம் ஒன்றுமில்லை, சுவாமி! உண்மையில் சம்சாரத்தில் வெறுப்புற்றே வந்துவிட்டேன். ஸத்குருவைத் தேடித்தான் அலைகிறேன்'' என்றேன்.

அந்த நிர்வாணி சிரித்தார். அன்று ஆலங்காட் டுக் கிழவி எதைச் சொன்னாளோ அதையே சொன் னார்.

"அப்பா, இள வயசாயிற்றே உனக்கு! இந்த மார்க்கம் மிகவும் கடுமையாயிற்றே. சலனப்படக் கூடாதே. போகங்களின் வாசனை முற்றும் எரிந்து சாம்பலானால்தான் இது கிட்டும். நடுவில் ஏதாவது பங்கம் ஏற்பட்டால் பைத்தியமாவது பிடித்து விடும். அல்லது பயங்கரமான சாவாவது ஏற்படும். போய்க் குடித்தனத்தில் ஈடுபடு. உரிய காலத்தில் இவையாவும் உனக்குக் கைகூடும்'' என்றார்.

ஆலயத்திற்குச் சற்றுத் தொலைவிலுள்ள ஒரு வேப்பமரத்தின் கீழ் அந்த மகான் வீற்று நிஷ்டை செய்யும் பஞ்சமுண்டாசனம் இருந்தது. ஐந்து நர முண்டங்களைக் கால்களாக வைத்த எலும்பாகிய

பீடம். அந்த மகான் எவ்வளவோ சொல்லிப்பார்த்தார். நான் அவரை விடவே இல்லை. நடுநிசியில் அந்த நிர்மானுஷ்யமான இடத்தில் அவர் அந்த ஆசனத்தில் அமர்ந்து தியானத்தில் ஆழ்ந்திருப்பார். அதைப்பார்க்கப் பார்க்க எனக்கு மயிர்க்கூச்செறியும். என்னையும் மீறி அவரிடத்தில் பக்தியும் சிரத்தையும் மூண்டன. இவரை விட்டால், இந்த ஜன்மத்தில் எனக்குச் சாதனையில் வெற்றி ஏற்படாதென்பது தெளிவாகிவிட்டது.

கொஞ்சநாள் இவ்வாறு அவர் பின்னாலேயே திரிந்துகொண்டிருந்தேன். அவர் வளர்த்த ஹோமங்களுக்குச் சமித்து, கட்டை எல்லாம் வெட்டிக்கொண்டு வருவேன். மூன்று மைலுக்கு அப்பாலுள்ள ஓர் ஊரிலிருந்து நெய் பால் எல்லாம் வாங்கி வருவேன். ஜனங்களும் சொல்லிக்கொண்டார்கள், அந்த மகான் பெரிய சித்த புருஷரென்று. அவர் பல அதிசயங்கள் செய்திருப்பதாகவும் தெரிந்துகொண்டேன்.

ஒரு நாள், நள்ளிரவில் திடீரென்று தூக்கம் கலைந்து நான் எழுந்து வெளியே வந்தேன். சுக்கில பக்ஷமானதால் நிலவு இருந்தது. மலைக்குப் பின்னால் சந்திரன் மறைவதனால் பிரகாசமான வெளிச்சம் இல்லை என்றே சொல்லவேண்டும். ஆலயத்திற்குப் பக்கத்திலுள்ள அந்த வேப்பமரத்தின் கீழ்ப்பாகம் இருளோவென்று இருந்தது. நிர்வாணி பஞ்சமுண்டாசனத்தின்மேல் அமர்ந்த வண்ணம் யாருடனோ பேசிக்கொண்டிருந்தார்' என்னை என்னவோ ஒன்று தூண்டிற்று. உள்ளுக்குள் நடுக்கமே; இருந்தும் என்னதான் நடக்கிறதென்று பார்க்கப் பேராவல்.

இந்த நிசி வேளையில் இந்தத் தனிமையான இடத்தில் யார் வருவார்கள்? நிலவு இயற்றும் மாயை. எந்தப் பக்கத்திலும் நிழலும் ஒளியும் பின்னிக்கிடந்தன. என் இருதயம் திக்திக்கென்று அடித்துக்கொண்டது. மூச்சுவிடாமல் அந்த ஆச்சரியத்தைக் கவனிக்க மெல்ல நகர்ந்தேன்.

அந்தத் தாந்திரிகச் சந்நியாசி அந்த அவ வேளையில் ஒரு பெண்ணோடு உரையாடுவதைக் கண்டேன். ஒரு மரத்தின் மறைவிலிருந்து பார்த்ததால் அந்த உருவம் தெளிவாகப் புரியவில்லை. மொத்தத்தில் நான் இதுவரை கண்டிராத பேரழகியாகவே அவள் தோற்றினாள். அவளது மேனி, நிலவின் சாயலையே கொண்டிருந்தது. என் குருநாதர் அந்த நடுராத்திரியில் ஒரு யுவதியுடன் பேசுவதன் அர்த்தம் என்ன; அவளுக்குத்தான் எப்படி இந்தப் பயங்கரமான இடத்திற்கு வரத் தைரியம் பிறந்தது? எனக்கு ஒன்றும் புரியவில்லை.

இருக்கட்டுமென்று - மேலும் ஆராயப் புகுந்தால் அவர்களுக்குத் தெரிந்துவிடும் என்று - நின்றுவிட்டேன். எனக்குமட்டும் நடுக்கந்தான், செய்யத்தகாததைச் செய்து விட்டோமோ என்று மெல்ல ஆலயத்துள் வந்து படுத்துக்கொண்டேன். மறுநாள் இரவு எனக்குத் தூக்கம் ஏன் வரப்போகிறது? பாதி ராத்திரி; மெல்ல எழுந்திருந்தேன். பஞ்சுமேல் செல்வதுபோல் அடிவைத்துப் பழைய மரத்தின் மறைவில்போய் நின்றேன். முன்னால் வந்த அதே யுவதி வந்திருந்தாள். விடியும் நேரம் வரை அந்த இடத்திலேயே பதுங்கி இருந்து நடப்பனவெல்லாம் ஒன்றுவிடாமல் கவனித்தேன். கிழக்கு வெளுத்து வருவதைக்

கண்டு அதற்குமேல் தங்குவது உசிதமல்ல என்று ஆலயத்துள் புகுந்து என் படுக்கையில் படுத்தது தான்; அயர்ந்து தூங்கிவிட்டேன்.

அடுத்த நாளும் இவ்வாறே.

அன்று மற்றொரு விசித்திரத்தை நான் கண்டேன். சந்நியாசியுடன் சம்பாஷிக்கும் ரூபவதி உடுத்திருக்கும் ஆடை புதுவிதமாக இருந்தது; அவள் எந்தத் தேசத்து பெண்ணென்று அறிந்து கொள்ள முடியாதபடி இருந்தது; அது புடவையும் அல்ல; பாவாடையும் அல்ல; மேல்நாட்டு நாரியர் அணியும் கவுனும் அல்ல; ஜப்பானிய ரமணிகள் அணியும் கிமோனோவும் அல்ல; இன்றும் நான் அதைக்குறித்து ஆச்சரியப்படுகிறேன். நிலவுபோன்று ஒளிரும் அவ்வழகியின் மேனியில் அது மெல்லிய பனித்திரைபோல் திகழ்ந்தது.

வேறொரு விஷயமும் மனத்துள் எழுந்தது. அந்த யுவதி யாராக இருந்தாலும், தினமும் ஒரு மரத்தின் இடுக்கிலிருந்து தன்னை ஒருவன் கவனிக்கிறானென்ற விஷயம் அவளுக்குத் தெரியாமல் இராதென்றே எண்ணினேன். இது எப்படி உனக்குத் தெரிந்ததென்று நீ கேட்கலாம். அதுதான் எனக்கும் தெரியவில்லை. அந்த எண்ணம் விழுந்தவுடன் என் உடலும் உள்ளமும் உறைந்துவிட்டன.

அப்புறம் ஒவ்வொரு நாளும் எனக்குத் தூக்கம் ஏது? என் மனம் அமைதியை இழந்தது. இதன் மர்மத்தை முற்றும் கண்டுபிடிக்கத் துணிந்துவிட்டேன். அடுத்த நாள் ஒன்று கவனித்தேன்: அந்த யுவதி அங்கே இருக்கும்வரையில், ஒருவிதச் சுகந்தம் நாற்றிசையும் கமழ்ந்தது. அது எதன் வாசனை போலிருந்த

தென்று என்னால் சொல்ல இயலவில்லை. நானும் அதை அநுபவித்தேன். முந்திய தினங்களெல்லாம் அந்த தெய்விக வாசனையை ஏதோ காட்டுப் பூவின் மணமென்றே எண்ணியிருந்தேன். அந்தப் பெண்ணுக்கும் அந்த வாஸனைக்கும் ஏதோ சம்பந்தம் இருப்பது கடைசியில் தெரியவந்தது.

இப்படியே பத்துப் பதினைந்து நாட்கள் சென்றன. ஒரு நாள் அரண்மனையிலிருந்து பல்லக்கு ஒன்று வந்தது. ராஜாவின் உறவினர் யாருக்கோ உடல் சங்கையைப் போக்குவதற்கு அந்த நிர்வாணியை அழைத்துச் செல்ல ஆட்கள் எதிரே வந்து வணங்கி நின்றனர். முதலில் சந்நியாசி போக மறுத்துவிட்டார். வந்தவர்கள் இரண்டு நாட்கள் பார்த்துப் பார்த்துச் சப்பிட்டுத் திரும்பினார்கள். மூன்றாவது நாள் ராஜாவின் கடைசித் தம்பியே நேரே வந்து அவரை வணங்கி வேண்டிக் கொண்டதன் பேரில் அவர் போக இசைந்தார்.

சந்நியாசிக்கு, இரவில் வரும் அந்த யுவதியை விட்டுப் பிரிய மனம் இல்லாததே இதற்குக் காரணமென்று நான் மடத்தனமாக நினைத்துக்கொண்டேன். அக்கம் பக்கத்தில் மனிதர் வசிக்கும் இடம் எதுவுமே இல்லை. பின் அந்த ரூபவதி எங்கிருந்துதான் முளைத்திருப்பாள்? அந்தப் பக்கத்து ஸ்திரீயும் அல்ல. அவளை நன்றாகப் பார்த்திருக்கிறேனே; அரச குமாரியாக அல்லவோ நிறை எழிலுடன் விளங்குகிறாள்? சாதாரணமான பெண்ணாக இருக்கும் பக்ஷத்தில், அந்த மாதிரி மின்னலின் பளப்பளப்புடைய வஸ்திரம் புனைந்திருக்க மாட்டாளே. இவை யாவும் எனக்கு மூண்ட சந்தேகங்கள்.

சந்நியாசி அன்று வரவில்லை. நான் அந்தச் சந்தர்ப்பத்தை மேற்கொண்டு, குறித்த நேரத்தில், உலகமே ஒடுங்கி ஓசையற்று இருக்கும் வேளையில், பரபரப்புடன் அவர் உட்காரும் பஞ்ச முண்டாசனத்தின்மீது அமர்ந்தேன். எனக்கு ஒரே குளிர் உள்ளுக்குள். அடுத்த நிமிஷம் என்ன நேரிடுமோ என்ற திகில். இருந்தும் என்னதான் வருகிறதோ என்று பார்த்துவிட ஒரு திடம் எனக்கு மூண்டது. அந்த அதிரூபவதியான பாவை வருகிறாளோ என்று நாலு பக்கமும் கவனித்தேன். என் தலைக்கு மேலே வேப்ப இலை ஒன்றுகூட அசையவில்லை. இந்த மாதிரி துணிச்சலான செயலை இதுவரை நான் செய்ததில்லை.

நானோ அந்தச் சமயம் நல்ல யுவ வயதில் இருந்தேன். ரத்த ஓட்டம் உடலில் மித மிஞ்சி ஓடும் காலமல்லவா? பின்னால் என்ன நேரிடுமென்பதைச் சற்றும் கவனிக்காமல் முன் செல்ல என் மனம் தூண்டியது. அந்தப் பஞ்சமுண்டாசனத்தை இப்போது நினைத்துக் கொள்ளும்போதுகூட என் உடல் சிலிர்க்கிறது. அந்தச் சமயம் எல்லாம் வேடிக்கையாக இருந்தன; நர கபாலம், அந்தச் சவாசனம், பேயிருட்டு யாவும். அமானுஷ்யமான விஷயங்களை நோக்கி என் மனம் ஓடியது. இவை யெல்லாம் கிடக்கட்டும்.

நடுநிசி வந்தது. என் எதிரே உள்ள பெரிய மரங்களின் உச்சிக்கு மேல் மங்கிய நிலவொளி எழுந்தது. என் இடது கைப்புறம் இருளின் களஞ்சியமான மலைச்சரிவு பேயுலகம் போல் இருந்தது. ஆற்றின் நீர்ப்பரப்பு விடும் மெல்லிய ஒளி, பேயொன்று இளிப்பதுபோன்ற பிரமையை உண்டுபண்ணியது. சுற்றுப்புறம் உள்ள இந்தப் பயங்கரக் காட்சிகளினால் என்

திடம் குலையவில்லை. வேப்பமரத்தின் கீழ்ப் பஞ்ச முண்டாசனத்தின்மேலேயே வீற்றிருந்தேன். திடீரென என்னவோ ஒன்று என் எதிரே சென்றாற் போல் இருந்தது.

நான் எதிர்பாராமல் இருக்கும் சமயம், அதே திவ்வியரூபிணி என்முன் வெகு சமீபமாகவே சப்தம் செய்யாமல் வந்து நின்றாள். அவளைக் கண்டதும் ஜில்லென்று எனக்கு மயிர்க்காலுக்கு மயிர்க்கால் வேர்த்து வடிந்தது. என்னுடைய கண்கள் நன்றா கக் கவனித்துக்கொண்டிருந்தன. ஆற்றங்கரையி லிருந்தோ காட்டுப்பக்கத்திலிருந்தோ எந்த உருவம் வந்தாலும் எனக்குத் தென்படாமல் போகாது. அந்த யுவதி நிற்கும் இடத்தில் இரண்டொரு நிமிஷங்க ளுக்கு முன் எவருமே இல்லை என்பதை நான் அறி வேன். இருந்தும் அவள் திடீரென என் முன் ஆவிர்ப்ப விப்பது இந்திரஜாலமென்றே கூறவேண்டும். அமா னுஷிகமான சம்பவம்! எனக்குத் தூக்கிப் போடா மல் இருக்குமா அந்த நிலையில்?

வருணிக்க இயலாத அதே தெய்விக மணம் எங் கும் வீசியது. அதனால் என் உடலும் உள்ளமும் சோங்கிவிட்டன. நினைவு சற்றே இருந்தது; அப் புறம் என்ன நடந்ததென்பதை நான் அறியேன்.

நினைவுவந்தபோது நான் அந்தத் தனிமையான துர்க்கையின் ஆலயத்தில் படுக்கையில் எழுந்திருக்கச் சக்தியற்றுப் படுத்திருப்பது தெரிந்தது. எத்தனை நாட் கள் அந்த மாதிரி தேகம் தெரியாமல் கிடந்தேனோ? சந்நியாசி என் பக்கத்தில் உட்கார்ந்திருந்தார். என் உடல் பிழிந்து எடுத்து விட்டமாதிரி ஆகிவிட்டது. சற்று வலிமை வந்தவுடன் அந்த இடத்தை விட்டுப்

போய்விட வேண்டுமென்று என் மனம் அலைபாய்ந் தது. 'போதும், இந்தப் பாழும் தாந்திரிக சாதனை கள்! நாம் இதற்கு ஆட்டாளி அல்ல!' என்றே உறைத்துப்போயிற்று.

என்னைப் பார்த்து அந்த நிர்வாணி, "அப்பா, இந்த வேடிக்கை யெல்லாம் என்னைக் கேட்காமல் செய்யலாமா? வழி தெரியாமல் போனதால் இந்த ஆபத்துக்கு உள்ளானாய். மூக்கிலும் வாயிலும் ரத்தம் கொட்டிச் சாகாமல் பிழைத்தாயே. நல்ல காலம்! நான் அறிந்துகொண்டு அந்தச் சமயம் வந்தேனே" என்றார்.

எனக்கு மயிர்க்கூச்செறிந்தது; "உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்றேன்.

சந்நியாசி சிரித்தார். "அட பயித்தியக்காரா, இது கூடவா தெரியாது எனக்கு? சர்வகாலிகமான ஞானம் எங்களைப் போன்றவர்களுக்கு உண்டு. இனி மேல் இந்த மாதிரி வேலை ஏதாவது செய்யப் போகி றாய்!" என்றார்.

என் உடம்பு ஒருவாறு சொஸ்தமடைந்தது. நட மாடப் பலம் வந்தது. சந்நியாசியிடம் சென்று நான், "சுவாமீ, எனக்கு உத்தரவு கொடுங்கள். நான் போகிறேன்" என்றேன்.

அவர் வியப்புற்று, "எங்கே போகப் போகிறாய்? சம்சாரத்திற்கா?" என்றார்.

"சம்சாரமும் வேண்டாம், இந்தச் சங்கடமும் வேண்டாம் எனக்கு. எத்தனை நாட்கள் நான் காத் திருப்பேன்? ஏதாவது வாயைத் திறப்பீர்களென்று எண்ணினேன். நான் வயிறு வளர்க்க இங்கு வர வில்லை" என்றேன்.

சந்நியாசியின் முகம் ஆழ்ந்து விளங்கியது. அவர் ஒன்றும் பேசவில்லை.

அன்று சாயந்தரம் என்னைக் கூப்பிட்டுத் தம் பக்கத்தில் உட்கார வைத்துக்கொண்டு அவர், "இந்த ஆபத்தான தந்திர மார்க்கத்தில் உன்னைத் திருப்ப வேண்டாமென்று இருந்தேன். நீயோ, என்மேல் மனஸ்தாபம் கொண்டு போக உத்தேசித்துவிட்டாய். எனக்கு எவ்வளவோ உபகாரம் செய்திருக்கிறாய். உனக்கு ஏதாவது சொல்லவேண்டுமென்று இருக்கிறேன். ஒன்று முன் ஜாக்கிரதையாகக் கேட்கிறேன்: எதற்கும் நீ அஞ்சமாட்டாயே?" என்றார்.

"அடியேன் இதற்குமுன் ஒருமுறை ஆலங்காட்டு மயானத்தில் சில மாதம் கோரமான தந்திர சாதனை செய்து பழக்கப்பட்டிருக்கிறேன்" என்றேன்.

சாதுவும் எனக்குள்ள திட வைராக்கியத்தைக் கண்டு திக்பிரமித்துப் போனார்.

"சரிதான், உனக்கு ஒரு மந்திரத்தை உபதேசம் செய்கிறேன். ஆனால் யுவ வயதாயிற்றே என்றுதான் சற்றுத் தயங்குகிறேன். அன்று நீ எதற்காக அந்தப் பஞ்சமுண்டாசனத்தின்மேல் போய் உட்கார்ந்தாய்?" என்றார்.

வெட்கத்தினால் தலையைத் தாழ்த்திக் கொண்டேன். மறைவாக எந்தப் பாப எண்ணமும் நான் கொள்ளவில்லை. நிசியில் சஞ்சரிக்கும் அந்த யுவதியின் லாவண்ணியத்தின் கவர்ச்சியே அவ்வாறு என்னை மயக்கிவிட்டதென்று குருவின் ஸ்தானத்தில் இருக்கும் அப் பெரியாரிடம் கூற என் நாக் கூசியது.

சாது என்னிடம் ஓர் அதிசயமான ரகசியத்தை அன்று வெளிப்படுத்தினார். "இவ்வளவு தெரிந்த

உனக்கு ஒரு விஷயம் மட்டும் தெரியவில்லையே. சொல்லுகிறேன் கேள்: நீ பார்த்த அந்த ரூபவதி உன்னையும் என்னையும் போல் மாமிச சரீரம் கொண்ட மனுஷ்ய ஜன்மம் அல்ல'' என்றார்.

அதைக் கேட்டதும் என் ஜீவன் ஒடுங்கி விட்டது: 'நம்மைப்போல் ஓர் ஆசாமி அன்றா? ஆனால் பூதமா?' என்றேன்.

"அப்பா, நானும் உன்னைப்போலத்தான் முதலில் அசட்டுப் பிசட்டென்று குருவின் உபதேசமிராமல் தாந்திரிக சர்ச்சையில் இறங்கினேன். வேண்டிய கஷ்டங்களை அநுபவித்தேன். கடைசியில் என் குருவான பாலானந்தரின் கிருபையால் நேர் வழியைப் பிடித்துக்கொண்டேன். இந்தத் தந்திர மார்க்கம் கடல்போன்றது. எத்தனையோ தேவதைகள். ஒவ்வொரு தேவதைக்கும் ஒவ்வொரு வித சாதனை. குலார்ணவ தந்திரத்தில் பலவித உபதேவதைகளின் வசிய மார்க்கத்தைக் காணலாம். வஜ்ரதாரை என்கிற தேவதையை அன்னையின் பாவனையில் தியானம் செய்யவேண்டும். பாலா திரிபுராவைக் கன்னிகையின் வடிவில் உபாசிக்க வேண்டும். இவர்களுள் சிலர் கொடியவர்கள், சிலர் நல்லவர்கள். அன்று நீ கண்டவள் இவர்களுள் ஒரு வகையினள். உனக்கு உள்ளத்தில் திடமும், இந்திரியங்களைக் கட்டுப்படுத்தும் உடல் வன்மையும் இருந்தால் மந்திரத்தை உபதேசிக்கிறேன்'' என்றார்.

அவர் உடனே சொல்லிவிடவில்லை. என்னுடைய வேட்கையை அதிகமாகக் கிளப்பிவிட்டார். நான் விடுகிறேனா அவரை?

"பாலேயின் மந்திரம் உபதேசிக்கிறேன். என்ன?" என்றார் அவர்.

நான் பேசாமல் இருந்தேன்.

"இல்லே, ஹேவஜ்ர யோகினியின் சாதனு மார்க்கத்தைச் சொல்லட்டுமா?" என்றார்.

அதற்கும் நான் சும்மா இருந்தேன்.

"சரி, உனக்கு அவையெல்லாம் வேண்டாம். ஷோடசாக்ஷரியை உபதேசிக்கிறேன். எந்த வடிவில் நினைத்துக் கொள்ளுகிருயோ, கன்னிகையாகவோ, காதலியாகவோ, அன்னேயாகவோ - அதே வடிவில் தோன்றுவாள் தேவி. இதில் ஆபத்து ஒன்று இருக்கிறது. காதலியாக நினைத்துச் சாதனே செய்தால், அவள் உன்னேக் காதலனுகவே பாவித்துவருவாள். அந்தத் தேவி மகா சக்தி வாய்ந்தவள். இலகுவில் உனக்குக் கட்டுப்பட மாட்டாள். அவளுடைய அருள் உனக்குக் கிடைத்துவிட்டால் பரம சுகத்தைப் பெறுவாய். தவருன வழியில் நடந்தால் உன்மத்தம் பிடித்துத் திரியவேண்டியதே. அதோகதிதான்" என்றார்.

ஒரு நல்ல வேளேயில் சாது எனக்கு அந்த அரிய பீஜாக்ஷரத்தின் ரகசியத்தை வெளிப்படுத்தினுர்.

"அப்பா, இனிமேல் இந்த இடத்தில் நீ இருக்கக் கூடாது. அதை உச்சாடனம் செய்ய வேறு இடத்திற்குப் போகவேண்டும்" என்றார்.

அந்த இடத்தை விட்டுப் புறப்பட்டேன். ஒரு மாதகாலம் எனக்குத் தகுந்த இடம் தேடுவதில் கழிந்தது. ஒரு காட்டாறு, அதன் பேர் சராவதியோ என்னவோ. மனிதர் நடமாட்டமே இராத பிரதேசம். சந்நியாசி உபதேசித்த வழியைச் சிரத்தையுடன்

பின்பற்றினேன். நான் அடைய விரும்பும் தேவதை யின் பூஜாவிதியே அலாதியானது. இந்த வழிபாட் டிற்கு மத்ஸ்யமும் மதுவும் இன்றியமையாதவை. காரியம் கைகூட வேண்டி அவற்றையெல்லாம் சம் பாதித்துக் கொண்டேன். ஹோமம் ஒன்று வளர்த்த வேண்டும். அதற்கு அத்திமரத்தின் சமித்து முக்கி யம். அதையும் தேடிப் பிடித்தேன். நெருப்பை மூட்டி, "ஓம் ஹ்ரீம் ச்ராம் ஸ்ரீம் ஹம் ஸம் ததடட சக்ரேச்வரி அபீஷ்டஸித்திம் குரு குரு ஸ்வாஹா" என்று ஆஹுதி செய்தேன்.

* * * *

தேவி உபாஸகரைப் பார்த்து நான், "மந் திரத்தை வெளிப்படையாகச் சொல்லி விட்டீர் களே" என்று கேட்டேன்.

"அதற்கென்ன? முக்கியமான பீஜாக்ஷரத்தை நான் சொல்லவில்லையே. அதோடு யந்திரம் வேறு இருக்கிறதே?"

"ஆனால் சொல்லுங்கள்" என்றேன்.

* * * *

"அப்புறம் யந்திர பூஜை. என்னுடைய ஷோட சாக்ஷர தேவதையைச் செவ்வந்தி மலரால்தான் அர்ச்சிக்க வேண்டும். அதையும் பக்கத்தில் ஓர் ஊரி லிருந்து கொண்டுவந்திருந்தேன். அர்ச்சனை முடிந் தது. அன்று இரவெல்லாம், உபாஸனைத் தேவதை யைக் குறித்துத் தியானத்தில் அமர்ந்திருந்தேன்."

* * * *

"பலன் ஏதாவது கிடைத்ததா?" என்று வினவி னேன்.

"கையிலிருந்த காசுதான் செலவழிந்தது. நான் செய்த ஹோமம், ஜபம் யாவும் வியர்த்தமாயின. மத்ஸ்ய மது நைவேத்தியங்களை ஆற்றில் வீசி எறிந்தேன்.

"எனக்கு ஆத்திரம். 'சரியான பேர்வழி அந்தச் சந்நியாசி. கடைசியில் கண்ணில் மண்ணைத் தூவி னார். யந்திரதந்திரங்களெல்லாம் சுத்தப் புருடா! இதற்குப் பட்ட சிரமத்தை 'ஹிப்னுடிஸ'த்திலோ வேறு ஏதாவது கண் கட்டு வித்தையிலோ செலுத்தி யிருந்தால், நாலு இடங்களில் சுற்றிப் பணமாவது சம்பாதித்திருக்கலாம்.' இவ்வாறெல்லாம் நான் நினைத்துக்கொண்டேன், அந்தச் சமயத்தில். ஆனால் நான் மந்திரத்தை மட்டும் உச்சரிப்பதை விடவில்லை. அது எனக்கு வழக்கமாகிவிட்டது. இந்த விதம் ஓர் ஏழெட்டு மாதங்கள் சென்றன.

"இதைப்போலத்தான் ஒரு நாள் ராத்திரி ஒரு மரத்தின் கீழே உட்கார்ந்த வண்ணம் உச்சாடனம் செய்து கொண்டிருந்தேன். இருட்டாக இருந்தாலும் மெல்லிய ஒளி எங்கும் பரவியிருந்தது. நக்ஷத்திரங்களின் வெளிச்சம். திடீரென்று கஸ்தூரியின் இனிய மணம் காற்றில் வீசியது. கவனமாகக் கேட்டுக்கொள் : நான் சொல்வதில் ஒரு வார்த்தைகூடப் பொய்யன்று. இரண்டொரு நிமிஷ காலம் அந்தக் கஸ்தூரியின் மணத்தை மோந்தேன். ஏதாவது காட்டுப் பூவின் மணமாகத்தான் இருக்குமென்று எண்ணினேன்.

"நான் வீற்றிருந்த மரத்தின் பின்புறம் யாரோ வந்து நின்றாற்போல் இருந்தது. திரும்பிப் பார்க்காது

போனாலும் எனக்கு மட்டும் அம்மாதிரி ஓர் உணர்வு ஏற்பட்டது. என் ஐம்புலன்களும் கூர்மையாக எதையோ கவனிக்கத் தொடங்கின. காற்றே நின்று விட்ட மாதிரி இருந்தது. என் உடலிலிருந்து குப்குப் என்ற ஆவி நெருப்பு வீசுவதுபோல் வெளிக்கிளம் பியது. முன்போல் என் நினைவு தப்பிவிடுமோ என்று அஞ்சினேன். இவ்வாறு சிந்திக்கும்போது என் எதிரே அபூர்வமான அழகுடன் ஒரு பெண் உருவம் தோன்றியது. வயசு பதினாறு இருக்கும். என் மனோதிடத்தை நான் விடவில்லை. அந்த உரு வத்தையே கண்கொட்டாமல் கவனித்தேன்.

"அந்த லாவண்ணிய வடிவம் புருவத்தை நெளித்து என் மேலேயே பார்வையைச் செலுத்தியது.

* * * *

"நிஜமாகவா, உங்கள் கண்ணாலே, பார்த்தீர் களா?" என்றேன் நான்.

என்னுடைய வார்த்தையில் அவநம்பிக்கை தொனிப்பதைக் கேட்டு, அந்த உபாஸகர் உக்கிரமான குரல் எடுத்து, "இந்தக் கண்ணால் பார்த்தேன்! என் முழு நினைவுடன் இருந்தேன். நீ நம்பினால் என்ன; நம்பாவிட்டால் என்ன? எனக்கு அதைப்பற்றி அக் கறை இல்லை. பார்த்ததைச் சொல்லுகிறேன். எதற்காக உன்னிடம் பொய் சொல்லவேண்டும்?" என்றார்.

"அந்த ரூபம் எப்படி இருந்தது?"

"என்னால் வருணிக்க முடியாது அந்தத் திவ்விய சௌந்தரியத்தை." அந்தத் தேவதையின் தியான

சுலோகத்தைச் சொல்லுகிறேன். ஒருவாறு விளங்கும் அவளது ரூபம் :

'உத்யத்-பாநு-ப்ரதீகாசா
வித்யுத் - புஞ்ஜ-நிபா ஸதீ |
நீலாம்பர - பரீதாநா
மத-விஹ்வல-லோசநா |
நாநாலங்கார-சோபாட்யா
கஸ்தூரீ-கந்த-மோதிதா |
கோமலாங்கீ ஸ்மேரமுகீ
பீநோத்துங்க - பயோதரா ||'

"ஏதாவது பேசினீர்களா அவளுடன்?"

"பேச்சா? அந்தத் திவ்விய வடிவத்தைப் பார்த்தவுடன் கண் சிதறிவிடும்போல் இருந்தது. என் ஸ்மாரகம் தப்பிவிடாமல் இருந்ததே; நான் செய்த புண்ணியம். அட பைத்தியமே! அரை நிமிஷத்திற்குமேல் பார்க்க முடியுமா? அந்தக் கண்களின் வசீகரந்தான் என்ன? 'மத - விஹ்வல - லோசநா' - மயங்கிவிழும் மதர்த்த கண்கள்! மூன்று லோகத்தையும் ஜயிக்கவல்ல நயனக் கொள்ளை!"

நான் அவரைச் சமீபித்து, "என்னதான் நடந்தது உங்களுக்குள்? அதைச் சொல்லமாட்டீரா?" என்றேன்.

அதற்கு அவர், "அந்தத் திவ்வியரூபிணியை நான் காதலியாகப் பாவித்து உபாஸித்தேனல்லவா? ஒவ்வொரு நாளும் அவளுடன் சுவர்க்க வாழ்வையே அநுபவித்தேன். எங்களுடைய காதல் சிற்றின்பமன்று; போக விகாரங்கள் கூடியதன்று; யோக சம்பந்தமானது. அதை விவரிக்க என்னால் முடியாது. உனக்கும் புரியாது" என்றார்.

"அதற்குமேல்?" என்றேன்.

* * * *

"மூன்று மாதங்கள் இந்த இணையற்ற சுகத்தில் லயித்துக் கிடந்தேன். என் வீட்டாருக்கு நான் அந்த மயானத்தில் பித்துப் பிடித்துத் திரிவதாக யாரோ எட்டவிட்டார்கள். அவர்கள் ஓடிவந்தார்கள். எனக்கு விவாகம் ஆகியிருந்தது. என்னை எப்படியோ சம்சாரத்தில் மாட்டவிட்டார்கள். ஆனால் என் மனம் மட்டும் அதில் நிலைக்கவில்லை. மனைவியுடன் சில வருஷகாலம் வாழ்ந்தேன். இரண்டு குழந்தை களுக்குத் தகப்பனும் ஆனேன். இருந்தால் என்ன? அவை யாவும் என் விருப்பமின்றியே நேர்ந்த கர்மங் கள். என் சிந்தைகள் யாவும் அந்தத் தேவியின் மேலேயே சென்றன. இப்போது நான் விடுபட்டு அவளைத் தேடிக்கொண்டிருக்கிறேன்" என்றார்.

"இப்போது அவள் ஆவிர்ப்பவிப்பதில்லையா?" என்றேன் நான்,

"வேறு ஸ்திரீயுடன் எனக்கு உறவு ஏற்பட்டு விட்டதால் என்முன் மீண்டும் வரமாட்டாள். இனி அவளைக் காதலியாகப் பாவித்தால் நான் அதோகதி யாக வேண்டியதுதான். அன்னையாகவே அவள் காட்சி தருகிறாள். அதுவே எனக்கு ஆறுதல் அளிக் கிறது. நேரமாகிறது; வருகிறாயா அப்பா? நிஷ்டைக் குச் செல்லவேண்டும்" என்றதும் அந்தத் தேவி உபாஸகர் எழுந்தார்.

என்ன அதிசயம்! எப்படி நம்புவது இந்தக் கதையை? நம்பாமலும் இருக்க முடியவில்லை. அமானுஷிகம்! அந்தத் தேவதையின் வடிவம் என்

அகக் கண்ணெதிரே தோன்றியது: சூரியனுக்கு நிகரான ஒளி படைத்த மேனி. மின்னலை ஒத்த அங்க சௌந்தரியம். அரையில் விண்ணீலமான துகில். மயங்கிவிழும் மதர்த்த விழிகள். புன்முறுவல் உலவும் முகவிலாசம். மாறி மாறி இந்நினைவு மனத்துள் எழ வீடு திரும்பினேன் நான்.

முற்றும்



# புயல் - மஹாகவி டாகுர்

62 - அத்தியாயங்கள் :: மொழிபெயர்ப்பு

**த. நா. குமரஸ்வாமி, பி. ஏ.**

**மலிவுப் பதிப்பு ரூ. 5-0-0 ... உயரிய பதிப்பு ரூ. 6-0-0**

—— *மதிப்புரைகளிற் சில* ——

**ஆனந்த விகடன் :—** * *டாகுர் எழுதியுள்ள நவீனங்களுள் மிகச் சிறந்ததென்று கருதப்படும் 'புயல்' என்ற காதற் கதை இப்போது* **வெகு அழகாகத் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு உயர்ந்த முறையில் அச்சாகி வெளியாயிருக்கிறது. * மனத்தைக் கவரும் பைண்ட் செய்யப்பட்டிருக்கும் இப்பிரசுரம், புத்தகசாலையிலும் ஒவ்வோர் இல்லத்திலும் இருக்கவேண்டிய அரிய பொக்கிஷமாகும்.**

**சக்தி :—** * *இனிமையும் தெளிவும் இயல்புமான தெள்ளிய நடையில் மொழிபெயர்த்திருக்கிறார் அன்பர் குமாரஸ்வாமி. அச்சும் பதிப்பும் அருமையாயிருக்கின்றன.*

**ஹிந்துஸ்தான் :—** * *அற்புதமான நவீனம்* **'புயல்'** *அமிர்தம் போன்ற தமிழ்நடை டாகுரின் நவீனத்தைச் சிறப்புறச் செய்கிறது.* **மனத்துக்குத் திருப்தியளிக்கும் ஒப்பற்ற நவீனம்.**

**பாரததேவி :—** * **ஒவ்வொரு புத்தகசாலையிலும் வீட்டிலும் இருக்கவேண்டிய அரிய பொக்கிஷம்.**

**நாரதர் :—** * *இது ஓர் அழகிய வாழ்க்கைச் சித்திரம்.*

**The Hindu** :—*The sympathetic treatment of the characters and the symmetrical development of the plot have been carefully dwelt upon. The Tamil rendering of the Novel is marked by clearness and precision.

**The Mail** :—* A great work by a great writer, *has been very well done* into Tamil. The dialogue is full of pen and interest. * The ending of the story is magnificent.

---

**அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை**

# சந்திரிகா

## பரிசுபெற்ற நாவல்

**'குகப்ரியை' எழுதியது - - - விலை ரூ. 1-4-0**

**இந்நூலைப்பற்றிய மதிப்புரைகளிற் சில**

**ஹனுமான்:**—* சந்திரிகாவின் கற்பனை அழகும், நடையழகும், பாஷையழகும் எந்த மேனாட்டு இலக்கியத்திற்கும் கொஞ்சமும் தாழ்ந்தனவல்ல. * நவரஸங்களையும் 'குகப்ரியை' தமது 'சந்திரிகா'வில் கொட்டி நம்மைக் களிக்கவைத்திருக்கிறார். இவைபோன்ற நூல்கள் கலாசாலை மாணவர்களிடமும் தவழவேண்டும் என்பதே நமது பேராசை. ***அற்புதமான கதைப்போக்கு; எளிய இனிய நடை, சுத்தமான தமிழ்.** 'சந்திரிகா' பண்டிதர் முதல் பாமரர் வரையிலும் படித்துப் பரவசமடையவேண்டிய ஓர் இலக்கியம்.

**ஸ்ரீ ரா. கிருஷ்ணமூர்த்தி** அவர்கள் ('கல்கி') 'சந்திரிகா'வுக்கு எழுதியுள்ள முன்னுரையின் முக்கிய பாகம்.—* எனக்குத் தெரிந்த வரையில் '**சந்திரிகா**'வில் இரண்டு பெரிய **சிறப்புகள்** இருக்கின்றன. ஒன்று, கதை வாழ்க்கையுடன் ஒட்டியது; ஆகவே உண்மைத் தத்துவம் பொருந்தியது. இயற்கைக்கு விரோதமோ, அசம்பாவிதமோ கொஞ்சங்கூடக் கிடையாது. இரண்டு, 'குகப்ரியை'யின் **தமிழ் நடை உயிருள்ள நடை. வாசகர்களுக்குச் சிறிதேனும் சிரமம் கொடுக்காமல் தங்கு தடையின்றி நீரோட்டம்போல் செல்லும் இனிய நடை.** இந்த இரண்டு விசேஷ அம்சங்களினாலும் இந்த நாவல் தமிழ் இலக்கியத்தில் ஒரு சிறப்பான ஸ்தானத்துக்குரியதாகிறது.

**பாரத தேவி ;**— * 'சந்திரிகா'வின் கதைப்போக்கும் நடையும் பிரத்தியேகமானவை.

**அகில இந்திய ரேடியோ நிலையம், திருச்சி :**—*நமது தற்கால வாழ்க்கை, லக்ஷ்யங்கள் இவைகளை சித்திரித்துக் காட்டும் கற்பனா சக்தி வாய்ந்த நூல்கள் - அதுவும் நாவல்கள் - நம் முன்னேற்றத்திற்கு இன்றியமையாதன. '**சந்திரிகா**' என்னும் நவீனத்தை இக்காரணம் பற்றி நாம் உற்சாகத்துடன் வரவேற்கவேண்டும். சில வருஷங்களுக்கு முன் நடந்த நாவல் போட்டியில் **இப்புத்தகம்** முதலாவதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. 'குகப்ரியை' என்ற புனைபெயர் பூண்ட இதன் ஆசிரியை தமிழ்த்தாய்க்கு ஒரு நல்ல தொண்டு செய்திருக்கிறார் என்று சொல்லுவது மிகையாகாது. * **இப்புத்தகத்தின் நடை** - நான் வாசித்த பாகங்களிலிருந்து - சுவையுள்ளது என்பது தெளிவாக விளங்கும்.

---

**அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை**

# உடைந்த வளையல்

துா. ரா. எழுதிய சமூக நாவல்

"வாழ்க்கையையே ஒரு கதையாகவும் காவிய மாகவும் பார்க்கிறவர் துா. ரா."

"உடைந்த வளைய"லும் ஒரு வாழ்க்கைச் சித்தி ரந்தான். "அந்தத் தபால்காரன் அந்த ஊருக்குப் புதி தாய் வந்தவன்" என்று வெகு சாதாரணமாக ஆரம் பிக்கிறது கதை. பின்னால் வரப்போகும் புயலுக்கு அறிகுறிதான் இந்த அமைதி. அந்நியோன்யமான தம்பதிகள் அமைதியான இல் வாழ்க்கை நடத்துகி றார்கள். இவர்கள் வாழ்க்கைப் பாதையிலே மதுரம் என்கிற பால்ய விதவை குறுக்கிடுகிறாள். சந்தேகப் பேய் தலை விரித்தாடுகிறது. வதந்திகள், வம்புகள் பறக்கின்றன. பெயர் மதுரம்தான்! ஆனால் தங்க மணி-சுசீலாவின் வாழ்க்கையையே கசப்பாக்கி விடு கிறாள் அவள். நடுவில் பஞ்சு மாமா வேறு திடும் பிர வேசமாய் வந்து சிக்கலை அதிகப்படுத்துகிறார்.

ரஸமான குடும்பக் காட்சிகளுடன் இலேசான ஹாஸ்ய நடையில் எழுதப்பட்ட கதை. கதா பாத் திரங்கள் ஜீவனுள்ள சிருஷ்டிகள், தெவிட்டாத கற்பனை.

---

# சூரியோதயம்

இதுவும் துா. ரா. எழுதிய நாவல்

---

## பிரார்த்தனை

## முதலிய சிறு கதைகள்

---

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை.

## எங்கள் அரிய வெளியீடுகளிற் சில

ஆரியமத உபாக்யானம் – I
ஆரியமத உபாக்யானம் – II
ஆண்டாள் – பி. ஸ்ரீ.
ஔவையார் ,,
அன்னை கஸ்தூரி
அநுபமா
ஆனந்த மடம்
அமூல்யன்
அம்பலவாணன் – I & II
அழகி
இந்திரா
எரி நட்சத்திரம் } வி. ஸ. காண்டேகர்
இரு துருவங்கள் }
உணவும் சுக வாழ்வும்
இளமைப் பருவம் – டாகுர்
புயல் ,,
இரு மலர்கள்
மோகினி
கதைக் கோவை – I
கதைக் கோவை – II
கதைக் கோவை – III
கதைக் கோவை – IV
கதைக் கோவை – V
கபால குண்டலா
கராட்டூர் ராமு
கிருஷ்ணகாந்தன் உயில்
மோகினி
குழலோசை
குழந்தை மனம்
மரகதவல்லி
மல்லிகை மாலை
மயூகன்
மால்கோஷ்
சிசு பாலனம் – ராஜாஜி
தாவரங்களின் இல்லறம் ,,
திருக்குறள் நீதிக் கதைகள்

திருப்புகழ் பாராயணத் திருமுறை
திருப்புகழ் விருத்தியுரை
திராவிட வேதத் திரட்டு
தேசிங்கு ராஜன்
ஷண்முக விஜயம்
ஷண்முகசுந்தரம்
புதுமாட்டுப் பெண் – S.V.V.
ஸம்பத்து ,,
வஸந்தன் ,,
உல்லாஸ வேளை ,,
வாழ்க்கையே வாழ்க்கை ,,
புஷ்பஹாரம்
தங்கம்மாள்
முரளீதரன்
மாதவீகங்கணம்
இராமாயண ஸாரம்
பாரத ஸாரம்
பாகவத ஸாரம்
நால்வர் சரித்திரம்
என் சரிதம் – மகாத்மா காந்தி
காந்தி காட்டும் பாதை
ஜே. என். டாடா
புக்கர் வாஷிங்டன்
மஹாதேவகோவிந்தரானடே
ஜனாதிபதி ரூஸ்வெல்ட்
மார்ஷல் ஸ்டாலின்
ராஷ்ட்ரபதி ஆஸாத்
ஜவாஹர்லால் நேரு
பாபு ராஜேந்திர பிரசாத்
ஸரோஜனி தேவி
ரமாபாய் சரஸ்வதி
லோகமான்ய திலகர்
பாஞ்சால சிங்கம் லஜபதிராய்
பண்டித மதன்மோகன் மாளவ்யா
ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகள்
மாணவருக்கு நிர்மாணத் திட்டம்

**அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை**